V 2 11, 31 | 900
900 . 101 . 1
223315

வெளியீடு 18-4-2001

Issued 18-4-2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை மே 2, 2000 – தொகுதி 101 – எண் 1

Tuesday the 2nd May, 2000 – Volume 101 – No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

விலை ரூ. 3.00]

[Price Rs. 3.00

119
2002

2-5-2000

# உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | v-viii |
| Personnel of the Government of Tamil Nadu | ix-xiii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xv-xvi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி) | xvii-xxvii |
| 1. வினாக்கள்-விடைகள்— | 1-101 |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-38 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 13 மற்றும் 14) | 38-101 |
| 2. சிறப்புக் கவன ஈர்ப்பு— | |
| (அ) மேலசித்தை கிராமம், சேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் இடிந்து விழுந்து இருவர் மரணம், ஏர்வாடியில் இஸ்லாமியரது பாதுகாப்பு மையங்களில் சுகாதாரக் குறைவால் சிலர் மறைவு மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சி | 102-107 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 102-105 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 105-107 |
| (ஆ) கடமலைக்குன்று எல்.எம்.எஸ். மேல்நிலைப் பள்ளி மாணவன் மரணம் | 107-110 |
| திரு. சி. வேலாயுதன் | 107-109 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 109-110 |

223315



பக்கங்கள்


**3. [illegible]**

(அ) அனுமதி மறுத்த பிரச்சினையை அவையில் எழுப்புதல் — 110-111

(ஆ) சென்னைக்கு கிருஷ்ணா நீர் — 123-125

**4. கவன ஈர்ப்பு—**

(அ) விவசாயிகளிடமிருந்து கூடுதல் மின் பளு வைப்புத் தொகை வசூலித்தல் — 111-116

(ஆ) பரவாக்கோட்டை மற்றும் கூத்தாநல்லூர் பகுதிகளில் துணை மின் நிலையங்கள் அமைத்தல் — 116-119

**5. அரசினர் தீர்மானங்கள்—** — 119-122

(அ) மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் — 119-120

(ஆ) பொதுக் கணக்குக் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் — 120

(இ) பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் — 121

(ஈ) உரிமைக் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் — 121-122

**6. அறிவிப்புகள்—**

(அ) பேரவைக் குழுக்களுக்கான தேர்தல் கால அட்டவணை — 122

(ஆ) உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்குதல் — 141




பக்கங்கள்


**7. நன்றி நவிலல்—**

தேயிலைக்கு வரிக் குறைப்பு — 125-126

**8. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி**

(அ) கோரிக்கை எண் 43 — எழுதுபொருள் அச்சுத் துறை
(ஆ) கோரிக்கை எண் 46 — செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல்
(இ) கோரிக்கை எண் 50 — சுற்றுலா
— 126-226

*மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் — 126,131,141,170, 177,203-218

*மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன் — 135,141,145,172, 191,196-203

திரு. சி. ஞானசேகரன் — 142-151

*திரு. கோ. மோகனதாசன் — 152-154

*திரு. நா. பெரியசாமி — 154-160

*திரு. துரை சந்திரசேகரன் — 160-166

*டாக்டர் க. கிருஷ்ணசாமி — 166-172,178-180

*திரு. லா. சந்தானம் — 172-178

திரு. த. பூவேந்தன் — 180-183

திரு. ஜி. நிஜாமுதீன் — 183-188

*திரு. என்.ஆர். அழகராஜா — 188-196

**9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** — 226

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | |
|---|---|
| 1. முதலமைச்சர் | : மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:<br>பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள். |
| 2. கல்வி அமைச்சர் | : மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:<br>தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர். |
| 3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | : மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:<br>மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம். |
| 4. வருவாய்த் துறை அமைச்சர் | : மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:<br>வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள். |
| 5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் | : மாண்புமிகு திரு. கோ.சி. மணி:<br>நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |

6. **வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. **பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**
பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள், வனம் மற்றும் சின்கோனா.

8. **போக்குவரத்துத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. **நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:**
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. **தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. **உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கா.நா. நேரு:**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. **பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம்:**
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:**
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. **சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா:**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உட்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. **கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:**
கைத்தறி, துணித் தொழில்.

16. **பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. **இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப் பாட்டுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**
விளையாட்டு, இளைஞர் பணிப்படை மற்றும் சுற்றுச்சூழல், மாசுக் கட்டுப்பாடு.

18. **வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

| | |
|---|---|
| 19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு. |
| 20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம். |
| 21. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** கால்நடை பராமரிப்பு. |
| 22. சமூக நலத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்:** மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம். |
| 23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர். |
| 24. சுற்றுலாத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம். |
| 25. கதர்த் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம். |
| 26. மீன் வளத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம். |



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. **Chief Minister** | .. **The Hon. Kalaignar M. Karunanidhi:** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes. |
| 2. **Minister for Education** | .. **The Hon. Prof. K. Anbazhagan:** Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology and Ex-Servicemen. |
| 3. **Minister for Health and Electricity** | .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:** Health, Medical Education and Family Welfare and Electricity. |
| 4. **Minister for Revenue** | .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:** Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors. |
| 5. **Minister for Rural Development and Local Administration** | .. **The Hon. Thiru Ko.Si. Mani:** Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply. |

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works and Forest** .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Forest and Cinchona.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:** Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Youth and Pollution Control** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Sports and Youth Service Corps and Environmental Pollution Control.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information, Publicity and Printing** .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press.

| | |
|---|---|
| 21. **Minister for Animal Husbandry** .. | **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry. |
| 22. **Minister for Social Welfare** .. | **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** .. | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 24. **Minister for Tourism** .. | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 25. **Minister for Khadi** .. | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| 26. **Minister for Fisheries** .. | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

1. **திரு. அ.லெ. சுப்பிரமணியன்**
2. **திரு. சி.டி. தண்டபாணி**
3. **திரு. குத்தாலம் பி. கல்யாணம்**
4. **டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்**
5. **திரு. நா. பெரியசாமி**

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 7. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 8. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 10. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 11. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 12. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 13. | திரு. க. சம்பத்ராஜன், பி,ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 14. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 15. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 17. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |

| | | | |
|---|---|---|---|
| 19. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 20. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| 21. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| 23. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| 24. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| 25. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| 26. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | - | தலைமை நிருபர் |
| 29. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | - | தலைமை நிருபர் |
| 30. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ | - | தலைமை நிருபர் |
| 31. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| 32. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| 33. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| 34. | திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - | தலைமை நிருபர் |
| 35. | திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல்., | - | சார்புச் செயலாளர் |
| 36. | திரு. மு. பொன்னுரங்கம் எம்.ஏ., பி.எல். | - | தலைமை நிருபர் |
| 37. | திரு. தி. உமாபதி, பி.ஏ. | - | தலைமை நிருபர் |
| 38. | திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல்., | - | சார்புச் செயலாளர் |
| 39. | திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| 40. | திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | - | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | - | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | - | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் லத்தீப், திரு. ம. | - | வாணியம்பாடி |
| 5. | அப்பாவு, திரு. மு. | - | இராதாபுரம் |
| 6. | அமரமூர்த்தி, திரு. டி. | - | அரியலூர் |
| 7. | அய்யலுசாமி, திரு. லி. | - | கோவில்பட்டி |
| 8. | அருண்குமார், திரு. பா. | - | மேட்டுப்பாளையம் |
| 9. | அழகராஜா, திரு. என்.ஆர். | - | தேனி |
| 10. | அழகிரி. திரு. ச. | - | சிதம்பரம் |
| 11. | அழகுவேலு, திரு. ச. | - | கண்டமங்கலம் (செ.வ.) |
| 12. | அன்பரசன், திரு. சி. | - | அறந்தாங்கி |
| 13. | அன்பழகன், திரு. வ. | - | செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | - | துறைமுகம் |
| 15. | அன்பில் பெரியசாமி, திரு. | - | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | - | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | - | பவானிசாகர் |
| 18. | ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். | - | வில்லிவாக்கம் |
| 19. | ஆலடி அருணா, திரு. | - | ஆலங்குளம் |

53-117—2

20. ஆவுடையப்பன், திரு. இரா. - அம்பாசமுத்திரம்
21. ஆறுமுகம், திரு. தி.ப. - திருச்செங்கோடு
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆனந்தன், திரு. பால. - வந்தவாசி (செ.வ.)
24. இரகுமான்கான், திரு. அ. - இராமநாதபுரம்
25. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. - மேலூர்
26. இராசமாணிக்கம், திரு. பி. - ஒரத்தநாடு
27. இராசன், திரு. வி.பி. - இராஜபாளையம் (செ.வ.)
28. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. - ஆண்டிமடம்
29. இராமசாமி, டாக்டர் வை. - பண்ருட்டி
30. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
31. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
32. இராமச்சந்திரன், திரு. சி.இரா. - தொண்டாமுத்தூர்
33. இராமச்சந்திரன், திரு. மா. - திருவோணம்
34. இராமலிங்கம், திரு. ஏ. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
35. இராமலிங்கம், திரு. செ. - திருவிடைமருதூர்
36. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
37. இராமஜெயம், திரு. ந. பூ. - மயிலாப்பூர்
38. இராஜ ரெட்டி, திரு. ச. - தளி
39. இராஜேந்தர், திரு. டி. - பூங்கா நகர்
40. இளங்கோ, திரு. கோ. - அவினாசி (செ.வ.)



41. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ.)
42. உதயசூரியன், திரு. தா. - சங்கராபுரம்
43. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
44. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
45. கணேசன், திரு. கே.சி. - ஜெயங்கொண்டம்
46. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
47. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
48. கருப்பண்ண உடையார், திரு. ந. - பாபநாசம்
49. கருப்புசாமி, திரு. டி. - உப்பிலியாபுரம் (ஆவா.)
50. கன்னையன், திரு. க. - தொட்டியம்
51. காஞ்சனா கமலநாதன், டாக்டர் - கிருஷ்ணகிரி
52. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
53. கிருஷ்ணசாமி, டாக்டர் க. - ஓட்டப்பிடாரம் (செ.வ.)
54. கிருஷ்ணன், திரு. எஸ்.வி. - நாங்குநேரி
55. கிருஷ்ணன், திரு. சீ.வெ. - வேடசந்தூர்
56. குண்டன், திரு. டி. - உதகமண்டலம்
57. குத்தாலம் பி. கல்யாணம், திரு. - குத்தாலம்
58. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
59. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. - கும்மிடிப்பூண்டி
60. குழந்தை தமிழரசன், திரு. - விருத்தாசலம்
61. கோதண்டம், திரு. ஏ. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
62. கோபால், திரு. பா. - மேட்டூர்

63. கோபு, திரு. சி. - அணைக்கட்டு
64. கோமதி சீனிவாசன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
65. கோவிந்தன், திரு. ப. - தாரமங்கலம்
66. கோவிந்தன், திரு. வெ. - பேரணாம்பட்டு (செ.வ.)
67. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
68. சண்முகம், திரு. கோ. - திருப்பத்தூர்
69. சண்முகம், திரு. சி. - ஆலந்தூர்
70. சண்முகம், திரு. ம. - கிணத்துக்கடவு
71. சண்முகம், திரு. வி.சி. - நெல்லிக்குப்பம்
72. சந்தானம், திரு. லா. - சோழவந்தான்
73. சந்திரசேகரன், திரு. சி. - சேந்தமங்கலம் (ஆவா.)
74. சந்திரசேகரன், திரு. துரை. - திருவையாறு
75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. - சமயநல்லூர் (செ.வ.)
76. சம்பத், திரு. ஏ.ஜி. - முகையூர்
77. சரஸ்வதி, திருமதி ஆர். - தாராபுரம் (செ.வ.)
78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
79. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
80. சிங்காரவேலு, திரு. வி.பி. - வால்பாறை (செ.வ.)
81. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
82. சிவராமன், திரு. ஆர். - திருப்பத்தூர்
83. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். - பனமரத்துப்பட்டி



85. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருத்தணி
87. சின்னய்யா, திரு. வெ. - திருமயம்
88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். - விருதுநகர்
89. சுகவனம், திரு. இ.ஜி. - பர்கூர்
90. சுடலைமுத்து, திரு. அ. - போடிநாயக்கனூர்
91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. க. - பொன்னேரி (செ.வ.)
93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
94. சுந்தரம், திரு. பி.ஆர். - இராசிபுரம்
95. சுந்தர், திரு. கே. - உத்திரமேரூர்
96. சுப்பராயன், திரு. கே. - திருப்பூர்
97. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. - திருவள்ளூர்
98. சுப்பிரமணி, திரு. பி.என். - ஆற்காடு
99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. - திருநெல்வேலி
100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி - மொடக்குறிச்சி
101. சுரேஷ் ராசன், திரு. என். - கன்னியாகுமரி
102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. - மருங்காபுரி
103. செங்கை சிவம், திரு. - பெரம்பூர் (செ.வ.)
104. செல்லக்குமார், டாக்டர் அ. - தியாகராய நகர்
105. செல்வம், திரு. ரெ. - குளித்தலை
106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. - கொளத்தூர் (செ.வ.)

107. செல்வராஜ், திரு. து. - உடுமலைப்பேட்டை
108. சேகரன், திரு. ஆர்.ஆர். - ஓமலூர்
109. சேதுநாதன், திரு. ரா. - திண்டிவனம்
110. சைதை கா. கிட்டு, திரு. - சைதாப்பேட்டை
111. சொக்கர், திரு. ஆர். - சிவகாசி
112. ஞானசேகரன், டாக்டர் ஆ. - மேல்மலையனூர்
113. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
114. டேவிட் செல்வின், திரு. எஸ். - ஸ்ரீவைகுண்டம்
115. தங்கமணி, திரு. கே. - மானாமதுரை (செ.வ.)
116. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
117. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
118. தங்கவேல், திரு. அ.ல. - சேலம்-2
119. தண்டபாணி, திரு. சி.டி. - கோயம்புத்தூர் மேற்கு
120. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. - இளையான்குடி
121. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். - அரக்கோணம் (செ.வ.)
122. தமிழ்மணி, திரு. வீ. - செங்கல்பட்டு
123. தளபதி, திரு. கோ. - சேடப்பட்டி
124. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. - சேலம்-1
125. தனபால், திரு. வி.ஜி. - குடியாத்தம்
126. தாமரைக்கனி, திரு. இரா. - ஸ்ரீவில்லிபுத்தூர்
127. திசைவீரன், திரு. உ. - பரமக்குடி (செ.வ.)
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
129. திருவேங்கடம், திரு. பெ.சு. - கலசப்பாக்கம்



130. துரைசாமி, திரு. பா. - வரகூர் (செ.வ.)
131. துரை, திரு. கே. - திருவெறும்பூர்
132. துரைமுருகன், திரு. - காட்பாடி
133. தெய்வநாயகம், திரு. எ. - மதுரை மத்தி
134. தேவராஜன், டாக்டர் மு. - பெரம்பலூர் (செ.வ.)
135. நடராசன், திரு. ஆ. - பேரூர்
136. நடராஜன், திரு. த. - செஞ்சி
137. நயினா முகமது, திரு. கோ. - கடையநல்லூர்
138. நன்னன், திரு. கொ.வீ. - செங்கம் (செ.வ.)
139. நாகரத்தினம், திரு. ச. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
140. நாசர், திரு. ஏ.வி.ஏ. - புவனகிரி
141. நாஞ்சில் கி. மனோகரன், திரு. - திருவல்லிக்கேணி
142. நிஜாமுதீன், திரு. ஜி. - நாகப்பட்டினம்
143. நேரு, திரு. கா.நா. - லால்குடி
144. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. - சிவகங்கை
145. பத்மா, டாக்டர் - நன்னிலம் (செ.வ.)
146. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1
147. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
148. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
149. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். - மதுரை மேற்கு
150. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
151. பன்னீர்செல்வம், திரு. மு. - சீர்காழி (செ.வ.)
152. பாண்டுரங்கன், திரு. ந. - பெரணமல்லூர்

153. பாலகிருஷ்ணன், திரு. சோ. - முதுகுளத்தூர்
154. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். - பவானி
155. பாலசுப்பிரமணியன், திரு. ப. - பட்டுக்கோட்டை
156. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
157. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
158. புரட்சிமணி, திரு. ச. - மங்களூர் (செ.வ.)
159. பூவேந்தன், திரு. த. - பழனி (செ.வ.)
160. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. என். - தூத்துக்குடி
162. பெரியசாமி, திரு. என்.கே.கே. - ஈரோடு
163. பெரியசாமி, திரு. நா. - பெருந்துறை
164. பெருமாள், திரு. வி. - ஏற்காடு (ஆ.வா.)
165. பெர்னார்டு, திரு. இரா. - குளச்சல்
166. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - சிங்காநல்லூர்
167. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
168. பொன்முடி, திரு. எஸ்.எஸ். - பல்லடம்
169. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
170. மகேந்திரன், திரு. இரா. - நாட்ராம்பள்ளி
171. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. - திருநாவலூர்
172. மணி, டாக்டர் அ. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
173. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
174. மணி, திரு. டி. - விளவங்கோடு
175. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்



176. மணி நாடார், திரு. எஸ்.எஸ். - சாத்தான்குளம்
177. மணிமாறன், திரு. இரா. - திண்டுக்கல்
178. மணிவர்மா, திரு. க. - தண்டராம்பட்டு
179. மதிவாணன், திரு. இரா. - இராயபுரம்
180. மதிவாணன், திரு. செ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
181. மனோகரன், திரு. கு. - தருமபுரி
182. மாயவன், திரு. தி.ப. - ஸ்ரீரங்கம்
183. மாரி அய்யா, திரு. பே. - புதுக்கோட்டை
184. மாரிமுத்து, திரு. அ. - வானூர் (செ.வ.)
185. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். - அரவக்குறிச்சி
186. முகம்மது கோதர் மைதீன், திரு. - பாளையங்கோட்டை
187. முத்து, திரு. வி. - சங்கரி (செ.வ.)
188. முத்துராமலிங்கம், திரு. ம. - திருமங்கலம்
189. முபாரக், திரு. பா.மு. - கூடலூர்
190. முருகேசன், திரு. பொ. - காஞ்சிபுரம்
191. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்
192. முனிரத்தினம், திரு. ஆ.மு. - சோளிங்கர்
193. மூக்கப்பன், திரு. இரா. - சின்னசேலம்
194. மூக்கையா, திரு. எல். - பெரியகுளம்
195. மோகனதாசன், திரு. கோ. - பூம்புகார்
196. மோகன் கந்தசாமி, திரு. ப. - பொங்கலூர்
197. மோசஸ், டாக்டர் எம். - நாகர்கோவில்

198. ரங்கநாதன், திரு. எம். - குன்னூர் (செ.வ.)
199. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
200. ரவி அருணன், திரு. கே. - தென்காசி
201. ரவிசங்கர், திரு. கு. - விளாத்திகுளம்
202. ராசேந்திரன், திரு. ஏ. - போளூர்
203. ராணி, செல்வி க. - தலைவாசல் (செ.வ.)
204. ராமசாமி, திரு. ஏ.எம். - ஆத்தூர்
205. ராமச்சந்திரன், திரு. செ. - திருப்பரங்குன்றம்
206. ராஜு, திரு. எஸ். - பொள்ளாச்சி
207. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. - சத்தியமங்கலம்
208. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். - காங்கேயம்
209. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு
210. வல்லரசு, திரு. பி.என். - உசிலம்பட்டி
211. வாசுகி முருகேசன், திருமதி - கரூர்
212. விஜயகுமார், திரு. கே.எம். - சாத்தூர்
213. விஜயன், திரு. டி.சி. - திருவொற்றியூர்
214. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. - வீரபாண்டி
216. வீரப்பன், திரு. கே.கே. - கபிலர்மலை
217. வெங்கடசாமி, திரு. பி. - ஓசூர்
218. வெங்கடாசலம், திரு. அ. - ஆலங்குடி
219. வெங்கடாசலம், திரு. ஜி.எல். - பாலக்கோடு



220. வெங்கடேசன், திரு. ச.க. - மதுராந்தகம்
221. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். - காவேரிப்பட்டினம்
222. வெங்கிடு, திரு. ஜி.பி. - கோபிச்செட்டிப் பாளையம்
223. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். - அரூர் (செ.வ.)
224. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
225. வேலாயுதன், திரு. சி. - பத்மநாபபுரம்
226. வேலுசாமி, திரு. வ. - மதுரை கிழக்கு
227. வேல்சாமி, திரு. க. - நாமக்கல் (செ.வ.)
228. வேல்துரை, திரு. பா. - சேரன்மகாதேவி
229. வைதியலிங்கம், திரு. மீ.அ. - தாம்பரம்
230. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். - திருச்செந்தூர்
231. ஜோதிகண்ணன், திரு. மு.ந. - முசிறி
232. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
233. ஹேமச்சந்திரன், திரு. ஜே. - திருவட்டாறு
234. ஆன் டி' மான்டி, திருமதி - நியமனம்
235. வெற்றிடம் - திருப்போரூர் (செ.வ.)

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. கே.வி. வெங்கடபதி - அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 20, விக்கிரம-திருவள்ளுவர் ஆண்டு 2031

## 2000 மே 2, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி*

*நன்றி பயப்பதாம் தூது"*

சினத்தைத் தூண்டாமல் மகிழத்தக்க அளவுக்குச் செய்திகளைத் தொகுத்தும், தேவையற்ற செய்திகளை ஒதுக்கியும், நல்ல பயனளிக்கும் விதமாகச் சொல்லுவதே சிறந்த தூதருக்கு அழகாகும்.

### 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 461, திரு. ஏ.வி.ஏ. நாசர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்..

**461—**

**கள்ளச் சாராயம்**

***27944—திரு. ஏ.வி.ஏ. நாசர்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளச் சாராயம் விற்பவர்களுடன், அதனைக் காய்ச்சுபவர்கள் மற்றும் அதற்கு முதலீடு செய்பவர்களைச் சட்டத்தின் வரம்பிற்குள் கொண்டு வர அரசு முன்வருமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கள்ளச் சாராயம் விற்பவர்கள் மட்டுமல்லாமல், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் மற்றும் அதற்கு முதலீடு செய்பவர்களுக்கும் தண்டனை வழங்க, 1937 ஆம் ஆண்டைய தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் பிரிவு 4(1) பின்வருமாறு வகை செய்கிறது:

(1) கள்ளச் சாராயம் விற்பனை செய்தல் குற்றத்திற்கு 3 மாத காலம் வரை சிறைத் தண்டனை அல்லது ரூ. 1,000 வரை பணத் தண்டனை.

(2) கள்ளச் சாராயம் காய்ச்சுதல் குற்றத்திற்கு 3 வருட காலம் வரை கடுங்காவல் சிறைத் தண்டனை; ரூ. 10,000 வரை பணத் தண்டனை.

(3) கள்ளச் சாராயம் விற்க மற்றும் காய்ச்ச முதலீடு செய்ய ஊக்குவித்தல் குற்றத்திற்கு 3 மாத காலம் வரை சிறைத் தண்டனை அல்லது ரூ. 1,000 வரை பணத் தண்டனை.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களுக்கு 3 வருட தண்டனை என்பது மிகவும் குறைவானதுதான். ஏனென்று சொன்னால், விஷச் சாராயம் அதிலே கலந்துவிட்டது என்று சொன்னால் ஏற்படுகிற உயிர் இழப்பு என்பது, நூற்றுக் கணக்கில் உருவாகிவிடுகிறது. என்னுடைய தொகுதியில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னால் கள்ளச் சாராயம் விற்பனை செய்யப்பட்டபோது, 3 பேர் இறந்து விட்டார்கள். அதற்காக அந்தப பகுதி மக்கள் நிவாரண உதவி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, கள்ளச் சாராயம் விற்பவர்களைத்தான் நாம் இதுவரையில் கைது செய்து கொண்டிருக்கிறோம். கள்ளச் சாராயம் விற்பவர்கள் கூலிக்கு வேலை செய்பவர்கள். 50 ரூபாய் சம்பளமும், இரண்டு glass சாராயமும் கொடுத்தால் கூலிக்கு வேலை செய்கிறார்கள். இந்த நிலையில், விற்பவர் ஒருவரை நாம் arrest செய்தால், மீண்டும் உடனடியாக அடுத்த ஓர் ஆள் 50 ரூபாய் சம்பளத்திற்கு அங்கே விற்க வந்துவிடுகிறார். எனவே, இதை விற்கக்கூடிய முதலாளிகள் எப்போதுமே சட்டத்திலிருந்து தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த முதலாளிகளைக் கைது செய்து, அவர்களைக் கடுமையான தண்டனைக்கு உள்ளாக்க அரசு சட்டம் இயற்ற முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, விற்பனை செய்கின்றவர்களுக்கு 3 மாத காலம்தான் சிறைத் தண்டனை என்று



இருக்கிறது; 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தினுடைய பிரிவின்படி, காய்ச்சுகின்ற குற்றத்திற்கு 3 வருடங்கள் என்றே அதிக தண்டனை இருக்கிறது. 10 ஆயிரம் ரூபாய் பணத் தண்டனை என்றும் இருக்கின்றது. இந்த 3 வருட காலத்தை இன்னும்கூட நீட்டிக்கலாமா என்கின்ற யோசனையும், அதற்கான திருத்தம் சட்டத்திலே கொண்டு வரலாமா என்கின்ற யோசனையும்கூட அரசுக்கு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப்போல, விற்பனையாளர்கள் மாத்திரமல்ல, காய்ச்சுகின்றவர்களும் பல பேர் கடுமையான நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ.சு. திருவேங்கடம்

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொன்றுதொட்டு கள்ளச் சாராயம் காய்ச்சுகின்ற பகுதிகளில், அங்கே இருக்கின்ற காவல் துறையினுடைய அனுமதியோடுதான் கள்ளச் சாராயம் காய்ச்சப்படுகிறது, விற்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட பகுதியில் இருக்கிற காவல் துறை அதிகாரிகளை இந்தச் சட்டத்தின்கீழ் கொண்டு வந்து தண்டிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கள்ளச் சாராய வியாபாரிகளுக்குத் துணை போன காரணத்திற்காக, 1998 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் ஓர் இன்ஸ்பெக்டர், 5 சப்-இன்ஸ்பெக்டர்கள், ஒரு தலைமைக் காவலர், 4 காவலர்கள், ஆக மொத்தம் 11 பேர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். 106 பேர் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். 172 இன்ஸ்பெக்டர்கள், 148 சப்-இன்ஸ்பெக்டர்கள், 77 தலைமைக் காவலர்கள் மற்றும் 131 காவலர்கள் மீது துறை நடவடிக்கையும் எடுத்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

*முற்பகல் 9-35*

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் காரைக்காலில் இருந்து, கடற்கரை ஓரமாகவும், கடல் வழியாகவும் சாராயம் கடத்தப்படுகின்றது. கடத்தல்காரர்களைப் பிடிப்பதற்கு, போலீசாரிடம் வாகன வசதியோ, படகு வசதியோ அல்லது நீச்சல் பயிற்சியோ போதுமானதாக இல்லை. எங்கள் பகுதியிலே சாராயம் காய்ச்சப்படுகின்றது. தினமும் ஏராளமானவர்கள் மாலை மங்கும்

[2000 மே 2

நேரத்திலே, அதிகாலை நேரத்திலே, தோள்களில் கேன்களைத் தூக்கிக்கொண்டு கடல் வழியாக வருகிறார்கள். போலீஸ்காரர்கள் பிடிக்கப் போகும்போது, அப்படியே கடலிலே குதித்துவிடுகிறார்கள். ஒன்றுமே பண்ணமுடியவில்லை. அது, பல கோடி ரூபாய்க்கு சாராயம் தமிழ்நாட்டிலே ஊடுருவுவதற்கு வழியாக இருந்து கொண்டிருக்கிறது. இவற்றைப் போக்க, நாகைப் பகுதி காவல் துறைக்குப் படகுகள் வழங்கப்படுமா; கடல் பயிற்சி அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நாகைப் பகுதியிலேயுள்ள காவல் துறை அதிகாரிகள் மூலமாக இத்தகைய விண்ணப்பம் வருமேயானால், உடனடியாகக் கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், விற்பவர்களுக்கு வழங்கப்படும் தண்டனை பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நான் கேட்க விரும்புவது, கள்ளச் சாராயத்தை அறவே ஒழிப்பதற்கான முயற்சிகளை நம்முடைய தமிழ்நாடு அரசு மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளாக—காவல் துறை, பொதுமக்கள், அரசியல்வாதிகளைக் கொண்ட குழுக்களை அமைத்து, அறவே ஒழிப்பதற்குரிய முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா? அத்துடன் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களுக்கும், விற்பவர்களுக்கும் துணையாக இருப்பவர்கள் என்று சொல்லப்படுவதிலே, பல இடங்களிலேயிருந்து வருகிற செய்தி, காவல் துறையினரேகூட, அவர்களை அழைத்துச் சென்று, வழக்குப் போட்டு, அவர்களுக்கு ஓரளவு தண்டனையைக் கொடுத்து அல்லது அபராதத்தை வாங்கிக் கொடுத்ததற்குப் பின்னாலே, திரும்பவும் காய்ச்சச் செய்வதற்குரிய முயற்சியாக மூலதனத்தை காவல் துறையினரே வழங்குவதாகக்கூட புகார் வருகிறதே, அதைப் பற்றியும் ஆராய்ந்து, அத்தகையவர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, காவல் துறையினர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைப் பட்டியலை இப்போது புள்ளிவிவரமாக இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றேன். எனவே, அவர்கள் மீதும் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்; எடுக்கப்பட்டும் வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். உதாரணமாக, என்ன



2000 மே 2]

நடவடிக்கை, மொத்தத்திலே கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். மனப்பக்குவம் அடைந்தால்தான் அதை நிச்சயமாக ஒழிக்க முடியும். என்னதான் அரசியல் குழுக்கள், அமைதிக் குழுக்கள், மதுவிலக்குக் குழுக்களை நாம் அமைத்தாலும்கூட, அதை ஒழிப்பது என்பது இயலாத காரியமாகத்தான் இருக்கிறது. இருந்தாலும், சட்டத்தைக் கடுமையாக ஆக்கி, இந்தக் காரியங்களை அரசு கவனித்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளச் சாராயம் விற்பவர்கள் அல்லது காய்ச்சுபவர்கள் மீது ஒரு காவல் நிலைய எல்லையில் கடுமையான நடவடிக்கை எடுக்கிறபோது, அடுத்து பக்கத்திலே இருக்கிற காவல் நிலைய எல்லைக்குள் அவர்கள் வந்து விடுகிறார்கள். அந்தக் காவல் நிலைய நடவடிக்கை கொஞ்சம் கடுமையாக இல்லாமல் இருந்துவிட்டால், அவர்களுக்கு அது ஏதுவாக அமைந்துவிடுகிறது. எனவே, அந்தத் தொழில் செய்பவர்கள் எந்தக் காவல் நிலைய எல்லையில் வசிக்கிறார்களோ, அந்தக் காவல் நிலையக் காவலர்களே எங்கு வேண்டுமானாலும் சென்று நடவடிக்கை எடுக்கலாம் என்கிற அளவிற்கு ஆணை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அவ்வாறு ஒரு வரம்பற்று விட்டுவிடுவோமேயானால், ஒரு பழியை இன்னொருவர் மீது போட்டுவிட்டு உண்மையான குற்றவாளிகள் தப்பித்துக் கொள்வார்கள். அதனால்தான் ஒரு வரம்பு வைத்து, இந்தப் பகுதிக்குள்ளாக நடைபெறுகின்ற இத்தகைய காரியங்களுக்கு இன்னார் பொறுப்பு என்று பொறுப்பைச் சுமத்துவதற்கு இப்போது வழி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைக் கேட்டால், அந்த வழி இல்லாமல் போய்விடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளச் சாராயத்தைப் பொறுத்தவரை, ஒரு காலத்தில் பெண்களெல்லாம் சாராயம் குடிப்பவர்களைக் கண்டு பயந்து கொண்டிருந்தார்கள். இப்போது எந்தக் கிராமங்களுக்குச் சென்றாலும், கள்ளச் சாராயத்தை ஒழிக்க மாட்டீர்களா என்று பெண்கள் குறை சொல்வதற்கு, கோரிக்கை வைப்பதற்குத் தைரியமாக முன்வருகிறார்கள். கள்ளச் சாராயத்தை ஒழிக்கின்ற நல்ல போலீஸ் அதிகாரிகளை அங்கேயே இருக்க

வேண்டுமென்று, பல இடங்களில், எங்களுடைய பகுதிகளில் மிகப் பெரிய போராட்டமே நடத்தி, அந்த அதிகாரிகளை மாறுதல் செய்யாமல் அங்கேயே வைத்திருக்கிறார்கள். எங்கள் ஊரில் ஒரு மாவட்ட போலீஸ் அதிகாரி வந்திருந்தார். அவர் ஒவ்வொரு Station Phone பண்ணி, "நான் ஒரு கள்ளச் சாராய வியாபாரி, எப்போது சாராய வியாபாரத்தைத் தொடங்கலாம்" என்று கேட்பார். உடனே அங்கேயுள்ள போலீஸ் அதிகாரிகள், "இங்கே ஒரு S.P. இருக்கிறார், அவர் போய்த் தொலையட்டும், பிறகு பார்த்துக் கொள்வோம்" என்று சொல்வார்கள். இப்படியாக, அவர் இருக்கிற வரை அந்த மாவட்டத்தில், கள்ளச் சாராயமோ இல்லை என்கின்ற வரலாற்றைப் படைத்தார். பிறகு அவர் மாற்றப்பட்டார். இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், போலீஸ் அதிகாரிகளுக்குத் தெரியாமல் யாரும் காய்ச்சுவது கிடையாது. ஆகவே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், மாவட்ட போலீஸ் அதிகாரிகளையெல்லாம் அழைத்துப் பேசி, கள்ளச் சாராயத்தை முழுமையாக ஒழிக்குமாறு சொல்ல வேண்டும்; கடுமையாகச் சொல்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பில், ஆண்டுதோறும் அல்லது அதற்கிடையிலேயும்கூட நடத்துகின்ற காவல் துறை அதிகாரிகளுடைய மாநாட்டில், இதைத்தான் வலியுறுத்தி அடிக்கடி எடுத்துச்சொல்லி வருகின்றோம். இருந்தாலும்கூட, அவர்களுடைய கட்டுப்பாட்டையும், கண்காணிப்பையும் மீறியும்கூட இந்தக் காரியங்கள் நடைபெற்றுவிடுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 462, திரு. ப. மோகன் கந்தசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**462—**

### நூலகத்திற்குக் கட்டடம்

***23398—திரு. ப. மோகன் கந்தசாமி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) ஈரோடு மாவட்டம், குண்டடத்தில் இயங்கி வரும் முழுநேர நூலகத்திற்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) இல்லையெனில், இவ்வாண்டு சேர்க்கப்படுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், குண்டடம் கிளை நூலகம், வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இக்கிளை நூலகத்திற்குக் கட்டடம் கட்ட, தனியாரிடமிருந்து காலிமனை ஏதும் பெறப்படவில்லை. குண்டடம் கிராமம், புறம்போக்கு நிலத்தில் 0.02.5 ஹெக்டேர் நிலத்தை நூலகத் துறைக்கு உரிமை மாற்றம் செய்து வழங்க, மாவட்ட ஆட்சித் தலைவரிடம், மாவட்ட நூலக அலுவலரால் கோரப்பட்டுள்ளது. இக்காலிமனை நூலகத் துறைக்கு வழங்கப்பட்டால், அதில் புதிய சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வி கேட்டபோது அது வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருந்தது. இப்போதும் வாடகைக் கட்டடத்திலேதான் இருக்கிறது. இருந்தாலும், அமைச்சருடைய பதில் எனக்கு மன நிறைவு தருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அந்த இடத்தை ஒப்படைத்தவுடனே அதற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு உத்தரவு பிறப்பிக்குமாறு தங்கள் மூலம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 463, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**463—**

### தொழில்நுட்பக் கல்லூரி

***25534—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டத்தில், பள்ளிப்பட்டு நகரில் புதிய தொழில்நுட்பக் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[2000 மே 2

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வினா எண் *464*, திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**464—**

**மருத்துவ சோதனைக் கருவிகள்**

***5762—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு மக்கள நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி, சேலம் அரசு மருத்துவமனைகளுக்கு C.T. Scan-கள் மற்றும் மருத்துவ சோதனைக் கருவிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் வழங்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மற்றும் திருச்சி அரசு மருத்துவமனைகளில் C.T. Scan கருவிகள் நிறுவப்பட்டு, அவை முறையே, *8-2-1997* மற்றும் *7-3-1997* முதற்கொண்டு சிறப்பான முறையில் இயங்கி வருகின்றன.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரிலேதான் Scan இருக்கிறது. சென்னையிலே, பொது மருத்துவமனையிலே இரண்டு சாதாரண Scan-கள் இருக்கின்றன. அதற்குப் பிறகு ஒன்று இருக்கிறது என்று நினைக்கிறேன். ஆக, *3* Scan-கள்தான் இருக்கின்றன. *250* ரூபாய் கட்டி, full check-up செய்யலாம் என்று நம்முடைய அரசாங்கம் அறிவித்திருக்கிறது. அதற்குப் பொது மக்களுடைய ஆதரவு ரொம்ப வந்து கொண்டிருக்கிறது. ஆகையினால், கூடுதலாக Scan வைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையையும், தாலுகா



மருத்துவமனைகளிலும் இதை விரிவுபடுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கையையும் அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம், *1996* ஆம் ஆண்டு முதற்கொண்டு, தமிழ்நாட்டிலே உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலேயும், மாவட்ட மருத்துவமனைகளிலேயும் C.T. Scan வழங்க வேண்டுமென்று முடிவு செய்து, இப்போது ஏறத்தாழ *16* இடங்களிலே C.T. Scans செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்னும், விருதுநகர், தருமபுரி, புதுக்கோட்டை, சிவகங்கை, கரூர், திருவாரூர், பெரம்பலூர், திருவள்ளூர், பெரியகுளம், நாமக்கல் ஆகிய மாவட்டங்களிலேயும் C.T. Scan வழங்க வேண்டுமென்று திட்டமிட்டு, இந்த ஆண்டே அந்த C.T. Scan-களை அந்த மாவட்ட மருத்துவமனைகளிலே வைக்க முடியுமா என்று பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். ஒரு C.T. Scan வைப்பதற்கு ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் செலவாகிற காரணத்தினாலே, உடனடியாக எல்லா மருத்துவமனைகளிலேயும் வைக்க முடியவில்லை. இருந்தாலும், *2001*-க்குள் எல்லா மாவட்ட மருத்துவமனைகளிலேயும் வைப்பது என்று அரசு முடிவு செய்திருக்கிறது. தாலுகா மருத்துவமனைகளைப் பொறுத்தவரையில், இப்போது, Ultra Sound Scan-களை எல்லா தாலுகா மருத்துவமனைகளிலும் வைத்திருக்கிறோம். எனவே, C.T.Scan வைக்கின்ற செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை புறநகர்ப் பகுதிகளில் அமைந்துள்ள *3* மருத்துவமனைகளைப் புனரமைப்பு செய்து, அவற்றிலே அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தி, அங்கு நல்ல மருத்துவர்களை நியமித்து, அந்தக் கட்டடங்களைப் பராமரிக்கின்ற பொறுப்பின்னை, ஏதாவது ஒரு அரசுத் துறை நிறுவனத்திடமோ, தனியாரிடமோ ஒப்படைப்பு செய்ய அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *9-45*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு Co-operative Society-யினுடைய ஆண்டு விழா நடைபெற்ற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன்

அவர்களும் அதில் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். அப்போது சென்னை நகரத்திலே இருக்கக்கூடிய புறநகர் மருத்துவமனைகளை அவர்கள் தத்து எடுத்துக்கொள்வதாகவும், அந்த மருத்துவமனைகளைப் பராமரிப்பதாகவும், அந்த மருத்துவமனைகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருவதாகவும் வாக்குறுதி தந்தார்கள். அவர்கள் வாக்குறுதி தந்ததைப் போலவே, அரசாங்கத்திற்குக் கடிதமும் எழுதித் தந்திருக்கிறார்கள். அரசாங்கம், நன்றியுணர்வோடு அந்த 3 மருத்துவமனைகளையும், ரங்கநாதன் அவர்கள் தலைமை தாங்கிக் கொண்டிருக்கின்ற, Co-operative Union-னிடத்திலே ஒப்படைப்பது என்று முடிவு செய்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. கோபால்.

**திரு. பா. கோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998 ஆம் ஆண்டு மேட்டூர் அரசு மருத்துவமனையை, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும், அரசு தலைமை மருத்துவமனையாக உயர்த்தித் தந்தார்கள். அந்த மருத்துவமனைக்கு அப்போது 800 புறநோயாளிகள் வந்து கொண்டிருந்தார்கள். ஆனால், இப்போது 1500 புற நோயாளிகள் தினந்தோறும் மருத்துவத்திற்காக வருகிறார்கள. அங்கு ஒரு C.T. Scan அமைத்துக் கொடுக்கவும், பொது மருத்துவர் மற்றும் E.N.T. மருத்துவர், எலும்பு மருத்துவர் ஆகிய இந்த மூன்று சிறப்பு மருத்துவர்கள் இல்லாததால் நோயாளிகள் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாகி இருக்கின்றார்கள். எனவே, இவற்றை நிறைவேற்றித் தருவார்களா என நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தலைமை மருத்துவமனையில் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த மருத்துவர்கள் இந்த ஆண்டு நியமிக்கப்படுவார்கள். C.T. Scan வாங்கித் தருவது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 ஆண்டுகளுக்கு முன்பு நாகை அரசு மருத்துவமனையிலே C.T. Scan அமைக்கப்படும் என்று இந்த அவையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதிமொழி அளித்ததன் பேரில், உடனடியாக அந்தப் பணிகள் தொடங்கப்பட்டு, நாகையிலே C.T. Scan அமைக்கப்பட்டு, இப்போது செயல்பட்டுக் கொண்டிருப்பதற்கு நான் என்னுடைய நன்றியைத்



தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில், அதை இயக்குவதற்குத் தனியாக நாகைக்கு ஓர் இயக்குநரை, மருத்துவ அலுவலரை நியமிக்க வேண்டும். இப்போது, திருவாரூரிலேயிருந்து அங்கு வரக்கூடிய பெரும்பாலான கூட்டங்கள் எல்லாம், காலதாமதமாக 2 நாள் கழித்துத்தான் result-ஐப் பெற்றுச் செல்லக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைக் கவனத்தில் கொண்டு, அங்கேயே ஓர் இயக்குநரை நியமித்தால் மிகுந்த நன்றியுடையவனாக இருப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல, நாகப்பட்டினத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்ற C.T. Scan மிகச் சிறந்த முறையிலே இயக்கப்பட்டு வருகிறது. திருவாரூர் மாவட்டத்திலே C.T. Scan இல்லாத காரணத்தினால், அங்கிருந்தும் நோயாளிகள் சென்று கொண்டிருக்கிறார்கள். எனவே, இதையெல்லாம் மனதிலே கொண்டுதான் அரசாங்கம், இந்த ஆண்டு திருவாரூரிலேயும் ஒரு C.T. Scan வாங்கி அமைப்பது என்று முடிவு செய்திருக்கிறது. அப்படி அங்கே அந்த C.T. Scan பொருத்தப்படுமானால், நாகப்பட்டினத்திற்கு வரக்கூடிய மக்கள் தொகை குறையும். அதன் மூலம் அங்கே இருக்கக்கூடிய அந்த சிறப்பு மருத்துவரே அந்தப் பணிகளையும் மேற்கொள்வார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திலே, பாப்பம்பாடியிலே ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக ஆரம்ப சுகாதார மருத்துவமனை நடைபெற்றுக் கொண்டிருந்த இடத்திலே, 4 ஆண்டு காலமாக மருத்துவமனை செயல்படவில்லை. ஊராட்சி ஒன்றியத்திலே நிதி ஆதாரம் இல்லை என்பதால், அங்கே மருத்துவர் இல்லாத நிலை இருக்கிறது. இது அரசுக்குத் தெரியுமா? பாப்பம்பாடி ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் 20 ஆம் தேதி, தமிழ்நாட்டிலே உள்ள எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு, ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றன. அநேகமாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த மருத்துவமனைக்குச் சென்று, இன்றோ, நாளையோ பார்த்தால் மருத்துவர் இருக்கக்கூடும். இல்லை என்றாலும்,

ஓரிரு நாட்களில் அவர் வந்து சேரக் கூடும். எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு விட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரமாக விளங்கும் தருமபுரிக்கு இந்த ஆண்டு C.T. Scan வழங்கப்படும் என்று அறிவித்த நமது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கும் இந்த வேளையிலே, தலைநகரமாக விளங்கும் தருமபுரியிலே அமரர் ஊர்தி மிகவும் பழுதுபட்டு, அது பழுதுபார்க்க முடியாத அளவிற்கு இப்போது செயலிழந்து இருக்கிறது. கடந்த வாரத்திற்கு முன்புகூட, மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அங்கு வந்து, இதை மாநில அரசுதான் மாற்றித் தர வேண்டுமென்று அங்கிருந்த ஊழியர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தார். இந்த நிலையில், ஏழைகளுக்காக மிகவும் தேவைப்படும் அமரர் ஊர்தியை புதிதாக வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரையிலே, நாம் கேட்கின்ற பணத்தை எல்லாம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இருந்தாலும், இன்னும் தேவைகள் அதிகமாக இருக்கின்றன. எனவே, அதிகமான நிதியையும் அரசாங்கத்திடம் வற்புறுத்த முடியவில்லை. இருந்தாலும்கூட, அமரர் ஊர்தி, Ambulance போன்ற வாகனங்களை, பல இடங்களிலே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வாங்கித் தந்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் மனோகரன் அவர்களும், இந்த ஆண்டு 60 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கின்ற காரணத்தாலே, அந்தத் தொகுதி நிதியிலிருந்து ஓர் அமரர் ஊர்தி வாங்கித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே கூறும்போது, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குப் போதிய மருத்துவர்களை நியமனம் செய்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அதேபோல, G.H.-லே டாக்டர்கள் போதுமான



அளவில் இல்லாத நிலை இருக்கிறதே, அங்கும் மருத்துவர்களை நியமித்து இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நமக்குத் தேவையான மருத்துவர்கள் 721 பேரைத் தேர்வாணையம் தேர்வு செய்து, அரசாங்கத்திடம் ஒப்படைத்துவிட்டது. முதற்கட்டமாக, ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களுக்கு உத்தரவுகள் வழங்கப்பட்டுவிட்டன. அடுத்த கட்டமாக, மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும் ஆணைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இன்னும் ஓரிரு நாட்களிலே அனைத்து மருத்துவர்களுக்கும் ஆணைகள் வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள், Kidney stone அகற்றுவதற்கு Urological Research Centre என்று வைத்திருக்கிறார்கள். ஒரு Switch போட்டவுடனே, Kidney-லே கல் இருந்தால், அதனை உடனே கரைத்துவிடுகிறது. அரசு மருத்துவமனையிலே அறுவை சிகிச்சை செய்துதான் எடுக்கிறார்கள். இதனாலே, வேதனை எல்லாம் இருக்கிறது. இதையெல்லாம் பொது மருத்துவமனையிலே வைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா? தனியார் டாக்டர்கள் அதிக இலாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னொன்று, நேற்றுக்கூட நம்முடைய நடிகர் கமலஹாசன், இரத்த சேமிப்புக்கு, பொது மருத்துவமனையிலே ஒத்துழைப்புக் கொடுக்கவில்லை; வியாபாரமாகப் பயன்படுத்துகிறார்கள், என்று சொன்னார்கள். அதேமாதிரி, இரத்தம் கொடுக்கிற இடத்திற்கு நம்முடைய ஆஸ்பத்திரியிலேயிருந்து van எடுத்துக்கொண்டு போய், அந்த இரத்தத்தை வாங்கிக்கொண்டு வரலாம் என்று சொல்கிறார்கள். ஆகவே, அரசு இதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Kidney Transplantation செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, நவீனக் கருவிகள் ஒருசில தனியார் மருத்துவமனைகளிலேதான் இருக்கின்றன. ஆனால், Kidney அறுவை சிகிச்சையைப் பொறுத்தவரையில், நம்முடைய அரசு மருத்துவமனைகளிலே செய்து கொண்டிருக்கிறோம். ஆனால்,

[2000 மே 2

மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல, நவீனக் கருவிகளை இன்னும் அரசு மருத்துவமனைகளிலே வாங்கி வைக்கவில்லை. காரணம், அதற்கு அதிகமாகச் செலவாகக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. முதற்கட்டமாக, இப்போது Kidney Transplantation-ஐ அரசு மருத்துவமனையில் செய்து கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் கமலஹாசன் ஏதோ ஒரு விழாவிலே தெரிவித்ததாகச் சொன்னார். அதுபற்றி அரசுக்குத் தகவல் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 465, திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**465—**

**ஓமியோபதி மருத்துவப் பிரிவு**

***26947—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை இராஜாஜி மருத்துவமனை மற்றும் மாவட்ட, வட்ட மருத்துவமனைகளில் ஓமியோபதி மருத்துவப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இத்தகைய செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருமங்கலம் தொகுதியில் அரசின் சார்பில் ஓமியோபதி கல்லூரி நடைபெற்று வருகிறது. நம்முடைய கழக அரசு பொறுப்பேற்றவுடன், அந்தக் கல்லூரிக்கென்று, தனியாக 20 ஏக்கர் நிலமும், சுமார் ஒன்றரைக் கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டடங்களும் கட்டி, சமீபத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. கல்லூரி நடத்துவதற்கு நாம் போதிய அளவிற்கு உதவிகள் புரிந்து கொண்டிருக்கிறபோது, அதில் பயில்கிற மருத்துவர்களுக்கு, இராஜாஜி மருத்துவமனை, மாவட்டத் தலைமை



2000 மே 2]

மருத்துவமனை மற்றும் தாலுகா மருத்துவமனைகளில் தனிப் பிரிவு ஏற்படுத்தினால், வேலைவாய்ப்பிற்கு ஏதுவாக இருக்கும் என்று மாணவர்கள் பலமுறை கோரிக்கை வைத்திருக்கிறார்கள். கடந்த ஆண்டுகூட, மாண்புமிகு அமைச்சரிடத்திலே கலைவாணர் அரங்கில் ஒரு விழா நடைபெறுகிறபொழுது கோரிக்கை வைத்ததாக என்னிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அதை மிகவும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற மருத்துவர்களுக்கு ஏதுவாக, மதுரையில் இராஜாஜி மருத்துவமனையிலும், மற்றுமுள்ள மாவட்ட, தாலுகா மருத்துவமனைகளிலும் ஓமியோபதி பிரிவினை எற்படுத்தித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசிலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இந்திய மருத்துவத்தை ஊக்குவிக்க வேண்டுமென்று, சித்த மருத்துவ டாக்டர்களும், ஓமியோபதி டாக்டர்களும், யுனானி டாக்டர்களும், ஆயுர்வேத டாக்டர்களும் பல்வேறு மருத்துவமனைகளிலே நியமிக்கப்பட்டு வருகிறார்கள். ஆனால், ஓமியோபதி கல்லூரியே திருமங்கலத்தில் இருக்கிற காரணத்தாலேதான், மதுரை மாவட்ட மருத்துவமனையிலே இந்தப் பிரிவு தொடங்கப்படவில்லை. ஆனால், தமிழ்நாட்டிலேயுள்ள 25 தலைமை, மாவட்ட மருத்துவமனைகளில், ஓமியோபதி மருத்துவப் பிரிவு செயல்பட்டு வருகிறது. ஏற்கெனவே, 6 தாலுகா மருத்துவமனைகளிலே செயல்பட்டு வந்தது. இப்போது சிதம்பரம், அரக்கோணம், கோவில்பட்டி ஆகிய 3 தாலுகா மருத்துவமனைகளிலும் செயல்படுத்துவதற்கான ஆணைகள் கடந்த ஆண்டு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு சேலம், திருச்சி ஆகிய மாவட்ட மருத்துவமனைகளிலேயும் ஓமியோபதி பிரிவு தொடங்குவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. படிப்படியாக வட்ட மருத்துவமனைகளுக்கும் ஓமியோபதி மருத்துவ டாக்டர்களை நியமிப்பதற்கு அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் அரசு மருத்துவமனைக்கு ஓமியோபதி பிரிவிற்கு அனுமதி வழங்கியிருப்பதற்கு அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக்

கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல, அக்குபங்சர் வைத்திய முறைக்கும் நீங்கள் அனுமதி அளிப்பீர்களா? இரண்டாவதாக, சிதம்பரம் மருத்துவமனையிலே மயக்க மருந்து கொடுக்கிற டாக்டர்கள் இல்லாத காரணத்தினால்—ஒரு தாலுகா மருத்துவமனையில் மயக்க மருந்து கொடுப்பதற்கான டாக்டர்கள் இல்லாத காரணத்தினால்— அறுவை சிகிச்சைகள் எல்லாம் தள்ளி வைக்கப்பட்டுக்கொண்டே போகின்றன. பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, நிரந்தரமாக, சிதம்பரம் அரசு மருத்துவமனையில் மயக்க மருந்து கொடுக்கக்கூடிய ஒரு மருத்துவரை நியமிப்பீர்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அக்குபங்சர் முறையை தாலுகா மருத்துவமனைகளில் கொண்டுவரக்கூடிய வாய்ப்பு இருக்கிறதா என்று மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் கேட்டார்கள். அந்த முறையை இன்னும் நாம் அரசு மருத்துவமனைகளில் கொண்டு வரவில்லை. தனியார் மருத்துவமனைகளிலேதான் அவற்றை இப்போது செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிதம்பரத்தைப் பற்றிச் சொன்னதைப்போல, மயக்க மருந்து கொடுக்கக் கூடிய டாக்டர்களைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டிலே மிகக் குறைவாக இருக்கிறார்கள். அதனால்தான், மயக்க மருந்து கொடுக்கக்கூடிய டாக்டர்களை நாம் வெளிநாடுகளுக்கு அனுப்புவதே இல்லை. Doctors Association-னிடத்திலேயும் இந்தப் பிரிவிலே படிப்பதற்கு நீங்கள் ஆர்வம் காட்டினால் முழு உதவிகளையும் செய்வதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது என்றும் நான் சொல்லியிருக்கிறேன். இப்போதுதான் கொஞ்சம், கொஞ்சமாக அரசில் பணிபுரிந்து கொண்டிருக்கிற மருத்துவர்கள் இந்தத் துறையிலே பயிலுவதற்கு முன் வந்து கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் படிக்கும்போது, முழுச் சம்பளத்தையும் கொடுப்பதற்கு அரசாங்கம் ஆணை பிறப்பித்திருக்கிறது. இருந்தாலும்கூட, தாலுகா மருத்துவமனைகளிலே அறுவை சிகிச்சை செய்வதற்கு இப்படிப்பட்ட மயக்க மருத்துவர் அவசியம் தேவை என்று அரசு உணருகின்ற காரணத்தினாலே, சிதம்பரத்திலேயும் ஒரு மருத்துவர் நிச்சயமாக நியமிக்கப்படுவார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 466, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.



**466—**

**விருது வழங்குதல்**

***22666—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறந்த மாவட்டம் என்று தேர்ந்தெடுத்து அந்த மாவட்ட அதிகாரிகளுக்கு விருது வழங்கப்படுகிறதா?

(ஆ) சிறந்த மாவட்டம் என்று எந்த அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஒரு குறிப்பிட்ட துறையில் நல்ல முன்னேற்றம் காணும் அடிப்படையில் சிறந்த மாவட்டம் என்று தேர்ந்தெடுத்து, சம்பந்தப்பட்ட துறை மூலம் அதிகாரிகளுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை அவ்வாறு சிறந்த மாவட்டம் என்று எத்தனை மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன? சிறந்த மாவட்டம் என்று தேர்வு செய்யப்பட்ட மாவட்டங்களுக்குப் பிரத்தியேக சலுகைகள் ஏதாவது வழங்கப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்களுக்கு விளக்கமாகவே தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு குறிப்பிட்ட துறையில் நல்ல முன்னேற்றம் காணும் அடிப்படையில் சிறந்த மாவட்டம் என்று தேர்ந்தெடுக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட துறை மூலம் அதிகாரிகளுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. சிறு சேமிப்புத் துறையில் அரசால் நிர்ணயிக்கப்பட்டக் இலக்கைவிடக் கூடுதலாக வசூல் செய்து, 1998-99 ஆம் ஆண்டில் முதலிடம் பெற்ற 8 மாவட்டங்களுக்கு விருதுகள் வழங்கவும், 4 மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தனி விருதுகள் வழங்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டு, வழங்கப்பட்டிருக்கின்றன. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் 20 அம்சத் திட்டத்தைச்

[2000 மே 2

செயல்படுத்துவதில் அனைத்து அம்சங்களிலும் நிர்ணயிக்கப்பட்ட குறியீடுகளை முழுமையாக எய்தி, 100 விழுக்காடு மதிப்பெண் பெற்ற மாவட்டங்களில் திட்டச் செயல்பாட்டில் முதன்மை மாவட்டங்களாக வகைப்படுத்தி, அம்மாவட்டங்களுக்கு ஆண்டுதோறும் சுழற் கேடயங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மாவட்ட ஆட்சியர் மாநாட்டில் வழங்கப்பட்டு வருகின்றன. சுப்பராயன் அவர்கள் கேட்டுக்கொண்டது போல, 11 மாவட்டங்கள் 1998-99 ஆம் ஆண்டில் முதலிடத்தில் வந்துள்ளதால் மாவட்ட ஆட்சியர் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 24-12-1999 அன்று சுழற் கேடயங்கள் வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட அந்த மாவட்டங்கள்—1) ஈரோடு, 2) கோயம்புத்தூர், 3) திண்டுக்கல், 4) தேனி, 5) திருநெல்வேலி, 6) விழுப்புரம், 7) மதுரை, 8) கரூர், 9) புதுக்கோட்டை, 10) தூத்துக்குடி 11) வேலூர். 1996 ஆம் ஆண்டு கொடி நாள் வசூலிலும் அரசால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கைவிடக் கூடுதலாக வசூல் செய்து சதவீத அடிப்படையில் முதன்மை இடத்தை அடைந்த திருச்சி, திண்டுக்கல், மற்றும் சென்னை மாவட்டங்களுக்கு, 1998 ஆம் ஆண்டில் விருதுகள் வழங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 467, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**467—**

**தடுப்புச்சுவர்**

***21272—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி வட்டம், கும்மட்டித்திடல் கோரையாற்றின் மேல்கரை மிகவும் பலமிழந்துள்ளதால் அப்பகுதி முழுவதும் தடுப்புச் சுவர் கட்டப்படுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மன்னார்குடி வட்டம், கும்மட்டித்திடல் கிராமம் கோரையாற்றில் வலதுகரையில் கும்மட்டித்திடல் பாலம் அருகில், 1999-2000 ஆண்டில் 100



2000 மே 2]

மீட்டர் நீளத்திற்கு கரையைப் பலப்படுத்த தடுப்புச் சுவரும், 75 மீட்டர் நீளத்திற்கு சறுக்கைச் சுவரும் கட்ட ரூ. 5,60,000/- செலவில் பணி மேற்கொள்ளப்பட்டு, முடியும் தருவாயில் உள்ளது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட அந்த கும்மட்டித்திடல் பகுதியில் கோரையாற்றுக் கரை பலவீனமாக இருந்து, ஆண்டுதோறும் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதை, நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். அநேகமாக ஆண்டுதோறும் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அந்த இடத்திற்கு வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு கேள்வி மூலமாக இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. இந்த ஆண்டு அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த இடத்திலே போதுமான அளவிற்கு அந்த சறுக்கைச் சுவர்கள் அமைப்பது என்பது இல்லாத நிலைதான் இருப்பதாக அறிகிறேன். அந்தக் கோரிக்கை இருக்கிறது. இன்னும் கொஞ்சம் நீட்டிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அது மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்திய பகுதி. 15, 20 ஆண்டுகளுக்கு முன்பு அந்தப் பகுதியிலேதான் உடைப்பு ஏற்பட்டு, வேதாரண்யம் வரையிலே சென்ற பகுதி அது. ஆகவே, அந்தக் கரை மிக பலவீனமாகவே தொடர்ந்து இருக்கின்ற காரணத்தினாலே மேலும் அதில் தேவையான அளவிற்கு அதிகாரிகளைக் கலந்துபேசி, அந்த ஏற்பாடுகளைச் செய்வதற்குரிய முயற்சியை அமைச்சரவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரை பலப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்திருக்கிறேன். மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்கள் யோசனை சொல்லியிருக்கிறார்கள். அதுகுறித்து அதிகாரிகள் மத்தியில் நான் விவாதித்து, நிலைமையை அறிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 468, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

[2000 மே 2

**468—**

**தூர் வாருதல்**

***24122—திரு. மு. பன்னீர்செல்வம்:**

*மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சீர்காழி தொகுதியிலுள்ள கடலோர மீனவர்கள் வாழும் பகுதியருகே செல்லும் பக்கிங்காம் கால்வாயைத் தூர் வாரி செப்பனிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.*

*சீர்காழி தொகுதியிலுள்ள கடலோர மீனவர்கள் வாழும் பகுதியருகே செல்லும் 8 கிலோமீட்டர் தூரம் உள்ள பக்கிங்காம் கால்வாயைத் தூர்வாரி செப்பனிடும் பணி ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்டு, 2.65 கிலோமீட்டா தூரத்திற்குப் பணி நடைபெற்று, முடிவுறும் தருவாயில் உள்ளது.*

**திரு. மு. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியில் கடலோரப் பகுதியிலுள்ள பக்கிங்காம் கால்வாயில் 8 கிலோமீட்டர் தூரத்தில் 2.65 கிலோமீட்டர் தூரத்திற்கு கடந்த ஆண்டு பொதுப் பணித் துறையின் மூலமாகப் பணியை செய்து முடித்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, மீதம் இருக்கக்கூடிய தூரத்தை எப்போது எடுத்துச் செய்ய இருக்கிறீர்கள்? இந்த ஆண்டே எடுத்து, செய்து முடித்துக் கொடுப்பீர்களா? அப்படிச் செய்து கொடுப்பதன் மூலமாகத்தான் கடலிலே இருந்து ஏறுகிற உப்புத் தண்ணீர் நஞ்சை நிலத்திற்கு ஏறாமல் பாதுகாக்கப்படும் என்கிற அவசியத்தை உணர்ந்து, இந்த ஆண்டே செய்து கொடுப்பீர்களா என அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியில் பக்கிங்காம் கால்வாய் 8 கிலோமீட்டர் தூரம் இருக்கிறது. இதிலே 2.65 கிலோமீட்டர் தூரத்திற்குப் பணி முடியும் தருவாயில் இருக்கிறது. மீதியிருக்கின்ற 5.35 கிலோமீட்டர் தூரத்திற்கு*



2000 மே 2]

*தூர்வாரும் பணி, இந்த ஆண்டு தூர்வாரும் பணியின்கீழ் எடுத்துக் கொள்ளப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. ஏ.வி.ஏ. நாசர்.*

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கிங்காம் கால்வாய் எனது தொகுதியில்கூட கடந்து செல்கிறது. இந்த பக்கிங்காம் கால்வாயில் ஒரு காலத்தில் கப்பல் போக்குவரத்து எல்லாம் நடைபெற்றதாகச் சொல்கிறார்கள். மிகப் பெரிய வடிகாலாகவும் இருந்திருக்கிறது. ஆனால் இப்போது எனது தொகுதியில் இருக்கின்ற பக்கிங்காம் கால்வாய் முழுவதுமாகத் தூர்ந்துபோயிருக்கின்ற காரணத்தினால், அங்கே வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றபோது உடனடியாக நீர் வடிய முடியாத காரணத்தினால், அந்தப் பகுதியிலுள்ள விவசாய நிலங்கள் எல்லாம் பாதிக்கப்படுகின்றன. எனவே அரசு உரிய நடவடிக்கை எடுத்து, பக்கிங்காம் கால்வாயைத் தூர்வாரித் தருமா என்பதை அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி எம்.எல்.ஏ. திரு. பன்னீர்செல்வம், அவருடைய தொகுதியிலே ஓடுகின்ற 8 கிலோமீட்டர் பக்கிங்காம் கால்வாயைப் பற்றி அக்கறை எடுத்துக்கொண்டு, கேள்வி எழுப்பிய காரணத்தினால்தான் அதிகாரிகளிடமிருந்து விவரங்களைப் பெற்று நான் தெரிவித்திருக்கிறேன். உங்களுடைய தொகுதியிலே கால்வாயே தூர்ந்துபோயிருக்கிறது. அதைப்பற்றி ஒரு கேள்வி போட்டிருந்தால், அதைவிட விளக்கமாகச் சொல்லியிருப்பேன். அதற்கு முயற்சிக்கவும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 471, திரு. செங்கை சிவம், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

**471—**

**கூட்டுறவு பட்டயப் பயிற்சி**

***9210—திரு. செங்கை சிவம்:**

*மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2000 மே 2

(அ) தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில் சென்னையில் கூட்டுறவு பட்டயப் பயிற்சி நிலையம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *1997-98, 1998-99* ஆம் ஆண்டுகளில் நம்முடைய கலைஞருடைய அரசு ஆதிதிராவிட மாணவர்களுக்குத் தனியாக பட்டயப் பயிற்சி மற்றும் Higher Diploma in Co-operation பயிற்சிக்கு எல்லாவிதமான செலவுகளையும் சேர்த்து, சிறப்புப் பயிற்சி அளித்தது. ஆனால் அவர்கள் இப்பொழுது வேலையின்றி இருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையில் இருக்கிற பணி நியமனம்குறித்தான தடையாணையை நீக்கி, ஆதிதிராவிட மாணவர்களுக்கு முன்னுரிமை அளித்து வேலை அளிக்கப்படுமா? அதைப்போல தமிழகத்திலே கூட்டுறவுத் துறையில் Polytechnic அமைக்கிற திட்டம் உண்டா? அதனுடைய மதிப்பீடு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட்டுறவு பட்டயப் பயிற்சி சென்னையிலே அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் ஏற்கெனவே ஆதிதிராவிட மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சியாக ஆண்டுக்கு 100 பேர் என்ற அளவிலே நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அப்படிப் படித்த மாணவர்களுக்கு வேலைவாய்ப்புபற்றியும் கேட்டிருக்கிறார்கள். தடை நீக்கப்படுமா என்றும் கேட்டிருக்கிறார்கள். மானியக் கோரிக்கை விவாதம் நாளை காலை இருக்கிறது. அதிலே அறிவித்தாலும் சரி, இப்போதே சொன்னாலும் சரி. நேற்று முன்தினம் முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறைக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இருந்து பதிவு மூப்பு அடிப்படையிலே ஆட்களை வேலைக்கு எடுக்கலாம் என்று



2000 மே 2]

அறிவித்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி). அது நாளை முதலே அமலுக்கு வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல முதலமைச்சர் ஏன் ஆதிதிராவிட மாணவர்களுக்காக இந்தச் சிறப்புப் பயிற்சியை ஏற்படுத்தினார்கள் என்று சொன்னால், அவர்களுடைய நெடுநாளைய கோரிக்கையான ஆதிதிராவிடர்களுக்குக் கூட்டுறவுத் துறையிலே, வேலைவாய்ப்பில் சரியான முன்னுரிமை வழங்கப்படவில்லை என்பதைக் கருத்திலேகொண்டு அதிலே அந்த மாணவர்கள் சேர வேண்டும் என்பதற்காகச் சிறப்பாக அந்தப் பயிற்சி தரப்பட்டது. அவர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்திலே பதிவு பண்ணியிருப்பார்களானால் உரிய முறையிலே அவர்களுக்கும் வேலை கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 472, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**472—**

**அரிசி கையிருப்பு**

***32732*—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது தமிழக அரசிடம் இருப்பிலுள்ள அரிசி எத்தனை டன்?

(ஆ) இருப்பிலுள்ள அரிசி இந்த வருடம் முழுவதற்கும் போதுமானதாக உள்ளதா?

(இ) ஒவ்வொரு மாதமும் மத்திய அரசிடமிருந்து தமிழக அரசுக்கு வழங்கப்படும் அரிசி எத்தனை டன்?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கின்றேன்.

(அ), (ஆ) மற்றும் (இ) 1-4-2000 நிலவரப்படி தற்போது தமிழக அரசினுடைய இருப்பில் உள்ள அரிசியின் அளவு 10,46,000 டன். அதிலே 5,32,000 டன் அரிசியும், 5,14,000 டன் அரிசிக்கு ஈடான நெல்லும் இருக்கிறது.

[2000 மே 2

பொது விநியோக மற்றும் இதர நலத் திட்டங்களுக்கு அடுத்த 10 மாதத்திற்குத் தேவையான அரிசி கையிருப்பில் இருக்கிறது. மத்திய அரசிடமிருந்து—ஒவ்வொரு மாதமும்—இந்த மாதம் முதல் 1;30,000 டன் அரிசி பெறப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அளித்த பதில் தமிழ்நாட்டில் உள்ள நுகர்வோர்களுடைய உள்ளங்களைக் குளிர வைக்கக்கூடிய அளவுக்கு இருக்கிறது. இவ்வளவு வறட்சிக் காலத்திலும் 10 மாதத்திற்குத் தேவையான அரிசி கையிருப்பில் இருக்கிறது என்று கூறினார்கள். அதற்காக தமிழக அரசுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். தொகுப்பிலே இருக்கக்கூடிய நெல் மற்றும் வெளிப் பகுதியிலே இருக்கக் கூடிய நெல்லுக்கு எலியினுடைய தொல்லை அதிகமாக இருக்கிறது. அதனால் அரிசி, நெல் சேதாரம் அதிகமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதனால் ஆண்டுக்கு எவ்வளவு சேதாரம் ஏற்படுகிறது, அதைத் தடுக்க அரசால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** தலைவர் அவர்களே. ஒரே நோத்தில் விவசாயிகளிடமிருந்து ஏகபோகக் கொள்முதல் திட்டத்திலே இந்த ஆண்டு மற்ற எந்த ஆண்டையும்விட கூடுதலாக 11,50,000 டன் கொள்முதல் செய்திருக்கின்ற காரணத்தால்தான் அதை வெளியிடங்களிலே வைக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படி வெளியிடங்களிலே வைக்கப்படுகிற நெல்லைப் பாதுகாப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை நுகர்பொருள் வாணிபக் கழகம் எடுத்துக்கொண்டிருக்கிறது. இருந்தாலும் பெரிய அளவிலே கொள்முதல் செய்யப்படுகின்றபோது சிறிய சேதங்கள் ஏற்படத்தான் செய்கின்றன. அதையும் தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 473, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**473—**

**மாணவர்கள் தங்கும் விடுதி**

***29935*—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 2]

(அ) ஒட்டன்சத்திரத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாக மாணவர்கள் தங்கும் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் தொகுதியில் கே.ஆர்.ஆர். அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி உள்ளது. முத்துநாயக்கன்பட்டி, மார்க்கம்பட்டி, கீரனூர் போன்ற ஊர்களில் அரசு மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. அதேபோன்று, ஓடைப்பட்டி, இடையகோட்டை, பெரியகோட்டை, சத்திரப்பட்டி, மஞ்சநாயக்கன்பட்டி, பொருளூர், தொப்பம்பட்டி போன்ற ஊராட்சிகளில் அரசு உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. அங்கே படிக்கின்ற மாணவர்கள் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பாகத் தங்கும் விடுதி இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து இந்த ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பாக அந்தத் தொகுதியில் மாணவர் தங்கும் விடுதி அமைக்க முன் வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையின்கீழ் 972 விடுதிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் 31 மாணவ, மாணவியர் விடுதிகள் திண்டுக்கல் மாவட்டத்தில்மட்டும் இயங்கி வருகின்றன. தற்போது இருக்கும் விடுதிகளை மேம்படுத்த வேண்டியிருப்பதனாலேயும், அரசின் நிதி நிலையைக் கருத்தில்கொண்டும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிசீலிக்க இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 474, திரு. கு. மனோகரன், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

474—

## இலவச வீடுகள்

***13440—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், இலக்கியம்பட்டி ஊராட்சி, பாரதி நகரில் வாழும் தொழுநோயாளிகளின் குடும்பங்களுக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களைச் செயல்படுத்த HUDCO, HDFC போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியினைக் கடனாகப் பெற்று, அதனை வட்டியுடன் குறிப்பிட்ட காலத்திற்குள் திரும்பச் செலுத்துகிறது. எனவே, எத்தரப்பினருக்கும் இலவச வீடுகள் கட்டும் திட்டத்தை வாரியம் செயல்படுத்துவதில்லை.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதனுக்கு முக்கியத் தேவைகளான உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் ஆகிய இம்மூன்றையும் இப்போது சீராகக் கொடுத்து, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் அரசாக தமிழக அரசு திகழ்ந்து கொண்டிருக்கும் இந்தவேளையிலே, அதியமான் வாழ்ந்த மண்ணிலே, பாரதி நகரிலே சுமார் 100 தொழுநோயாளிகளின் குடும்பங்கள் குடிசைகள் போட்டு அரசுப் புறம்போக்கு நிலத்திலே குடியிருந்து வருகின்றனர். மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் 'முடியாது' என்று கூறிவிட்டார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தி, வாழ்க்கையில் கடைக்கோடியில் இருக்கும் அவர்களுக்கு வீடுகளை வழங்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் தொழுநோயாளிகளுக்கு இல்லங்கள் பர்கூரிலேயும், செல்லியம்பட்டியிலும் உள்ளன. அங்கே அவர்கள் தங்கி மருத்துவச் சிகிச்சையும் பெறலாம். அந்த முயற்சியில் உறுப்பினர் அவர்களை ஈடுபடச் சொல்லலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 475, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.*

475—

## கால்நடைப் பண்ணை

***25621—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு கால்நடை பாரமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, டேனிஷ்பேட்டையில் மாவட்டக் கால்நடைப் பண்ணை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, டேனிஷ்பேட்டையில் மாவட்டக் கால்நடைப் பண்ணை அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதி மக்கள் பெரும்பாலும் விவசாயத்திலும், கால்நடை வளர்ச்சியிலும் ஈடுபட்டு வருகின்றார்கள். அவர்களுடைய பொருளாதார வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு உயர்ரகக் கால்நடைகளை அவர்கள் வளர்க்கும்விதத்தில் ஒரு மாவட்டக் கால்நடைப் பண்ணை அமைத்துத் தருவதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் தற்சமயம் 7 மாவட்டக் கால்நடைப் பண்ணைகளும், ஓர் உயரினக் கால்நடைப் பெருக்கப் பண்ணையும், 3 ஆட்டுப் பண்ணைகளும் செயல்பட்டு வருகின்றன. பொதுவாக ஒரு மாவட்டக் கால்நடைப் பண்ணை அமைக்க குறைந்தது 500 ஏக்கர் நிலம் தேவைப்படும். இது தவிர, போதிய நிலத்தடி நீர் வசதி, கட்டடங்கள், பெருமளவுக்கு நிதி மற்றும் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். சேலம் மற்றும் தருமபுரி மாவட்ட விவசாயிகளுக்கென ஓசூரில் ஒரு மாவட்டக் கால்நடைப் பண்ணை

உள்ளதால், சேலம் மாவட்டம், ஓமலூரில் டேனிஷ்பேட்டையில் மாவட்டக் கால்நடைப் பண்ணை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 476, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**476—**

**கால்நடை மருத்துவமனை**

***26157*—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், இராமநாதபுரம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவமனை என்பது மிக அவசியமான ஒன்றாக இருக்கிறது. நான் கேட்டிருக்கிற இடம் தஞ்சாவூர் நகரத்தினுடைய அருகில் 3 கிலோமீட்டர் தூரத்திலே இருக்கிற இடம். அந்த இடத்திற்குப் பக்கத்திலே இருக்கிற கிராமங்கள்—பிள்ளையார்பட்டி, வண்ணாரப்பேட்டை, நீலகிரி ஊராட்சி—இவையெல்லாம் பெரிய பெரிய ஊராட்சிகள்—கிட்டத்தட்ட 8000 வாக்காளர்கள் இருக்கிற இடங்கள். ஒவ்வொரு வீட்டிலேயும் பசு மாடுகளை வளர்க்கிற திட்டம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இதனைக் கருத்தில்கொண்டு, ஒரு கால்நடை மருத்துவமனையை அந்த இடத்திலே தொடங்கினால் அதன் சுற்றுப்புறத்தில் இருக்கிற கிராமங்களுக்கெல்லாம் வசதி ஏற்படும், வழிவகை ஏற்படும் என்ற வகையிலே அரசு மறு ஆய்வு செய்து அங்கு ஒரு கால்நடை மருத்துவமனையை அமைக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



*முற்பகல் 10-15*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் கோட்டம், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் உள்ள கால்நடைக் கிளை நிலையங்கள் பற்றிய விவரம்: தஞ்சாவூரில் ஒரு கால்நடை பெரு மருத்துவமனையும், கள்ளப்பெரம்பூர், வல்லம் ஆகிய இரண்டு இடங்களில் கால்நடை மருந்தகங்களும், சித்திரக்குடி, மேலவிளி, ஆலங்குடி ஆகிய மூன்று இடங்களில் கால்நடைக் கிளை நிலையமும், அவற்றிற்கு முறையே அய்யாசாமிப்பட்டி, சக்கரசாமந்தம், வண்ணாரப்பேட்டை ஆகிய மூன்று இடங்களில் பார்வைக் கிளை நிலையங்களும், இவை தவிர, மனோஜ்பட்டி என்ற இடத்தில் நடமாடும் கால்நடை மருந்தகமும் தற்போது செயல்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் மாவட்டம், இராமநாதபுரம் கிராமத்திற்கு 5 கிலோமீட்டர் தூரத்தில் தஞ்சாவூர் கால்நடைப் பெரு மருத்துவமனை மற்றும் 4 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள களிமேடு பார்வைக் கிளை நிலையம் மூலமாக இராமநாதபுரத்தில் உள்ள கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் இக்கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ள காரணத்தினால் புதிய கால்நடை மருந்தகம் தொடங்க தற்சமயம் சாத்தியக்கூறுகள் இல்லை என்றாலும் எதிர்வரும் காலங்களில் கால்நடைகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டும், அரசின் நிதி நிலைமையைக் கருத்தில்கொண்டும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 477, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**477—**

**உடல் ஊனமுற்றோருக்கு உதவிகள்**

***22140*—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மிகவும் உடல் நலம் பாதிக்கப்பட்டு உடல் ஊனமுற்றவர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்க மாவட்ட அலுவலகங்களுக்கு அவர்களை அழைக்காமல் அதிகாரிகளே நேரடியாகச் சென்று உதவிகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

[2000 மே 2

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடும் ஊனமுற்றவர்களுக்கு ஊனத்தின் தன்மையறிந்து, மாவட்ட மறுவாழ்வு அலுவலர் நேரடியாகச் சென்று உதவித் தொகையை வழங்குகிறார். மற்ற உடல் நலம் பாதிக்கப்பட்ட ஊனமுற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நடத்தும் முகாம்களில் நேரடியாக உதவிக் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே சமூக நலத் துறையினுடைய அலுவலர்கள் நேரடியாகச் சென்று கடுமையாக ஊனமுற்றவர்களுக்கு, காலை இழந்தவர்களுக்கு, கண் பார்வை இல்லாதவர்களுக்கு, பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, சொந்த ஊரிலிருந்து மாவட்டத் தலைநகருக்கு வரமுடியாத அத்தனை பேர்களுக்கும் சமூக நலத் துறை மூலமாக உதவித் திட்டங்களை வழங்குவதாகக் கூறியிருந்தாலும்கூட, நான் சென்று பார்க்கின்ற பல்வேறு இடங்களில் கால் ஊனமுற்றவர்கள், பக்கவாத நோயால் அவதிப்படக்கூடியவர்கள் எல்லாம் விண்ணப்பித்து 6 மாதம், 9 மாதம், 1 வருடத்திற்கு மேலாகக்கூட அந்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து உடனுக்குடன் வழங்காமல் இருக்கக்கூடிய சூழலில் மாவட்டத் தலைநகரங்களுக்கு அந்த ஊனமுற்றவர்கள் நேரடியாக வந்து செல்வதற்கு அதிகமாகச் செலவாகும், அதே நேரத்திலே அவர்கள் வருவதற்குத் துணையாக ஒருவரை அழைத்து வரக்கூடிய சூழ்நிலையில், செலவு இன்னும் அதிகமாகக்கூடிய சூழ்நிலையில், எதிர்காலத்திலே விண்ணப்பம் கொடுத்து ஒரு மாதத்திற்குள்ளாக கடுமையாக ஊனமுற்றவர்களுக்கு நேரடியாக அதிகாரிகளே சென்று அந்த நலத் திட்ட உதவிகளை, நியாயமிருப்பின், உண்மையிருப்பின் உடனடியாக வழங்குவதற்கு அரசு விரைவான நடவடிக்கையை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடும் ஊனமுற்றிருக்கின்றவர்கள் இயங்க முடியாத நிலையில் இருப்பவர்களாகக் கருதப்படுகின்றார்கள். அப்படிப்பட்டவர்களைப் பற்றிய அடையாளங்களைக் குறிப்பிட்டு Photo மூலமாக அவர்களுடைய பாதுகாவலரோ அல்லது பெற்றோரோ



2000 மே 2]

மாவட்ட மறுவாழ்வு அலுவலகத்திற்கு விண்ணப்பித்தால் மாவட்ட மறுவாழ்வு அலுவலர் நேரடியாகச் சென்று, பார்வையிட்டு அவர்கள் நலிவுற்ற குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருப்பார்களானால் அவர்களுக்கு மாதம் உதவித் தொகை 150 ரூபாய் என 6 மாதத்திற்கு ஒருமுறை காசோலையாக வழங்குகிறார்கள். அந்தக் காசோலையை 6 மாதத்திற்கு ஒரு முறை அந்தக் கடும் ஊனமுற்றவர்களுடைய பாதுகாவலரோ அல்லது பெற்றோரோ வந்து பெற்றுச் செல்வதற்கு வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது. நேரடியாகவும் சென்று அவர்களுக்கு வழங்குமாறு அதிகாரிகளுக்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது. மேலும் கடந்த ஆட்சியிலே 1050 பேர்கள் மட்டும்தான் கடும் ஊனமுற்றவர்களுக்கான உதவித்தொகை பெற்று வந்தார்கள். அதுவும் 100 ரூபாய் மட்டுமே. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது 6400 பேருக்கு மாதம் 150 ரூபாய் என்று உதவித் தொகை வழங்க உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதையும், நடப்பு ஆண்டில் நிலுவையாக இருக்கின்ற அத்தனை விண்ணப்பங்களுக்கும் 150 ரூபாய் வீதம் வழங்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர சைக்கிள் வழங்குவதற்கு ஏராளமான விண்ணப்பங்களை மக்களை நேரடியாகச் சந்திக்கிறபோது தருகிறார்கள். நாங்கள் அரசுக்கு அவற்றைக் கொடுத்திருக்கிறோம். ஆனால் கடந்த 3 ஆண்டு காலத்திலே அந்த மனுக்கள்மீது நடவடிக்கை எடுத்து, ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர சைக்கிள் வழங்கப்படவில்லை. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த சமயத்திலே, நீதிமன்றத்திலே ஏதோ தடை இருக்கிறது என்பதால் இதுவரையிலும் வழங்கப்படவில்லை என்றார்கள். எனவே, அவசியம் அவர்களுக்கு அந்தத் தடை உத்தரவை நீக்கி அல்லது தடை உத்தரவு இல்லையென்றால் அரசு முன்னுரிமை கொடுத்து மூன்று சக்கர சைக்கிள் உடனடியாக தமிழகம் முழுவதும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள்

வழங்குவதில் நீதிமன்றத் தடை ஏதும் இல்லை. கடந்த ஆண்டு 2 ஆயிரம் பேருக்கு மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டும் 2 ஆயிரம்பேருக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே கூறுகின்றபோது கடுமையாக ஊனமுற்றவர்களுக்கு அதிகாரிகள் நலத் திட்டங்களை வழங்குவதாகக் கூறினாலும்கூட, பவானி வட்டத்திற்குட்பட்ட கூத்தம்பூண்டியில் அரசு ஊழியராகப் பணியாற்றி விபத்துக்குள்ளாகி, பக்கவாத நோயால் அவதிப்பட்டு, படுக்கையிலிருந்து எழுந்திருக்க முடியாத சூழ்நிலையிலே கடுமையாகப் பாதிக்கப்பட்டவர் கடந்த ஓர் ஆண்டுக்கு மேலாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விண்ணப்பித்தும்கூட இதுவரை நலத் திட்ட உதவிகளைப் பெற முடியாத சூழ்நிலை இருப்பதால் வருங்காலத்தில் அத்தகைய நிலைகளைப் போக்கி நலத்திட்ட உதவிகளைக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோர் ஆண்டும் 2 ஆயிரம் பேர், 2 ஆயிரம் பேர் என்ற அளவிலே கூடுதலாக நிதி வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இப்போது அந்த உதவித் தொகையைப் பெற்றவர்கள் 6400 பேர் என்று குறிப்பிட்டேன். மீண்டும் நிலுவையில் இருக்கின்ற அத்தனை விண்ணப்பங்களுக்கும் நடப்பு ஆண்டில் வழங்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளதன் காரணமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற நபருக்கும் இந்த ஆண்டு நிச்சயமாக உதவித் தொகை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 478, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.



478—

## குழந்தைகள் காப்பகம்

***31656—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிட்லப்பாக்கத்திலுள்ள அரசு மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் காப்பகத்தை சானடோரியம் பெண்கள் சேவை இல்லத்தில் உபயோகப்படாமல் உள்ள கட்டடத்திற்கு மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிட்லப்பாக்கத்தில் உள்ள அரசு மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான நிலையத்தினை சானடோரியம் பெண்கள் சேவை இல்ல துணை இயக்குநர் குடியிருப்புக் கட்டடத்திற்கு மாற்றம் செய்ய அரசு 25-1-2000-த்தில் அரசாணை வெளியிட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துகொள்கிறேன்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளினுடைய வசதிக்காக சொந்தக் கட்டடத்திற்கு மாற்றியமைக்கு நன்றி தெரிவிக்கின்ற அதேநேரத்திலே, நம்முடைய அரசு 5,300 ரூபாய் மாத வாடகை கொடுத்து காது கேளாதோர், வாய் பேச முடியாதோர் பள்ளி ஒன்றை மிகவும் மோசமான இடத்திலே நடத்திக்கொண்டிருக்கிறது. வாடகையும் 5,300 ரூபாய் வீணாகிக்கொண்டிருக்கிறது. அந்தப் பள்ளியையும் இந்த இடத்திற்கே மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா? அப்படிச் செய்தால் எனது தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்துகூட 10 இலட்சம் ரூபாயைக் கட்டடம் கட்டுவதற்குத் தரத் தயாராக இருக்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் குழந்தைகளின்பேரில் பரிதாபப்பட்டு அதையும் இந்த இடத்திற்கு மாற்றுவார்களா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற அந்தச் சேவை இல்லத்தினுடைய பரப்பு 7.08 ஏக்கர் ஆகும். அதிலே ஏற்கெனவே மகளிர் மேம்பாட்டுத் திட்டத்திற்காக ஒரு Work shop இயங்கி வருகிறது. 0.74 ஏக்கர் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. திட்ட அலுவலருடைய அலுவலகத்திற்கு ஓர் ஏக்கர் வழங்கப்பட்டிருக்கிறது. மீதி இருக்கின்ற இடத்தில் கிட்டத்தட்ட 530 பேர் தங்கிப் பயில வேண்டிய சூழ்நிலையில் அந்தச் சேவை இல்லத்தில் பெரியவர்களுக்கும், சிறியவர்களுக்கும் இடம் ஒதுக்கித் தரப்பட வேண்டும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பதைப்போல காது கேளாதோருக்கான பள்ளியை அங்கே அமைப்பதற்கு வாய்ப்பு இல்லை. வேறு இடத்தை உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினால் அவருடைய தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலமாக அங்கு கட்டுவதற்கு அரசு நிச்சயமாக ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஆர். சரஸ்வதி.

**திருமதி. ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் இப்போது வேலைக்குச் செல்லும் இந்தத் தருணத்தில் பெண்கள் முன்னேற்றத்தில் அதிக கவனமும், அக்கறையும் உள்ள நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய காலத்திலேயே தாலுகாதோறும் குழந்தைகளைப் பாதுகாக்க, குழந்தைகள் காப்பகம் ஒன்று அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் காப்பகங்களை தாலுகாதோறும் அரசின் சார்பில் அமைப்பதற்கு வாய்ப்பு இல்லை; மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மாவட்டத்தில் குழந்தைகள் காப்பகம் தொடங்கிட தொண்டு நிறுவனங்கள் முன்வந்தால் அதற்கு அரசு சமூக நல வாரியம் மூலம் பராமரிப்பு உதவித் தொகையை வழங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக அங்கு வந்து என்னோடு பார்வையிட்டார்கள். அந்தத் தொழில்கூடம்கூட உபயோகம் அற்றதாக



இருக்கிறது. அது இல்லாமல், 1 ஏக்கர் 25 சென்ட் இடம் காலியாக இருக்கிறது. அதனால் பாதுகாப்பற்ற தன்மை இருக்கிறது என்று அந்த அதிகாரிகள் சொல்கிறார்கள். எனவே, அந்த இடத்திற்கு காது கேளாதோர், வாய் பேச முடியாதோர் பள்ளியை மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் செயலாளர் அவர்களும், மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தினுடைய M.D. அவர்களும் அந்த இடத்தைப் பார்வையிட்டு, அவர்களுக்கு அது தேவையில்லை என்று அறிவிப்பார்கள் என்று சொன்னால், அந்த இடத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட காது கேளாத குழந்தைகள் பள்ளிக்கு வழங்கலாமா என்பதை அந்த நேரத்திலே அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 479, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**479—**

**தொழிற்சாலை**

***19367—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதியில் ஆதிதிராவிட நலத் துறை சார்பாகப் புதிய தொழிற்சாலை தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 கோடி ரூபாய் ஒதுக்கி இயங்கி வந்த இந்தத் துறைக்கு இப்போது தமிழக முதல்வர் அவர்கள் 500 கோடி ரூபாய் ஒதுக்கி ஆதிதிராவிட மக்களை

கல்வி மற்றும் பொருளாதாரத்திலே மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டு வரவேண்டுமென்ற நல்ல எண்ணத்திலே அந்தத் துறை மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. சமீபத்திலே தென் மாவட்டங்களின் வளர்ச்சிக்காக அமைக்கப்பட்ட நீதியரசர் இரத்தினவேல்பாண்டியன் அவர்களுடைய குழு, தனது அறிக்கையில் தென் மாவட்டங்களுடைய இனப் பிரச்சினையை முடிவிற்குக் கொண்டுவரவேண்டுமானால் அங்கே தொழிற்சாலைகள் தொடங்கப்படவேண்டும் என்று பரிந்துரை செய்திருப்பதாக நான் அறிகிறேன். எனவே, இராமநாதபுரம் மாவட்டத்திலே பல்வேறு பகுதிகளில், கடலோரப் பகுதிகளில் உப்பளங்கள் நிறைய இருக்கின்ற காரணத்தாலே பரமக்குடியிலே அயோடின் உப்பு தயாரிக்கும் தொழிற்சாலையை TAHDCO மூலமாகத் தொடங்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறைக்கான ஒதுக்கீடு ரூ. 50 கோடியில் இருந்து ரூ. 500 கோடியாக உயர்ந்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். 500 கோடியிலிருந்து இப்போது 626 கோடி ரூபாயை மாண்புமிகு முதலவர் அவர்கள் இதற்காக அள்ளித் தந்திருக்கிறார்கள். ஆதிதிராவிட நலத் துறையின் மூலமாக பரமக்குடி தொகுதியில் அயோடின் உப்புத் தொழிற்சாலை தொடங்கமுடியுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். ஏற்கெனவே பரமக்குடி தொகுதியில் உப்பு தயாரிக்கமுடியுமா என்று ஆய்ந்ததில் உப்பு தயாரிக்கக்கூடிய கடற்கரையோரப் பகுதிகள் அந்தப் பகுதியில் இல்லை என்ற காரணத்தாலும், வேறு பகுதிகளிலிருந்து உப்பைக் கொண்டு வரவேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு உப்பு நிறுவனம் (Salt Corporation) ஏற்கெனவே அந்தப் பகுதியில் இயங்கி வருவதாலும், அந்தப் பகுதியில், இந்தத் திட்டத்தை TAHDCO மூலமாகத் தொடங்கி அதை இலாபகரமாக நடத்த முடியாது என்று TAHDCO கருதுவதாலும் இத்துறையின் சார்பாக அநதப பகுதியில் உப்பு த்யாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்க இயலாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்கள் தொழில் தொடங்குவதற்காக TAHDCO மூலமாகக் கடன்களை வழங்கிக்கொண்டிருந்தார்கள். கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலிருந்துதான் இந்தக் கடன்களை வழங்குவதற்கு வங்கிகளோடு தொடர்புபடுத்தி அந்தக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதனால்





வங்கிகளில் கடன் பெறுவதற்கு ஆதிதிராவிட மக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். இப்போது Tamil Nadu Industrial Investment Corporation நேரடியாகக் கடன்களை வழங்குகிறது. இந்த முறையை மாற்றி மீண்டும் TAHDCO மூலமாகக் கடன்களை நேரடியாக வழங்குவதற்கு அரசு முயற்சிக்குமா, அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக TAHDCO எத்தனையோ நடவடிக்கைகளை எடுத்துவருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் தெளிவாகச் சொன்னார். TIIC மூலமாக ஆதிதிராவிட மக்களுக்குக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதை எளிதாக்குவதற்காக அடிக்கடி TIIC நிறுவனத்தாரிடம் பேசி, வங்கி மேலாளர்களிடம் பேசி, அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே அதன்மூலமாக ஆதிதிராவிட மக்களுக்கு எளிதாகக் கடன் அளிப்பதற்குரிய வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 480, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**480—**

**பள்ளி தொடங்குதல்**

***23355—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, சாத்தனூரில் ஆதிதிராவிட நலத் துறை மூலம் ஆரம்பப் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூரில் இயங்கிக்கொண்டிருக்கிற ஆரம்பப் பள்ளிகளில் இப்போது 250-க்கும் மேற்பட்ட ஆதிதிராவிட மாணவக் குழந்தைகள் பயிலுகிறார்கள். ஆதிதிராவிட நலத் துறை மூலம் கிடைக்கக்கூடிய சலுகைகளையும், உதவிகளையும் அவர்கள் பொதுவாகப் பெறமுடியாத நிலை இருக்கிற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசிலனை செய்து, ஆதிதிராவிட நலத் துறை மூலம் கிடைக்கக்கூடிய உதவிகளையும், திட்டங்களையும் அவர்கள் பெறுவதற்கு அந்த மாணவர்களுக்கு ஆதிதிராவிட நலத் துறை மூலம் ஆரம்பப் பள்ளி தொடங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் மூலம் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மூலமாகப் புதிய பள்ளிகள் தொடங்கப்படுவதில்லை. கல்வித் துறையின் மூலமாக ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் ஒவ்வோர் ஆண்டும் தொடங்கப்படுகின்றன. அப்படித் தொடங்கப்படும் பள்ளிகளில், ஒடுக்கப்பட்ட பிரிவினருக்கு சமத்துவமும், சமுதாய நீதியும் கிடைக்க வேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்டு வருகின்ற முதல்வர் அவர்கள் 18 விழுக்காடு ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதியிலே தொடங்க வேண்டுமென்று ஆணையும் வெளியிட்டிருக்கிறார்கள். ஆகவே, தொடக்கப் பள்ளிகளை வழங்குவது கல்வித் துறை சம்பந்தப்பட்ட ஒன்றாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்வித் துறையை அணுகினால், சாத்தியக்கூறுகள் இருந்தால் அது பரிசீலிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

## (பட்டியல் 13 மற்றும் 14)

## பதின்மூன்றாம் பட்டியல்

1—

### உருது அகாடமி

*வினா 9239*—**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ) சிறுபான்மையினரின் மொழியான உருது மொழியின் வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சிக்காக* (Development and Research) *உருது அகாடமி அமைக்கப்படும் என்று கடந்த ஆட்சியில் அறிவிக்கப்பட்டது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், அது அமைக்கப்பட்டுள்ளதா?*

*(இ) இல்லை எனில், அந்த அகாடமி அமைக்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) தெரியும்.*

*(ஆ) ஆயினும், கடந்த ஆட்சியின்போது இந்த உருது அகாடமி அமைக்கப்படவில்லை.*

*(இ) தற்போது உருது அகாடமி அமைக்கப்பட்டுள்ளது.*

2—

### பாதுகாக்கப்பட்ட குடிநீர்

*வினா 30408*—**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திண்டுக்கல் எம்.வி.எம். அரசு மகளிர் கல்லூரியில் மற்றும் விடுதியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?*

*விடை—*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) திண்டுக்கல் எம்.வி.எம். அரசு மகளிர் கல்லூரியில் மொத்தம் 1,700 மாணவியர் படிப்பதாகவும், 130 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப்*

பணியாளர்கள் உள்ளதாகவும், விடுதியில் 240 மாணவியர் தங்கிப் பயின்று வருவதாகவும் அக்கல்லூரி முதல்வர் தெரிவித்துள்ளார். இக்கல்லூரியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி இன்மையால் கிணற்றுத் தண்ணீரையே குடித்து வருவதாகவும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி வேண்டி மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், திண்டுக்கல் நகராட்சி ஆணையருக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதெனவும், இதனடிப்படையில் தீர்மானம் நிறைவேற்றி அரசின் அனுமதி பெறும்பொருட்டு திண்டுக்கல் நகராட்சியால் கருத்துரு அரசிற்கு அனுப்பப்பட்டுள்ள நிலையில் அதன்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3—

**மருத்துவர் குடியிருப்பு**

வினா 32286—**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் அரசு மருத்துவமனை வளாகத்தில் "மருத்துவர் குடியிருப்பு" கட்டித் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

குத்தாலம் தொகுதி, குடவாசல் அரசு மருத்துவமனை வளாகத்தில் மருத்துவர் குடியிருப்பு கட்டித் தருவதுபற்றிய திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

4—

**இணைப்புத் திட்டம்**

வினா 11645—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகரமைப்புத் துறையை நகராட்சி நிருவாகத்தோடு இணைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நகரமைப்புத் துறையை நகராட்சி நிருவாகத்தோடு இணைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

5—

**தொலைக்காட்சிப் பெட்டி**

வினா 19228—திரு. ப. கோவிந்தன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பெரியயோரிப்பட்டி ஊராட்சி தானங்காட்டுவளவு, வேடப்பட்டி, லட்சுமணன்வாடி, பாலிக்காடு, பூதனூர், ரெட்டிப்பட்டி ஆகிய இடங்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பெரியயோரிப்பட்டி மன்ற கூடத்தில் வண்ணத் தொலைக்காட்சி பெட்டி ஒன்று வைக்கப்பட்டுள்ளது. ஏனைய தானங்காட்டுவளவு, வேடப்பட்டி, லட்சுமணன்வாடி, பாலிக்காடு, பூதனூர், ரெட்டிப்பட்டி ஆகிய இடங்களுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வாங்கி வைப்பதற்கு ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லையாதலால் தொலைக்காட்சிப் பெட்டி தற்போது அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

[2000 மே 2

6—

**பேருந்து நிலையம்**

வினா 22128—**திரு. டி. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குழித்துறை நகராட்சி, மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கட்ட அரசு நிதி வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது இப்பணி மேற்கொள்ளப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குழித்துறை நகராட்சிக்கு மார்த்தாண்டம் என்ற இடத்தில் பேருந்து நிலையம் கட்ட ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ. 27.00 இலட்சம் கடன் அனுமதிக்கப்பட்டு முதல் கட்டமாக ரூ. 10 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. பணி ஆணை வழங்கப்பட்டு தற்போது கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

7—

**சாலை செப்பனிடுதல்**

வினா 25019—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், பொய்யுண்டார்கோட்டை ஊராட்சி, பொய்யுண்டார்கோட்டை ஆதிதிராவிட தெருவிலிருந்து பழங்கொண்டார் குடிகாடு வழியாக பால்பண்ணை சந்திப்பு சாலை வரையில் உள்ள மண்சாலையை தார்ச் சாலையாக செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?



2000 மே 2]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், பொய்யுண்டார்கோட்டை ஆதிதிராவிடர் தெருவிலிருந்து பழங்கொண்டார் குடிகாடு பால்பண்ணை சந்திப்பு சாலை நீளம் மொத்தம் 3 கி.மீ. இதில் 0/0-1/0 கி.மீ. நீளம் 1998-99 ஆம் ஆண்டு ரூ. 4.80 இலட்சம் செலவில் தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 1/0-2/0 கி.மீ. சாலை தார்ச் சாலை அமைக்க, அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் மூலம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. 2/0-3/0 சாலை சீர் செய்ய தற்போது ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லை.

8—

**பாலம் செப்பனிடுதல்**

வினா 25022—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், கரைமீண்டார் கோட்டை ஊராட்சியில் வாண்டையார் இருப்பு செல்லும் வழியில் உள்ள கீழத் தெருவில் உள்ள பாலம், காட்டூர் செல்லும் வழியில் உள்ள சிறிய பாலம் ஆகியவற்றை செப்பனிட்டு புதிதாக கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், கரைமீண்டார் கோட்டை ஊராட்சியில் வாண்டையார் இருப்பு செல்லும் வழியில் உள்ள கீழத் தெருவில் உள்ள பாலம், காட்டூர் செல்லும் வழியில் உள்ள பாலம் ஆகியவற்றை கட்டுவதற்கு தற்போது ஊராட்சியில் அல்லது ஊராட்சி ஒன்றியத்தில் போதுமான நிதி வசதி இல்லை.

9— [2000 மே 2

## சாலை செப்பனிடுதல்

வினா 25024—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பாச்சூர்—கீழப்பட்டி, ஆதனக்கோட்டை—அவிச்சகோன்பட்டி சாலை இரண்டு சாலைகளையும் கப்பி பரப்பி தார்ச் சாலையாக செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், பாச்சூர்-கீழப்பட்டி சாலை நீளம் 2 கி.மீ. செப்பனிட ரூ. 17.30 இலட்சமும், ஆதனக்கோட்டை—அவிச்சகோன்பட்டி சாலை நீளம் 1 கி.மீ. செப்பனிட ரூ. 5 இலட்சமும் கூடுதல் ரூ. 22.30 இலட்சமும் செலவாகும். தற்போது ஊராட்சியிலோ, ஊராட்சி ஒன்றியத்திலோ போதுமான நிதி வசதி இல்லை.

10—

## இணைப்புச் சாலையை செப்பனிடுதல்

வினா 25044—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், நாட்டரசன் கோட்டை பாலத்திலிருந்து நடுவூர் சாலை வரை செல்லும் கிராம இணைப்பு சாலையை தார்ச் சாலையாக செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், நாட்டரசன் கோட்டை பாலத்தில் இருந்து நடுவூர் சாலை வரை செல்லும் சாலை



2000 மே 2]

நீளம் 0/0-1/0 கி.மீ. இச்சாலையை தார்ச் சாலையாக மாற்றுவதற்கு ரூ. 9 இலட்சம் செலவாகும். இப்பணியை செயல்படுத்த தற்போது ஊராட்சியிலோ, ஊராட்சி ஒன்றியத்திலோ போதுமான நிதி வசதி இல்லை.

11—

## சாலை செப்பனிடுதல்

வினா 25821—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், தென்மைநாடு ஊராட்சி, தெற்கு தெரு சாலை, பட்டுக்கோட்டை முதல் தஞ்சாவூர் வரை நெடுஞ்சாலையிலிருந்து பிரியும் வேளாண்மை அலுவலகம் வழியாக ஆதிதிராவிடர் தெருவிற்கு செல்லும் சாலைகள் பழுதடைந்துள்ளதை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், தென்மைநாடு ஊராட்சி, தெற்கு தெரு சாலை, பட்டுக்கோட்டை தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் இருந்து பிரியும் வேளாண்மை அலுவலகம் வழியாக ஆதிதிராவிடர் தெருவிற்கு செல்லும் சாலை நீளம் 1 கி.மீ. இச்சாலையை செப்பனிட்டு தார்ச் சாலை அமைக்க ரூ. 9 இலட்சம் செலவாகும். தற்போது ஊராட்சியிலோ, ஊராட்சி ஒன்றியத்திலோ போதுமான நிதி வசதி இல்லை.

12—

## சாலை செப்பனிடுதல்

வினா 25822—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 மே 2

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பஞ்சநதிக்கோட்டை முதல் தெக்கூர் வரை உள்ள சாலையை தார்ச் சாலையாக செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், பஞ்சநதிக்கோட்டை முதல் தெக்கூர் வரை உள்ள சாலை நீளம் 2.60 கி.மீ. இதில் 1 கி.மீ. தார்ச் சாலையாக மாற்றப்பட்டுள்ளது. மீதம் உள்ள 1.60 கி.மீ. சாலையை தார்ச்சாலையாக மாற்ற ரூ. 12 இலட்சம் செலவாகும். இப்பணியை மேற்கொள்ள இப்போது ஊராட்சி ஒன்றியத்தில் போதுமான நிதி வசதி இல்லை.

13—

**சாலை செப்பனிடுதல்**

வினா 25851—திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், நெம்மேலி திப்பியகுடி ஊராட்சியில் நெம்மேலி வடக்கு, வெள்ளூர் இணைப்புச் சாலையிலிருந்து ஆம்பலாப்பட்டு இணைப்புச் சாலை வரை சாலையை தார்ச் சாலையாக செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், நெம்மேலி திப்பியகுடி ஊராட்சியில் வெள்ளூர் சாலை முதல் ஆம்பலாப்பட்டு வடக்கு வரை செல்லும் சாலை நீளம் 1 கி.மீ. ஆகும். இச்சாலை தற்போது மண் சாலையாக உள்ளது. தார்ச் சாலையாக அமைக்க ரூ. 10 இலட்சம் செலவாகும். தற்போது இப்பணியை செயல்படுத்த ஊராட்சியிலோ, ஊராட்சி ஒன்றியத்திலோ போதுமான நிதி வசதி இல்லை.



2000 மே 2]

14—

**சாலை செப்பனிடுதல்**

வினா 25867—திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், ஈச்சங்கோட்டை ஊராட்சி, நடுத்தெரு, வடக்குத் தெரு வழியாக நாட்டரசன்கோட்டை வரை செல்லும் சாலை பழுதடைந்துள்ளதை செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், ஈச்சங்கோட்டை ஊராட்சி, வடக்கு தெரு வழியாக நாட்டரசன்கோட்டை வரை செல்லும் சாலை நீளம் 1.20 கி.மீ. இச்சாலையை செப்பனிட்டு தார்ச் சாலை அமைக்க ரூ. 10.40 இலட்சம் செலவாகும். இப்பணியை செயல்படுத்திட தற்போது ஊராட்சியிலோ, ஊராட்சி ஒன்றியத்திலோ போதுமான நிதி வசதி இல்லை.

15—

**குடிநீர் கைப்பம்பு**

வினா 26529—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, எச்சனஅள்ளி ஊராட்சி, கரூர் மாரியம்மன் கோயில் சந்திப்பில் குடிநீர் வசதிக்காக ஒரு கைப்பம்பு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, எச்சனஅள்ளி ஊராட்சி, கரூர் மாரியம்மன் கோயில் சந்திப்பில் குடிநீர் வசதிக்காக தற்போது ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டுள்ளதாக தருமபுரி மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

16—

## கழிப்பிட வசதி

வினா 27252—திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், வடக்கூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு கழிப்பிட வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், வடக்கூர் ஊராட்சி நடுநிலைப் பள்ளியில் 1999-2000 ஆம் ஆண்டு தொடக்கக் கல்வித் திட்டத்தின்கீழ் ரூ. 13,000 மதிப்பீட்டில் கழிவறை கட்டப்படுகிறது.

17—

## பாலம்

வினா 27259—திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தஞ்சாவூர் மாவட்டம், வடக்கூர் பஞ்சாயத்து நடுநகர் சாலை புது ஆற்றின் கரையில் உள்ள வாய்க்கால் கிளை அய்யம்பட்டி வாய்க்காலில் ஒரு பாலம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், வடக்கூர் பஞ்சாயத்து நடுநகர் சாலை புது ஆற்றின் கரையில் உள்ள வாய்க்கால் கிளை அய்யம்பட்டி வாய்க்காலில் ஒரு பாலம் கட்ட சுமார் ரூ.2.00 இலட்சம் செலவாகும். இப்பணியை செயல்படுத்த தற்போது ஊராட்சியிலோ, ஊராட்சி ஒன்றியத்திலோ போதுமான நிதி வசதி இல்லை.

18—

## மயான சாலை

வினா 27281—திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், நரூர் ஊராட்சி, நாட்டரசன் கோட்டை கிராமத்திலிருந்து வடக்கு நோக்கி செல்லும் மயான சாலை பழுதடைந்து உள்ளதை செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், நரூர் ஊராட்சி, நாட்டரசன் கோட்டை கிராமத்திலிருந்து வடக்கு நோக்கி செல்லும் மயான சாலை நீளம் 0.800 மீட்டர். இச்சாலையை செப்பனிட்டு தார்ச் சாலையாக மாற்ற ரூ. 6.90 இலட்சம் செலவாகும். இப்பணியை மேற்கொள்ள தற்போது ஊராட்சியிலோ, ஊராட்சி ஒன்றியத்திலோ போதுமான நிதி வசதி இல்லை.

[2000 மே 2

19—

**சாலை செப்பனிடல்**

வினா 27283—திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், கரைமீண்டார் கோட்டை ஊராட்சியில் கரைமீண்டார் கோட்டை திருநாணியிருப்பு செல்லும் சாலை, கரைமீண்டார் கோட்டையிலிருந்து சுடுகாட்டு சாலை ஆகிய இரண்டையும் செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், கரைமீண்டார் கோட்டை திருநாணியிருப்பு செல்லும் சாலை, கரைமீண்டார் கோட்டையிலிருந்து சுடுகாடு வரை செல்லும் சாலை ஆகிய இரண்டையும் செப்பனிட்டு தார்ச் சாலையாக அமைக்க ரூ. 13 இலட்சம் செலவாகும். தற்போது ஊராட்சியிலோ, ஊராட்சி ஒன்றியத்திலோ போதுமான நிதி வசதி இல்லை.

20—

**சாலையைப் புதுப்பித்தல்**

வினா 27760—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி பி.டி. சாலை 1 1/2 கி.மீ. மிகவும் பழுதடைந்துள்ளதை செப்பனிட்டு புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2000 மே 2]

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி சாலையின் நீளம் சுமார் 1300 மீட்டர் ஆகும். இதில் 1 கி.மீ. தார்ச் சாலையாகும். இதனை புதுப்பிக்கவும், மீதமுள்ள 300 மீ. தூரத்தினை 2 அடுக்கு ஜல்லி சாலையாக மாற்றி தார்ச் சாலையாக மாற்றவும் ரூ. 3.50 இலட்சம் அளவிற்கு இப்பணியினை மேற்கொள்ள தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

21—

**தார்ச் சாலை**

வினா 27770—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, ஒகேனக்கல்-ஊட்டமலை வரையிலான சாலையை தார்ச் சாலையாக மாற்ற அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, ஒகேனக்கல்-ஊட்டமலை வரையிலான சாலை 1994-95 ஆம் ஆண்டே தார்ச் சாலையாக அமைக்கப்பட்டது. தற்போது அது மிகவும் பழுதடைந்துள்ளது. இப்பணியினை எடுத்துச் செய்ய ரூ. 4.00 இலட்சம் தேவைப்படும். எனவே, வரும் நிதியாண்டில் இப்பணியினை எடுத்துச் செய்ய நிதி வசதியைப் பொறுத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2000 மே 2

**22—**

**தார்ச் சாலையாக மாற்றுதல்**

வினா 27772—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, பிக்கம்பட்டியிலிருந்து பூதிப்பட்டி வரையிலான சாலையை தார்ச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஜக்கம்பட்டி முதல் பூதிப்பட்டி வரையுள்ள 1 கி.மீ. தூரமுள்ள சாலையின் மேற்பரப்பு கற்றளம் ஆகும். இச்சாலையை தார்ச் சாலையாக மாற்ற சுமார் ரூ.3.00 இலட்சம் தேவைப்படும். நிதி நிலைக்கேற்ப வரும் நிதியாண்டில் இப்பணியினை செய்து முடிக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**23—**

**காவல் குளம் செப்பனிடுதல்**

வினா 28935—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், வடக்கூர் வடக்கில் உள்ள காவல் குளத்தை தூர் வாரி செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், வடக்கூர் வடக்கில் உள்ள காவல் குளத்தில் தண்ணீர் குறைந்ததும், நிதி வசதிக்கேற்ப



2000 மே 2]

குளத்தை தூர் வாரி செப்பனிட நடவடிக்கை எடுக்க ஊராட்சி தலைவருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**24—**

**குளம் வெட்டுதல்**

வினா 28938—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பருத்திக்கோட்டை ஊராட்சியில் ஜெயங்கொண்டான் குளத்தினை உடனடியாக வெட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், பருத்திக்கோட்டை ஊராட்சி, ஜெயங்கொண்டான் குளத்தில் தண்ணீர் குறைந்த பின்னர் ஆழப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**25—**

**குளம் செப்பனிடுதல்**

வினா 28944—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பொய்யுண்டார் கோட்டை ஊராட்சியில் உள்ள மணிகுண்டான் குளம், பிள்ளையார் குளம், தூரினேரி குளம், பழண்டான் தெரு குளம் ஆகியவற்றை தூர் வாரி செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

[2000 மே 2

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், பொய்யுண்டார் கோட்டை ஊராட்சி, மணிகுண்டான் குளம், பிள்ளையார் குளம், கரைநேர் குளம், பழண்டான் தெரு குளங்களில் தண்ணீர் குறைந்ததும் தூர் எடுத்து செப்பனிட நடவடிக்கை எடுக்க ஊராட்சி தலைவருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**26—**

**நடைபாலம்**

*வினா 28945*—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பொய்யுண்டார் கோட்டை ஊராட்சியில் தார்ச் சாலைக்கும், முத்துக்கண்ணு தோப்பிற்கும் இடையில் புது ஆற்றின் குறுக்கே ஒரு நடைபாலம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், பொய்யுண்டார் கோட்டை ஊராட்சி தார்ச் சாலைக்கும் முத்துக்கண்ணு தோப்பிற்கும் இடையில் புது ஆற்றின் குறுக்கே நடைபாலம் கட்டுவதற்கு தற்போது ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை.

**27—**

**தார்ச் சாலை**

*வினா 31280*—**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 2]

*(அ)* வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை பேரூராட்சி, சேவகவுண்டச்சிபட்டியில் இருந்து வீரகவுண்டன்பட்டி, சாணிபட்டி, அய்யணனூர் வான்ராயன்பட்டி வழியாக தார்ச் சாலை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

*(அ)* பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட இச்சாலை 8 கி.மீ. நீளமுள்ளது. இதில் 2 கி.மீ. தூரத்திற்கு தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 6 கி.மீ. தூரத்திற்கு தார்ச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு தற்போது ஏதும் நிலுவையில் இல்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

**28—**

**தார்ச் சாலை**

*வினா 31320*—**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட வான்ராயன்பட்டியிலிருந்து செங்காளியூர் வரை மெட்டல் சாலை போட்டு 4 கி.மீ. தார்ச் சாலை போடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

*(அ)* பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட 4 கி.மீ. தூரமுள்ள இச்சாலை 1998-99 ஆம் ஆண்டு சுவர்ண ஜெயந்தி திட்டத்தில் மெட்டல் சாலையாக

அமைக்கப்பட்டுள்ளது. இதனை தார்ச் சாலையாக அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் நிலுவையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**29—**

**தார்ச் சாலையாக்குதல்**

வினா 31913—**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி பாளையம் பேரூராட்சியில் சேவகவுண்டச்சிபட்டியில் இருந்து சாணிப்பட்டி வழியாக வான்ராயன்பட்டி வரை சுமார் 7 கி.மீ. நீளமுள்ள சாலையை கிராம ரோடு நெடுஞ்சாலைத் திட்டத்தில் (ஆர்.ஆர்.) தார்ச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேரூராட்சி சாலையினை நெடுஞ்சாலை துறையில் கிராம சாலைகள் திட்டத்தின்கீழ் தார் சாலையாக மாற்ற வாய்ப்பில்லை.

**30—**

**குடிநீர் வழங்குதல்**

வினா 31934—**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், கோவிலூர் ஊராட்சிக்கு உட்பட்ட சின்னராத்தன்பட்டிக்கு மேல்நிலை தொட்டி அமைத்து குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், கோவிலூர் ஊராட்சிக்குட்பட்ட சின்னராத்தன்பட்டி குடியிருப்புக்குக் குடிநீர் திட்டம் நடப்பு ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, நீராதாரம் உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தை 2000-2001-க்குள் முடித்து மக்கள் பயனுக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**31—**

**கிணற்றை மூடுதல்**

வினா 32235—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ராதாபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட வள்ளியூர்-திருச்செந்தூர் சாலையில் தெற்கு கள்ளிகுளம் மெயின் சாலையை ஒட்டி ஆபத்தான நிலையில் கிணறு ஒன்று உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ராதாபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட வள்ளியூர்-திருச்செந்தூர் சாலையில் தெற்கு கள்ளிகுளம் மெயின் சாலையை ஒட்டி ஆபத்தான நிலையில் உள்ள கிணறு தெ.கள்ளிகுளம் புனித அதிதூதர் மிக்கேல் ஆலய நிர்வாகத்தை சார்ந்ததாகும். இதனை மூட சம்பந்தப்பட்ட ஆலய நிர்வாகிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

32—

### மாற்று இடம்

வினா 33980—திரு. கே. ரவி அருணன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் எல்.ஆர்.சாமி, பாளையம் சாலையில் நடந்து வரும் காய்கறி சந்தைக்கு மாற்று இடம் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி எல்.ஆர்.சாமி. பாளையம் சாலையில் நடந்துவரும் காய்கறி சந்தையை மாற்றி அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது நகராட்சியிடம் இல்லை.

33—

### புகையில்லா அடுப்புகள்

வினா 34396—திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998—99 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிய ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் புகையில்லா அடுப்புகள் எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டுள்ளன?

(ஆ) சேலம் மாவட்டத்தில் இத்திட்டத்தின் மூலம் எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டுள்ளன?



விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) 1998-99 ஆம் ஆண்டு நவம்பர் 1998 முடிய ஊரக வளர்ச்சித் துறை மூலம் 42,727 புகையில்லா அடுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) 1998-99 ஆம் ஆண்டு நவம்பர் 1998 முடிய சேலம் மாவட்டத்தில் புகையில்லா அடுப்புகள் ஏதும் வழங்கப்படவில்லை. எனினும் அம்மாவட்டத்தில் 1998-99 ஆம் ஆண்டு முடிவில் 2,970 புகையில்லா அடுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

34—

### குடிநீர் வசதி

வினா 34428—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட பாளை பேருந்து நிலையத்தில் பயணிகளுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்தி கொடுக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பாளையங்கோட்டை பேருந்து நிலையத்தில் உள்ள குடிநீர் தொட்டி பழுதடைந்துவிட்டதைத் தொடர்ந்து பேருந்து பயணிகளின் குடிநீர்த் தேவைக்காக போதுமான அளவு கொள்ளளவு கொண்ட பி.வி.சி. தொட்டி அமைக்கப்பட்டு பேருந்து நிலையத்தில் பயணிகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

35—

### விசைத்தெளிப்பான்

வினா 30727—திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 மற்றும் 1998-99 ஆகிய ஆண்டுகளில் சிறு மற்றும் குறுவிவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய விசைத் தெளிப்பான் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தேசிய பயிறு வகை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளுக்கு 1996-97 ஆம் ஆண்டில் 72 விவசாயிகளுக்கும் 1997-98 ஆம் ஆண்டில் 12 விவசாயிகளுக்கும் 1998-99 ஆம் ஆண்டில் 37 விவசாயிகளுக்கும் மானியத்துடன் கூடிய விசைத் தெளிப்பான்கள் வழங்கப்பட்டன. எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டத்தின்கீழ் 1998-99 ஆம் ஆண்டில் 216 விவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய விசைத் தெளிப்பான்கள் வழங்கப்பட்டுள்ளன.

36—

## வேளாண் கல்விச் சுற்றுலா

வினா 30730—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1997-98 மற்றும் 1998-99 ஆம் ஆண்டுகளில் எத்தனை விவசாயிகள் வேளாண் கல்விச் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்?

(ஆ) இதற்காக அரசு செலவிட்ட தொகை எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) தமிழகத்தில் 1997-98 ஆம் ஆண்டு 70 விவசாயிகளும், 1998-99 ஆம் ஆண்டு 62 விவசாயிகளும் மத்திய அரசின் விவசாயிகள் பரிவர்த்தனை திட்டத்தின்கீழ் பிற மாநிலங்களுக்குச் சம்பந்தப்பட்ட பயிர் சாகுபடிகளைப் பார்வையிட அழைத்துச் செல்லப்பட்டனர்.

(ஆ) இதற்காக மத்திய அரசினால் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 83,000-மும், 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 83,000-மும் செலவிடப்பட்டுள்ளது.



37—

## விலை வித்தியாசம்

வினா 33872—**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அக்ரோபெட் நிறுவனம் மூலம் வழங்கப்படும் ஆயில் எஞ்ஜின்கள் விலைக்கும், விவசாயிகள் நேரடியாக டீலர்களிடம் வாங்கும் விலைக்கும் உள்ள வித்தியாசம் குறித்து அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

38—

## வழக்குகள் விவரம்

வினா 27936—**திரு. டி. மணி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) களியல் வனச் சரகத்தில் வனத் துறைக்குச் சொந்தமான நிலங்களை தனியார் ஆக்கிரமித்ததில் ஏதாவது வழக்குகள் நிலுவையில் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அந்த வழக்குகள் எந்த நிலையில் உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

**(அ) ஆம், மொத்தம் 12 வழக்குகள் நிலுவையில் உள்ளன.**

[2000 மே 2

(ஆ) மேற்கண்ட 12 வழக்குகளும் நாகர்கோவில் மாவட்ட நீதிமன்றம் மற்றும் குழித்துறை முன்சீப் நீதிமன்றங்களில் தற்போது விசாரணையில் உள்ளன. விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

**விவரங்கள்**

களியல் வனச் சரகத்தில் வனத் துறைக்குச் சொந்தமான நிலங்களில் தனியார் ஆக்கிரமித்ததில் மொத்தம் 12 வழக்குகள் நிலுவையில் உள்ளன. மேற்படி 12 வழக்குகளில் சம்பந்தப்பட்ட நபர்கள் வழக்கு எண், ஆக்கிரமிப்பு பகுதியின் விஸ்தீரணம் மற்றும் வழக்குகளின் தற்போதைய நிலவரம் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வ. எண் | வழக்கில் சம்பந்தப் பட்டவர் | நீதிமன்றம் | வழக்கு எண் | ஆக்கிரமிப்புப் பகுதியின் விஸ்தீரணம் | வழக்கின் தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 01. | சி. தாஸ் | மாவட்ட நீதிமன்றம், நாகர்கோவில் | ஏ.எஸ். 6/97 | 328.53 ஏக்கர் | தற்போது விசாரணையில் உள்ளது. |
| 02. | கோலப்பன் | மாவட்ட முன்சீப் நீதிமன்றம், குழித்துறை | ஓ.எஸ். 144/84 | 3.00 ஏக்கர் | தற்போது விசாரணையில் உள்ளது. |
| 03. | கருணாகர பணிக்கர் | மேற்படி | ஓ.எஸ். 106/86 | 9.51 ஏக்கர் | தற்போது விசாரணையில் உள்ளது. |
| 04. | சுந்தரம் நாடாச்சி | மேற்படி | ஓ.எஸ். 187/85 | 7.70 ஏக்கர் | தற்போது விசாரணையில் உள்ளது. |
| 05. | செல்வமணி மற்றும் சிலர் | மேற்படி | ஓ.எஸ். 321/95 | 1.50 ஏக்கர் | தற்போது விசாரணையில் உள்ளது. |
| 06. | ஜார்ஜ் ஜோசப் மற்றும் சிலர் | மேற்படி | ஓ.எஸ். 32/96 | 1.00 ஏக்கர் | தற்போது விசாரணையில் உள்ளது. |
| 07. | ஜோசப் | மேற்படி | ஓ.எஸ். 119/95 | 0.30 ஏக்கர் | தற்போது விசாரணையில் உள்ளது. |



2000 மே 2]

| வ. எண் | வழக்கில் சம்பந்தப் பட்டவர் | நீதிமன்றம் | வழக்கு எண் | ஆக்கிரமிப்புப் பகுதியின் விஸ்தீரணம் | வழக்கின் தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 08. | செல்வம் | மாவட்ட முன்சீப் நீதி மன்றம், குழத்துறை | ஓ.எஸ். 223/98 | 1.50 ஏக்கர் | தற்போது விசாரணையில் உள்ளது. |
| 09. | ஜார்ஜ் | மேற்படி | ஓ.எஸ். 224/98 | 2.00 ஏக்கர் | தற்போது விசாரணையில் உள்ளது. |
| 10. | இராஜய்யன் | மேற்படி | ஓ.எஸ். 225/98 | 2.00 ஏக்கர் | தற்போது விசாரணையில் உள்ளது. |
| 11. | ரோசம்மாள் | மேற்படி | ஓ.எஸ். 226/98 | 2.00 ஏக்கர் | தற்போது விசாரணையில் உள்ளது. |
| 12. | சிவலிங்கம் | மேற்படி | ஓ.எஸ். 227/98 | 1.00 ஏக்கர் | தற்போது விசாரணையில் உள்ளது. |

தமிழகத்தின் எல்லா இடங்களிலும் உள்ள ஆக்கிரமிப்பு குறித்து (வன மண்டலம்) வாரியான விவரப் பட்டியலை கீழே காணலாம். மேற்படி ஆக்கிரமிப்புகள் குறித்து நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டு வழக்குகள் நிலுவையில் உள்ளதால் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

| வ.எண் | மண்டலம் பெயர் | ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை | ஆக்கிரமிப்புப் பரப்பு (எக்டர்.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 01. | சென்னை | 463 | 659.972 |
| 02. | சேலம் | 3348 | 4277.200 |
| 03. | புலிகள் காப்பகம், திருநெல்வேலி | 91 | 9.002 |

| வ.எண் (1) | மண்டலம் பெயர் (2) | ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை (3) | ஆக்கிரமிப்புப் பரப்பு (எக்டர்) (4) |
|---|---|---|---|
| 04. | தருமபுரி | 1927 | 2488.703 |
| 05. | மதுரை | 3115 | 6001.917 |
| 06. | விருதுநகர் | 63 | 31.360 |
| 07. | திருச்சி | 896 | 118.440 |
| 08. | வேலூர் | 777 | 17.746 |
| 09. | கோயம்புத்தூர் | 3608 | 2114.241 |
| 10. | திண்டுக்கல் | 1911 | 1042.000 |
| 11. | ஈரோடு | 719 | 842.235 |
| 12. | திருநெல்வேலி | 448 | 798.153 |
| | | **17366** | **18401.029** |

**39—**

**சலுகை**

வினா 21355—**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதிதிராவிடர் இளைஞர்களுக்கு நடத்துனர் பணிக்கான தேர்வின்போது உயரக் குறைவில் சலுகை அளிக்க அரசு கருதியுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஆதிதிராவிட இளைஞர்களுக்கு நடத்துனர் பணிக்கான தேர்வின்போது உயரக் குறைவில் சலுகை அளிக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**40—**

**மினி பேருந்து**

வினா 25111—**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருவாரூர் மாவட்டத்தில் மினி பேருந்துக்கான அனுமதி கோரி வந்துள்ள மனுக்களைப் பரிசீலித்து உடனடியாக அனுமதி வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மினி பஸ் கோரி வந்த மனுக்களை பரிசீலித்து இதுவரை 20 நபர்களுக்கு மினி பஸ் செயல்முறை ஆணை வழங்கப்பட்டு, உயர் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவின்பேரில் அனுமதி (பெர்மிட்) வழங்காமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**41—**

**ஆய்வாளர்கள்**

வினா 32691—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மண்டல போக்குவரத்து அலுவலகத்தில் எத்தனை ஆய்வாளர்கள் இருக்கிறார்கள்?

(ஆ) ஆய்வாளர்கள் எண்ணிக்கை போதுமானதல்ல என்பதை அரசு அறியுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரியும் ஆய்வாளர்களின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:

| வ.எண் | பதவியின் பெயர் | ஒப்பளிக்கப்பட்டவை | நிரப்பப்பட்டவை |
|---|---|---|---|
| 1. | மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 | 3 | 3 |
| 2. | மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-2 | 1 | (8-6-1999 முதல்) |

[2000 மே 2

(ஆ) ஸ்கூட்டர் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் போன்ற இரு சக்கர வாகனங்களுக்கு ஆயுட்கால வரி கட்டும் முறை அமல் செய்யப்பட்டதாலும், ஆட்டோ ரிக்ஷாக்கள் மற்றும் சுற்றுலா சிறு மோட்டார் வண்டிகளுக்கு ஐந்து வருடத்திற்கு ஒரு முறை வரி கட்டும் முறை அமல் செய்யப்பட்டதாலும், மீட்டர் பொருத்திய வாடகைக்கான சுற்றுலா மோட்டார் வண்டிகளுக்கு வருடத்திற்கு ஒரு முறை வரி கட்டும் முறை அமல் செய்யப்பட்டதாலும், போக்குவரத்து அலுவலகங்களின் வேலைப்பளு குறைந்துள்ளது. ஆகவே, அந்த அலுவலகத்திற்கென ஒப்பளிக்கப்பட்ட ஆய்வாளர்களின் எண்ணிக்கை போதுமானது என கருதப்படுகிறது.

**42—**

### ஓட்டுநர் உரிமம் ரத்து

வினா 33493—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விபத்து நடந்த வாகனத்தின் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமத்தை ரத்து செய்யுமாறு அரசு ஆணை பிறப்பித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) அரசாணை ஏதும் வெளியிடப்படவில்லை. இருப்பினும் சாலை விபத்துகளைத் தடுக்க ஓட்டுநர் உரிமம் வழங்கும் முறையை மேம்படுத்தும் நோக்குடன் உயிரிழப்பு நேருகிற சாலை விபத்து காரணமான ஓட்டுநர்கள் மீது காவல் துறையினர் வழக்கு பதிவு செய்வதோடு, மோட்டார் வாகன சட்டம் 1988-ல் பிரிவு 19(1)-ன்படி உரிமம் வழங்கும் அதிகாரி என்பதன் அடிப்படையில் தொடர்புடைய வட்டாரப் போக்குவரத்து அலுவலர், ஓட்டுநர் உரிமத்தை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ ஏன் நிறுத்தி வைக்கக்கூடாது என்று ஓட்டுநருக்கு விளக்கம் கேட்கவும், அதன்மீது பதில் பெற்றவுடன், அதனை ஆராய்ந்து முடிவு எடுக்கவும் போக்குவரத்து ஆணையர் சுற்றறிக்கை ஒன்றினை வெளியிட்டார். எனினும், போக்குவரத்து தொழிலாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க இச்சுற்றறிக்கை ரத்து செய்யப்பட்டது.



2000 மே 2]

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**43—**

### திருக்கோயில்களுக்கு ஆபரணங்கள்

வினா 16039—**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுதந்திரப் போராட்டத் தளகர்த்தர்களில் ஒருவரான மாவீரர் திப்புசுல்தான் தமிழக திருக்கோயில்களுக்கு அளித்துள்ள ஆபரணங்கள் யாவை?

(ஆ) அவை தற்சமயம் எந்தெந்த திருக்கோயில்களில் உள்ளன?

விடை—

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) சுதந்திரப் போராட்டத் தளகர்த்தர்களில் ஒருவரான மாவீரர் திப்புசுல்தான் காலத்தில் தமிழக திருக்கோயில்களுக்கு ஆபரணங்கள் ஏதும் அளிக்கப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**44—**

### வாரிசுகளுக்கு அரசுப் பணி

வினா 31465—**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு பணியிலுள்ள ஆண்கள் பணிக்காலத்தில் இறந்தால் வாரிசுகளுக்கு அரசுப் பணி வழங்குவதுபோல், அரசுப் பணியிலுள்ள பெண்கள் இறந்தால் வாரிசுகளுக்கு அரசுப் பணியை அரசு வழங்குகிறதா?

(ஆ) அவ்வாறு வழங்கவில்லை என்றால், பணி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) அரசு பணியிலுள்ள ஆண்கள் பணிக்காலத்தில் இறந்தால் வாரிசுகளுக்கு அரசுப் பணி வழங்குவதுபோல், அரசுப் பணியிலுள்ள பெண்கள் இறந்தால் அவர்களது வாரிசுகளுக்கும் இத்திட்ட ஆரம்ப முதலே அரசுப் பணி வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

45—

**கைதிகள் மேம்பாடு கமிஷன்**

வினா 28294—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள சிறைச்சாலைகளை சீர்செய்யவும், சிறைக் கைதிகளின் நலனைப் பாதுகாக்கவும் மேம்பாடு கமிஷன் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஏற்கனவே அமைக்கப்பட்ட சிறை சீர்திருத்தக் குழுக்கள் அளித்த பெரும்பாலான பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு சிறைவாசிகள் நலன்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. சிறைச்சாலைகள் சீர்செய்யப்பட்டுள்ளன.

தற்போது, அகில இந்திய அளவில் சிறை சீர்திருத்தம் மேற்கொள்வதற்கு மத்திய அரசு உயர் அலுவலர்கள் கொண்ட குழுவை அமைத்துள்ளது. குழுவின் அறிக்கை பெறப்பட்டவுடன் சிறை சீர்திருத்தங்கள் மேற்கொள்வதுபற்றி பரிசீலிக்கப்படும். எனவே, இந்நிலையில் சிறைகளை மேம்படுத்தவோ சிறைவாசிகளின் நலனுக்காகவோ தனியாக கமிஷன் அமைக்க வேண்டிய நேர்வு எழவில்லை.



46—

**சிறைச்சாலைகள்**

வினா 33548—திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மத்திய சிறைச்சாலைகள் எத்தனை உள்ளன?

(ஆ) கிளைச் சிறைச்சாலைகள் எத்தனை உள்ளன?

விடை—

மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 9 மத்திய சிறைச்சாலைகளும், 114 கிளைச் சிறைச்சாலைகளும் உள்ளன.

47—

**அடுக்குமாடி வீடுகள்**

வினா 28270—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் அரசு அலுவலகங்களில் பணிபுரியும் அதிகாரிகளுக்கு பொதுப் பணித் துறையின் மூலம் அடுக்குமாடி வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை எண் 373, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 24-2-1979-ல் மாவட்ட தலைமையிடம் மற்றும் வருவாய்க் கோட்ட தலைமையிடம் இவற்றில் மட்டும் தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்பு திட்டங்களை செயற்படுத்துமாறு ஆணை பிறப்பித்துள்ளது. பெண்ணாகரம், தருமபுரி மாவட்டத்தின் ஒரு தாலுகா தலைமையிடம் என்பதால் அரசு அலுவலர்களுக்கு தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்பு திட்டத்தினை தமிழ்நாடு வீட்டு

[2000 மே 2

வசதி வாரியம் இதுவரை செயல்படுத்தவில்லை. இருப்பினும், இப்பகுதியில் அரசு அலுவலர்களிடமிருந்து வாடகை குடியிருப்புகளுக்குப் போதிய தேவையும், அரசுக்குச் சொந்தமான தக்க நிலம் மற்றும் மாவட்ட ஆட்சியாளரின் பரிந்துரையும் இருப்பின், அரசின் அனுமதியுடன் இத்திட்டத்தைச் செயற்படுத்த தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஆவன செய்ய இயலும்.

**48—**

**வங்கிக் கணக்கு**

வினா *29067*—திரு. கே. ரவி அருணன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டான்சி நிறுவனத்தில் *1978* ஆம் ஆண்டு மே மாதம் முதல் *1983* ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை பாரத ஸ்டேட் வங்கிக் கணக்கில், வரவுக் கணக்கில் எழுதப்படாமல் விடுபட்ட தொகை எவ்வளவு? பல ஆண்டுகளாகியும் வசூல் ஆகாமல் இருப்பதற்கான காரணம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

வங்கியாளர்களால் பற்றுவைக்கப்படாது டான்சி நிறுவனத்திற்கும் வங்கியாளருக்கும் முரண்பாடான தொகை ரூ.*4.47* இலட்சங்கள் வங்கியாளர்களால் சரிசெய்யப்பட்டுவிட்டதால் எந்தவித முரண்பாடும் நிலுவையில் இல்லை.

**49—**

வினா *30497*—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொது இடங்களில் சுவர்களில் விளம்பரம் செய்யக்கூடாது என அறிவித்திருந்தும் தொடர்ந்து சுவர்களில் விளம்பரம் செய்வதை தடுத்து நிறுத்த கடும் நடவடிக்கை மேற்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2000 மே 2]

விடை—

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொது இடங்களில் சுவர்களில் விளம்பரம் முன் அனுமதி பெறாமல் செய்வதை தடுக்க ஏற்கெனவே அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

**50—**

**நடுநிலைப் பள்ளி**

வினா *24178*—திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, சித்தமல்லியில் செயல்படும் ஆதிதிராவிடர் நலத் துறையின் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், வரும் ஆண்டில் நடைமுறைப்படுத்திட அரசு உத்தரவிடுமா?

விடை—

மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

## பதினான்காம் பட்டியல்

**1—**

**சாலை மேட்டினை சரி செய்தல்**

வினா *22181*—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 2

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி, நெக்குந்தி-புதுப்பட்டி சாலையில் ஈச்சம்பள்ளி என்ற இடத்திலுள்ள உயரமான மேட்டினை சரிசெய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி, நெக்குந்தி-புதுப்பட்டி சாலையில் இருந்த மேடுகள் சரிசெய்யப்பட்டு வாகனங்கள் சிரமமின்றிச் செல்லத்தக்க வகையில் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) கேள்வி எழவில்லை.

2—

**சாலை செப்பனிடுதல்**

வினா 25346—திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், ஈச்சங்கோட்டை ஊராட்சி, ஈச்சங்கோட்டை முதல் சோழபுரம் 2.8 கி.மீ. சாலை ஈச்சங்கோட்டை பாலத்திலிருந்து வீரமுண்டார் குடிகாடு வழியாக சாமிப்பட்டி சாலை 6.00 கி.மீ. சாலையை செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், ஈச்சங்கோட்டை ஊராட்சி, ஈச்சங்கோட்டை முதல் சோழபுரம் வரை உள்ள சாலையின் நீளம் 2.80 கி.மீ. ஈச்சங்கோட்டை பாலத்திலிருந்து வீரமுண்டார் குடிகாடு வழியாக சாமிப்பட்டி செல்லும் சாலையினை செப்பனிட்டு தார்ச் சாலை



2000 மே 2]

அமைக்க 9.50 இலட்சம் செலவாகும். இப்பணியைச் செயல்படுத்த தற்போது ஊராட்சியிலோ, ஊராட்சி ஒன்றியத்திலோ போதுமான நிதி வசதி இல்லை.

3—

**சாலை செப்பனிடுதல்**

வினா 25860—திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், நடுவூர் ஊராட்சிக்கு உட்பட்ட, நாட்டரசன்கோட்டை 1.00 கி.மீ. சாலை, புதுப்பட்டி 1.00 கி.மீ சாலை, நடுவூர் முதல் கொல்லங்கரை 1.00 கி.மீ. சாலை மிகவும் மோசமாக உள்ளதை செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், நடுவூர் ஊராட்சிக்குட்பட்ட, நாட்டரசன்கோட்டை சாலை, புதுப்பட்டி சாலை, நடுவூர் முதல் கொல்லங்கரை சாலை ஆகிய சாலைகளை செப்பனிடுவதற்கு ரூ.9 இலட்சம் செலவாகும். இப்பணியைச் செயல்படுத்த தற்போது ஊராட்சியிலோ, ஊராட்சி ஒன்றியத்திலோ போதுமான நிதி வசதி இல்லை.

4—

**சாலை செப்பனிடுதல்**

வினா 26357—திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பாச்சூர் ஊராட்சி, பாச்சூர் கிராமத்திலுள்ள அனைத்து சாலைகளையும் கப்பிச் சாலையாக செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், பாச்சூர் ஊராட்சி, பாச்சூர் கிராமத்தில் உள்ள அனைத்து சாலைகளையும் தார்ச்சாலையாக மாற்றுவதற்கு ரூ.15.60 இலட்சம் செலவாகும். இப்பணியைச் செயல்படுத்த தற்போது ஊராட்சியிலோ, ஊராட்சி ஒன்றியத்திலோ போதுமான நிதி வசதி இல்லை.

5—

**பாலம் கட்டுதல்**

வினா 27139—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், பின்னையூர் ஏனாதி சாலையில், பின்னையூர் சிறுசாலுவலர் தெரு அருகில் ராஜாமடம் வாய்க்காலில் பாலம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், பின்னையூர் ஏனாதி சாலையில், பின்னையூர் சிறுசாலுவலர் தெரு அருகில் ராஜாமடம் வாய்க்கால் அகலம் 15 மீட்டர் ஆகும். இவ்வாய்க்காலில் 3 மீட்டர் அகலத்தில் பாலம் கட்ட சுமார் 5 இலட்சம் செலவாகும். தற்போது இப்பணியை முடித்திட ஊராட்சி ஒன்றியத்தில் போதுமான நிதி வசதி இல்லை.

6—

**சாலை செப்பனிடுதல்**

வினா 27555—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், காசநாடு புதூர் ஊராட்சி, காசநாடு புதூர் தெற்குத் தெரு ஒரு கி.மீ. சாலையை தார்ச் சாலையாக செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், காசநாடு புதூர் ஊராட்சி, காசநாடு புதூர் தெற்குத் தெரு சாலையின் நீளம் 1 கி.மீ. தற்போது இச்சாலை மண் சாலையாக உள்ளது. இச்சாலையை செப்பனிட்டு தார்ச்சாலையாக மாற்ற ரூ.9 இலட்சம் செலவாகும். இப்பணியை மேற்கொள்ள தற்போது ஊராட்சியிலோ, ஊராட்சி ஒன்றியத்திலோ போதுமான நிதி வசதி இல்லை.

7—

**பாலம் அமைத்தல்**

வினா 27617—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சத்தியநாதபுரம் ஊராட்சியைச் சேர்ந்த ஆணைக்கல்லானூர் முதல் மோட்டுப்பட்டி செல்லும் சாலையில் 0/6 கி.மீ. இடத்தில் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சத்தியநாதபுரம் ஊராட்சியைச் சேர்ந்த ஆணைக்கல்லானூர் முதல் மோட்டுப்பட்டி செல்லும் சாலையில் 0/6 கி.மீ. இடத்தில் பாலம் அமைக்க வரும் நிதியாண்டில் நிதி நிலைக்கேற்ப பணி எடுக்கப்படும்.

[2000 மே 2

8—

### சாலை செப்பனிடுதல்

*வினா 27619*—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூக்குட்டமருத அள்ளி ஊராட்சியைச் சேர்ந்த நாய்க்கனூர் சாலையை பழுது பார்த்து செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூக்குட்டமருத அள்ளி ஊராட்சியைச் சேர்ந்த நாய்க்கனூர் சாலை ஜல்லி சாலையாகும். இச்சாலைப்பணி வரும் நிதியாண்டில் நிதிநிலையைப் பொறுத்து மேற்கொள்ளப்படும்.

9—

### பாதை வசதி

*வினா 27755*—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி—மாமரத்துக்காடு வழியாக சிகரல அள்ளிக்கு இதுவரை பாதை வசதியில்லாமலிருப்பது அரசு கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் பாதை வசதி செய்து தரப்படுமா?



2000 மே 2]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜன அள்ளியிலிருந்து மாமரத்துக்காடு வழியாக சிகரல அள்ளி செல்ல இடைப்பட்ட தூரம் 3 கி.மீ. ஆகும். இதற்குப் பாதை வசதி ஏற்படுத்திக் கொடுக்க தற்போது நிதி வசதி இல்லை.

10—

### பாதை செப்பனிடுதல்

*வினா 27758*—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சி, தின்னபெல்லூர் - மூலபெல்லூர் செல்லும் 2 கி.மீ. பாதை மிகவும் பழுதடைந்துள்ளது அரசு கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் பாதை செப்பனிடப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சி, தின்னபெல்லூர் - மூலபெல்லூர் செல்லும் சாலை 2 கி.மீ. நீளச் சாலையாகும். இதில் 1.40 கி.மீ. தார்ச்சாலை அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 0.60 கி.மீ. ஜல்லி சாலையை தார்ச் சாலையாக மாற்ற வரும் நிதியாண்டில் நிதிநிலையைப் பொறுத்து பணி மேற்கொள்ளப்படும்.

[2000 மே 2

11—

## குளம் செப்பனிடுதல்

வினா 28937—திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், ஆதனக்கோட்டை ஊராட்சியில் உள்ள கல்லூரணி குளத்தை தூர் எடுத்து செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், ஆதனக்கோட்டை ஊராட்சி, கல்லூரணி குளத்தில் தண்ணீர் குறைந்த பிறகு தூர் எடுத்து செப்பனிடுவதற்கு நடவடிக்கை எடுக்க ஊராட்சித் தலைவருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

12—

## படித்துறைகள் கட்டுதல்

வினா 28939—திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பருத்திக்கோட்டை ஊராட்சியில் உள்ள குளங்கள் அனைத்திற்கும் படித்துறைகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பருத்திக்கோட்டை ஊராட்சியில் உள்ள குளங்களை ஊராட்சி நிதி வசதிக்கேற்ப தூர் எடுத்து



2000 மே 2]

படித்துறைகள் கட்ட நடவடிக்கை எடுக்க ஊராட்சித் தலைவருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

13—

## குளம் செப்பனிடுதல்

வினா 28950—திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், கரைமீண்டார் கோட்டை ஊராட்சியில் உள்ள மூங்கில் குளம், பிள்ளையார் கோயில் குளம், கொள்ளயுண்டார் இருப்பு, சின்னவண்ணான் குளம், கரைமீண்டார் கோட்டை, செங்கபள்ளம் குளம் ஆகிய குளங்களை தூர் எடுத்து செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், கரைமீண்டார் கோட்டை ஊராட்சியில் உள்ள மூங்கில் குளம், பிள்ளையார் கோயில் குளம், கொள்ளயுண்டார் இருப்பு, சின்னவண்ணான் குளம், கரைமீண்டார் கோட்டை, செங்கபள்ளம் ஆகிய குளங்களில் தண்ணீர் குறைந்ததும் நிதி வசதிக்கேற்ப தூர் எடுத்து செப்பனிட நடவடிக்கை எடுக்க ஊராட்சித் தலைவருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

14—

## குளம் செப்பனிடுதல்

வினா 28952—திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், வாண்டயார் இருப்பு ஊராட்சியில் உள்ள புதுக்குளம், இடையான்குளம், பிள்ளையார் குளம் ஆகிய மூன்று குளங்களையும் தூர் எடுத்து ஆக்கிரமிப்புகளை அகற்றி செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், வாண்டயார் இருப்பு ஊராட்சியில் உள்ள புதுக்குளம், இடையான்குளம், பிள்ளையார் குளம் ஆகிய குளங்களில் தண்ணீர் குறைந்ததும், நிதி வசதிக்கேற்ப தூர் எடுத்துச் செப்பனிட நடவடிக்கை எடுக்க ஊராட்சித் தலைவருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**15—**

**குளம் செப்பனிடுதல்**

வினா *28954*—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், விளார் கிராமத்தில் உள்ள தண்டுசாத்திக் குளம், மூங்கில் குளம், நாஞ்சல் ஏரி ஆகிய மூன்று குளங்களையும் தூர் எடுத்துச் செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், விளார் கிராமத்தில் உள்ள சாத்திக்குளம், மூங்கில் குளம், நாஞ்சல் ஏரி ஆகிய மூன்று குளங்களையும் தூர் எடுத்துச் செப்பனிட தற்போது ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை.

**16—**

**குளம் செப்பனிடுதல்**

வினா *28955*—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், கரைமீண்டார் கோட்டை ஊராட்சியில் உள்ள மூங்கில் குளம், பிள்ளையார் கோயில் குளம், செங்கம்பள்ளம் குளம், சின்ன வண்ணான் குளம் ஆகிய குளங்களை தூர் எடுத்து செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், கரைமீண்டார் கோட்டை ஊராட்சியில் மூங்கில் குளம், பிள்ளையார் கோயில் குளம், செங்கம்பள்ளம் குளம், சின்ன வண்ணான் குளம் ஆகிய குளங்களை தூர் வாரி படித்துறை மற்றும் வரத்து வாய்க்கால் வடிகால் கட்டித்தர சுமார் ரூ.4 இலட்சம் செலவாகும். தற்போது ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை. எனவே கருத்துரு ஏதுமில்லை.

**17—**

**பாலம் கட்டுதல்**

வினா *28956*—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கிளாமங்கலம் தெற்கு தெருவில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு ஆற்றைக் கடக்க ஒரு பாலம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், கிளாமங்கலம் தெற்குத் தெருவில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு வசதியாக பாலம் கட்ட கோரப்பட்டுள்ள ஆற்று பாலத்தின் நீளம் 15 மீட்டர் ஆகும். இதில் 3 மீட்டர் அகலத்திற்கு பாலம் கட்ட சுமார் 4 இலட்சம் செலவாகும். தற்சமயம் மரப்பாலம் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**18—**

**குளம் செப்பனிடுதல்**

*வினா 28959*—**திரு. மா. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், வடக்கூர் தெற்கு ஊராட்சிக்கு உட்பட்ட நடுநகர், செல்லம்பட்டி ஆதிதிராவிடர் தெருவில் குட்டக்குளத்தை தூர் எடுத்து செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*இல்லை.*

**19—**

**குளம் செப்பனிடுதல்**

*வினா 28960*—**திரு. மா. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், தோப்பு விடுதி ஊராட்சி, பத்துப்புளி விடுதி புதுக்குளம், வண்ணான் கொல்லைப்பட்டி குளம் ஆகிய இரண்டையும் தூர் எடுத்து செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், தோப்பு விடுதி ஊராட்சி, புதுக்குளம், வண்ணான் கொல்லைப்பட்டிக் குளம் ஆகிய இரண்டு குளங்களில் ஊராட்சிக்குச் சொந்தமான புதுக்குளம் ரூ.5000 மதிப்பீட்டில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் தூர் எடுக்கப்பட்டுள்ளது. வண்ணான் கொல்லைப்பட்டி குளத்தை தூர் எடுக்க சுமார் ரூ.50,000 செலவாகும். தற்போது ஊராட்சி ஒன்றியத்தில் நிதி பற்றாக்குறை இருப்பதன் காரணமாக பணி மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது.*



**20—**

**பாலம் கட்டுதல்**

*வினா 28961*—**திரு. மா. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பஞ்சநதிக்கோட்டை கிராமத்திலிருந்து ஆதிதிராவிடர் தெரு செல்லும் சாலையில் வடிகால் வாய்க்கால் அமைந்துள்ள இடத்தில் ஒரு பாலம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், பஞ்சநதிக்கோட்டை கிராமத்தில் இருந்து ஆதிதிராவிடர் தெரு சாலைக்கு செல்லும் வடிகாலில் ஏற்கெனவே சில ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட 6 வரிசையுள்ள 90 எம்.எம். விட்டமுள்ள குழாய்ப்பாலம் கடந்த மழை வெள்ளத்தின்போது பழுதடைந்து மோசமாக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனை மீண்டும் புதிதாகக் கட்டித்தர ரூ.2 இலட்சம் செலவாகும். தற்போது ஊராட்சி ஒன்றியத்தில் போதுமான நிதி வசதி இல்லை.*

**21—**

**வெள்ளத் தடுப்புச் சுவர் செப்பனிடுதல்**

*வினா 28962*—**திரு. மா. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், வாண்டையார் இருப்பு ஊராட்சியில் ஆதிதிராவிடர் மயான சாலை நடுப்பாதையில்*

[2000 மே 2

கீழத்தெருவும், மயான சாலையும் சந்திக்கும் குட்டைக்காடு அருகில் பழுதாகி உள்ள வெள்ளத்தடுப்புச் சுவரை செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

22—

### குளம் செப்பனிடுதல்

வினா 28963—திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், தென்மைநாடு ஊராட்சிக்கு உட்பட்ட நாவல் ஓடை குளம், தீமிதிக் குளம், அம்மணிக் குளம் ஆகிய குளங்களைத் தூர் எடுத்து செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

23—

### குளம் செப்பனிடுதல்

வினா 28964—திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், விளார் ஊராட்சியில் உள்ள கண்டிதம்பட்டு ஊர்க்குளம், பொட்டுமாச்சாவடி ஏரி ஆகிய இரண்டு குளங்களையும் தூர் எடுத்து செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?



2000 மே 2]

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், விளார் ஊராட்சி, கண்டிதம்பட்டு ஊர்க்குளம் மில்லியன் கிணறுகள் திட்டத்தில் ரூபாய் 1 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரும் பணி முடிக்கப்பட்டு விட்டது. பொட்டுமாச்சாவடி ஏரி பொதுப் பணித் துறையிடம் உள்ளது. அத்துறைதான் இதைச் செப்பனிட வேண்டும்.

24—

### குளம் செப்பனிடுதல்

வினா 28965—திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சாவாளிப்பட்டி ஊராட்சி, மணிச்கிரான் விடுதி, செட்டிகுளம், செவ்வாய்ப்பட்டி, கொக்கு ஊருணி, செவ்வாய்பட்டி கோவில் குளம், திருவோணம் தனிகை குளம், மேலமேட்டுப்பட்டி, ஆவடை ஊருணி குளம் ஆகிய குளங்களைத் தூர் எடுத்து செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், சாவாளிப்பட்டி ஊராட்சி, மணிக்கிரான் விடுதி, செட்டிகுளம், கொக்கு ஊருணி, செவ்வாய்ப்பட்டி கோவில் குளம், திருவோணம் தனிகை குளம், மேலமேட்டுப்பட்டி, ஆவடை ஊருணி குளம் ஆகிய குளங்களில் தூர் எடுத்து செப்பனிட சுமார் ரூபாய் 5 இலட்சம் செலவாகும். தற்போது இப்பணிகளை முடித்திட ஊராட்சி ஒன்றியத்தில் போதுமான நிதி வசதி இல்லை. எனவே இதுபற்றி கருத்துரு ஏதுமில்லை.

[2000 மே 2

**25—**

**குளம் செப்பனிடுதல்**

*வினா 28967*—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், காடுவெட்டி விடுதி கிராமத்தில் உள்ள பொன்னன் குளத்தை தூர் எடுத்து செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், காடுவெட்டி கிராமத்தில் உள்ள பொன்னன் குளம் பொதுப் பணித் துறை மூலம் தூர் எடுத்து செப்பனிடப்பட்டுள்ளது.

**26—**

**குளம் செப்பனிடுதல்**

*வினா 28968*—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், சோழபுரம் கிழக்கு கிராமத்தில் உள்ள கைலான்பிறை குளத்தை தூர் வாரி செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.



2000 மே 2]

**27—**

**குளம் செப்பனிடுதல்**

*வினா 28969*—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், நடுவூர் ஊராட்சியில் உள்ள அய்யனார் குளம், கழுதை குளம், நாட்டரசன் கோட்டை புதுக்குளம், அரும்பலைக் குளம் ஆகிய குளங்களை தூர் எடுத்துச் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**28—**

**குளம் செப்பனிடுதல்**

*வினா 28970*—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், ஆதனக்கோட்டை ஊராட்சிக்கு உட்பட்ட ஆதனக்கோட்டை கல்லூர்ணி குளத்தை தூர் எடுத்து செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

[2000 மே 2

29—

**குளம் செப்பனிடுதல்**

வினா 28971—திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பொய்யுண்டார் கோட்டை ஊராட்சி, சிலம்பன் பழங்கொண்டார் தெருவில் உள்ள ஊருணி குளத்தை தூர் எடுத்து செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

30—

**படித்துறை கட்டுதல்**

வினா 28972—திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், ஆழிவாய்க்கால் கிராமத்தில் உள்ள உப்புகுளம் மேலக்கரையில் படித்துறை ஒன்று கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், ஆழிவாய்க்கால் கிராமத்தில் உள்ள உப்புகுளம் மேலக்கரையில் படித்துறை கட்டுவதற்கு ரூ.40,000 செலவாகும். தற்போது ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை.



2000 மே 2]

31—

**சாலை செப்பனிடுதல்**

வினா 30073—திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், சோழகன்குடிகாடு கிராம ஆதிதிராவிடர் தெரு சாலையை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், சோழகன்குடிகாடு கிராம ஆதிதிராவிடர் தெரு சாலையின் நீளம் சுமார் 1.2 கி.மீ. ஆகும். இதில் 600 மீட்டர் நீளம் தார்ச் சாலையாக்கப்பட்டுள்ளது. 200 மீட்டர் கப்பி சாலையாக்கப்பட்டுளளது. மீதமுள்ள 400 மீட்டர் மண் சாலையை செப்பனிட சுமார் ரூ.3.50 இலட்சம் செலவாகும். இப்பணியை மேற்கொள்ள தற்போது ஊராட்சி ஒன்றியத்தில் போதுமான நிதி வசதி இல்லை.

32—

**இணைப்புச் சாலை**

வினா 30074—திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், விளார் ஊராட்சி, விளார்-நாஞ்சிக்கோட்டைக்கு மூன்று கிலோமீட்டர் இணைப்புச் சாலை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், விளார் ஊராட்சி, விளார்-நாஞ்சிக்கோட்டை இணைப்பு சாலையில் நடுவில் உள்ள பகுதியில் சுமார்

[2000 மே 2

400 மீட்டர் தனியார் பட்டா இடம் உள்ளது. ஆக்ரமணம் செய்து இணைப்புச் சாலை அமைக்கப்பட வேண்டியுள்ளதால் உடன் சாலை அமைக்கும் பணியை செயல்படுத்த இயலாத நிலை உள்ளது.

**33—**

**சாலை செப்பனிடுதல்**

வினா 30075—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், விளார் ஊராட்சி, விளார் கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர் தெரு சாலையை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**34—**

**சாலை செப்பனிடுதல்**

வினா 30076—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், ஆதனக்கோட்டை ஊராட்சி, ஆதனக்கோட்டை கிராமத்திலிருந்து கோட்டைத் தெரு செல்லும் சாலை பழுதடைந்துள்ளதை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், ஆதனக்கோட்டை ஊராட்சி, ஆதனக்கோட்டை கிராமத்திலிருந்து



2000 மே 2]

கோட்டைத் தெரு செல்லும் சாலையின் நீளம் 0.60 கி.மீ ஆகும். இச்சாலையை சீர் செய்வதற்கு ரூ. 6 இலட்சம் செலவாகும். தற்போது ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை.

**35—**

**குளம்/குட்டை செப்பனிடுதல்**

வினா 30079—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், கரைமீண்டார் ஊராட்சியிலுள்ள மூங்கில் குளம், சின்ன வண்ணான்குட்டை ஆகியவற்றை தூர் வாரி செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**36—**

**சாலை செப்பனிடுதல்**

வினா 30080—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு, மேலஉளூர் ஊராட்சி ராசாப்பிரியார் தெரு, காடாம்பூரார் தெரு 1 கி.மீ சாலையை செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், மேலஉளூர் ஊராட்சி ராசாப்பிரியார் தெரு, காடாம்பூரார் தெருவில் உள்ள சாலை

[2000 மே 2

நீளம் 1 கி.மீ. ஆகும். இதைச் செப்பனிட ரூ. 5 இலட்சம் செலவாகும். தற்போது ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை.

**37—**

**சாலை செப்பனிடுதல்**

வினா *30144*—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், வாண்டையார் இருப்பு ஊராட்சி, தெற்குத் தெரு மற்றும் வடக்குத் தெரு வழியாக பூண்டி புல்லவராயன் குடிகாடு இணைப்பு சாலை 1 கி.மீ. சாலையை தார்ச்சாலையாக செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், வாண்டையார் இருப்பு ஊராட்சி, தெற்குத் தெரு மற்றும் வடக்குத் தெரு வழியாக பூண்டி புல்லவராயன் குடிகாடு இணைப்புச் சாலை தூரம் 1 கி.மீ. ஆகும். இச்சாலையை தார்ச் சாலையாக மாற்றம் செய்ய ரூ.10 இலட்சம் செலவாகும். தற்போது ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை.

**38—**

**சாலை செப்பனிடுதல்**

வினா *30145*—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், இராமநாதபுரம் ஊராட்சியில் இராமநாதபுரம் கிராமத்தில் மூப்பனார் தெருவில் இருந்து பேவாரி வரை செல்லும் இரு சாலைகளையும் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?*



2000 மே 2]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**39—**

**சாலை செப்பனிடுதல்**

வினா *30553*—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பருத்திக்கோட்டை ஊராட்சி, தும்பத்திக்கோட்டை—கண்ணந்தங்குடி சாலை, பருத்திக்கோட்டை—வாண்டையார் இருப்பு இணைப்புச் சாலையை தார்ச் சாலையாக செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**40—**

**சாலை வசதி**

வினா *30554*—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காரியாவிடுதி ஊராட்சி, கதுவாரி அம்பலக்காரத் தெருவிற்கு சாலை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?*

[2000 மே 2

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், காரியாவிடுதி ஊராட்சி, கதுவாரி அம்பலக்காரத் தெரு ஊராட்சி சாலையாகும். இதன் நீளம் சுமார் 300 மீட்டர்களாகும். இதில் ஒரு பகுதி தனியார் பட்டா நிலத்தில் உள்ளது. இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. எனவே, தற்போது சாலை வசதி செய்து தரும் சாத்தியக்கூறுகள் இல்லை.

41—

**சாலை அமைத்தல்**

வினா 30559—திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், துறையூர் ஊராட்சி, பட்டுக்கோட்டை சாலையிலிருந்து காட்டுக்குறிச்சி செல்லும் மண் சாலையை தார்ச்சாலையாக அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், துறையூர் ஊராட்சி, பட்டுக்கோட்டை சாலையிலிருந்து இருது-காட்டுக்குறிச்சி செல்லும் சாலை ஊராட்சி சாலையாகும். தற்போது மண்சாலையாக உள்ளது. சாலையின் நீளம் 2 கி.மீ. ஆகும். இதைத் தார்ச்சாலையாக மாற்ற ரூ.10 இலட்சம் செலவாகும். தற்போது ஊராட்சியிலோ ஊராட்சி ஒன்றியத்திலோ போதுமான நிதி வசதி இல்லை.

42—

**சாலை அமைத்தல்**

வினா 30560—திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 மே 2]

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், திருக்கானூர்பட்டி ஊராட்சி, ஆதிதிராவிடர் தெரு சாலையினை தார்ச் சாலையாக அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், திருக்கானூர்பட்டி ஊராட்சி, ஆதிதிராவிடர் தெரு ஊராட்சி சாலையில் 8 கி.மீ. சாலையில் 1 லேயர் மெட்டல் சால்யாக உள்ளது. திருவோணம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாடு திட்டத்தில் ரூபாய் மூன்று இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலையாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

43—

**சாலை செப்பனிடுதல்**

வினா 30561—திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், திருக்கானூர்பட்டி ஊராட்சி, சுப்பிரமணியர்கோயில் ஆதிதிராவிடர் தெரு சாலையை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், திருக்கானூர் பட்டி ஊராட்சி, சுப்பிரமணியர் கோயில் ஆதிதிராவிடர் தெரு சாலை மண்சாலையாக உள்ளது. இதன் நீளம் 4 கி.மீ. ஆகும். ஜவஹர் கிராம சமிதி யோஜனா திட்டத்தின் மூலம் ரூ.49,500 மதிப்பீட்டில் 100 மீட்டர் நீளம் தார்ச்சாலையாக அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 300 மீட்டர் நீளத்தை தார்ச் சாலையாக மாற்ற தற்போது ஊராட்சியிலோ அல்லது ஊராட்சி ஒன்றியத்திலோ போதுமான நிதி வசதி இல்லை.

[2000 மே 2

44—

**சாலை செப்பனிடுதல்**

வினா 31844—திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், மருங்குளம் ஊராட்சியில் 2 கி.மீ சாலையை தார்ச் சாலையாக செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், மருங்குளம் ஊராட்சியில் உள்ள 2 கி.மீ. சாலையில் 1 கி.மீ. ஊராட்சி ஒன்றிய சாலையாகும். இந்த 1 கி.மீ. சாலையை பத்தாவது நிதிக்குழு மானியத்தில் தார்ச் சாலையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்பணி 1999-2000 ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படும். மீதமுள்ள 1 கி.மீ. ஊராட்சி சாலையை தார்ச் சாலையாக மாற்ற தற்போது ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை.

45—

**சாலை செப்பனிடுதல்**

வினா 31845—திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், திருமலை சமுத்திரம் ஊராட்சி, திருமலை சமுத்திரம், முன்னயம்பட்டி 2 கி.மீ. சாலையை தார்ச் சாலையாக செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், திருமலை சமுத்திரம் ஊராட்சி, திருமலைசமுத்திரம்—முன்னயம்பட்டி சாலையின் மொத்த நீளம் 4 கி.மீ. ஆகும். இதில் 1 கி.மீ. நீளம் தார்ச் சாலையாக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 3 கி.மீ. சாலையை தார்ச் சாலையாக மாற்ற ஊராட்சியிலோ ஊராட்சி ஒன்றியத்திலோ தற்போது போதுமான நிதி வசதி இல்லை.



2000 மே 2]

46—

**சாலை செப்பனிடுதல்**

வினா 31846—திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், வல்லம் புதூர் ஊராட்சியில் வல்லம் புதூர் ஆதிதிராவிடர் தெரு ஒரு கி.மீ. சாலையை தார்ச் சாலையாக செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், வல்லம் புதூர் ஊராட்சி, ஆதிதிராவிடர் தெரு சாலை, ஊராட்சி சாலையாகும். தற்போது மண் சாலையாக உள்ள 1 கி.மீ. நீளமுள்ள இந்த சாலையை தார்ச் சாலையாக மாற்ற ரூ. 4 இலட்சம் செலவாகும். தற்போது ஊராட்சியிலோ ஊராட்சி ஒன்றியத்திலோ போதுமான நிதி வசதி இல்லை.

47—

**கொசு ஒழிப்பு**

வினா 32165—திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மிக அதிக அளவில் கொசுத் தொல்லை பெருகிவருவது சென்னை நகரில்தான் என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரில் கொசுத் தொல்லை பரவலாகவும், பிரதான நீரோடைகளின் கரைகளை ஒட்டிய பகுதிகளில் சிறிது கூடுதலாகவும் உள்ளது.

*சென்னை மாநகராட்சி மேற்கொள்ளும் கொசுத் தடுப்புப் பணிகள்:*

சென்னை மாநகராட்சியில் கொசுத் தடுப்புப் பணிகள் இரண்டு வகையாக நடைபெறுகின்றன. 1) கொசுப் புழுக்களைக் கட்டுப்படுத்துதல். 2) வளர்ந்த கொசுக்களைக் கட்டுப்படுத்துதல்.

*1. கொசுப் புழுக்களை கட்டுப்படுத்துதல்:*

(அ) சுத்த நீரில் வளரும் கொசுப் புழுக்களை கட்டுப்படுத்துதல்.

(ஆ) அசுத்த நீரில் வளரும் கொசுப் புழுக்களை கட்டுப்படுத்துதல்.

*(அ) சுத்தமான நீரில் வளரும் கொசுப் புழுக்களை கட்டுப்படுத்துதல்:*

சுத்தமான நீரில் வளரும் கொசுப் புழுக்களை, கிணறு மற்றும் மேல்நிலை மற்றும் கீழ்நிலைத் தொட்டிகளில் வாரம் ஒரு முறை அபேட் என்ற கொசுப்புழு நாசினி இட்டு கொசுத்தொல்லை கட்டுப்படுத்தப்படுகிறது.

*(ஆ) அசுத்த நீரில் வளரும் கொசுப் புழுக்களை கட்டுப்படுத்துதல்:*

சென்னை நகரில் அடையாறு ஆறு, கூவம் ஆறு, போன்ற பெரிய மற்றும் சிறிய நீர் வழிகள் 93 கி.மீ. அளவிற்கு பாய்கின்றன. மேலும் சுமார் 700 கி.மீ. நீள மழைநீர்க் கால்வாய்கள் நகர் முழுவதும் பரவியுள்ளன. இங்கு கொசுப் பெருக்கம் நிறைய உள்ளது. இவற்றில் அசுத்த நீர் கலக்கிறது. இத்தகைய அசுத்த நீரில் வளரும் கொசுக்களை அழிக்க "பேடக்ஸ்" மற்றும் "பேக்டரி சைட்" என்னும் கொசுப் புழு நாசினிகள் வாரந்தோறும் தெளிக்கப்படுகிறது. மேலும் இந்த நீர் வழிகளில் வளரும் ஆகாயத்தாமரை என்னும் நீர் தாவரங்களும் அவ்வப்போது அகற்றப்பட்டு கொசுத் தொல்லை கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது.



*2. வளர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்தல்:*

வளர்ந்த கொசுக்களைக் கட்டுப்படுத்த "பைரத்திரம் எக்ஸ் டிராகட்" என்ற பூச்சி கொல்லியை டீசலுடன் கலந்து புகை மருந்தாக அடிக்கப்படுகிறது. வாகனத்தில் பொருத்தப்பட்ட பெரிய புகை அடிக்கும் இயந்திரங்கள் மண்டலத்திற்கு ஒன்று என 10 மண்டலங்களிலும் பயன்படுத்தி ஒவ்வொரு மண்டலத்திலும், ஒரு வார்டு வீதம் அந்திமாலைப் பொழுதில் கொசுப்புகை மருந்து அடித்து கொசுத் தொல்லை கட்டுப்படுத்தப்படுகிறது. சென்னை நகரிலுள்ள 155 வார்டுகளிலும் சிறிய புகை பரப்பும் இயந்திரம் கொண்டு மழை நீர்க் கால்வாய்களில் அடித்தும் மலேரியா, டெங்கு கண்ட வீடுகளிலும் அடித்தும் பகல் நேரத்தில் இவ்விடங்களில் தங்கும் கொசுக்கள் அழிக்கப்படுகின்றன. சென்னை நகரில் மேற்குறிப்பிட்டுள்ள கொசுக் கட்டுப்பாட்டுப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதால் கொசுத் தொல்லை கட்டுப்பாட்டில் உள்ளது என்று சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது. எனவே சென்னை நகரில் கொசுத்தொல்லை கட்டுப்பாட்டில் உள்ளதெனலாம்.

**48—**

**சாலை புதுப்பித்தல்**

*வினா 25904*—**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், கருவேப்பிலங்குறிச்சி கிராமத்திலிருந்து டி. பவழங்குடி, தேவங்குடி செல்லும் கரும்புச் சாலையைச் சீரமைத்து, புதுப்பித்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், கருவேப்பிலங்குறிச்சி கிராமத்திலிருந்து டி.பவழங்குடி, தேவங்குடி செல்லும் கரும்புச் சாலையைச் சீரமைத்து புதுப்பித்துத் தர 1999-2000 நிதி ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே, மேற்படி சாலையைச் சீரமைத்து புதுப்பிக்க தற்போது இயலவில்லை.

49—

**சாலை வசதி**

**வினா** *32546*—**திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—**

*தஞ்சாவூர் மாவட்டம், குருங்குளம், அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைக்கு ஒரத்தநாடு வட்டம் பின்னையூரிலிருந்தும், திருநல்லூரிலிருந்தும் ஆலைக்கு 20 கிலோமீட்டர் சுற்றி கரும்பு எடுத்து வரவேண்டியுள்ளதை தவிர்த்திட, கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் பின்னையூரிலிருந்து வெட்டிக்காடு சாலையில் 3.00 கி.மீ. சாலை போட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், குருங்குளம், அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைக்கு கரும்பு எடுத்துச்செல்லும் சாலை தொடர்பாக ஒரத்தநாடு வட்டம் பின்னையூரிலிருந்து வெட்டிக்காடு சாலையில் 3.00 கி.மீ. நீளம் உள்ள சாலை பின்னையூர் பஞ்சாயத்து யூனியன் சாலையாகும். இச்சாலையை கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மேம்படுத்த இயலாது. மேலும், இப்பகுதியில் சுமார் 50 ஏக்கர் அளவே கரும்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது ஆலைக்கு வரும் கரும்பு மேற்படி சாலைக்கு இணையாக 2 கிலோமீட்டர் தூரத்திலுள்ள பின்னையூர்-வெட்டிக்காடு பஞ்சாயத்து யூனியன் சாலை வழியாக எடுத்து வரப்படுகிறது. மேலும் இச்சாலை சமீபத்தில் செப்பனிடப்பட்டு நல்லமுறையில் இருப்பதால் இச்சாலை வழியே 20 கி.மீ. சுற்றி வராமல் குறைந்த தூரத்திலேயே ஆலைக்குக் கரும்பு கொண்டு வரப்படுகிறது.

50—

**திரைப்படங்களுக்குத் தடை**

**வினா** *32630*—**திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—**



223315

*(அ) தமிழ்நாட்டில் ஜாதி உணர்வைத் தூண்டும் திரைப்படங்களைத் தடை செய்யவும், ஜாதி ஒழிப்புக் கருத்துகளை மையமாகக் கொண்ட திரைப்படங்களுக்கு வரிச்சலுகை அளிக்கவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?*

*(ஆ) எந்த எந்தத் திரைப்படங்களுக்கு வரிச் சலுகை தமிழக அரசு அளித்துள்ளது?*

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் திரையிடப்படும் திரைப்படங்கள் மத்திய அரசின் தணிக்கைக் குழுவின் சான்றுடன் திரையிடப்படுவதால் அவற்றில் ஜாதி உணர்வைத் தூண்டும் கருத்துகள் உள்ளன என்று எந்தத் திரைப்படத்தையும் தடை செய்ய இவ்வரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஆ) குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு மத்திய திரைப்படத் தணிக்கைக் குழுவினால் பொதுமக்களுக்குத் திரையிட அனுமதிக்கப்பட்ட தமிழ்த் திரைப்படங்களில் தகுதியான திரைப்படங்களுக்கு அத்திரைப்படங்கள் வெளியிடப்படும் நாளிலிருந்து நான்கு வார காலத்திற்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்கும் திட்டம் 12-12-1996 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மை இந்தியா, சாதிசனம், புதல்வன், எல்லாம் பணத்துக்காக, குடும்ப சங்கிலி, நீதியின் வாசலிலே, காந்தி ஆகிய ஏழு திரைப்படங்களுக்கு கேளிக்கை வரி விலக்கு முதல் நான்கு வாரங்களுக்கும், ஹவுஸ்புல் திரைப்படத்திற்கு மட்டும் அரசு ஆணை வெளியிடப்பட்ட நாள் முதல் முழு கேளிக்கை வரி விலக்கும் அளிக்கப்பட்டு உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) மேலசித்தை கிராமம், சேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் இடிந்து விழுந்து இருவர் மரணம், ஏர்வாடியில் இஸ்லாமியரது பாதுகாப்பு மையங்களில் சுகாதாரக் குறைவால் சிலர் மறைவு மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இராமநாதபுரம் மாவட்டத்தில், சூறாவளிக் காற்றால் இருவர் பலியானது குறித்து திரு. சோ. பாலகிருஷ்ணன், திரு. சி. ஞானசேகரன். . .

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'Zero Hour'-ல் ஒன்று கேட்க வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் எடுத்தபிறகுதான் என்ன Hour என்று தெரியும். நீங்கள் உட்காருங்கள். திரு. சோ. பாலகிருஷ்ணன், திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன்.

*முற்பகல் 10-30*

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . . (குறுக்கீடு)

**HON'BLE SPEAKER**: I do not recognise any zero hour. I am the Speaker.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 25-4-2000 அன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் மேலசித்தை என்கிற கிராமத்தில் ஒரு தனியார் உயர்நிலைப் பள்ளியில் இரவு ஒரு மணியளவில் வீசிய பெரும் சூறாவளிக் காற்றின் காரணமாக அந்தப் பகுதியில் ஆட்டுக் கிடை போட்டிருந்தவர்கள் பாதுகாப்புக்காக ஓடி அந்தக் கட்டடத்தில் ஒதுங்கிய நேரத்தில் கட்டடம் இடிந்து விழுந்து இரண்டு பேர் அந்த இடத்திலேயே இறந்து விட்டார்கள், இரண்டு பேர் கடுமையான காயத்திற்கு ஆளாகி மருத்துவமனையில் இருக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உடனடியாக, 29 ஆம் தேதியன்று இறந்துவிட்ட ஆனந்த் மற்றும் முருகேசன் என்பவர்களுக்கு





15,000 ரூபாய் வீதம் பணம் கொடுத்திருக்கிறார்கள். காயம் அடைந்த உடையார் மற்றும் முத்து என்பவர்களுக்கும் அரசு உதவி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் மழையோடுகூடிய சூறாவளியோ என்று நாங்கள் எல்லாம் நினைத்துக் கொண்டிருந்தோம். அங்கே நேற்று நான் போய்ப் பார்த்தேன். வெறும் சூறாவளிக் காற்று பயங்கரமாக அடித்து ஆயிரக்கணக்கான மீனவர்களுடைய குடிசைகள் எல்லாம் காற்றில் பறந்துவிட்டன. ஏராளமான மீனவர்கள் கடற்கரைப் பகுதியில் வீடு இல்லாமல் இப்போது அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். காயமுற்றவர்களுக்கும் உதவ வேண்டும். அதோடு, ஆனந்த் மற்றும் முருகேசன் என்பவர்கள் மிகவும் ஏழைக் குடும்பத்திலே பிறந்தவர்கள். கூலிக்கு, ஆடுகளைக் காவல்காத்து பிழைப்பு நடத்தக்கூடியவர்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் 3, 3 குழந்தைகள் இருக்கின்றன; ஏழைகள். அவர்களுக்கு 15,000 ரூபாய் போதாது. மேலும் அவர்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

இராமநாதபுரம் மாவட்டம் இப்போது மிகக் கடுமையான வறட்சிக்கு உள்ளாகி இருக்கிறது. குடிதண்ணீர் என்பது மிகப் பெரிய பிரச்சினையாகி, பல ஊர்களில் சாலை மறியல், பேருந்து மறியல் என்றெல்லாம் அறிவித்திருக்கிறார்கள். நான் நேற்று இராமநாதபுரம் மாவட்ட அதிகாரிகளையெல்லாம் பார்த்துப் பேசினேன். காவல் துறை அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்றால் — பேருந்து மறியல் என்று அறிவித்து விடுகிறார்கள், நாங்கள் உடனடியாக அங்கே இருக்கின்ற Revenue அதிகாரிகளையெல்லாம் அழைத்துக்கொண்டு, அந்தக் கிராமத்திற்குச் செல்கிறோம். அவர்கள் ஒரு மாதம் தவணை கொடுங்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் சொல்கின்ற குறைகளில் ஏதாவது ஒன்றைககூட செய்யாத காரணத்தால் அங்கே சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை வருகிற மிக மோசமான சூழ்நிலை இருக்கிறது என்று சொல்கிறார்கள். குறிப்பாக, என்னுடைய தொகுதிதான் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. கமுதி, முதுகுளத்தூர், கடலாடி பகுதிகளில் குடிதண்ணீருக்காக மக்கள் மிகுந்த பிரச்சினைக்கு உள்ளாகி இருக்கிறார்கள். மொத்தத்தில் இராமநாதபுரம் மாவட்டமே இப்போது கடுமையான வறட்சிக்கு உள்ளாகி இருக்கிறது. நாமெல்லாம் இப்போது குஜராத், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் எவ்வளவு மோசமான சூழ்நிலை இருக்கிறது என்பதைப் பத்திரிகைகளில் பார்க்கிறோம். அதில் கொஞ்சம்கூடக் குறையாத அளவிற்கு இராமநாதபுரம் மாவட்டம் பாதிக்கப்பட்டிருக்கிறது.

அதோடு, நேற்று நான் புயலால் இறந்து போனவரைப் பார்க்கச் சென்ற நேரத்தில், ஏர்வாடி தர்காவிலே 10 பேர் செத்துவிட்டார்கள், அதையும் நீங்கள் வந்து பார்க்க வேண்டுமென்று என்னை அழைத்துச் சென்றார்கள். ஆனால், சூறாவளிக் காற்றால் இறக்கவில்லை. அங்கே இருக்கின்ற சுகாதாரக் கேட்டின் காரணமாக 10 பேர் இறந்திருக்கிறார்கள். ஏர்வாடியில் ஒரு புனிதமான தர்கா இருக்கிறது. ஒரு மாதத்திற்குக் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் பேர் அங்கே வருகிறார்கள்; பல மாநிலங்களிலிருந்து வருகிறார்கள். அங்கே இருக்கின்ற மிக மோசமான சுகாதாரக் கேட்டின் காரணமாக, குடிதண்ணீர்ப் பிரச்சினை காரணமாக மிகுந்த தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். அங்கேயெல்லாம் எந்த அளவுக்குக் கொடுமை நடக்கிறது என்பதை அரசுக்கு நான் தெரிவிக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். 17 பாதுகாப்பு மையங்களைத் தனியார் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் கேரளத்தைச் சேர்ந்தவர்கள். மனநிலை பாதிக்கப்பட்ட மக்களை இங்கு கொண்டு வந்து இவர்களிடம் ஒப்படைத்துவிட்டு, மாதா மாதம் ஆயிரம் ரூபாய் அனுப்பிக்கொண்டு இருக்கிறார்கள். சிலர் பணம் அனுப்பாமல் போய்விட்டபிறகு இவர்களையெல்லாம் தெருவில் பிச்சை எடுப்பதற்கு அவர்கள் அனுமதிக்கிறார்கள். ஏர்வாடி என்பது இப்போது மிகப் பெரியதொரு பிரச்சினைக்கு உள்ளாகி இருக்கிற ஊராக, பெரிய சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை வந்துவிடுமோ என்று அதிகாரிகள் எல்லாம் பயப்படுகிறார்கள்.

*முற்பகல் 10-35*

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்வது என்னவென்று சொன்னால், உடனடியாக அங்கே நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களை அனுப்பி, அங்கே என்னென்ன சூழ்நிலைகள் இருக்கின்றன என்பதையெல்லாம் நேரடியாகப் பார்க்க வேண்டும். அதோடு அது மதப் பிரச்சினை என்ற காரணத்தால், அதுபற்றி இன்னும் விரிவாகச் சொன்னால் அது வேறு மாதிரியாக வந்துவிடும். ஏனென்றால், 17 சுகாதார பாதுகாப்புப் மையங்கள் என்பதில் 2 மையங்களைப் பெண்களுக்காக என்றே நடத்துகிறார்கள். அங்கே என்னென்ன நடக்கின்றன என்பதையெல்லாம் இங்கே நான் விரிவாகச் சொல்லக் கூடாது. நம்முடைய நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும், இராமநாதபுரம் மாவட்ட அமைச்சர் மாண்புமிகு இரகுமான்கான் அவர்களையும் அங்கே அனுப்பி என்னென்ன நிலைமைகள் இருக்கின்றன என்பதை நேரடியாகப் பார்த்து,



அவர்களெல்லாம் விரிவான முறையில் நிவாரணம் பெறுகின்ற வகையில் அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். குறிப்பாக, குடிதண்ணீர்ப் பிரச்சினை என்பது மிகப் பெரிய பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது என்பதனைத் தெரிவித்து, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தனிக் கவனம் எடுத்து, இராமநாதபுரம் மாவட்டத்தின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு உடனடியாக உத்தரவிட்டு, லாரிகள் மூலம் தண்ணீர் supply செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றில் இரண்டு அல்லது ஒன்றில் மூன்று என்று சொல்வதைப்போல, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு அல்லது ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துவிட்டு, அதிலே மூன்று பிரச்சினைகளைப்பற்றி இங்கே விளக்கியிருக்கிறார்கள். ஒன்று, ஆடு மேய்த்த நண்பர்களுடைய திடீர் சாவு. மற்றொன்று, இராமநாதபுரம் மாவட்டத்திலே ஏற்பட்டுள்ள வறட்சி. மூன்றாவதாக, ஏர்வாடியில் இஸ்லாமியர்கள் தனிப்பட்ட முறையில் நடத்துகின்ற மருத்துவ மையங்களில் ஏற்பட்டுள்ள சாவுகள் — இஸ்லாமியர்கள் தனிப்பட்ட முறையில் நடத்துகின்ற பாதுகாப்பு மையங்களில் ஏற்பட்டுள்ள சாவுகள். இந்த மூன்றையும் பற்றி அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

முதலில் சூறாவளிக் காற்றினால் ஏற்பட்ட நிலை என்ன என்பதை விளக்கி விடுகிறேன். இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், இதம்பாடல் குரூப்பைச் சேர்ந்த திரு. கருப்பையா கோனார் அவர்களது மகன் ஆனந்தன், மற்றொரு கருப்பையா அவர்களுடைய மகன் முருகேசன் மற்றும் பரமக்குடி வட்டம், பொதுவாக்குடி கிராமத்தைச் சேர்ந்த சுந்தரக் கோனார் என்பவர் மகன் முத்து, ஏர்வாடியைச் சேர்ந்த திரு. கருப்பையா கோனார் மகன் உடையார் ஆகியோர் ஆட்டுக்கிடை அமைப்பதற்காக இராமநாதபுரம் வட்டம், உத்திரகோசமங்கை அருகிலே மேலசித்தை கிராமத்திற்குச் சென்றுள்ளார்கள். 25-4-2000 அன்று இரவு மேற்படி கிராமத்தில் ஆட்டுக் கிடை அமைத்துவிட்டு, அன்று பெய்த மழை காரணமாக அருகிலே உள்ள தனியாருக்குச் சொந்தமான சேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்திலே தங்கினார்கள். அப்பொழுது கட்டடத்தின் ஒரு பகுதி மழையினால் இடிந்து விழுந்ததினால் இடிபாடுகளில் சிக்கி, திரு. கருப்பையா கோனார் மகன் ஆனந்தன் என்பவரும், மற்றொரு கருப்பையா என்பவரது மகன் முருகேசன்

என்பவரும் இறந்துவிட்டார்கள். மேலும், சுந்தரக்கோனார் அவர்களுடைய மகன் முத்து என்பவரும், கருப்பையா அவர்களுடைய மகன் உடையார் என்பவரும் காயமடைந்துள்ளார்கள்.

இறந்துவிட்ட இந்த இரண்டு பேருடைய குடும்பங்களுக்குத் தலா 15 ஆயிரம் ரூபாய் வீதம் 29ஆம் தேதி காலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. அது போதுமானதல்ல, இன்னும் அதிகம் கொடுத்திருக்கலாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். காயம் அடைந்தவர்களுக்கும் ஏதாவது செய்ய வேண்டுமென்று சொன்னார்கள்.

இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கலந்து பேசி காயமடைந்தவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும் என்று கூறிக்கொள்கிறேன்.

பொதுவாக இதுபோன்ற விபத்துகளில் அரசின் சார்பில் ஏற்கெனவே 3 ஆயிரம், 5 ஆயிரம் ரூபாய் என்று கொடுக்கப்படுவதற்கு மாறாக, இப்பொழுது 15 ஆயிரம் ரூபாய் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுவிட்டார் என்பதற்காக இந்த 15 ஆயிரம் ரூபாயோடு மேலும் 10 ஆயிரம் ரூபாய் சேர்த்து, தலா 25 ஆயிரம் ரூபாயாக அவர்களுக்குத் தரப்படும் என்று நான் இங்கே கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏர்வாடியிலே இஸ்லாமியர்கள் நடத்துகின்ற அந்த மையங்களில் அவர்களுடைய அசிரத்தையின் காரணமாக, அலட்சியத்தின் காரணமாக சுகாதாரக் குறைவு ஏற்பட்டு அதனால் சிலர் மாண்டுபோக நேரிட்டிருக்கிறது. அதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே குறிப்புகள் கேடகப்பட்டு இருக்கின்றன. அந்தக் குறிப்புகள் வந்தவுடன் அதுபற்றி மேல் நடவடிக்கை எடுக்கத் தேவைப்பட்டால் அமைச்சர்களே சென்று பார்வையிட்டு, தக்க பரிகாரம் செய்வார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10-40*

இராமநாதபுரம் மாவட்டத்திலே வறட்சி நிலை குறித்துக் குறிப்பிட்டார்கள். 1999-ல் அந்த மாவட்டத்திலே மழை 278 மில்லி மீட்டர்தான் பெய்திருக்கிறது. பொதுவாக, ஒவ்வோர் ஆண்டும், சராசரியாக அந்த மாவட்டத்திலே 827 மில்லிமீட்டர் மழை பொழிவது வழக்கம். அதற்கு மாறாக 1999-லே 278 மில்லிமீட்டர் மழைதான் பெய்திருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரும் அரசுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கின்றார்.



உடனடியாக வறட்சி நிவாரணப் பணிகளுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேலாக, கிட்டத்தட்ட 1¼ இலட்சம் ரூபாய்க்கு ஒரு கணக்கு எழுதி உடனடியாக அனுப்ப வேண்டுமென்று நிவாரணப் பணிகளுக்காகக் கடிதம் எழுதியிருக்கிறார். அதுவும் அரசாங்கத்தினுடைய பரிசீலனையிலே உள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொண்டு, இராமநாதபுரம் மாவட்டத்தில் மாத்திரமல்ல, வேறு பகுதிகளிலும் தண்ணீருக்காகக் கஷ்டப்படுகின்ற மக்களுடைய தண்ணீர்த் தேவையைத் தீர்ப்பதற்கு அரசு போர்க்கால நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மேலும் எடுக்கும் என்பதையும் தெரிவித்து, சிறப்பாகவும், குறிப்பாகவும் இராமநாதபுரம் மாவட்டத்தில் தனிக் கவனம் இந்த வறட்சி நிலை குறித்து செலுத்தப்படும் என்பதை அறிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1¼ இலட்சமா, கோடியா? முதலமைச்சர் படிக்கும்போது 1¼ இலட்சம் என்றீர்கள். 1¼ கோடியா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** *125 இலட்சம்.*

## (ஆ) கடமலைக்குன்று L.M.S. மேல்நிலைப் பள்ளி மாணவன் மரணம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து பத்மநாபபுரம் கடமலைக்குன்று L.M.S. மேல்நிலைப் பள்ளி மாணவன் கொலை செய்யப்பட்டது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. வேலாயுதன், திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. வேலாயுதன் அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் சமீபகாலமாக நல்ல அமைதியான முறையில் மக்கள் வாழ்ந்துகொண்டு வருகிறார்கள். அதற்குக் காரணம் காவல் துறையினுடைய நேர்மையான நடவடிக்கை. கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்கு நல்ல படிப்பறிவு உள்ளதும் இன்னொரு காரணமாகும். ஆனால், அதைவிட மிகவும் நல்லமுறையில் அமைதியாக என்னுடைய பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதி இருக்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது. அங்கு ஜாதி மதப் பிரச்சினைகள் ஆங்காங்கே சற்று தலை தூக்கும்போது, அமைதிப்படுத்தி எந்தப் பிரச்சினையும் இல்லாமல் கொண்டு செல்வதற்காக அனைத்து சமய ஜாதிகளைச் சேர்ந்த 11 பேர் கொண்ட ஒரு குழு அமைத்து சிறிய

[திரு. சி. வேலாயுதன்] [2000 மே 2

சிறிய பிரச்சினை வந்துவிட்டால்கூட, அதைப் பேசி முடித்துவிடுகின்றோம். அதுபோன்று தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்துகூட ஜாதி மத அடிப்படையில் செய்துவிட்டார்கள் என்று பிரச்சினை வரக் கூடாது என்று கருதி, அதில்கூட 5 பேர் கொண்ட குழு அமைத்திருக்கின்றோம். ஆனால், இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டிலும் சிலர் அதை ஜாதி மதப் பிரச்சினையாக ஆக்க முயற்சித்து, பலவிதமான பிரச்சினைகளில் இறங்கினார்கள். ஆனாலும்கூட, தொகுதி மக்கள் அமைதி காத்தது நிச்சயமாகப் பாராட்டத்தக்க ஒன்று. இப்போது நடந்த சம்பவம் சமீபத்தில் தமிழகத்தில் எங்கும் நடைபெறாத ஒரு துயரம் மிகுந்த சம்பவம். அது மிகுந்த வேதனை அளிக்கிறது. பத்மநாபபுரம் தொகுதி, மேக்காமண்டபத்தின் அருகில் கடமலைக்குன்றில் இருக்கக்கூடிய L.M.S. மேல்நிலைப் பள்ளியில் டேவிட் பால் மனோ என்று சொல்லக்கூடிய ஒரு மாணவன் பிளஸ் 1 வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். கடந்த மாதம் 17 ஆம் தேதி காலையில் இரயில்வே தண்டவாளத்தில் அவனுடைய உடல் இருந்தது. இரண்டு கண்கள் பிடுங்கப்பட்டு, விரல்கள் வெட்டப்பட்டுக் கிடந்துள்ளது. ஆண் உறுப்பை அறுத்ததாகக் கூடச் சொன்னார்கள், அது பத்திரிகையில் வரவில்லை, நான் அங்கு சென்று பார்க்க முடியவில்லை. காரணம், சட்டமன்றம் நடந்து கொண்டிருந்த காலம். இப்படிக் கொலை செய்து இரயில் தண்டவாளத்தில் போட்டு இதை ஜாதிப் பிரச்சினையாக்கவும், அரசியலாக்கவும், மதப் பிரச்சினையாக்கவும் பலவிதமான முயற்சிகள் நடந்து, பெரியோர்களுடைய, அனைத்துச் சங்கத் தலைவர்களுடைய தலையீட்டின் காரணமாக இதில் பெரிய அளவுக்குப் பிரச்சினை வராமல் முடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மையிலே அந்த மாணவன் S.C. சமுதாயத்தைச் சார்ந்தவன் என்ற காரணத்தால் அந்தச் சமுதாயத்தினரும், கிறிஸ்தவர் என்ற காரணத்தால் கிறிஸ்தவச் சமுதாயத்தினரும் அமைதி காத்திருக்கிறார்கள். ஆனால், உண்மையில் இதற்குக் காரணமான குற்றவாளி யார் என்று கண்டறிய வேண்டும். தமிழகத்தில் இதுபோன்ற சம்பவம் மேலும் எங்கும் நடைபெறாமல் இருக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கக்கூடிய வகையில் C.B.C.I.D. மூலமாக இதை விசாரிக்க வேண்டும். இதை யார் செய்தது? உண்மையிலேயே காசு வாங்கிக் கொண்டு அடிதடிக்குச் செல்லக்கூடிய ஆட்களா அல்லது காதல் பிரச்சினை என்று சொல்லப்படுகிறதே, அதன் காரணமாகவா? உண்மையிலேயே காதல் பிரச்சினைதானா? ஆக, அதனுடைய பின்னணி என்ன என்பதைக் கண்டறிந்து பகிரங்கப்படுத்துவது மட்டுமல்ல; இதுபோன்ற ஓர் அநாகரீகமான செயல் தமிழகத்தில் எங்கும் நடக்காத வண்ணம் அரசாங்கம் இதை ஒரு



2000 மே 2] [திரு. சி. வேலாயுதன்]

முன்னுதாரணமாக வைத்துக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, கடமலைக்குன்று L.M.S. மேல்நிலைப் பள்ளி மாணவன் டேவிட் பால் என்பவன் இறந்தது குறித்த அறிக்கை ஒன்றினை நான் கேட்டு, மாவட்ட அதிகாரிகள் வாயிலாகப் பெற்றிருக்கின்றேன். அதனை இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்புக்குப் பதிலாக அளிக்க விரும்புகின்றேன்.

*முற்பகல் 10-45*

*28-3-2000* அன்று காலை *7-40* மணிக்கு குழித்துறை இரயில் நிலைய Keyman திரு. மணிகண்டன் என்பவர் நாகர்கோவில்-திருவனந்தபுரம் இரயில் பாதையில் கிலோமீட்டர் *287—300*-க்கு இடையில், பாகோடு என்னும் இடத்தில் ஓர் ஆண் உடல் இரயிலில் அடிபட்டுக் கிடப்பதைக் கண்டு, நாகர்கோவில் சந்திப்பு இரயில் நிலைய அதிகாரிக்குத் தெரிவித்துள்ளார். அதன்படி, நிலைய அதிகாரியின் எழுத்துமூலமான அறிக்கையைப் பெற்று, நாகர்கோவில் இரயில்வே போலீஸ் உதவி ஆய்வாளர், திரு. ரமேஷ், *28-3-2000* அன்று காலை *8-00* மணிக்கு நாகர்கோவில் இரயில் காவல் நிலையக் குற்ற எண் *229/2000*-ல் குற்றவியல் முறைச் சட்டம் பிரிவு *176*-ன்கீழ் வழக்குப் பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டுள்ளார். பிரேத விசாரணையின்போது, மேற்படி நபர், திருவட்டாறு காவல் நிலையச் சரகம் செங்கோடியைச் சேர்ந்த பால்ராஜ் என்பவரின் *18* வயதுடைய மகன் டேவிட் பால் மனோ எனவும், கடமலைக்குன்று L.M.S. மேல்நிலைப் பள்ளியில் *11*-வது வகுப்பு படிப்பவர் என்றும் தெரியவந்துள்ளது. விசாரணையை முடித்தபின் குழித்துறை அரசு மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனை செய்து உறவினர்களிடம் உடல் அன்றையதினம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட விசாரணையிலே இறந்துபோன டேவிட் பால் மனோ ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர் என்றும், அதே பள்ளியிலே படிக்கும் மேக்காமண்டபம் என்ற ஊரைச் சேர்ந்த ஓர் இஸ்லாமிய மாணவியைக் காதலித்து வந்ததாகவும், அதில் இரு தரப்பிலே எதிர்ப்புகள் இருந்து காதல் கைகூடாமல் போனதாகவும் தெரிய வந்துள்ளது. பிரேதப் பரிசோதனை முடித்து, உள்ளுறுப்புகள் இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. இறப்பின் உண்மையான காரணம் தெரியவேண்டி வழக்கு இருப்புப் பாதை

போலீசாரின் விசாரணையிலே உள்ளது. இந்த நிலையில், அம்பேத்கர் பாசறை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் மாணவன் கொலை செய்யப்பட்டு இரயில் தண்டவாளத்தில் வீசப்பட்டிருக்கலாம் என்றும், முறையான விசாரணை வேண்டுமென்றும் கோரி சுமார் 160 பேர் 10-4-2000 அன்று தக்கலை கோட்டாட்சியர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அதைத் தொடர்ந்து, பல்வேறு அரசியல் கட்சிகள் போராட்டங்கள் நடத்தி, வழக்கின் விசாரணையைக் குற்றப் பிரிவு புலனாய்வுத் துறைக்கு மாற்ற வேண்டினார்கள். அத்துடன், 14-4-2000 அன்று ஜனதா தளக் கட்சியினர் மேக்காமண்டபத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடத்தி, கட்சியின் மாவட்டச் செயலாளரும் வழக்கறிஞருமான திரு. தனிஸ்லாஸ் என்பவர் இவ்வழக்கு விசாரணையிலே எவ்வகையிலும் சம்பந்தப்படாத மாவட்ட போலீஸ் இலாகாவைக் கடுமையாகக் குற்றம் சாட்டினார். 25-4-2000 அன்று சாலை மறியல் செய்வதாக அம்பேத்கர் பாசறையினர் தெரிவித்ததை அறிந்து, வழக்கை குற்றப்பிரிவு புலனாய்வுப் பிரிவுக்கு மாற்ற உயர் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்படும் என்று அமைப்பின் நிர்வாகிகளுக்குக் காவல் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டது.

அதையேற்று, சாலை மறியல் கைவிடப்பட்டது. மாவட்ட போலீசார்மீது அரசியல் கட்சியினர் குறை கூறியதால், வழக்கைக் குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்ற சிபாரிசு செய்யும்படி இருப்புப் பாதை காவல் துறைத் தலைவருக்கு 22-4-2000 அன்று கன்னியாகுமரி மாவட்டக் காவல் கண்காணிப்பாளரால் ஓர் அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. மேற்கொண்டு நடவடிக்கைகள் உன்னிப்பாகக் கவனிக்கப்படுகின்றன.

## 3. தகவல் கோரல்

### (அ) அனுமதி மறுத்த பிரச்சினையை அவையில் எழுப்புதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து. . . . (குறுக்கீடுகள்)

(திரு. சி. ஞானசேகரன், திரு. இரா. தாமரைக்கனி, திரு. பி.ஆர். சுந்தரம் ஆகியோர் எழுந்து நின்றனர்.)

***திரு. இரா. தாமரைக்கனி:** நான் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். பொதுப் பணித் துறை அமைச்சர் மீது உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருந்தேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தப் பிரச்சினையைப் பார்த்தேன். அதில் உரிமை மீறல் இல்லையென்று தீர்ப்புக் கூறுகிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. இல்லையென்று சொல்லிவிட்டேன். நீங்கள் அதற்குமேலே நீங்கள் பேசினீர்களானால் உங்களை வெளியேற்றுவேன். மூன்று தடவை என்னிடம் வந்து அறையில் கேட்டீர்கள். அதிலே உரிமை மீறல் கிடையாது என்று சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடு) உட்காருங்கள். அது தேவையில்லை. சும்மா உரிமை மீறல் என்று கொடுத்துவிட்டால் கட்டாயம் பேச வேண்டுமென்று விதி கிடையாது. என் அறையிலே வந்து கேட்டீர்கள். அதிலே உரிமை மீறல் கிடையாது என்று சொல்லிவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடு) அதை நான் பேச விடமாட்டேன். இதற்குமேலே பேசினீர்களானால் நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடு) நீங்கள் கொஞ்சம் சும்மா இருங்கள். இன்னும் இரண்டு தீர்மானங்கள் இருக்கின்றன.

## 4. கவன ஈர்ப்பு

### (அ) விவசாயிகளிடமிருந்து கூடுதல் மின் பளு வைப்புத் தொகை வசூலித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன்கீழ், அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு அவர்கள் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

***திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக விவசாயிகளின் pumpset-களுக்குப் பயன்படுத்துகிற இலவச மின்சார இணைப்புகளுக்குக் கூடுதல் மின் பளு அனுமதி அளிப்பதற்கு வைப்புத் தொகை வசூலிப்பதை மின்சார வாரியம் முறைப்படுத்தாததினால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவைக்கு ஒரு தவறான தகவலைத் தந்து கொண்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் இந்த அவையிலே என்ன நடைபெற்றது

என்பது தெரியும். தமிழ்நாட்டில் உள்ள 16 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் ஏற்கெனவே தங்களுடைய pumpset-களுக்குக் கூடுதல் Horse-Power வேண்டும் என்று கேட்டால், அவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வரை கட்ட வேண்டுமென்று மின் வாரியம் முடிவு எடுத்து இருந்தது. அதுகுறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. லட்சுமணன் அவர்கள் இந்த அவையில் பேசுகின்ற நேரத்திலே, அது அதிகமாக இருக்கின்றது என்றும், அதை 25 ஆயிரம் ரூபாயாகக் குறைக்க வேண்டுமென்றும், Horse Power-க்கு 250 ரூபாய் வசூல் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள். முதலமைச்சர் அவர்கள் இதே அவையில் அன்றையதினமே எதிர்க்கட்சித் துணைத் தலைவருடைய வேண்டுகோள் ஏற்கப்படுகிறது என்று அறிவித்தார்கள். பிறகு, 15 நாட்கள் கழித்து நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் இங்கே தெரிவித்தார்கள். அதை ஏற்று முதலமைச்சர் அவர்களும் அறிவித்தார்கள். அதைப்போலவே, 15 நாட்கள் கழித்து விவசாயிகள் சங்கத்தினுடைய தலைவர் திரு. செல்லமுத்து அவர்கள் முதலமைச்சருடைய வீட்டிலே முதலமைச்சரைச் சந்தித்து, 25 ஆயிரம் ரூபாய் என்பது அதிகமாக இருக்கிறது; அதை 10 ஆயிரம் ரூபாயாகக் குறைக்க வேண்டும்; ஒரு Horse Power-க்கு 250 ரூபாய் வேண்டுமானால் விவசாயிகள் கட்டுவார்கள்; ஆனால், 25 ஆயிரம் ரூபாய் என்பது அதிகமாக இருக்கிறது என்று கேட்டுக்கொண்டார்கள். திரு. செல்லமுத்து அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று முதலமைச்சர் அவர்கள் 10 ஆயிரம் ரூபாயாகக் குறைப்பதாக அறிவித்தார்கள். மறுபடியும் 15 நாட்கள் கழித்து திரு. செல்லமுத்து அவர்களும் திரு. கோவை செழியன் அவர்களும் முதலமைச்சரைச் சந்தித்து அந்த 10 ஆயிரம் ரூபாயைக்கூடக் கட்ட முடியாத சூழ்நிலையிலே விவசாயிகள் இருக்கிறார்கள்; எனவே, அந்த 10 ஆயிரம் ரூபாயையும் இரத்துச் செய்ய வேண்டுமென்றும், ஒரு Horse Power-க்கு 250 ரூபாய் வேண்டுமானால் வசூல் செய்துகொள்ளுங்கள் என்றும் கேட்டார்கள். அவர்களுடைய வேண்டுகோளையும் முதலமைச்சர் அவர்கள் ஏற்று, இனிமேல் 10 ஆயிரம் ரூபாய்கூடச் செலுத்த வேண்டியதில்லை; Horse Power-க்கு 250 ரூபாய் கட்டினால் போதும் என்று ஆணை பிறப்பித்தார்கள். அதுமட்டுமல்ல, அதற்கிடையிலே பல விவசாயிகள் 10 ஆயிரம் ரூபாய் என்று மின் வாரியத்திலே பணத்தையும் செலுத்திவிட்டார்கள். அப்படிச் செலுத்திய பணத்தையும் அந்தந்த விவசாயிகளுக்குத் திருப்பித் தர வேண்டுமென்றும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்தார்கள். இதுதான் தமிழகத்தில் நடைபெற்ற உண்மையான வரலாறு. ஆனால், திரு. அப்பாவு அவர்கள் அதையே மாற்றி முதலமைச்சர் அவர்கள் 250 ரூபாய்கூடக் கட்ட



வேண்டாம் என்று உத்தரவு பிறப்பித்ததாக இங்கே தெரிவித்தார்கள்; அது உண்மை அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் உள்ள இலவச மின்சாரம் பயன்படுத்துகின்ற விவசாய மின் இணைப்புகளுக்குக் கூடுதல் மின் பளு அனுமதி அளிப்பதற்கு ஒரு குதிரைத் திறனுக்கு ஒரு வருடத்திற்கு 250 ரூபாய் வீதம் மின் கட்டணம் விதிக்க வகை செய்து அரசு ஆணை எண் 57, எரிசக்தி சி-3, நாள் 29-3-2000 மூலம் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்த ஆணையை மின்சார வாரியம் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மின் வாரிய அதிகாரிகளுக்குத் தெரிவித்து கூடுதல் பளு யார் யாருக்குத் தேவைப்படுகிறதோ அவர்களிடத்திலே இருந்து விண்ணப்பம் பெற்று, வெறும் 250 ரூபாய்தான் ஓர் ஆண்டுக்குக் கட்டணம் வசூலிக்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போன்று, கூடுதலாகப் பயன்படுத்துகின்ற மின்சாரத்தை முறைப்படுத்துவதற்கு 25 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டும் என்று சொன்னபோது, சட்டமன்றத்திலே விவசாயிகளுடைய நிலை குறித்து முதன் முதலாக நான் குரல் கொடுத்தேன். என்னைச் சட்டமன்றத்திலிருந்து வெளியேறச் சொன்னீர்கள்; வெளியே தூக்கியும் போட்டீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் முறையல்ல. அனுமதி இல்லாமல் பேசினீர்கள். நீங்கள் பேசியது record-ல் ஏறக்கூடாது என்றுதான் நான் வெளியேற்றினேன். அதனால், record-ல் இல்லாததை, நான் இதுதான் பேசினேன் என்று சொல்லக் கூடாது, மற்றப்படியுள்ள விவரங்களைப் பேசுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** அடுத்து, இந்தப் பிரச்சினையை கடந்த சனவரி மாதம் 2 ஆம் தேதி நாங்குநேரியில் நடைபெற்ற 'வரும்முன் காப்போம்' திட்ட விழாவில் வைத்து நானும் நெல்லை மாவட்ட விவசாய சங்கத் தலைவர் சுப்பிரமணிய நாடார் அவர்களும், ஆவரைகுளம் பஞ்சாயத்துத் தலைவர் மரியாதைக்குரிய பாஸ்கர் அவர்களும், பணகுடி பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் குணசிங்கம் அவர்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து, நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும் சந்தித்து விவசாயிகளினுடைய அவல நிலையை எடுத்து வைத்தோம். முதல்வர் அவர்களை நான் சென்னை வந்து சந்திக்கிறேன் என்று அவர்களிடம் அந்த நேரத்திலே கூறினேன்.

[திரு. மு. அப்பாவு] [2000 மே 2

முதல்வர் அவர்களை 7-1-2000 அன்று முதல்வர் அவர்களுடைய இல்லத்திலே காலை 10 மணிக்கு நான் சந்தித்து, விவசாயிகளுடைய அவல நிலையை எடுத்துக் கூறினேன். கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்னால், விவசாயிகள் உற்பத்தி செய்த 2 மூட்டை நெல்லின் விலை 100 ரூபாயாக இருந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பேருரை நிகழ்த்துகிற நேரம் அல்ல. கேள்வி கேளுங்கள். இந்த உத்தரவுப்படி ஏதாவது கேள்வி கேட்பது என்றால், அமைச்சரிடம் 2 கேள்வி கேட்க அனுமதி உண்டு. ஒரு கேள்வியை முதலில் கேளுங்கள்; அமைச்சர் பதில் சொல்லுவார். அதற்கப்புறம் தேவை என்றால் இன்னொரு கேள்வி கேளுங்கள்.

முற்பகல் 10-55

**திரு. மு. அப்பாவு:** 2 மூட்டை நெல்லின் விலை 100 ரூபாய் என்றும், ஒரு பவுன் தங்கத்தின் விலை 100 ரூபாய் என்றும் அன்று இருந்தது. ஓர் அரசு ஊழியருடைய மாதச் சம்பளம் 100 ரூபாயாக இருந்தது. இப்போது ஒரு கோட்டை நெல்லின் விலை வெறும் 500 ரூபாயாகத்தான் இருக்கிறது. ஆகவே, விவசாயிகள் மிகக் கஷ்டமான நிலையில் இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு முதலமைச்சரிடம் எடுத்துக் கூறியதும் முதல்வர் அவர்கள் கருணையோடு பரிசீலித்து இந்த 16 இலட்சம் Pump set விவசாயிகளும் பயன்படுத்துகிற கூடுதல் மின்சாரத்திற்கு நான் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைக் கலந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன கேள்வி என்பதை நீங்கள் சொல்லுங்கள். நடந்த வரலாறு, நீங்கள் நாங்குநேரிக்குப் போய் பேசியது, வீட்டிற்கு போனது, இவையெல்லாம் பிரச்சினை அல்ல. என்ன கேள்வி என்பதை மாத்திரம் சொல்லுங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஒரேயொரு குறை என்னவென்றால் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் இங்கே சொல்கிறபோது யார், யார் அந்தக் கோரிக்கையை வைத்தார்கள் என்ற பட்டியலைச் சொன்னார். அதிலே அப்பாவுவினுடைய பெயர் விடுபட்டுப் போய்விட்டது. நான் சேர்த்துக்கொள்கிறேன். 3 முறை சொல்கிறேன். அப்பாவு, அப்பாவு, அப்பாவு. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. மு. அப்பாவு:** தீர்ந்துபோய்விட்டது. இதைத்தான் எதிர்பார்த்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, உட்காருங்கள்.



2000 மே 2]

**திரு. மு. அப்பாவு:** தலைவர் அவர்களே, கேள்வியைக் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு மேலே என்ன கேள்வி?

**திரு. மு. அப்பாவு:** முதல்வருக்கு நன்றி சொல்ல வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** முதல்வர் அவர்களை 7-1-2000 அன்று சந்தித்து 10-30 மணிக்கு அவருடைய வீட்டை விட்டு நான் வெளியே வந்தேன். 12-00 மணிக்குக் கோட்டைக்கு வந்து விவசாயிகள் பயன்படுத்துகிற கூடுதல் மின்சாரத்தை முறைப்படுத்த அனுமதி அளிப்பதற்கு ரூ.10,000 கட்டத் தேவையில்லை என்று அறிவித்தார்கள். அதையே நினைவுபடுத்தி, வேலூரிலே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியிலே, விவசாயிகளிடமிருந்து பெற்ற அந்த வைப்புத் தொகைகளையெல்லாம் திரும்பக் கொடுத்துவிடுங்கள் என்று சொல்லிவிட்டு, ஒரு H.P.-க்கு 250 ரூபாய் கட்ட வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒருபோதும் சொல்லவில்லை. அந்த ஆணையையே இரத்து செய்துவிட்ட காரணத்தால், விவசாயிகள் மிகவும் ஏழ்மை நிலையில் இருப்பதால் நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், நம்முடைய முதல்வரிடத்தில் விவசாயிகள் எவ்வளவு கனிவோடு இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து பார்த்து இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

ஒரு H.P.-க்கு 250 ரூபாய் கட்ட வேண்டுமென்றால் 5 Horse Power-க்கு 1,250 ரூபாய் ஆண்டுக்குக் கட்ட வேண்டும். 1,250 ரூபாய் இப்படிக் கட்ட வேண்டுமென்றால் கிட்டத்தட்ட 10 மூட்டை நெல்லை அந்த விவசாயி விற்றால்தான் முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதி காக்கவும்.

திரு. மு. அப்பாவு: 5 Horse Power-க்கு 1,250 ரூபாய் கட்ட வேண்டும். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இலவச மின்சார இணைப்புகளுக்குக் கூடுதல் மின் பளு அனுமதி அளிப்பதற்கு வைப்புத் தொகை வசூலிப்பதை இரத்துச் செய்ததுபோல் ஆண்டுக்கு 1 H.P.-க்கு 250 ரூபாய் கட்ட வேண்டும் என்பதை இரத்துத் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவோ இடர்பாடுகளுக்கு இடையில்

நம்முடைய முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டு விவசாயிகளுக்காகப் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அதிலே ஒன்று இலவச மின்சாரம் என்பது. இந்தியாவிலேயே இலவச மின்சாரத்தை அறிவித்து, செயல்படுத்துகின்ற ஒரே ஒரு மாநிலம் தமிழ்நாடுதான் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பஞ்சாபிலே அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் எல்லா விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் இல்லை. இங்கே ஏழை விவசாயிகள் 3 Horse Power-ஆக இருந்தாலும் சரி, 5 Horse Power-ஆக இருந்தாலும் சரி, 10 Horse Power-ஆக இருந்தாலும் சரி, அத்தனை பேர்களுக்கும் இலவசமாக மின்சாரத்தை வழங்கிக் கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே இதன்மூலம் மின்சார இலாகாவிற்கு ஏறத்தாழ 1,500 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றிற்கு இழப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. நாம் I.D.B.I.-க்கோ அல்லது CRISIL-க்கோ புதிய மின் திட்டங்கள் வேண்டுமென்று கேட்டு, நம்முடைய வேண்டுகோளை ஏற்கச் சொன்னால், விவசாயிகளிடமிருந்து மின்சாரக் கட்டணமாக ஏதாவது வசூலித்தால்தான் நாங்கள் உதவிகள் செய்வோம் என்று சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலையிலேயும், அதைப்போல உலக வங்கியும் வற்புறுத்திக் கொண்டிருக்கிற சூழநிலையிலேயும், அவர்கள் கடன் கொடுத்தாலும் சரி, கொடுக்காவிட்டாலும் சரி, விவசாயிகளுக்குக் கொடுக்கிற இலவச மின்சாரத்தை இரத்துச் செய்ய மாட்டேன் என்று சபதம் எடுத்துக் கொண்டிருக்கிற நம்முடைய முதலமைச்சருடைய ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி மீண்டும், மீண்டும் சலுகைகளைக் கேட்பது அர்த்தமற்றது. இந்த 250 ரூபாயை இரத்துச் செய்யவேண்டுமென்பது இப்போதுள்ள சூழ்நிலையில் இந்த அரசாங்கத்தினாலே இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) பரவாக்கோட்டை மற்றும் கூத்தாநல்லூர் பகுதிகளில் துணை மின் நிலையங்கள் அமைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, பரவாக்கோட்டை, கூத்தாநல்லூர் ஆகிய நகராட்சிகளில் துணை மின் நிலையங்கள்



அமைக்கப்பட வேண்டியது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் சட்டமன்றத்திலே ஏற்கெனவே கேள்வி நேரத்தின்போதும் இதைக் கேட்டார்கள். அப்போதும் இந்த அவையிலே நான் அறிவித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை ஏற்று ஏற்கெனவே இந்த அரசாங்கம் மின் வாரியத்திற்கு எடுத்துச்சொல்லி, கூத்தாநல்லூரில் 33/11 கி.வோ. மின்பாதை எடுப்பு துணை மின் நிலையம் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டு, துணை மின் நிலையம் அமைப்பதற்கான இடமும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. துணை மின் நிலையம் இந்த நிதியாண்டிற்குள், குறைந்தபட்சம் டிசம்பர் மாதத்திற்குள்ளாகவே கட்டி முடிக்கப்பட்டு அந்தத் துணை மின் நிலையம் இயங்கும் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11-00*

*கீழ்க்காணும் காரணங்களுக்காக பரவாக்கோட்டையில் துணை மின் நிலையம் அமைப்பதற்கான அவசியம் இப்போது எழவில்லை. பரவாக்கோட்டைப் பகுதிக்கு மன்னார்குடி 66/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்தது. தற்போது 3 கி.மீ. தொலைவிலுள்ள வடசேரி 33/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் எதிர்கால மின் சுமையைச் சமாளிக்க வடசேரி துணை மின் நிலையத்தின் மின் மாற்றியின் அளவு 2X5 எம்.வி.ஏ. ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. உள்ளிக்கோட்டையில் 33/11 கி.வோ. ஆளில்லாத துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துரு பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. துணை மின் நிலையம் அமைப்பதற்கான அவசியம் ஏற்பட்டால் அங்கேயும் ஒரு துணை மின் நிலையம் அமைக்க மின் வாரியம் தயாராக இருக்கிறது. மேலும் குறைந்த மின்னழுத்தத்தை மேம்படுத்த, பரவாக்கோட்டை பகுதியில் இரண்டு புதிய 11 கி.வோ. மின் பாதைகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, இந்த மின் பாதைகளும் இந்த ஆண்டிலேயே நிறைவேற இருக்கிறது. எனவே, அங்கே விவசாயிகளுடைய குறைகளை முழுமையாகத் தீர்ப்பதற்கு இந்த அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூத்தாநல்லூரில் துணை மின் நிலையம் இந்த ஆண்டே

[திரு. வை. சிவபுண்ணியம்] [2000 மே 2

தொடங்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல பரவாக்கோட்டைப் பகுதியிலே துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டது. அதற்கு அருகிலே இருக்கிற வடசேரியிலிருந்து வழங்கப்படுகிற மின்சாரம் போதுமானதாக இல்லை. இப்போதுகூட, கடந்த வாரம் அந்த ஊரில் சாலை மறியல் போராட்டம் எல்லாம் நடத்தியிருக்கிறார்கள். மின் பற்றாக்குறையைப் போக்குவதற்கான முயற்சியிலே, உள்ளிக்கோட்டையிலே ஆளில்லா துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்ற ஒரு கருத்துரு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவற்றை அரசு உடனடியாக பரிசீலித்து அந்தப் பகுதியிலேயும் ஒரு துணை மின் நிலையத்தை ஏற்படுத்தித் தருவதுதான் பொருத்தமாக இருக்கும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு கூடுதலாக மன்னார்குடி 66/11 கி.வோ. துணை மின் நிலையம் என்பது, மன்னார்குடி நகரத்திலேயும் மின்னழுத்தக் குறைவினாலே மிகப் பெரிய சிரமம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது; மிகப் பழமையான மின் நிலையமாக இருக்கிறது. ஆகவே, அதை 110/11 கி.வோ. துணை மின் நிலையமாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அங்கே தேவை இருக்கிறது என்று அதிகாரிகளும் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து மன்னார்குடிக்குக் கூடுதல் மின்சாரம் வழங்குவதற்கான முயற்சியாக 110 கி.வோ-ஆக உயர்த்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டு, அந்த ஆளில்லாத துணை மின் நிலையத்தை துணை மின் நிலையமாக அமைப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே எல்லா இடங்களிலேயும் துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டுமென்பது நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கருத்து. இதற்கு முன்னால் ஆண்டுக்கு 30 துணை மின் நிலையங்கள் தான் நிறுவிக்கொண்டிருந்தார்கள். ஆனால் 1996 முதற்கொண்டு ஆண்டுக்கு 60 துணை மின் நிலையங்களை நாம் நிறுவிக்கொண்டிருக்கிறோம். இதனால் மின் வாரியத்திற்கு ஆண்டுக்கு 250 கோடி ரூபாய் செலவாகிறது. இருந்தாலும் பரவாயில்லை. எந்த இடத்திலேயும் தமிழ்நாட்டிலே low voltage இருக்கக்கூடாது, இதனால் விவசாயிகளோ, வியாபாரிகளோ அல்லது வீடுகளில் குடியிருப்பவர்களோ பாதிக்கக் கூடாது என்று முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கி,



2000 மே 2] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

இதுவரையில் 4 ஆண்டுகாலத்தில் 240 துணை மின் நிலையங்கள் ஏறக்குறைய 1,200 கோடி ரூபாயிலே நாம் நிறுவி அவை செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வடசென்னையிலே 6 ஆம் தேதி நடைபெற்ற விழாவிலே இரண்டு துணை மின் நிலையங்களை 52 கோடி ரூபாயிலே தொடங்கி வைத்தபோது இந்த ஆண்டும் 60 துணை மின் நிலையங்கள் நிச்சயமாகத் தொடங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே மன்னார்குடியிலே 66/11 கி.வோ. துணை மின் நிலையத்தை 110/11 கி.வோ. துணை மின் நிலையமாக மாற்றுவதற்கு ஆணை பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உள்ளிக்கோட்டையிலே ஆளில்லாத துணை மின் நிலையத்தை, துணை மின் நிலையமாக மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். அது பற்றி இந்த அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து அரசினர் தீர்மானம். (குறுக்கீடு) அஜண்டாவில் இருப்பதை முடிக்க வேண்டும். எனவே, நான் அனுமதிக்க முடியாது. திரு. சி. ஞானசேகரன், உட்காருங்கள்.

**THIRU C. GNANASEKARAN:** Zero hour...

**HON. SPEAKER:** Zero hour I don't recognise. You please sit down.

*முற்பகல் 11-05*

## 5. அரசினர் தீர்மானங்கள்

### (அ) மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் தீர்மானங்கள். மதிப்பீட்டுக் குழுவிற்குப் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், மாண்புமிகு பேரவை முன்னவர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 195-ன்கீழ், 2000-2001 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## (ஆ) பொதுக் கணக்குக் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பொதுக் கணக்குக் குழுவிற்குப் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், மாண்புமிகு பேரவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 203-ன்கீழ், 2000-2001 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



## (இ) பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பொது நிறுவனங்கள் குழுவிற்குப் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், மாண்புமிகு பேரவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 211-ன்கீழ் 2000-2001 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## (ஈ) உரிமைக் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, உரிமைக் குழுவிற்கு பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், மாண்புமிகு பேரவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 227-ன்கீழ் 2000-2001 ஆம் ஆண்டிற்கான உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 6. அறிவிப்புகள்

### (அ) பேரவைக் குழுக்களுக்கான தேர்தல் கால அட்டவணை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கான தேர்தல் ஒற்றை வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், மதிப்பீட்டுக் குழு (Estimates Committee), பொதுக் கணக்குக் குழு (Public Accounts Committee), பொது நிறுவனங்கள் குழு (Public Undertakings Committee), உரிமைக் குழு (Committee on Privileges) ஆகியவற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் வேட்புத்தாள்களை 2000 ஆண்டு மே திங்கள் 9 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை, பிற்பகல் 3-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத்தாள்களை செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்புத்தாள்கள் 2000 ஆண்டு மே திங்கள் 10 ஆம் நாள் புதன்கிழமை, மாலை 3-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 2000 ஆண்டு மே திங்கள் 11 ஆம் நாள் வியாழக்கிழமை, பிற்பகல் 3-00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், குழுக்களுக்கான உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.





## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) சென்னைக்கு கிருஷ்ணா நீர்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், இப்போது என்ன என்று சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஏற்கெனவே இந்த அவையில், நாம் நெடுநாட்களாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த கிருஷ்ணா நீர் 1-5-2000 அன்று வந்துவிடும் என்று அறிவித்தார்கள். ஆனால் இதுவரையில் வரவில்லை. அது குறித்து நாங்கள் தலைவரிடம் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம். எப்போது கிருஷ்ணா நீர் வரும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறோம்.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, இதே விஷயம் குறித்துதான் நானும் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். ஆனால், காலையிலே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் எடுத்துக்கொள்ளவில்லை, அவரே எழுந்து நின்று கேட்கிறார்.

திரு. கே. சுப்பராயன்: ஆகவே நான் அந்தப் பிரச்சினையை அப்போது கிளப்பாமல் இருந்தேன். பிரச்சினை கிளப்பப்பட்டு இருக்கிற காரணத்தால், அது இப்போது எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா? எடுத்துக் கொள்ளப்படுமானால் அதுகுறித்து விவரங்களை நான் பின்னர் தெரிவிக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கும் அதுதானா? (குறுக்கீடு) இல்லை. இப்போது எடுத்துக்கொள்ளவில்லை.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா தண்ணீர் சென்னைக்கு வரும் என்று பலமுறை இந்த அவையிலே கூறிவிட்டீர்கள். மார்ச் 15 ஆம் தேதி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்லவில்லை.

திரு. பி.ஆர். சுந்தரம்: பொதுப் பணித் துறை அமைச்சர், முதலமைச்சர் இவர்கள், ஏப்ரல் 10 ஆம் தேதி, ஏப்ரல் 15 ஆம் தேதி, ஏப்ரல் 28 ஆம் தேதி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது சமாச்சாரத்திற்கு வாருங்கள். இப்போது இரண்டு பேரும் பேசிவிட்டார்கள். அதற்குமேல் வியாக்கியானம் பண்ணிக்கொண்டு இருக்க வேண்டுமா? அந்தக் கருத்தை அப்படியே சொல்லுங்கள்.

திரு. பி.ஆர். சுந்தரம்: அதை அப்படியே எப்படிச் சொல்வது, மாற்றித்தான் சொல்லவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாற்றி எதற்குச் சொல்ல வேண்டும்? மாற்றிச் சொல்வதற்கு ஒன்றும் இல்லையே!

திரு. பி.ஆர். சுந்தரம்: கட்சி வெவ்வேறு இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுந்தரம் மாற்றிச் சொன்னார் என்று record பண்ணிக்கொள்கிறேன், சொல்லுங்கள்.

திரு. பி.ஆர். சுந்தரம்: பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், மே 1 ஆம் தேதி உறுதியாக வரும் என்று கூறினார்கள். இன்றைக்கு அவர்கள் ஹைதராபாத் சென்று, அங்கே அது சம்பந்தமாக முதலமைச்சர், பாசனத் துறை அமைச்சர் அவர்களை எல்லாம் பார்த்துவிட்டு வந்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அந்த நீர்ப் பாசனத் துறை அமைச்சர், சென்னைக்கு வந்து விமான நிலையத்திலே கூறும்போது சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கிறது, எனவே, நான் எதற்கும் பதில் கூற முடியாது என்று பதில் கூறியிருக்கிறார்கள். எனவே தவறாகக் கூறி மறுபடியும் உரிமைப் பிரச்சினை வந்துவிடுமோ என்று பேசி சிக்கிக்கொள்ளக் கூடாது...

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதையெல்லாம் நீங்களாக யூகிக்கக் கூடாது. இப்போது நீங்கள் கேட்டீர்கள். இப்போது நான் அந்த கிருஷ்ணா நீர் பிரச்சினையை எடுத்துக்கொள்ளவில்லை, உட்காருங்கள்.

திரு. பி.ஆர். சுந்தரம்: எப்போது வரும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்லுகிறேன்; இன்றைக்கே சொல்ல வேண்டுமென்று எனக்குக் கட்டாயம் கிடையாது.

திரு. சி. ஞானசேகரன்: We expect answer from the Government.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: I will give the answer after consulting the Government. I am the person to give the answer.

டாக்டர் அ. செல்லக்குமார்: நானும் கொடுத்திருக்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: Yes. I will allow only one person from a party to talk. I can record all your names when the motion comes up.

## 7. நன்றி நவிலல்

### தேயிலைக்கு வரிக்குறைப்பு

திரு. பா.மு. முபாரக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

(உறுப்பினர் திரு. பா.மு. முபாரக் எழுந்து நின்றார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. முபாரக், நீங்களும் கிருஷ்ணா நீர் பற்றிப் பேசப்போகிறீர்களா?

திரு. பா.மு. முபாரக்: இல்லை. தேயிலைக்கு வரியைக் குறைத்ததற்காக நான் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லப் போகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

திரு. பா.மு. முபாரக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி தேயிலை விவசாயிகளின் பச்சைத் தேயிலை விலை குறைந்தது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்ததும், கடந்த 29 ஆம் தேதி இந்தப் பேரவையில், வரலாற்றில் இல்லாத அளவுக்கு ஒரு மணி நேரம், ஒரு மாவட்ட மக்களுடைய பிரச்சினைக்காக மிகுந்த கவனத்துடன் அனைத்துக் கட்சிகளும் கலந்துகொண்டு பேசுகின்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தும், விவசாயிகளுடைய நிலையை அறிந்து, கோரிக்கையை ஏற்று, அதன்மூலம் விவசாயிகளுடைய விற்பனை வரியை 4 சதவிகிதமாகக் குறைத்து உடனடியாக 8 சதவிகித விற்பனை வரியை 4 சதவிகிதமாகக் குறைத்து அறிவித்ததற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அந்த மாவட்ட மக்களின் சார்பில் நன்றி தெரிவிப்பதோடு, விவசாயிகள் பிரச்சினை குறித்து பல வகையிலும் உதவி செய்ய வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தி எழுதிய கடித விவரங்களையும் இந்தப் பேரவையில் தெரிவித்ததோடு, அதன் வாயிலாக இன்றைக்கு மாண்புமிகு மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் தேயிலை விவசாயிகள் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிற நிலை குறித்து 10 எக்டேருக்கு கீழே இருக்கிற விவசாயிகளுக்கு தயாரிக்கப்பட்ட தேயிலைத் தூளுக்கு, ஒரு கிலோவுக்கு 5 ரூபாய் வரையிலும் மானியம் வழங்கப்படும் என்று அறிவித்ததன் மூலம் ஒவ்வொரு கிலோ பச்சைத் தேயிலைக்கும் 1¼ ரூபாயிலிருந்து 1½ ரூபாய் வரையிலும் விவசாயிகளுக்கு மானியமாகக் கிடைக்கின்ற நிலையும், வரிக் குறைப்பின் மூலமாகவும் அந்த

விவசாயிகளுக்குப் பயன் ஏற்படுகின்ற நிலையும் ஏற்பட்டதன் காரணமாக, உடனடியாக இரண்டு ரூபாயிலிருந்து 3 ரூபாய் வரையிலும் பச்சைத் தேயிலை பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு மத்திய அரசும், மாநில அரசும் குறிப்பாக இதிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தியதன் மூலமாகவும், மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் அவர்களை டெல்லிக்கு நாங்கள் சென்று சந்தித்தபோது இதில் அவர் கவனம் செலுத்தியதால் கிடைத்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேச்சை முடியுங்கள்.

**திரு. பா.மு. முபாரக்:** அதற்காக நீலகிரி மாவட்ட விவசாயிகள் சார்பிலும் அந்த மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பிலும் உளம் நிறைந்த நன்றியை இந்த அவையின் மூலமாகத் தெரிவித்து, நிறைவுசெய்கிறேன்.

## 8. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 43—எழுதுபொருள்—அச்சுத் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 46—செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல்**

**(இ) கோரிக்கை எண் 50—சுற்றுலா**

### (அ) கோரிக்கை எண் 43—எழுதுபொருள்—அச்சுத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து 2000-2001 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 43—எழுதுபொருள்— அச்சுத் துறை, மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

*** மாண்புமிகு திரு வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 62,52,45,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1913, திரு. சி. ஞானசேகரன்.





**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் அரசு கிளை அச்சகங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 62,52,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4165. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 62,52,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4918, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு சார்ந்த அச்சுப் பணிகள் எல்லாம் அரசு அச்சுத் துறை அச்சகத்திலேயே அச்சடிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 62,52,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2874, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 62,52,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3565, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 62,52,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2255, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு மைய அச்சகத்தில் போதிய பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 62,52,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண். 2651, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், ஈரோடு பெரியார் நகரில் உள்ள கூட்டுறவு அச்சகத்திற்கு நவீன இயந்திரங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 62,52,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3527, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 62,52,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3141, திரு. கே. தங்கமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4241, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் மாவட்டந்தோறும் அரசிதழ்களை அச்சிட கிளை அச்சகங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 62,52,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2405, திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 62,52,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3196, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 62,52,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4118, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு அச்சகங்களை நவீனப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்—அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 62,52,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2790, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 62,52,45,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3707, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு அச்சகங்களை நவீனப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 62,52,45,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5081, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 62,52,45,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 46—செய்தி — திரைப்படத் தொழில் நுட்பவியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 46-செய்தி திரைப்படத் தொழில் நுட்பவியல், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"செய்தி—திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 18,36,05,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1908, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் அண்ணா கலையரங்கத்தில் பழுதடைந்துள்ள நாற்காலிகளை அப்புறப்படுத்தி, அங்கு புதிய நாற்காலிகளைப் போட்டு திரைப்படங்களைத் திரையிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,36,05,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4169, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு ஒரு மணிமண்டபம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,36,05,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4931, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குழந்தைகளுக்கான சிறந்த படங்களைத் தயாரிக்கும் தயாரிப்பாளர்களுக்குக் கேடயமும், பரிசுத் தொகையும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,36,05,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2876, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,36,05,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3563, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,36,05,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2266, திரு. ஆர்.ஆர். சேகரன்.



**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாகத் தயாரித்து ஒளிபரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,36,05,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2661, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, காமராஜர், இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி ஆகியோர் வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாகத் தயாரித்து, பொதுமக்களுக்கு இலவசமாகத் திரையிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,36,05,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3530, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குழந்தைகள் திரைப்படங்கள் மற்றும் குடும்பப் பாங்கான திரைப்படங்களுக்குத் தமிழக அரசு விருதுகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,36,05,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4287, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திரைப்படங்களில் தேசப்பற்று உணர்வைத் தூண்டக்கூடிய நிகழ்ச்சிகள் இடம் பெறச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,36,05,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2406, திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,36,05,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4127, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செய்தி-திரைப்படத் துறையின் மூலம் தனியார் தொலைக் காட்சிகளுக்குப் படம் தயாரிக்க நிதி உதவி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,36,05,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2807, திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,36,05,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3690, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேசப்பற்றை வளர்க்கும் வகையில் காந்தி, நேரு, ராஜாஜி, காமராஜர் போன்ற தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக அரசின்மூலம் தயாரித்து இலவசமாகத் திரையிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,36,05,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5083, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,36,05,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

## (இ) கோரிக்கை எண் 50-சுற்றுலா

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 50-சுற்றுலா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

* **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 3,79,80,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1897, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஜவ்வாது மலையில் உள்ள காவலூர், அமிர்த், பாலமதி, செங்காநத்தம், ஏலகிரிமலை, வேலூர் நகரம் ஆகிய பகுதிகளை சுற்றுலா மையங்களாக்கி, அப்பகுதிகளில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,79,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4178, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,79,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4965, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம் எடப்பாடி நகரத்தின் அருகில் உள்ள பூலாம்பட்டியில் படகுத் துறையும், பல நாட்டுப் பறவைகளும் வருகிற சுமார் 250 ஏக்கர் பரப்பில் ஏரியும், சூரியன் மலையிலுள்ள இயற்கை எழில் சூழ்ந்த வெள்ளூற்று பெருமாள் கோயிலும் உள்ளதால், எடப்பாடியை சுற்றுலா தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக்கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,79,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2859, திரு. கே. சுப்பராயன்.



**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக்கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,79,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3674, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக்கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,79,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2288, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரியிலுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையைக் காண விரும்பும் பள்ளி மாணவர்களுக்கு இலவச பாஸ் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக்கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,79,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2683, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டத்தில் மாவட்டத்தின் தலைமையிடத்தில் இருந்து சிறப்பு சுற்றுலாப் பேருந்துகளை இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக்கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,79,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3534, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,79,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4382, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நாகாவதி அணையைச் சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,79,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2410, திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,79,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4133, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் மாவட்டம், கொல்லிமலைப் பகுதியினைச் சுற்றுலா மையமாக அறிவித்து அங்கு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் பணிகளை மேற்கொள்வதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக்கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,79,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2802, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக்கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,79,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3808, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பாபநாசம் சட்டமன்றத் தொகுதி இன்னம்பூர் ஏர அகரம், திருபுறம்பியம், திருவைகாவூர், திரு. மண்டங்குடி, புள்ளம் பூதங்குடி, ஆதனூர் ஆகியவை பாடல் பெற்ற தலங்களாக உள்ளதால் அவற்றைச் சுற்றுலா மையங்களாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,79,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1885, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1987, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை தாலுகாவில் உள்ள கோவை குற்றாலம், வைதேசி அருவி, பாலமலை ரங்கநாதசுவாமி கோவில் ஆகியவைகளை சுற்றுலா மையங்களாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக்கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,79,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4215, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருக்கோவிலூர் நகரத்தைச் சுற்றுலாத் தலமாக அரசு அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,79,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3272, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேராவூரணி தொகுதி, மனோரா சுற்றுலாத் தலத்தில் சிறுவர் விளையாட்டுப் பூங்கா அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,79,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1289, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுற்றுலாத் துறையின் மூலம் திருவண்ணாமலைக்குப் பேருந்து விடுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,79,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2341, திரு. ச. புரட்சிமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5086, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,79,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.



**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழுதுபொருள்-அச்சுத் துறை மற்றும் செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த பேரவையிலே படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@@ நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்குதல்

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, சுற்றுலாத் துறையின் சார்பில் சிற்றுண்டி வழங்க அனுமதி கோரப்பட்டிருக்கிறது. அனுமதி கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@227 முதல் 287 வரையிலான பக்கங்களில் இணைப்பு I மற்றும் II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

@@288 முதல் 318 வரையிலான பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

## 8. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 43—எழுதுபொருள் அச்சுத் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 46—செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல்**

**(இ) கோரிக்கை எண் 50—சுற்றுலா—தொடர்ச்சி**

**மாண்புமிகு பேரவைத்தலைவர்:** விவாதம் தொடங்குகிறது. விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் திரு. சி. ஞானசேகரன்; அவருக்கு 15 நிமிடங்கள் கொடுக்கிறேன்; அதற்குள் அவர் பேசி முடித்துக்கொள்ள வேண்டும். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** திரு. ஞானசேகரன் பேசுகிறவரைக்கும் நீங்கள் அவையிலே இருக்க வேண்டும்; அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதற்கு?

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அவர் சொல்கிறார்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காலையிலேயிருந்து அவர் பேச்சைத்தான் கேட்டுக்கொண்டே இருக்கிறேன். ஆகையினால், அவருடைய பேச்சை துணை சபாநாயகர் கேட்கட்டும். (சிரிப்பு)

**திரு. சி. ஞானசேகரன்:** எழுதுபொருள் அச்சுத் துறை, சுற்றுலாத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு வாய்ப்பு நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

முதலிலே, சுற்றுலாத் துறையின்மீது என்னுடைய கருத்துகளை நான் எடுத்துவைக்க விரும்புகிறேன். ஏற்கெனவே 25-4-2000 அன்று வெளியிட்டுள்ள 'இந்து' பத்திரிகையில், தமிழக அரசு, சுற்றுலாத் துறையின்மீது எந்த அளவுக்கு அக்கறை கொண்டிருக்கிறது என்பதைக் குறித்து ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்கள். 'Government indifferent to tourism promotion', என்கிற தலைப்பினைப் போட்டு, பல கருத்துகள் மிக விளக்கமாக அதிலே கூறப்பட்டு இருப்பதை நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய தமிழகத்தில், எல்லா வளமும் இருக்கிறது. கலை நுட்பம் மிக்க தொன்மை வாய்ந்த கோயில்கள் இருக்கின்றன; கண்ணைக் கவரும்



கடற்கரைகள் இருக்கின்றன; மன மகிழ்வூட்டும் மலைச் சாரல்கள் இருக்கின்றன. அழகிய முதுமலை சரணாலயம், பறவைகள் வந்து போகக்கூடிய வேடந்தாங்கல் சரணாலயம்; அதேபோல், ஆசியாவிலேயே மிகப் பெரிய டெலஸ்கோப் இருக்கக்கூடிய ஜவ்வாது மலையில் இருக்கக்கூடிய காவலூர் மலை, ஏழைகளினுடைய ஊட்டி என்று அழைக்கப்படுகிற ஏலகிரி, மலைகளினுடைய இராணி என்று அழைக்கப்படுகிற நீலகிரி, கொடைக்கானல், ஏற்காடு என்று கவரக்கூடிய வளங்கள் பல இருந்தாலும்கூட, உலக அளவிலான Global Tourism Map-ல் இன்னும் நம்முடைய தமிழ்நாடு இடம்பெறவில்லை என்பதை நான் இங்கே வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், பக்கத்திலே இருக்கக்கூடிய கர்நாடகாகூட, Global Tourism Map-லே இடம் பெற்றிருக்கிறபோது, தமிழகத்தில் இத்தனை வளங்கள் இருந்தும்கூட, ஏன் அது உலக சுற்றுலா map-லே இடம்பெறவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து இந்த அவைக்குத் தெரிவித்தாக வேண்டும் என்று நான் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே Tourism Department-க்கு எந்த அளவு பணம் ஒதுக்கீடு செய்கிறோம் என்பதை வைத்தே சொல்லலாம். இந்தத் துறை மிக சாதாரணமாக அதாவது indifferent-ஆக நடந்துகொள்கிற காரணத்தினால், பண ஒதுக்கீடும் இல்லாமல், மிகவும் நலிவடைந்திருக்கிறது என்றே சொல்லலாம்.

1999-2000 ஆண்டு, தமிழ்நாடு அரசு, Tourism-க்கு ஒதுக்கியிருந்த தொகை வெறும் 3 கோடி ரூபாய்தான். ஆனால், பக்கத்தில் இருக்கக்கூடிய ஆந்திரப்பிரதேசம், 45 கோடி ரூபாயை சுற்றுலாத் துறைக்கு ஒதுக்கியிருக்கிறது. அதேபோல், உத்திரப்பிரதேசம் 100 கோடி ரூபாய், சுற்றுலாத் துறைக்கு, 1999-2000-லே ஒதுக்கியிருக்கிறது. கேரளா 32 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. கர்நாடகா 36 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இப்படி மற்ற மாநிலங்கள் எல்லாம் சுற்றுலாத் துறைக்கு முக்கியத்துவத்தைத் தந்து பல கோடி ரூபாயை ஒதுக்கி, சுற்றுலாத் துறையை வளப்படுத்திக் கொண்டிருக்கின்றன. அந்த மாநிலங்களிலெல்லாம், நம்முடைய தமிழகத்திலே இருக்கக்கூடிய அளவுக்கு வளம் இல்லை; தமிழகத்திலே இருக்கக்கூடிய அளவுக்குச் சுற்றுலா மையங்கள் இல்லை; அப்படி இல்லாதபோதுகூட, அவர்கள் அதிகப் பணத்தைச் செலவழித்து சுற்றுலாத் துறையை மேம்படுத்துகிறபோது எல்லா வளங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கிற தமிழகத்தில் தமிழக சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும் ஒரு மாற்றாந்தாய் மனப் பக்குவத்தோடு நடந்து கொண்டிருக்கிற காரணத்தினாலே, சுற்றுலாத் துறை மிகவும்

மோசமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*1997-98*-லே, ரூ.*3.92* கோடிதான் ஒதுக்கினீர்கள். *1998-99*-லேகூட ரூ.*5.98* கோடிதான் ஒதுக்கியிருக்கிறீர்கள். இவ்வளவு குறைவான தொகையை ஒதுக்கியதால் சுற்றுலாத் துறையை மேம்படுத்த முடியவில்லை. ஆனால், சுற்றுலாவுக்கு என்று வரக்கூடியவர்கள்மீது, சுற்றுலா மையங்களைப் பார்க்க வரக்கூடியவர்கள்மீது, Luxury Tax என்று போட்டு, ஓட்டலிலே தங்குகிறவர்கள்மீது *20* சதவீதம் வரியை போடுகிறோம். அதேபோல், Transport-க்கும் நீங்கள் வரியைப் போடுகிறீர்கள். இப்படி போடுகிற காரணத்தினாலே, சுற்றுலாத் துறை, மிகவும் மோசமான பாதையிலே சென்று கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே வலியுறுத்துவதோடு, இந்தத் துறையிலே ஊழல்களும் நிறைந்திருக்கின்றன என்பதையும் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் *11-25*

பொதுவாக, சுற்றுலாத் துறையில் இருக்கக்கூடிய இயக்குநர் பல ஆண்டுகளாக அதிலேயே இருந்து கொண்டிருக்கிறார். பல ஆண்டுகளாக அவர் பணியாற்றிக் கொண்டிருந்தாலும்கூட, துறைக்கு ஏதாவது அவர் நல்லது செய்து துறையை வளப்படுத்தி இருக்கிறாரா என்று பார்த்தால் இல்லை என்கிற பதில்தான்வரும். அவர் இருக்கக்கூடிய பதவி அதிகாரத்தை யாரும் பங்கிட்டு எடுத்துக்கொண்டு போய்விடக்கூடாது என்பதற்காக General Manager post *1996* ஆம் ஆண்டிலேயிருந்து, இன்னும் fill-up செய்யப்படாமல் இருக்கிறது என்றுகூட, தி 'இந்து' நாளிதழ் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறது. சுற்றுலாத் துறையினுடைய இயக்குநர் எல்லாவற்றிற்கும் அங்கே ஊழலுக்கு இடம் கொடுத்துவிட்டு, துறையை மிக மோசமான நிலைக்குக் கொண்டு போய் இருக்கிறார் என்பதற்கு சில உதாரணங்களை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களிடம்கூட நான் ஏற்கெனவே இந்தக் குற்றச்சாட்டைக் காட்டினேன். கோப்பு எண் *11306*/ட்டி.பி./*98*-லே பட அஞ்சல் அட்டைகள் அச்சிடுவதற்காக *1,68,500* ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கோப்பு உருவாக்கப்படுவதற்கு *2* மாதங்களுக்கு முன்னாலே, அதே பட அஞ்சல் அட்டைகள் அச்சிடுவதற்காக *80,250* ரூபாய் ஒதுக்கீடு செய்து Work Order எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிற நிலையில், *12-11-1998* அன்று ரூபாய் *1,68,500* ஒதுக்கி, இந்தத் துறைக்கு ரூபாய் *88,250* நட்டத்தை அந்த இயக்குநர் உருவாக்கி இருக்கிறார். ஆனால் அமைச்சர் ஏனோ இதைக் கண்டு கொள்ளாமல், அவரிடமிருந்து விளக்கம் கோராமல் அதைச் சரி செய்யாமல் இருப்பதுதான் மிகவும் வேதனையான ஒரு செய்தி.



இரண்டாவது, கோப்பு எண் *13306*/ஏ/ட்டி.பி./*98*-என்ற நிகழ்வில், *5000* சுவரொட்டிகள் அச்சடிப்பதற்காக ரூபாய் *1,06,570* ஒதுக்கியிருக்கிறார்கள். இந்தக் கோப்பு கையெழுத்து ஆவதற்கு *1* மாதத்திற்கு முன்னாலே, அதே *5,000* சுவரொட்டிகள் அச்சடிப்பதற்கு ரூபாய் *45,000* மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது, கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதில் ஒரேயடியாக ரூபாய் *61,709* அதிகமாகக் கொடுத்து, இந்தத் துறைக்கு நட்டத்தை அந்த இயக்குநர் உருவாக்கி இருக்கிறார்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையின் சார்பாக எந்தச் சுவரொட்டிகள் அச்சடிக்கப்படுவதாக இருந்தாலும், முறையாக ஒப்பந்தங்கள் கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் அச்சடிக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த காலத்தில் *5,000* சுவரொட்டிகள் அச்சடிக்கின்றபோதும் அதற்குப் பிறகு அச்சடிக்கின்றபோதும், விலை வித்தியாசம். இருக்கிறது என்று கூறியிருக்கின்றார்கள். இரண்டினுடைய தரத்திற்கும், விலைக்கும் வித்தியாசம் இருக்கும் என்பதையும், வெளிநாட்டுப் பயணிகளைக் கவரக்கூடிய அளவிற்கு தரம் உயர்ந்த அளவிற்கு இருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, முறையாக அச்சடிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதே காகிதத் தன்மை, அதே தரம். ஆனால், இதிலே முறையான ஒப்பந்தப் புள்ளிகள் கூட சரியாக வரப்படவில்லை என்று அந்தத் துறையினுடைய Publications Officer-ரே *27-11-1998* ஆம் தேதி, அமைச்சருக்கும், அரசுக்கும் புகார் அனுப்பியிருக்கிறார். ஆனால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதே தரம், அதே நிலை. இருந்தாலும் கூட, இந்தத் துறைக்கு நட்டத்தை ஏற்படுத்த வேண்டும், தனியாக முறைகேடுகள் மூலமாக பணத்தை எடுக்க வேண்டுமென்ற முறையில் நடக்கப்பட்ட ஊழல் என்பதை நான் இந்த அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு கொண்டுவரக் கடமைப் பட்டிருக்கிறேன். அமைச்சர் கொஞ்சம் விழிப்போடு செயல்பட்டு, இப்படிபட்ட அதிகாரிகளை களையெடுத்தாலொழிய இந்தத் துறை சீர்படாது, செம்மைப்படாது என்பதை நான் இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே இயக்குநர் உலக சுற்றுலா சந்தையிலே பங்கு கொள்வதற்காக இந்தத் துறை மூலம் லண்டன் சென்று வருவதற்காக, டிக்கெட் எடுத்த வகையிலேகூட ரூபாய் *33,120* அதிகமாகச் செலவழித்திருக்கிறார் என்கிற கூற்றை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதேபோல, கோப்பு எண் 6599/ட்டிபி./98-லே அரசாங்கத்தின் மூலமாக ஒரு தனியார் போட்டோகிராபரை நியமனம் செய்து ஒரு நாளைக்கு 1250 ரூபாய் கொடுத்திருக்கிறார். அதேபோல, 17 நாட்களுக்கு அரசு செலவிலே ஒரு காரைக் கொடுத்து, 17 நாட்களுக்கு அவருக்கு தங்குமிடம், உணவு ஆகியவற்றையெல்லாம் கொடுத்திருக்கிறார். துறையைச் சார்ந்தவருக்கு என்றால் 625 ரூபாய் கொடுத்தால் போதும் என்று அவர்கள் கோப்பை அனுப்பியபோதும்கூட இவர் அதையெல்லாம் நிராகரித்துவிட்டு, தனக்கு வேண்டிய ஒரு போட்டோகிராபர் என்ற காரணத்தினாலே 1250 ரூபாய் ஒரு நாளைக்கு என்று கொடுத்து, இந்தத் துறைக்கு நட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்று நான் இங்கே குற்றஞ்சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-30*

அடுத்து, ஊட்டியிலே, Cable Car அமைத்தது. நான் டார்ஜிலிங்கிற்கு, பொதுக் கணக்குக் குழு முலமாக போனபோது அங்கே Forest Department மிக அருமையாக, Cable Car-ஐ நிருவாகம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தேன். பல கோடி ரூபாய் வருவாயை அங்கே Forest Department அரசுக்கு ஈட்டிக் கொடுக்கிறது. ஆனால், ஊட்டியிலே, Cable-Car-ஐ இந்தத் துறை நடவடிக்கை எடுத்து Forest Department-டிடம் கொடுத்து, அவர்களையே Cable Car-அமைக்கச் சொல்லலாம், அல்லது இந்தத் துறையேகூட அமைக்கலாம். ஆனால், அதையெல்லாம் விட்டுவிட்டு, கல்கத்தாவில் இருக்கக்கூடிய உஷா ரோக்கா என்கிற ஒரு நிறுவனத்திடமிருந்து கையூட்டை வாங்கிக்கொண்டு, அதற்காக ஓர் உத்தரவை, அந்த இயக்குநர் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. அதை நான் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அப்படி இருக்குமேயானால் அவர் அரசாங்கத்திற்கு கட்டக்கூடியது நாலரை இலட்சம் ரூபாய் ஓர் ஆண்டுக்கு என்று அவர் fix செய்ததாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால், ஓர் ஆண்டுக்கு பல கோடி ரூபாய் வருமானத்தை ஈட்டித்தரக்கூடிய Cable Car System-ஐ நாம் இப்படி தனியாருக்குக் கொடுத்து, அதிலே அவர்கள் முறைகேடுகளை செய்வதற்கு அனுமதித்துவிட்டு, ஒரு துறைக்கு இவ்வளவு நட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்பதை நான் அரசாங்கத்திற்கு........

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊட்டியில் Cable Car விடுவதைப் பொறுத்தவரையில், துறையின் சார்பாக, எந்த ஒரு முடிவும் எடுக்கப்படவில்லை, இன்னாருக்குக்



கொடுக்க வேண்டுமென்று இல்லை. இருந்தாலும்கூட, அதைக் கடந்த காலத்திலே முறையாக, ஒப்பந்தங்கள் வெளியிடப்பட்டு, நிலம் வனத் துறைக்கு சொந்தமான இடமாக இருக்கின்ற காரணத்தாலே, அவர்களுடைய அனுமதியும் பெறக்கூடிய வகையில், காலதாமதம் ஆகிறதே தவிர வேறல்ல. அந்த அனுமதியைப் பெற்றுவிட்டோம். வருகிற ஒரு மாதத்திற்குள் மீண்டும் முறையாக, ஒப்பந்தங்கள் கோரப்படவிருக்கின்றன. அதுபோன்று தனியாரையும் ஊக்குவிப்பது, என்று சுற்றுலாத் துறையில் கொள்கை முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, தனியாரை ஊக்குவிக்கக்கூடிய அளவிற்கு சுற்றுலாத் துறையின் சார்பாக, முறையாக ஒப்பந்தங்கள் ஒரு மாதத்திற்குள் கோரப்படவிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியாரை ஊக்குவிக்க வேண்டாம் என்று நான் கூறவில்லை. ஆனால், நாலரை இலட்சம், ஐந்து இலட்சம் ஆண்டுக்கு, என்று அவர்களிடம் பெற்றுக்கொண்டு, நீங்கள் மோசம் போய் விடாதீர்கள். அதிலே ஏராளமான வருமானம் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அப்படி இருக்கிறபோது, அரசாங்கத்திற்கு.........

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி வருவாய் வரக்கூடிய வாய்ப்பு இருந்தால், மாண்புமிகு உறுப்பினர்கூட, அந்த ஒப்பந்தத்திலே பங்கேற்கலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த அளவிற்கு எனக்கு வசதி இல்லை. ஆகவே வசதி இருக்கிறவர்கள் போட்டியிடட்டும். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சுற்றுலாத் துறையில் இருக்கக்கூடிய Motel-களைப் பற்றி நான் சொல்லியாக வேண்டும். பொதுவாக நம்முடைய தமிழகத்தில் சுற்றுலாத் துறை மூலமாக நடத்தக்கூடிய அந்த Motel-களில் இருக்ககூடிய Sanitary Conditions சரியில்லை. இருக்கக்கூடிய அறைகளை சரியாக Maintain செய்வதில்லை. தரமான உணவைக் கொடுக்கிறார்களா என்று பார்த்தால் அதுவும் தரமானதாக இல்லை. ஆனால் போடக்கூடிய Bill-ஐ Star Hotel Rate-ல் போட்டுவிடுகிறார்கள். 1997 ஆம் ஆண்டு இங்கே பேசுகின்றபோது, எங்களுடைய கோவை தமிழ் மாநிலக் காங்கிரஸ் மாநாட்டிற்கு நாங்கள் சென்றபோது, அங்கே போய் நான்கூட தங்க நேரிட்டது. ஒரு காபி, ஒரு சாப்பாட்டைக் கொடுத்துவிட்டு 70 ரூபாய்க்கு Bill போடுகிறார்கள், ஆனால் வாயிலே வைக்க முடியவில்லை என்று

குறை சொன்னேன். ஆனால் இந்தத் துறை இன்னும் தன்னைச் சரிப்படுத்திக்கொள்ளவில்லை, எங்கே பார்த்தாலும், Motel-கள் மிகவும் தரமற்றவைகளாக இருந்து கொண்டிருப்பதால் நம்முடைய அமைச்சர் அவர்கள் உடனடியாக இதுகுறித்து கவனத்தைச் செலுத்தி, தரமுள்ள ஒரு சேவை அங்கே நடைபெற ஆவன செய்ய வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) தரமுள்ள சேவை மட்டுமல்ல, உணவுத் தரத்தையும்கூட, அவர்கள் உண்மையாக சரி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நீங்கள் சுற்றுலா அலுவலகத்தை திறக்கலாம். குறிப்பாக, எங்களுடைய மாவட்டத்தில் நிறைய கோயில்கள் இருக்கின்றன. ஆன்மீகத்தில் அதிகமான நாட்டம் செலுத்தக்கூடிய இந்த காலகட்டத்தில், எங்களுடைய மாவட்டத்தில் சுற்றுலா அலுவலகத்தை, வேலூரிலே ஆரம்பிக்க வேண்டும். காரணம், அங்கே ஜலகண்டேஸ்வரர் கோயில் இருக்கிறது. பக்கத்திலே திருத்தணி கோயில் இருக்கிறது. இரத்தினகிரி மற்றும் மேல் மலையில் கோயில்கள் இருக்கின்றன. திருவண்ணாமலை, வெட்டுவானம் போன்ற இடங்களிலே கோயில்கள் இருக்கின்றன. பள்ளிக்கொண்டாவில் ரங்கநாதசுவாமி கோயில் இருக்கிறது, அதேபோல திருப்பதிக்கு செல்ல நிறைய மக்கள் வந்தவண்ணம் இருக்கிறார்கள்.

அடுத்து, வெளிநாட்டவர்கள், C.M.C. ஆஸ்பத்திரிக்கு வருகிறவர்கள், டாக்சிக்கு பணம் கொடுத்து, அடிக்கடி ஏமாந்து போய் கொண்டிருக்கின்றனர். ஆகவே, நீங்கள் 5, 6 பஸ்களை, சுற்றுலாத் துறை மூலமாக, வேலூரை மையமாக வைத்து, இயக்குவீர்கள் என்று சொன்னால், நிச்சயமாக, அரசுக்கு நிறைய வருவாய் கிடைக்கும். இதுகுறித்து நான் ஏற்கெனவே, இந்த மன்றத்தில் இரண்டு ஆண்டுகளாக வற்புறுத்தி வந்தாலும்கூட, ஏனோ அவர்கள் இன்னும் நாட்டத்தைச் செலுத்தவில்லை.

மகாபலிபுரத்திலிருந்து எங்கள் ஊருக்கு அந்த Tourism Officer வருகிறார். அவர் வருவது தெரியவில்லை, போவதும் தெரியவில்லை. அவர் எந்த நாட்டத்தையும் எங்களுடைய மாவட்டத்தின்மேல் செலுத்தாமல் இருக்கிறார். ஆகவே, ஒரு Tourism Office-ஐ எங்களுடைய மாவட்டத்தில், வேலூரில் தொடங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஜலகண்டேஸ்வரர் கோயிலைச் சுற்றி இருக்கக்கூடிய அகழியைத் தூர் எடுத்து, அங்கே படகு விட்டும்கூட வருமானத்தைப் பெருக்கலாம்.



செய்தி, விளம்பரத் துறை பற்றி ஒரு கருத்து. சுதந்திர பாரதி என்ற ஓர் அருமையான படத்தை சூலூர் கலைப்பித்தன் எடுத்து மிகவும் நட்டம் அடைந்திருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை, ஏற்கெனவே Ex. M.L.C. எஸ்.வி. இலட்சுமணன் அவர்களும் மற்றும் தொழிற்சங்கத் தலைவர் செங்காளியப்பன், கோவை மாநகராட்சி மேயர் கோபாலகிருஷ்ணன் போன்றவர்கள் எல்லாம் சந்தித்து, இந்தப் படத்தை குறித்து சொல்லியிருக்கிறார்கள். மிகவும் நட்டம் அடைந்து, மிகவும் பரிதாபத்திற்குரிய நிலைக்குப் போய் இருக்கக்கூடிய கலைப்பித்தனுக்கு, மிக அருமையான கருத்துகளை வைத்து எடுக்கப்பட்டிருக்கக்கூடிய அந்தப் படத்திற்கு நீங்கள் தயவுசெய்து எப்படியாவது, ஒரு மானியத்தைத் தந்து உதவ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்

நாட்டுப் பற்று, மதச் சார்பின்மை, விதவைத் திருமணம் போன்ற கருத்துகளை வலியுறுத்தி சுதந்திர பாரதி என்ற படத்தை எடுத்து இருக்கிறார்கள். அரசு அதைப் பரிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-35*

அடுத்து, கோவை மாவட்டம் வால்பாறையிலே இருக்கக்கூடிய புல்மலை-Grass Hills-என்பது மிக அருமையான இடம். சுவிட்சர்லாந்திற்கு இணையான ஓர் இடம். அதைச் சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, ஊட்டியில் உள்ள தொட்டபெட்டாவிலிருந்து ஊட்டிவரை Cable Car அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். எங்களுடைய மாவட்டத்திலே சோளிங்கரில் ஸ்ரீலட்சுமி நரசிம்மசுவாமி கோயிலைக் கூட Tourist-கள் நிறைய பேர் வந்து பார்த்து சென்று கொண்டு இருக்கிறார்கள். ஆனால், மலை ஏற முடியாமல் பாவம் நிறைய பேர் தத்தளிக்கிறார்கள். இதய நோய் கண்டவர்கள் 4,5 படிகளை ஏறி விட்டு அப்படியே திரும்பி வந்துவிடுகிறார்கள். ஆகவே அங்கே கூட ஒரு Cable Car-ஐ உடனடியாக ஏற்படுத்த வேண்டும். Winch ஏற்படுத்துங்கள், இல்லையென்றால் Cable Car System-ஆவது கொண்டுவாருங்கள். அப்படி வந்தது என்று சொன்னால், பயணிகளை ஈர்க்கக்கூடிய ஒரு நிலை நிச்சயமாக ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்ததாக (மணியடிக்கப்பெற்றது) சீக்கிரம் முடித்துக்கொள்கிறேன்.

பேராவூரணி தொகுதியிலே இருக்கக்கூடிய மனோரா என்ற இடத்தை சுற்றுலா மையமாக அறிவித்திருந்தாலும்கூட, நம்முடைய மாண்புமிகு

முதல்வர் அவர்கள்கூட ஏற்கெனவே புதையல் என்கிற ஒரு படத்திற்கு அந்த இடத்தை சுற்றி, சுற்றித்தான், அந்த இடத்தை மையமாக வைத்துத்தான் கதை எழுதி இருக்கிறார்கள், படத்தை எடுத்திருக்கிறார்கள். ஆனால் அந்த மனோரா ஏனோ விரிவாக்கம் செய்யப்படாமல் அப்படியே இருக்கிறது. அது சரபோஜி மன்னருடையது. அதில் தயவுசெய்து நாட்டம் செலுத்தி, வளப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன்.

நாமக்கல்லிலே, கொல்லிமலையைகூட சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்தில் அமேர்தி சுற்றுலா மையமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, வேலூருக்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய செங்காநத்தம் என்கிற மலையையும் நீங்கள் சுற்றுலா மையமாக அறிவிப்பதுடன், அங்கே Zoo போன்றவைகளை உருவாக்கி, சுற்றுலா மையமாக வளப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வேறு ஏதும் Paper இல்லையா? இல்லை என்றால் பக்கத்திலேயிருந்து வாங்கிக்கொள்ளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையின் மூலமாக இன்னொரு கருத்தைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டிலே வரக்கூடிய சுற்றுலாப் பயணிகள் இங்கே இருக்கக்கூடிய பிச்சைக்காரர்களைப் பார்த்து பயந்து ஓடக்கூடிய ஒரு நிலை எல்லா ஆலயங்களிலேயும் இருந்து கொண்டிருக்கிறது. தயவுசெய்து அது எந்தத் துறையின்கீழ் வருகிறது என்று பார்த்து—ஏனென்றால்—இந்தத் துறை அமைச்சரைக் கேட்டால் என்னுடைய துறையின்கீழ் வராது என்று சொல்வார்கள்—எந்தத் துறையின்கீழ் வருகிறதோ, அந்தத் துறையைச் சார்ந்த அமைச்சரோ அல்லது முதல்வர் அவர்களோகூட பொறுப்பேற்று—அதற்குக் காரணம் காவல் துறையை வைத்துதான் நீங்கள் அவர்களை—அப்புறப்படுத்த முடியும். எந்தக் கோயிலுக்குப் போனாலும் அவர்கள் தொல்லை தாங்க முடியவில்லை.

அதேபோல, சென்னைக் கடற்கரையை எடுத்துக்கொள்வீர்கள் என்று சொன்னால், அங்கே பலரும் காலையிலே மலஜலம் கழிக்கக் கூடிய ஒரு மிக அவலமான நிலையை பார்க்கலாம். அங்கே காலையிலே போய் பார்த்தோம் என்று சொன்னால், பலபேர் Platform-ல் இருந்து கடற்கரை



வரை அப்படியே எல்லா இடங்களிலேயும் படுத்துக்கொண்டு இருக்கிறார்கள். சேறும், சகதியுமாக இருக்கக்கூடிய கோவளத்தை எந்த அளவிற்கு செம்மைப்படுத்தியிருக்கிறோம்? ஆனால், சென்னையை ஒட்டி இருக்கக்கூடிய மெரினா கடற்கரை கேட்பாரற்று மிகவும் மோசமாக இருந்து கொண்டிருக்கும் நிலைமையை மாற்றி, அரசாங்கம் எப்படியாவது கவனம் செலுத்தி மிகவும் அழகுபடுத்த வேண்டும். அங்கே Platform-ல் படுத்துக்கொண்டு இருக்கின்றவர்களை அகற்றி வேறு இடத்திற்கு குறிப்பாக பிச்சைக்காரர்களுக்குக் கட்டியிருக்கிற இடத்திலே கொண்டுபோய் விட்டுவிடலாம். இல்லாவிட்டால் வேறு ஏதாவது ஒரு மாற்று இடத்தை அவர்களுக்குக் கண்டுபிடிக்கலாம். அப்பகுதி மலஜலம் கழிக்கக்கூடிய இடமாக மாறிக் கொண்டிருப்பதை தடுத்து நிறுத்தலாம்.

சென்னையிலே இருக்கக்கூடிய சேட்டு ஒருவர், மெரினா கடற்கரையில் 6 இடங்களிலே குளிர்ந்த நீரைக் கொடுப்பதற்காக கிட்டத்தட்ட 1 கோடி ரூபாய் செலவழிக்கிறேன் என்று முன்வந்தார். அதுகுறித்து நானேகூட முதல்வரிடம் ஒரு மனு கொடுத்தேன். 6 இடங்களை நான் சொன்னேன். முதல்வர் அதை மாநகராட்சிக்கு அனுப்பி விட்டார்கள். மாநகராட்சி அதற்கு அனுமதியே கொடுக்கவில்லை. மாநகராட்சி எந்தத் துறையின்கீழ் வருகிறது என்று பார்த்து அதற்கு ஆவன செய்ய வேண்டும். தனியார் ஒருவர் முதலீடு செய்து, அங்கே குளிர்ந்த தண்ணீரைக் கொடுப்பதற்கு முன்வந்தாலும் அதைக்கூட இந்த அரசாங்கம் பயன்படுத்தத் தவறுகிறது. 1 கோடி ரூபாய் செலவு செய்ய ஒரு நன்கொடையாளர் முன்வருகிறபோது சம்பந்தப்பட்ட துறை அல்லது மாநகராட்சி அதற்கு சரியான பதில் கொடுத்திருந்தால், அங்கே 6 இடங்களில் அந்த நீரைக் கொடுத்திருக்கலாம். அதற்கு வழிவகை செய்யாமல் இருந்துவிட்டார்கள்.

சுற்றுலாத் துறையைப் பொறுத்தமட்டில், நிச்சயமாக கொஞ்சம் அதிகமாகப் பணத்தைச் செலவிடவேண்டும். எப்படி உத்தரப்பிரதேசத்திலே 100 கோடி ஒதுக்கியிருக்கிறார்களோ, அதுபோல் நீங்கள் 100 கோடி ரூபாய் ஒதுக்காவிட்டாலும் பரவாயில்லை, 50 கோடி ரூபாயையாவது ஒதுக்கி, சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோ. மோகனதாசன்.

*முற்பகல் 11-40*

*திரு. கோ. மோகனதாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை, செய்தித் துறை, அச்சுத் துறை மானியக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலுள்ள பூம்புகார் சுற்றுலா மையம் இப்போது சிறப்புவாய்ந்த பகுதியாக இருக்கிறது. நம்முடைய கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட அந்த பூம்புகார் சுற்றுலாப் பகுதியை சென்றமுறை ஆட்சியிலே இருந்தவர்கள், கலைஞர் அவர்கள் ஆரம்பித்தார்கள் என்ற காரணத்திற்காகவே வீணடித்து விட்டார்கள். மீண்டும் நம்முடைய கலைஞர் அவர்கள் முதலமைச்சரான பிறகுதான், இந்த சுற்றுலாப் பகுதி மீண்டும் புத்துயிர் பெற்றிருக்கிறது. அதுபோல் அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் எல்லாம் பாராட்டுகின்ற அளவிற்கு சிலப்பதிகார கலைக் கூடம் மற்றும் ஏராளமான பணிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த சுற்றுலாப் பகுதியிலே போதுமான அதிகாரிகள் இல்லாமல் இருந்த காரணத்தினாலே, கொஞ்சம் கவனிப்பாரற்ற நிலையிலே இருந்தது. இதை அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச்சொல்லி, ரூ. 35 இலட்சம் செலவில் அங்கே பேருந்து நிலையமும், சுற்றுச்சுவர் கட்டுவதற்காக முதலில் ரூ. 5 இலட்சம் வழங்கி, அந்தச் சுற்றுச்சுவர் பூர்த்தி செய்யப்பட்டு, அதற்குப் பிறகு ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டு, அதுவும் இப்போது முக்கால்பங்கு வேலைகள் முடிவுற்ற நிலையில் இருக்கின்றன.

கடற்கரை ஓரமாக இலஞ்சிமன்றம் இருக்கிறது. அந்த இலஞ்சிமன்றம் இப்போது பாதுகாக்கப்பட்டு, அதன் ஓரமாக ரூ.86 இலட்சம் செலவில் கடல் அரிப்பைத் தடுப்பதற்காக வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேபோல இன்னும் பாக்கியிருக்கின்ற சில பகுதிகளிலும் அந்தக் கடல் அரிப்பைத் தடுப்பதற்கு தடுப்புச் சுவர் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இலஞ்சிமன்றத்திலிருந்து காவிரிக் கரை வரையில், சாலை அமைத்து, அதனுடைய இரண்டு பக்கமும் Sodium light அமைத்து, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையிலே அங்கே உட்காருவதற்கு, Cement bench அமைத்துத்தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதியில் வெளியிலிருந்து வருகின்ற பயணிகள் சரியான முறையில் உணவு கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். எனவே, அங்கே உணவு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், அங்கே குழந்தைகள் விளையாடுவதற்காக இரயில்கள், ராட்டினம் போன்றவை



எல்லாம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். இந்திர விழாவின்போது அமைச்சர் அங்கே நேரிலே பார்த்து வந்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் செய்து கொடுத்தால், இன்னும் சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்கு வசதியாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, என்னுடைய தொகுதியிலே இருக்கிற தரங்கம்பாடியிலே சுற்றுலா ஓட்டல் மற்றும் தங்கும் விடுதி கட்டப்பட்டும், அவை இன்னும் செயல்படாமல் இருக்கின்றன. கட்டட வேலைகள் எல்லாம் முடிந்துவிட்டன. விரைவில் அவை செயல்படுகின்ற வகையிலே ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தரங்கம்பாடியில் நம்முடைய அரசு வந்த பிறகு, ரூ. 55 இலட்சம் செலவில் கடல் அரிப்பைத் தடுப்பதற்கு தடுப்புச் சுவர் எழுப்பியுள்ளது. மீதியிருக்கின்ற அந்தப் பகுதியிலும் கடல் அரிப்பைத் தடுத்தால் அங்கே இருக்கின்ற டேனிஷ்கோட்டை போன்றவைகளைப் பாதுகாக்க முடியும். எனவே அதையும் சுற்றுலாத் துறையின் மூலமாகச் செய்துகொடுக்குமாறு நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய செய்தித் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், காந்தியாரைப் பாதுகாத்த தில்லையாடி வள்ளியம்மை நினைவாக நம்முடைய முதலமைச்சர், டாக்டர் கலைஞர் அவர்கள்தான் அங்கே நினைவுச்சின்னம் எழுப்பி, தில்லையாடி வள்ளியம்மை நகரில் நாகப்ப நகர், நாராயணசாமி நகர் என்ற நகர்கள் எல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன. முன்னாலே காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்தில்கூட இதுபற்றி நினைத்துப் பார்க்கவில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோதுகூட அந்தப் பகுதியை நினைத்துப் பார்க்கவில்லை. ஆனால் கலைஞர் அவர்கள்தான் தில்லையாடி வள்ளியம்மைக்கு நினைவுச்சின்னம் எழுப்பி, அந்தப் பகுதியிலே நாகப்ப நகரையும், நாராயணசாமி நகரையும் அமைத்தார்கள். அப்போது அமைக்கப்பட்ட அந்த வீடுகள் எல்லாம் இப்போது பழுது அடைந்திருக்கின்றன. அந்த வீடுகள் எல்லாம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைத்துக் கொடுத்த வீடுகள் என்ற காரணத்தினாலே, அவற்றைத் திரும்பவும் பழுதுபார்த்து, சரிசெய்து கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் பகுதியிலேதான் பக்தர்கள் விரும்பி வருகின்ற ராகு, கேது ஸ்தலங்கள் எல்லாம் இருக்கின்றன. திருவெண்காட்டிலே அவை இருக்கின்றன. வைத்தீஸ்வரன் கோயில், நாகநாதன் கோயில் போன்ற கோயில்கள் எல்லாம் அங்கேதான் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் திருக்கடையூரும் என்னுடைய தொகுதியில்தான்

இருக்கிறது. திருக்கடையூருக்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கிறார்கள். எனவே சுற்றுலாத் துறை மூலமாக அங்கேயுள்ள அந்தக் கோயில்களை எல்லாம் இணைத்து ஒரு பேருந்து விடுவார்களானால் வெளியில் இருந்து வருகின்ற பயணிகள் எல்லாம் அங்கு சென்று வருவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-45*

அடுத்து, இந்தத் துறைக்குச் சம்பந்தம் இல்லாததாக இருந்தாலும் ஒன்றிரண்டு கருத்துகளைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். மேலையூர் என்ற இடத்தில் ராசாங்குளம் என்ற பகுதியில் காவிரி ஆற்றில் செம்பனார்கோயில் ஒன்றியத்தையும், சீர்காழி ஒன்றியத்தையும் இணைக்கின்ற வகையில் கிராமப்புற சாலை அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக ஒரு பாலம் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, விளாகம் என்ற ஊரிலுள்ள படுகை என்ற இடத்தில் நண்டலாறில், திருவாரூர் மாவட்டத்தையும், நாகை மாவட்டத்தையும் இணைக்கின்ற வகையிலே கிராமப்புற சாலை அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக ஒரு பாலம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு தந்த வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இரண்டு அமைச்சர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கைகளின்மீது சில கருத்துகளைத் தெரிவிக்கவும், நான் முன்மொழிந்திருக்கின்ற வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்தவும் தாங்கள் வழங்கிய வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

செய்தி-மக்கள் தொடர்பு துறையின் மூலம் பல்வேறு நலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பிலே கவனம் செலுத்துகிறபோது பல்வேறு பிரிவுகளுக்கு மேலாக முதலிடம் வகிப்பது திரைப்படத் துறைதான். அதற்குத்தான் அதிகமான முக்கியத்துவம் கொடுத்திருப்பதை நாம் அறிகிறோம். குறைந்த் பொருட் செலவில், தரமாக தயாரிக்கப்படுகிற திரைப்படங்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவதும், முதல்



4 வாரங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளிப்பதுமான நடவடிக்கைகள் இந்தத் துறையின் மூலமாக மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் அப்படித் திரைப்படத் தயாரிப்பாளர்களை ஊக்குவிப்பதற்காக அரசு ஊக்கத்தொகை வழங்குகிறபோது ஒரு கருத்தை நினைவில் கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன். சமூக சீர்திருத்தக் கருத்துகளை வழங்குவதற்கு எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளை மனதில் கொண்டு, இப்படிக் குறைந்த பொருட்செலவில் தயாரிக்கப்படுகிற திரைப்படங்களில் மூடநம்பிக்கைகள் ஊக்குவிக்கப்படுகிற அளவுக்கு கருத்துகள் இருக்குமாயின் அவை குறித்து அரசு பரிசீலித்து அப்படிப்பட்ட கருத்துகளை ஊக்கப்படுத்தக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட படங்கள்கூட சில நேரங்களிலே இதிலே இடம் பெற்றுவிடுகின்றன என்ற கருத்தும் தெரிவிக்கப்படுகிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

அரசு செய்கிற காரியங்கள் சின்னத் திரையின் மூலமாக, விளம்பரப்படமாக பல்வேறு தனியார் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படுகின்றன. ஆனால் அப்படி ஒளிபரப்பப்படுகின்ற அரசின் சாதனைத் திட்டங்கள் எல்லாம் அரசுக்குத் தொடர்புடைய பிரச்சார் பாரதியின்கீழ் இயங்கக்கூடிய சென்னை தொலைக்காட்சி நிலையத்தின் மூலமாகவோ அல்லது வேறு வகையிலோ தூர்தர்ஷன் வழியாகவோ ஒளிபரப்பப்படுவதில்லை என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்து, இந்தத் துறையை வலுப்படுத்துவதற்காக மாவட்ட அளவில் செயல்படக்கூடிய செய்தி தொடர்ப்புத் துறையின் P.R.O. அலுவலகங்களை வலுப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. அங்கே பணியாற்றக்கூடிய ஊழியர்கள், பணியாளர்கள் 3 ஆண்டுகள் தொடர்ந்து பணி புரிந்ததற்குப் பிறகுதான் நிரந்தரப்படுத்தப்படுவார்கள் என்கிற ஒரு நிலை இருக்கிறது. அதற்கு மேலாக பணியாற்றி வந்தால்தான் அந்தப் பணியிடமேகூட உருவாக்கப்பட முடியும் என்கிற நிலைமை இருக்கிறது. இப்போதைய நிலவரத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறை என்பது பல்வேறு வகைகளிலும் முக்கியத்துவம் அடைந்துவருவதை கருத்தில்கொண்டு மாவட்ட அளவில் செயல்படக்கூடிய மக்கள் தொடர்ப்புத் துறை அலுவலகங்களை வலுப்படுத்தி அண்மையிலே அரசு வெளியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டத்தை செயல்படுத்துவதற்கு இந்தத் துறையைப் பொறுப்பாக்க வேண்டும் என்று நான் கருதுகின்றேன். அப்பொழுதுதான் எல்லா துறைகளிலும் இருக்கக்கூடிய விவரங்களைப் பெற்று உடனே

உரியவர்களுக்கு வழங்குகிற பணி சிரமம் இன்றி நடைபெறும் என்று நான் கருதுகிறேன். எனவே, தகவல் பெறும் உரிமைச் சட்டம் என்பதற்கு விதிமுறைகள் வகுக்கப்பட்டு, அதைச் செயலாற்றுகிற பொறுப்பை இந்தத் துறைக்கு அளிக்க வேண்டுமென்ற கருத்தை நான் வலியுறுத்த விரும்புகின்றேன்.

*முற்பகல் 11-50*

அடுத்து, இந்தத் துறையின் மூலமாக நாட்டுக்கு உழைத்த நல்லவர்களுக்கும் விடுதலைக்குப் போராடிய வீரர்களுக்கும் நினைவகங்கள் அமைத்து அவற்றைப் பராமரித்து வருகிற மாபெரும் பணி மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. வான்புகழ் கொண்ட வள்ளுவருக்கு நீங்காப்புகழ் தேடிடும் வகையில் வள்ளுவர் சிலை அமைத்திருப்பது அண்மையில் நடைபெற்ற சிறப்பான நிகழ்ச்சியாகும். இந்த நிகழ்ச்சியைச் செய்த அரசு, மேலும் பல துறைகளில் கவனம் செலுத்த வேண்டிய நிலையிலே இருக்கிறது. உதாரணமாக நான் பலமுறை இந்த மாமன்றத்திலே வலியுறுத்தி வருகின்றேன். கடந்த நூற்றாண்டின், 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாட்டின் விடுதலைக்காகப் போராடிய மாபெரும் வீரர்கள், கப்பலோட்டியத் தமிழன் வ.உ.சி.-யும் அவரது நெருங்கிய சகா எட்டயபுரத்துக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியும் ஆவார்கள். இவர்களோடு இணைந்து நின்று போராடிய மாபெரும் தீரர் சுப்பிரமணிய சிவா அவர்கள். வத்தலக்குண்டிலே அவர் பிறந்திருந்தாலும், தமிழ்நாடு முழுவதும், இந்திய நாடு முழுவதும் சுற்றிச்சுற்றிப் பணியாற்றி விடுதலை வேட்கையை இந்திய மக்களிடத்திலே உருவாக்கியவர் மாபெரும் தீரர் தியாகி சுப்பிரமணிய சிவா அவர்கள். சிவாவினுடைய இறுதிக் காலத்தில், வெள்ளைக்காரன் காலத்தில் சிறைக் கொடுமைகளால் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டு உருக்குலைந்துபோன அவருடைய உடலைத் தாங்கிக் கொண்டு, உள்ளத்திலே உறுதிபெற்று, இளைஞர்களை ஒரு மனிதாபிமான சிந்தனையோடு, மாபெரும் வீரர்களாக உருவாக்குவதற்காக தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியில் பாரத மாதாவின் பெயரால் ஒரு நினைவுப் பாசறை அமைக்க வேண்டுமென்ற, ஒரு கோயில் அமைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு அங்கே தங்கினார்கள். அதற்காக அவரே சிரமப்பட்டு சேர்த்த தொகையைக் கொண்டு 5 ஏக்கர் பூமியை ரூபாய் 100 சுத்தக் கிரயத்திற்கு அங்கே வாங்கி வைத்திருக்கிறார்கள். பாப்பாரப்பட்டியிலே உள்ள அந்த 5 ஏக்கர் பூமியில் அரசு மருத்துவமனை அமைப்பதற்காகக் கொஞ்சம் இடத்தை எடுத்துக்கொண்டார்கள். பிறகு, வேளாண்மைப் படிப்பு மாணவர்களின் செய்முறைப் பயிற்சிக் களம்



அமைப்பதற்காக ஒரு குறிப்பிட்ட இடத்தினை, அதாவது 2 ½ ஏக்கர் அளவுக்கு இடத்தை எடுத்துக்கொண்டார்கள். மீதம் இருக்கிற இடம் 2 ½ ஏக்கர் அந்த இடத்தை வாங்கிய தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, அவருடைய நினைவாக, அங்கே ஒரு நல்ல நினைவு மண்டபம் ஏற்படுத்த வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும்கூட நேரிலே சந்தித்து இந்த வேண்டுகோளை முறையீடாகவும் சமர்ப்பித்திருக்கின்றேன். நிச்சயமாக அரசு இந்த ஆண்டு தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களுடைய நோக்கத்தை நிறைவேற்றக்கூடிய வகையில், அவர் எந்த நோக்கத்திற்காக இளைஞர்களை எல்லா மத உணர்வுகளையும் தாண்டி தேசத்தை நேசிப்பவர்களாக உருவாக்க வேண்டுமென்று கருதினார்களோ அந்த நிலையைப் போற்றுகிற வகையில் அவருக்கு நல்லமுறையில் ஒரு நினைவகம் அங்கே அமைக்க வேண்டுமென்ற கருத்தை நான் வலியுறுத்துகின்றேன். இப்படிக் கூறுகிறபோது, அங்கே ஒரு சர்க்கரை ஆலைக்கு தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களுடைய பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய அலுவலகத்திற்குச் செல்கிற வழிக்கு, வீதிக்குப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. நான் அதையெல்லாம் மறுக்கவில்லை. ஆனால், அவரே சொந்த சுத்த கிரயத்தில் வாங்கிய நிலத்தை அரசுப் பணிகளுக்காக எடுத்துக்கொள்கிறபோது அவருக்கு ஒரு நினைவு மண்டபம் அமைப்பது மிக மிக அவசியம் என்ற கருத்தை நான் வலியுறுத்த விரும்புகின்றேன். அந்தத் கருத்திற்கு இந்த அரசு இசைவு தெரிவிக்கும் என்று நம்புகின்றேன். எதிர்பார்க்கின்றேன்.

அடுத்து, செய்தியாளர்களுக்கு பல சலுகைகளை இந்த அரசு அறிவித்திருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். இலவச பேருந்து பயண அனுமதி செய்தியாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. நான் ஒரு செய்தியாளரிடத்திலே இலவச பேருந்துப் பயணம் எப்படி மேற்கொள்ளப்படுகிறது என்கிற விவரத்தைக் கேட்டேன். ஒரே செய்தியாளர் 10 அட்டைகளை வைத்திருக்கின்றார். ஒவ்வொரு போக்குவரத்துக் கழகப் பேருந்தில் செல்கிறபோதும் அந்தந்த போக்குவரத்துக் கழகத்திற்குரிய அட்டையை எடுத்துக் காண்பிக்க வேண்டிய நிலை செய்தியாளர்களுக்கு இருக்கிறது. இதை மாற்றி செய்தியாளர்கள் என்று அறிவித்ததற்குப் பிறகு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் எந்தப் பேருந்துகளிலும், தமிழ்நாட்டிற்குள், எத்தனை முறை வேண்டுமானாலும் பயணம் செய்வதற்கு வாய்ப்பளிக்கின்ற வகையிலே அதை மாற்றியமைக்க வேண்டும். அப்படி மாற்றியமைத்தாலும்கூட தினசரி

பத்திரிகைகளில் பணியாற்றக்கூடிய செய்தியாளர்கள் ஏறத்தாழ 464 பேர்தான் அந்த அடையாள அட்டை பெறக்கூடிய தகுதியுடையவர்களாக இருக்கிறார்கள். அதுபோல, பருவ இதழ்களில் செயலாற்றுகிற நிருபர்கள், செய்தியாளர்கள் 151 பேர் மட்டுமே பயன் பெறக்கூடியவர்களாக இருக்கிறார்கள். நம்முடைய நாட்டிலே இப்போது இருக்கக்கூடிய தினசரி பத்திரிகைகளையும், பருவ இதழ்களையும் கணக்கில் கொள்கிறபோது, இந்த எண்ணிக்கை மிகச் சொற்பமான அளவிலேதான் இருப்பதாக நான் கருதுகிறேன். மாவட்ட அளவிலே பணியாற்றக்கூடிய செய்தியாளர்களுக்கு இப்படிப்பட்ட சலுகைகள் உண்டா என்று எனக்குத் தெரியவில்லை. அப்படிச் சலுகைகள் இல்லாமல் இருக்குமானால், மாவட்ட அளவில் பணியாற்றக்கூடிய செய்தியாளர்களுக்கும் போக்குவரத்துக் கழகங்களில் வழங்கும் சலுகைகள் மட்டும் அல்லாமல், செய்தியாளர்களுக்கு வழங்கக்கூடிய அனைத்துச் சலுகைகளும் எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய அளவிற்கு இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-55*

தினசரி பத்திரிகைகளிலோ அல்லது பருவ இதழ்களிலோ பணியாற்றாமல் தனிப்பட்ட முறையிலே தமிழ் ஆய்வுப் பணி செய்கின்ற ஆய்வு எழுத்தாளர்கள், இலக்கிய மேம்பாட்டிற்காக உழைக்கின்ற எழுத்தாளர்கள், கூலி முறை எழுத்தாளர்கள் என்ற அடிப்படையிலே பணியாற்றக்கூடிய எழுத்தாளர்களுக்கெல்லாம் பல சலுகைகளை வழங்கமுடியாத நிலை இருக்கிறது. அதுகுறித்த விவரங்களையும், எழுத்துப் பணியில் ஈடுபட்டிருக்கின்ற தமிழ் ஆர்வலர்கள் குறித்த விவரங்களையும் அரசு சேகரித்து அவர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கு வழங்குவதைப் போன்ற சலுகைகளை வழங்குவதற்கு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

பத்திரிகையாளர்களுக்கு வழங்கக்கூடிய குடும்ப நல நிதி 20 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால்தான் கிடைக்கும் என்று அறிவித்திருக்கிறார்கள். 20 ஆண்டுகள் என்பது ஏறத்தாழ ஒரு தலைமுறையை நிறைவு செய்யக்கூடிய காலம். அதைக் குறைப்பதற்கு அரசு முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். குடும்ப நல நிதியைப் பெறுபவர்களுக்கு எந்த அடிப்படையிலே விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன என்றால் அதில் சில நெருக்கடிகள் இருக்கின்றன. எனவே நான் இங்கே அரசுக்கு ஒரு கருத்தாக தெரிவிக்க விரும்புவது, குடும்ப நல நிதி பெறுகின்ற பத்திரிகையாளர்கள் எப்படித் தேர்வு செய்யப்பட வேண்டும் என்றால்,



இப்போது கட்டடத் தொழிலாளர்கள் எப்படி வாரியத்திலே உறுப்பினர்களாக்கப்படுகிறார்கள் என்றால், கட்டடத் தொழிலாளர்கள் எந்தத் தொழிற்சங்கத்திலே இருக்கிறார்கள் என்று கண்டறிந்து, அந்தத் தொழிற்சங்கம் வழங்குகின்ற அனுமதியை, அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு, அந்த நல நிதி பெறுகிற உரிமையைப் பெறுகிறார்கள். அதுபோல, பத்திரிகையாளர்களின் சங்கம், Press Club போன்ற அமைப்புகள் வழங்கக்கூடிய அனுமதியைப் பெற்றுக்கொண்டு குடும்ப நல நிதி பெறுகின்ற அளவுக்கு விதிமுறைகள் எல்லாம் எளிமையாக்கப்பட்டு, அனைத்துப் பத்திரிகையாளர்களும் பயன்பெறத்தக்க வகையிலே அதை மாற்றியமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சுற்றுலாத் துறைப்பற்றி ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். சுற்றுலாத் துறையிலே பல்வேறு இடங்களில் நல்ல உணவகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. விடுதிகள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் இந்த நல்ல உணவகங்களையும் விடுதிகளையும் ஏழையெளிய மக்கள் பயன்படுத்த முடியாது. அதனுடைய கட்டணத்தைப் பார்க்கின்றபோது வியப்புக்காளாவார்கள். எனவே, சுற்றுலா மையங்களில் ஏழையெளிய, நடுத்தர மக்களும் பயன்பெறக்கூடிய அளவுக்கு, நியாயமான கட்டணத்திலே தங்குகிற விடுதி கிடைக்கின்ற அளவுக்கு, சுற்றுலாத் துறை கவனம் செலுத்த வேண்டும்.

நான் சென்ற ஆண்டிலேயேக் கேட்டேன். Motels என்று அழைக்கக்கூடிய வழியோர உணவகத்தை பெருந்துறை தொகுதியிலே, ஒரு குறிப்பிட்ட இடத்திலே தேசிய நெடுஞ்சாலையாக இருக்கின்ற காரணத்தினாலே, நல்லமுறையிலே உணவு விடுதியில் வியாபாரம் நடைபெறும் இடம் என்ற காரணத்தினாலே சுற்றுலாத் துறை அதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவர் அது பொருத்தமான இடமில்லை என்று அறிக்கை அனுப்பிவிட்டார்கள். நான் மறுபடியும் அதை பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். அப்படிப்பட்ட ஒரு நல்ல உணவகத்தை தேசிய நெடுஞ்சாலையில், பெருந்துறை தொகுதிக்குள் அமைத்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கோவை மாநகரமாகிவிட்டது. ஒரு செயல்படக்கூடிய முக்கிய மாநகரமாகிவிட்டது. அங்கே பணியாற்றக்கூடிய பத்திரிகையாளர்கள் கோவையிலே Press Club அமைப்பதற்காக இடம் வேண்டுமென்று கோவை மாநகராட்சிக்கு முறையீடு செய்திருக்கிறார்கள். அந்த மாநகராட்சியும் அந்த முறையீட்டை ஏற்றுக்கொண்டு அரசுக்குத் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறது. அந்தத் தீர்மானம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அந்தத் தீர்மானத்தையும் உடனடியாக நிறைவேற்றித் தருகின்ற வகையில் கோவை பத்திரிகையாளர்களுக்கு நிலம் வழங்கிட வேண்டும், அங்கீகரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்டக் கருத்துகளை இந்த அரசு நிச்சயமாக கருத்திலே கொண்டு நிறைவேற்ற வேண்டும் என்று நான் வலியுறுத்தி, இந்த அளவிற்கு கருத்தைத் தெரிவிக்க வாய்ப்பளித்த தங்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்து, உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. துரை. சந்திரசேகரன்.

*திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் நிதியாண்டின் செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கைகள்மீது பேசுகின்ற வாய்ப்பை வழங்கியத் தங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் மிகச் சிறப்பான ஒரு துறையாக இப்போது விளங்கி வருவதை எல்லோரும் அறிவார்கள். குறிப்பாக, இந்தியத் திருநாட்டில், நாட்டின் மொத்த வருவாயில் மூன்றாம் இடம் வகிக்கின்றது இந்தியச் சுற்றுலாத் துறை. அதைப்போல நம்முடைய தமிழகத்தில் தமிழ்நாடு சுற்றுலாத் துறையும் இந்த 4 ஆண்டு காலத்தில் எடுத்துக்கொண்ட முயற்சிகள் காரணமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு சட்டம் ஒழுங்கை பேணிக் காத்து, சாதாரண பாமரர்களும் எல்லா மதத்தினரும், எல்லா கிராமங்களுக்கும், எல்லா பகுதிகளுக்கும் சென்று வருகின்ற ஒரு நிலையை உருவாக்கியதன் காரணமாக சுற்றுலாத் துறை பற்றிய புள்ளிவிவரத்தை நான் இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். மிகப் பெரிய அளவில் வெளிநாடு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் இப்போது பங்கேற்கின்ற வாய்ப்பை உருவாக்கி இருப்பது உள்ளபடியே பாராட்டுக்குரிய ஒன்று. குறிப்பாக 1995 ஆம் ஆண்டு வருகை தந்த



உள்நாட்டினர்களுடைய எண்ணிக்கை ஒரு கோடியே 72 இலட்சத்து 14 ஆயிரத்து 973. 1999 ஆம் ஆண்டில் உள்நாட்டுப் பயணிகள் எண்ணிக்கை 2 கோடியே 11 இலட்சத்து 36 ஆயிரத்து 941 ஆக உயர்ந்திருக்கின்றது. கிட்டதட்ட ஒரு கோடி உள்நாட்டுப் பயணிகள் நமது தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அதிகமாக வந்து சென்றிருக்கிறார்கள்.

நண்பகல் 12-00

1995-ஆம் ஆண்டில் 5 இலட்சத்து 86 ஆயிரத்து 751 வெளிநாட்டவர்கள் வந்து சென்றிருக்கிறார்கள். 1999 ஆம் ஆணடில் 7 இலட்சத்து 22 ஆயிரத்து 442 வெளிநாட்டவர்கள் நமது தமிழகத்திற்கு வந்து சென்றிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் பிறந்த ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களும், தந்தை பெரியார் அவர்களும் பல்வேறு கால கட்டங்களில் பொதுக் கூட்டங்களில் பங்கேற்ற காரணத்தால் தஞ்சை மாவட்டம் மத நல்லிணக்கத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக இப்போதும் விளங்கிக்கொண்டு வருவதை எல்லோரும் அறிவீர்கள். நாகூர் தர்காவிற்குச் செல்கின்றவர்கள் அன்னை வேளாங்கன்னி ஆலயத்திற்குச் செல்வதும், அந்த இரண்டு ஆலயங்களுக்கும் சென்றுவிட்டு இந்துமத கோவிலுக்கும் சென்று வருகின்றதுமான ஒரு நிலைமை தஞ்சையில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. அதற்கெல்லாம் காரணம் நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் அந்த மண்ணில் பிறந்து 14 வயது முதற்கொண்டு தொடர்ந்து அந்தப் பகுதியில் பல்வேறு கிராமங்களில் எடுத்து வைத்த சீர்திருத்தக் கருத்துகள்தான், இப்போது மத நல்லிணக்கத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் ஞானசேகரன் அவர்கள் மனோராவைப் புதுப்பிக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த இடத்தில் புதையல் திரைப்படக் கதையை எழுதியவர்கள், மனோரா இருக்கின்ற இடத்தை நன்றாக உணர்ந்தவர்கள், அதனால்தான் ஆட்சிப் பொறுப்பேற்று அந்த மனோரா புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது சென்று பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.

சமீபத்திலே நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தமது துறையின் மூலம் அந்தக் கிராமத்திற்கு சாலை வசதிக்கான நிதியைத் தருவதாக அறிவித்தார்கள். நம்முடைய தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அடிக்கடி அந்தக் கிராமத்திற்குச் சென்று மனோராவைப் புதுப்பிக்கும் பணியைப் பார்த்திருக்கிறார்கள். சுற்றுலாத் துறையினுடைய அதிகாரிகள் அடிக்கடி தஞ்சை மாவட்டத்திற்கு வருகை தந்து மனோரா இடத்தைப் புதுப்பித்திருக்கிறார்கள். ஒரு கோடி ரூபாய் அளவில் அந்தக் கடற்கரையைச் சீர்படுத்துவதற்கு துறையின் சார்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேபோல, தஞ்சை மாவட்டத்தில் திருவையாறு தொகுதியில் கல்லணை இப்போது வளர்ந்து வருகின்ற, சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்ற ஒரு தளமாக விளங்கி வருவதை எல்லோரும் அறிவீர்கள். அடிப்படை வசதிகள் சற்றுக் குறைவாக இருந்தாலும், இப்போது அதிக அளவில் பயணிகள் வருகின்ற அந்தக் கல்லணையில் நவீனப் பூங்கா அமைப்பதுடன் நமது சுற்றுலாத் துறையின் மூலமாக ஒரு தங்கும் விடுதியும் அமைகக வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கிராமத்தினுடைய அடிப்படை வசதிகளைப் பெருக்குகின்ற வகையில் Global Village-ஆக கல்லணையை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுககொள்கிறேன் காரணம், திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களிலிருந்து ஏராளமான உள்ளூர் சுற்றுலாப் பயணிகள், அங்கு வருகின்றனர். அடிப்படை வசதிகளைப் பெருக்குகின்ற வகையில் அந்தக் கிராமத்தை Global Village-ஆக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்கின்றேன்.

தஞ்சை நகரத்தையொட்டி இப்போது இயற்கையாகவே பொதுமக்களால் அதிகமாகக் கவரப்படுகின்ற ஓர் இடமாக தென்பரம்பூர் என்கிற கிராமம் விளங்கி வருகின்றது. காரணம், அந்த இடத்தில் வெண்ணாறு, வெட்டாறு, வடவாறு என்று மூன்று ஆறுகளும் பிரிகின்றன. திருச்சியிலே முக்கொம்பு இருப்பதைப்போல, இப்போது அதிக அளவில் நகரங்களிலிருந்து இங்கே ஓய்விற்கு விடுமுறைக் காலங்களில் செல்கின்ற நிலை உருவாகி வருகிறது. எனவே பள்ளி அக்கிரகாரத்திலேயிருந்து அந்தச் சாலையானது வெண்ணாற்று கரையில் நமது ஆட்சியில் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டு இருக்கிறது. ஒரு தனியார் நிறுவனம் Resort ஒன்றை அங்கே கட்டியிருக்கிறது. மிக அதிக அளவிலே அந்த Resort-க்கு மக்கள்



வருகை தருகிறார்கள். எனவே நமது சுற்றுலாத் துறையின் மூலம் தென்பரம்பூர் கிராமத்தில் அடிப்படை வசதிகளைப் பெருக்கி, உள்ளூர் சுற்றுலாப் பயணிகளின் வருகையை மேம்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தஞ்சை மாவட்டத்தில் அமைந்திருக்கின்ற நவக்கிரக ஆலயங்களுக்கு ஏராளமான பயணிகள் வருகின்றனர். குறிப்பாக வெளிமாநிலத்தவர்கள் அதிகமாக வருகின்றார்கள். அப்படி வருகின்றபோது அவர்களுக்கு சென்னையிலிருந்து வர சுற்றுலாத் துறை மூலமாக பேருந்து வசதி செய்யப்பட்டு இருப்பது உள்ளபடியே வரவேற்கத்தக்க ஒன்று. இப்போது பெரும்பான்மையாக நவக்கிரக ஆலயங்களுக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற வகையில் சுற்றுலாத் துறை அந்தப் பேருந்துகளை அருமையாக இயக்கி வருகிறது. ஆனால், வட மாவட்டங்களிலிருந்தும், தென் மாவட்டங்களிலிருந்தும் வருகின்றவர்கள் தஞ்சையிலேயிருந்து ஒவ்வொரு பேருந்தாகப் பிடித்து அந்த இடங்களுக்குச் செல்கின்ற ஒரு நிலை உருவாகியிருக்கின்றது. எனவே, தஞ்சாவூரிலேயிருந்து சுற்றுலாத் துறையின் சார்பில் ஒரு பேருந்து நவக்கிரக ஆலயங்களுக்குச் சென்று வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். அந்த நவக்கிரகங்களுள் ஒன்றான சந்திரன் ஆலயம் திங்களூரில் பிரசித்தி பெற்று உள்ளது. ஒரு நாளைக்கு 40 பேருந்துகளில் பொதுமக்கள் வருகிறார்கள். கிட்டத்தட்ட 30, 40 வேன்களில் வருகிறார்கள். திங்களூர் கிராமம் சிறிய கிராமம். திருவையாறுக்கு அருகே இருக்கிறது. அந்தக் கிராமத்தின் சாலை ஒன்றியச் சாலையாக இருந்தது. நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடம் எடுத்துக்கூறி, அவர்களும் அதற்குச் சிறப்பு நிதியைத் தந்து கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் பணிகள் இப்போது தொடங்கி நடைபெற்று வருகின்றன. அந்தக் கிராமத்திற்கு ஏராளமானவர்கள் வருவதையொட்டி, அடிப்படை வசதிகளைப் பெருக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-05*

திருக்காட்டுப்பள்ளி அருகே அலமேலுபுரம்பூண்டி என்ற கிராமத்தில் மாதா கோயில் ஒன்று இப்போது பிரசித்தி பெற்றிருக்கிறது. வேளாங்கன்னிக்கு வருகிற கூட்டம்போல் அந்த மதத்தைச் சேர்ந்தவர்களும் இந்து மதம் மற்ற மதங்களைச் சேர்ந்தவர்களும் அந்தக் கிராமத்திற்கு இப்போது வந்து செல்கிறார்கள். அங்கே சாலை வசதி இல்லை. பேருந்து வசதி இல்லை. அதற்குரிய முயற்சிகளை துறை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை பெரிய கோயிலுக்கு பல்வேறு மாநிலங்களிலிருந்தும், நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பள்ளி மாணவர்களும், கல்லூரி மாணவர்களும், பல வெளிநாட்டவர்களும் வந்து செல்கிறார்கள். அங்குள்ள கட்டடக் கலையை ரசிக்கிறார்கள். நமது சுற்றுலாத் துறையின் மூலம் அங்கே பல்வேறு வசதிகளைச் செய்து கொடுத்திருந்தாலும், ஏராளமான பேருந்துகள், 40-50 பேருந்துகள் வருவதால், அந்தப் பிரதான சாலையில் பேருந்துகள் வந்து நிற்க முடியாத சூழ்நிலை இப்போது இருந்து வருகிறது. ஆலயத்திற்குள்ளே பேருந்துகள் நிற்க மத்திய தொல்பொருள் இலாகாவினர் அனுமதி தரமாட்டார்கள். எனவே, அந்த ஆலயத்திற்கு எதிரே அரசு பொது மருத்துவமனையில் இடம் இருக்கிறது. இராஜா மிராசுதார் மருத்துவமனையிலிருந்து பல்வேறு பிரிவுகள் இப்போது தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருக்கிறபடியால் அங்கே ஏராளமான இடம் இருக்கிறது. எனவே, அந்தச் சுற்றுச்சுவரை எடுத்துவிட்டு அங்கே பேருந்துகளை நிறுத்துவதற்கு வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும். அதுபோல், வெளியூர்களிலிருந்து வருகின்ற பேருந்துகளை நிறுத்தவும் ஏற்பாடு செய்வதுடன் அங்கே நவீன குளியலறை, கழிப்பறை வசதிகளையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் முத்தான திட்டமான பூமாலை வணிக மையத் திட்டம் பல்வேறு மாவட்டங்களில் அமைய இருக்கிறது. வெளிநாட்டவரும் வெளிமாநிலத்தவரும் மிக அதிகமாக வந்து செல்லும் தஞ்சை பெரிய கோவிலுக்கு எதிரே, பேருந்து நிலையத்தின் அருகிலே தஞ்சையில் அமைய இருக்கிற பூமாலை வணிக மையத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை பெரிய கோயிலை உருவாக்கிய இராஜராஜன் சதய விழாவை ஆண்டுதோறும் சிறப்பாக நடத்தி வருகிறோம், என்றாலும் அரசினுடைய உதவி இருந்தால்தான் இன்னும் சிறப்பாக நடத்த முடியும். எனவே தமிழக அரசு சிறப்பு நிதி ஒதுக்கி, இராஜராஜன் சதய விழாவை ஆண்டுதோறும் நடத்துவதற்கு உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் இருக்கிற மேட்டூர் அணை மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் இருக்கிற கொல்லிமலைக்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கிறார்கள். அந்த இரண்டு இடங்களையும் சுற்றுலாத் தலங்களாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சுற்றுலாத் துறையில் பல்வேறு வளர்ச்சிகளைச் செய்துள்ள நமது அரசு, செய்தி



மற்றும் திரைப்படத் தொழில்நுட்பவியல் துறையிலும் மிக்க கவனம் செலுத்தி, இப்போது மற்ற துறைகளுக்கு எடுத்துகாட்டாக விளங்கி வருகிறது.

இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்குத் தமிழ்நாட்டில்தான் பத்திரிகைச் சுதந்தரம் உள்ளது. அதற்குக் காரணம் நம்முடைய முதல்வர் அவர்கள் ஒரு பத்திரிகையாளராகவும் இருப்பதுதான். அவர்களே, பல பேட்டிகளில் தாம் ஒரு பத்திரிகையாளர் என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். முந்தைய முதல்வரைப்போல அல்லாமல், நம்முடைய முதல்வரை எந்தப் பத்திரிகையாளரும், எந்த நேரத்திலும் சந்திக்கலாம் என்ற நிலையை அவர்கள் இன்றையதினம் உருவாக்கியிருக்கிறார்கள். மக்களாட்சித் தத்துவத்தில் நான்காவது தூணாக உள்ள பத்திரிகைத் துறையில் பல்வேறு நிலைகளில் நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய முதல்வர் அவர்களின் நல்லாட்சியைப் பற்றி சில மஞ்சள் பத்திரிகைகள் இல்லாத ஒன்றை, உண்மைக்கு மாறான செய்திகளைத் தொடர்ந்து வெளியிடுவது கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று. (மணியடிக்கப்பெற்றது).

நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களின் அரசு தமிழறிஞர்களுக்குப் பல்வேறு நிலைகளில் சிறப்புகளைச் செய்திருக்கிறது. பல அறிஞர்களுக்கு நினைவு மண்டபங்கள் அமைத்திருக்கிறது. அவர்கள் எழுதிய நூல்களை நாட்டுடைமையாக்கி, அவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவாக விளங்கி வருவதை நன்றியோடு நினைத்துப்பார்க்கிறோம். கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களுக்கு நினைவு மண்டபம் எழுப்பி, ஏழ்மையில் வாடும் அவருடைய குடும்பத்திற்கு உதவிய நம்முடைய முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவையாறு தொகுதியில் இரண்டு தமிழறிஞர்கள் இருந்து மறைந்திருக்கிறார்கள். ஒருவர் நடுக்காவிரி நா.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள். பல்வேறு அரிய தமிழ் நூல்களை எழுதியிருக்கிறார்கள். அவர்கள் எழுதிய நூல் ஒன்றின் மூலக்கதையைக் கொண்டு நமது ஒப்பற்ற முதல்வர் அவர்கள் 'தென்பாண்டிச் சிங்கம்' என்ற ஒரு சிறந்த வரலாற்றுப் புதினத்தைப் படைத்தார்கள். அது சின்னத்திரையிலும் திரைப்படமாக வந்திருக்கிறது. அவர்கள் எழுதிய பல்வேறு நூல்களை தமிழக அரசு நாட்டுடைமையாக்கி வறுமையில் வாடும் அவருடைய குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கவேண்டுமென்று கேட்டு, அவர் பிறந்த நடுக்காவிரியில்

அரசின் சார்பில் ஒரு நினைவு மண்டபம் கட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12-10*

திருவையாறுக்குப் பக்கத்திலே இருக்கின்ற திருப்பழனத்தில் வாழ்ந்த **அக்ரகாரத்து** அதிசய மனிதர் என்று அண்ணாவால் போற்றப்பட்ட வரா. என்கிற வ. ராமசாமி அய்யங்கார், மூடநம்பிக்கைகளை எதிர்த்து பல்வேறு நிலைகளில் அவர் நூல்கள் எழுதினார். விதவைத் திருமணத்தை ஆதரித்தவர், பெண்கள் முன்னேற்றத்திற்காக எழுதியவர், பாரதியார், பாரதிதாசன் ஆகியோருடன் நெருங்கிப் பழகியவர். அவர் குடும்பமும் இப்போது வறுமையில் வாடிக்கொண்டிருக்கிறது. அவர் எழுதிய நூல்களையும் நாட்டுடைமையாக்கி, அவருக்கு திருப்பழனம் கிராமத்தில் ஒரு நினைவு மண்டபம் அமைக்க வேண்டுமென்று கேட்டு, மிகச் சிறப்பாக இயங்கி வருகின்ற இந்தத் துறையினுடைய மானியத்தை வரவேற்று அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் ச. கிருஷ்ணசாமி.

*டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் சுற்றுலாத் துறை மானியங்களில் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளை எடுத்து வைக்க வாய்ப்பு கொடுத்த தங்களுக்கு நன்றி கூறி சில கருத்துகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ் மண்ணில் பிறந்து இந்திய திருநாட்டின் விடுதலைக்கும் மக்களுடைய விழிப்புணர்வுக்கும் அரும் பாடுபட்டு உயிர் நீத்த தன்னிகரில்லாத தலைவர்கள் பலருடைய தியாகங்களை போற்றுகின்ற வகையிலே இந்த அரசு அவர்களுக்கு அரசு விழாக்கள் எடுத்தும். மணி மண்டபங்கள் கட்டியும், சிலை வைத்தும் போற்றி வந்திருக்கிறது. இந்த அடிப்படையில் கடந்த 16-ஆம் தேதியன்று வீரபாண்டிய கட்டபொம்மன் காலத்திலே வாழ்ந்து, தன்னுடைய இளம் வயதிலேயே தற்கொலை படையாகச் செயல்பட்டு, ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்த தளபதி சுந்தரலிங்கம் அவர்களுக்கு அரசு விழா கொண்டாடிய இந்த அரசை நான் மனதார பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவருக்கு அரசு விழா எடுத்த இந்த அரசு தளபதி சுந்தரலிங்கம் பிறந்த அதே கவர்னகிரியில் ஒரு மணி மண்டபத்தைக் கட்ட வேண்டுமென்றும், சென்னை மாநகரத்திலே தளபதி சுந்தரலிங்கத்தினுடைய சிலை ஒன்று நிறுவ



வேண்டுமென்றும் இந்த நேரத்திலே நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எப்படி விடுதலைக்காக போராடியவர்களை பாராட்டுகிறோமோ அதேபோல தந்தை பெரியார் அவர்களுடைய வழியில், அண்ணல் அம்பேத்கர் வழியில் ஜாதி ஆதிக்கக் கொடுமைகளை இந்த மண்ணிலே எதிர்த்த தியாகி இம்மானுவேல் சேகரன், மேலவளவு முருகேசன் ஆகியோருக்கும் அரசு விழா எடுக்க வேண்டுமென்றும், அவர்களுக்கும் மணிமண்டபம் கட்டியும் சிலை நிறுவியும் இந்த அரசு கௌரவிக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே திரைப்படத் தொழில்நுட்பவியல் மானியத்திலே பேசுகிறபோது நான் ஒரு கருத்தை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, திரைப்படங்கள் இந்தியாவிலும், அதிலேயும், குறிப்பாக தமிழகத்திலே, சமூகத்தில், அரசியலில், பொருளாதாரத்தில் பெரிய பங்காற்றி வருகிறது என்பதை நாம் அறிவோம். பிற நாடுகளிலே வேண்டுமானால் அது வெறும் பொழுதுபோக்கு ஸ்தாபனமாக இருக்கலாம். ஆனால் தமிழ் மண்ணில் திரைப்படம் சமூக வாழ்க்கையை மாற்றி அமைப்பதற்கும், அரசியல் மாற்றத்தை உருவாக்குவதற்கும் பயன்பட்டு இருக்கிறது என்பதை நாம் எல்லாம் அறிவோம். ஏனென்றால், திரைப்படத் துறையில் கதாசிரியர்களாக, பாடலாசிரியர்களாக, திரைப்பட நடிகர்களாக இருந்தவர்கள் இந்த மண்ணில் முதலமைச்சராக ஆகி இருக்கக்கூடிய வரலாற்றை நாம் காண்கின்றோம். எனவே, அந்த அளவிற்கு திரைப்படங்கள் தமிழ்நாட்டு மக்கள் மத்தியிலே ஆதிக்கம் செலுத்துகின்றன. அந்தத் திரைப்படத் துறையிலே ஒரு காலத்தில் இந்திய மண்ணின் விடுதலைக்காகப் பாடுபட்ட சுதந்திரப் போராட்டத் தியாகிகளுடைய தியாகங்கள் மேன்மைப்படுத்தி காட்டப்பட்டன. வீரபாண்டிய கட்டபொம்மன் பற்றி திரைப்படம் வந்தது. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. பற்றி படம் வந்தது. வாஞ்சிநாதன் பற்றி படம் வந்தது. அவற்றையெல்லாம் நாம் பாராட்டினோம். ஒவ்வொருவரும் இந்த மண்ணின் விடுதலைக்காகத் தியாகம் செய்ய வேண்டுமென்ற உணர்வையெல்லாம் பெற்றோம்.

*பிற்பகல் 12-15*

அதற்குப் பிறகு சமுதாயத்திலே ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டு காலத்திற்கு மேல் புரையோடிப் போயிருக்கக்கூடிய மனு தர்மங்களால்

ஏற்பட்டிருக்கக்கூடிய பாதிப்புகளை சாடக்கூடிய வகையிலே
திரைப்படங்கள் வந்தன. பாடல்கள் வந்தன. கதைகள் வந்தன.
கதாபாத்திரங்கள் வந்தன. அவைகூட சமுதாயத்தினுடைய மாற்றத்திற்கு
பெரிய அளவில் பங்காற்றின. சாதிக் கொடுமைகளை எதிர்த்தன. மூடப்
பழக்க வழக்கங்களை எதிர்த்தன. பெண்ணடிமையை எதிர்த்தன. இப்படி
எத்தனையோ பிரச்சினைகளில் சமுதாயத்தில் இருக்கக்கூடிய
கொடுமைகளையெல்லாம் சாடுவதற்கு திரைப்படத் துறை பயன்பட்டது.
ஆனால் இப்பொழுது காலச்சக்கரத்தைப் பின்னோக்கி இழுக்கக்கூடிய
அளவிற்கு ஒரு மோசமான நிலைமை நடந்து கொண்டிருப்பதை
நாமெல்லாம் அறிவோம். ஒவ்வொரு சமுதாயமும் வளர்ச்சியை நோக்கி
மேலே போய்க்கொண்டிருக்கிறபொழுது, இரண்டாயிரம் ஆண்டு
காலத்திற்கு முன்பு யார் யாராலோ, என்ன காரணத்திற்காகவோ
தொடங்கப்பட்ட வர்ணாசிரமக் கொடுமையிலிருந்து விடுதலை
பெறுவதற்காக நாமெல்லாம் போராடிக் கொண்டிருக்கிறபொழுது, மீண்டும்
அந்த வர்ணாசிரமத்தை, அந்த மனு தர்மத்தை, வேறு தர்மங்கள் மூலமாக,
சினிமா தர்மங்கள் மூலமாக, கதை மூலமாக, பாத்திரங்கள் மூலமாக,
பாடல்கள் மூலமாக இப்பொழுது நிலை நிறுத்தக்கூடிய ஒரு அநாகரிகப்
போக்கு வந்துக் கொண்டிருப்பதை நாமெல்லாம் கண்டு கொண்டிருக்க
வேண்டுமா? அதையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கு இந்த அரசு
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் வலியுறுத்தக்
கடமைப்பட்டிருக்கின்றேன்.

எம்.ஜி.ஆர். ஏறக்குறைய 50 ஆண்டு காலத்திற்கு மேல்
திரைப்படங்களிலே நடித்தார். அவர் ஒரு படத்தில்கூட தன்னை இந்த
சாதிக்காரன், இந்த மதத்துக்காரன் என்று காட்டிக்கொள்ளவில்லை.
அவருடைய எந்தப் படமும் ஒரு சாதியினுடைய பெயரைத் தாங்கி
வரவில்லை. ஆனால் இப்பொழுது எப்படி வந்து கொண்டிருக்கிறது?
'தேவர் மகன்' என்று படம் எடுக்கிறார்கள். 'சின்னக்கவுண்டர்' என்று
படம் எடுக்கிறார்கள். இன்னும் ஒவ்வொரு சாதியிலும் சாதியின் பெயரைத்
தூக்கிப் பிடித்து படம் எடுக்கிறார்கள். நாம் வன்முறையற்ற ஒரு
சமுதாயத்தைப் படைக்க வேண்டும்..... (குறுக்கீடு) நான் பேசி முடித்து
விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சந்தானம், அவர் பேசி
முடித்தவுடன், நீங்கள் பேசும்போது பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) அவா
ஒன்றும் தவறாகச் சொல்லவில்லையே. He is not yielding. நீங்கள்
பேசும்போது பதில் சொல்லுங்கள்.



**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** வன்முறையற்ற சமுதாயத்தைப் படைக்க
வேண்டுமென்று நாமெல்லாம் பாடுபடுகிறோம். அதை நோக்கி
நடைபோடுகிறோம் ஆனால், 'திருப்பாச்சி அரிவாளு எடுத்துக்கிட்டு வாடா
வாடா' என்று பாட்டு பாடக்கூடிய ஒரு மோசமான நிலைமை வந்து
கொண்டிருக்கிறது. அதை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்ளப் போகிறதா?
அல்லது இதுபோன்ற ஒரு மோசமான போக்குக்கு தடை விதிக்கப்
போகிறதா என்பதுதான் என்னுடைய கேள்வி. தென் மாவட்டங்களில்
ஏறக்குறைய கடந்த ஐந்து ஆண்டு காலமாக இரண்டு சமூகங்களுக்குள்
பல மோதல்கள் வந்தன. என்னென்னமோ காரணங்களையெல்லாம்
சொன்னார்கள். ஆனால் உண்மையான காரணம் ஒன்றை
மறந்துவிட்டார்கள். 'தேவர் காலடி மண்ணே, போற்றிப் பாடடி பெண்ணே'
என்ற பாடலைப் பாடி அந்தப் பாடலை ஒவ்வொரு கிராமத்திலேயும்
பாடுங்கள் என்று வற்புறுத்தியதன் விளைவால் ஏற்பட்ட கசப்புணர்வுகள்,
காழ்ப்புணர்வுகள் இதற்கெல்லாம் வித்திட்டது என்பதை மறந்துவிடக்
கூடாது. எனவே நல்ல எண்ணத்தோடு இந்த நாட்டிலே நாமெல்லாம்
சகோதரர்களாக வாழ வேண்டும். இன்னும் சொல்லப்போனால், உயர்வு
தாழ்வற்று, நாமெல்லாம் தமிழர்களாக வாழவேண்டுமென்ற நோக்கத்தோடு
நான் ஒரு வேண்டுகோளை வைக்கின்றேன். இனிமேல் தமிழ்நாட்டில்
சாதியின் பெயராலே, படமோ, கதாபாத்திரங்களோ, பாடல்களோ
அமைவதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பதை நான்
விலியுறுத்தக் கடமைப்பட்டிருகின்றேன். (மணியடிக்கப்பெற்றது) இந்த அரசு
தீண்டாமைக் கொடுமைகளை வேரறுக்க இந்த நாட்டிலே தீண்டாமைகள்
இன்னும் நீடித்து இருக்கக் கூடாது என்ற அடிப்படையிலே செய்திப்படம்
தயாரிக்கிறது. அதைப் பராட்டுகிறேன். அது மட்டும் போதாது; தீண்டாமை
ஒழிந்தால் மட்டும் போதாது. ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைப்பதற்கு,
ஜாதி வேறுபாடுகளற்ற சமுதாயத்தை அமைப்பதற்கு, ஜாதி
வேறுபாடுகளற்ற சமுதாயத்தை அமைப்பதற்குண்டான காரணங்களையும்
கண்டறிந்து அதைப் போக்குவதற்குண்டான கதை அம்சங்களை இந்த
அரசு ஊக்குவிக்க வேண்டுமென்றும், வலுப்படுத்த வேண்டுமென்றும்
வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-20*

செய்திப் பிரிவின் சார்பாக சமீபத்தில் சத்துணவு ஊழியர்களுக்கு ஓர்
உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். தமிழ்நாட்டிலே
இருக்கக்கூடிய சத்துணவு ஊழியர்கள் மிகக் குறைவான சம்பளத்திற்கு

வேலை செய்யக்கூடியவர்கள். இப்போதுகூட, பகுதி நேர ஊழியர்களாக இருக்கக்கூடியவர்களை நிரந்தரமாக ஆக்குங்கள் என்று அவர்கள் போராடி வருகிறார்கள். அவர்கள் 750 ரூபாயிலிருந்து, 1000, 1200 ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள். அவர்களிடத்திலே கட்டாயப்படுத்தி தமிழரசு பத்திரிகையை வாங்க வேண்டுமென்று செய்தித் துறையிலேயிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தப் பத்திரிகையையும் கட்டாயப்படுத்தி வாங்க வேண்டுமென்று எந்தத் துறைக்கும், துறையின் சார்பாக ஆணையிடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1-2-2000 அன்று செய்தி மக்கள் தொடர்புத் துறையிலிருந்து அனைத்து P.R.O-க்களுக்கும் தகவல் கொடுத்து, அந்த அடிப்படையிலே விழுப்புரம் P.R.O. அவர்கள் 11-4-2000 அன்று B.D.O.-க்களுக்கும் உத்தரவு பிறப்பித்து இப்போது தியாகதுர்கம் என்ற ஒன்றியத்திலிருந்து அனைத்து சத்துணவு ஊழியர்களிடத்திலேயிருந்தும் 120 ரூபாய் பிடிக்கப்பட்டிருக்கின்ற தகவலை இந்த அவைக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துறையின் சார்பாக தலைமையிடத்திலேயிருந்து எந்த உத்தரவும் அனுப்பப்படவில்லை. அப்படி யாராவது கீழேயிருக்கின்ற P.R.O.-க்கள் செய்திருந்தால் உரிய நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இப்படி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வராமலே கொடுக்கப்பட்டிருக்கிற இந்த உத்தரவை இரத்து செய்து, அவர்களிடத்திலேயிருந்து பெறப்பட்ட அந்தப் பணத்தையும் இந்த அரசு அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்க ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம்.



தமிழ்நாட்டிலே சுற்றுலாத் துறை பற்றி சில கருத்துகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டிலே எத்தனையோ இயற்கை வளங்கள் எத்தனையோ பகுதிகளில் நல்ல சுற்றுலாத் தலங்கள் இருந்தும்கூட ஒரு தீவிரமான முயற்சி எடுத்து அதை வளப்படுத்தாததனுடைய விளைவாக இங்கு சுற்றுலா தேவையான அளவுக்கோ அல்லது பெரிய அளவுக்கோ வளர்ச்சி அடையவில்லை என்று நான் கருதுகிறேன். குறிப்பாக, சென்னையிலே இருக்கக்கூடிய மெரினா கடற்கரையே இன்னும் அழகுபடுத்தப்படவில்லை அல்லது போதிய வசதிகள் செய்யப்படவில்லை. குறிப்பாக, சிங்கப்பூருக்குச் சென்று பார்த்தால் அங்கே இருக்கக்கூடிய கடற்கரையை எவ்வளவு அழகாக வைத்திருக்கிறார்கள். அங்கே மாலை நேரங்களானால் ஓட்டல்கள் திறக்கப்பட்டு நல்ல உணவும் கொடுக்கிறார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் அங்கே செல்கிறார்கள். ஆனால், அங்கே நிலைமை அப்படி இருந்தும்கூட அந்தக் கடற்கரை சுத்தமாக இருக்கின்றது. ஆனால், இங்கே நம்முடைய கடற்கரைகள் சுத்தமான நிலையிலே கிடையாது. இங்கேயும் நல்ல நிலையிலே, இன்னும் ஏராளமானவர்கள் வந்து செல்கின்ற வகையிலும், பல பகுதிகளிலேயிருந்து பயணிகள் வரக்கூடிய அளவுக்கு சுத்தப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு Point.

அடுத்து, தமிழ்நாடு அரசு Golden Beach, Disney Land, Black Thunder போன்ற தனியார்களுக்கு எல்லாம் அனுமதி கொடுக்கிறது. இன்னும் அரசு நிலங்களை குத்தகைகளுக்கு கொடுக்கிறீர்கள். ஏன் அவற்றை தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறையின் மூலமாகவே நடத்தக் கூடாது? அதைப்போன்று, 100 கோடி, 200 கோடி ரூபாய் முதலீடு செய்து தமிழ்நாடு அரசு மூலமாக நடத்தினால் இன்னும் சிறப்பாக இருக்குமல்லவா? ஏன் சுற்றுலாத் துறை மூலமாக அவற்றைச் செய்ய முயற்சி செய்யக் கூடாது? அந்த முயற்சியையும் தமிழ்நாடு அரசு எடுக்க வேண்டுமென்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்குட்பட்ட தமிழ்நாடு ஓட்டல்கள் எதுவுமே தங்கக்கூடிய சூழலில் கிடையாது. முதலில், சுற்றுலாத் துறை வளர்ச்சி அடைய வேண்டுமென்றால் தங்குவதற்கு இடவசதி செய்வதே மிக முக்கியமானது. எனவே, இன்னும்..

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக நடத்தப்படுகின்ற விடுதிகள் தரத்தை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில், தனியார் விடுதிகளை ஒப்பிடக்கூடிய அளவுக்கு, போட்டிப் போடக்கூடிய அளவுக்கு உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க கடந்த நிதிநிலை ஆண்டில் 250 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வருங்காலத்தில் மற்றவர்கள் எல்லாம் பாராட்டக்கூடிய அளவுக்கு இப்போது பணிகள் முடிக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இந்த முயற்சியைத் தீவிரமாக எடுத்து, மிக விரைவாக தமிழ்நாடு சுற்றுலா வாரியத்துக்குட்பட்ட அனைத்து ஹோட்டல்களும் நல்லமுறையில் இயங்கவேண்டும் என்று கேட்டு, இந்த மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை, செய்தித் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளிலே என்னுடைய கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்புத் தந்த தங்களுக்கு நன்றியினைக் கூறி, சுற்றுலாத் துறை என்பது ஒரு மாநிலத்தினுடைய வருவாயை உயர்த்துகின்ற ஒரு துறையாகக்கூட இருக்க முடியும். ஆனால், இந்தத் துறைக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியும் குறைவு; செயல்பாடுகளும் குறைவு என்பதைத்தான் என்னைப் பொறுத்த அளவிலே உணர முடிகிறது.

சீனாவிலே கும்மின் என்கின்ற ஒரு மாநிலத்திலே ஓர் ஆண்டுக்கு சுற்றுலா மூலம் வருவாய் ஆயிரம் கோடி ரூபாய், அந்த நாணயத்தையும் நமது நாட்டு நாணயத்தையும் ஒப்பிடும்போது, அந்த நாட்டினுடைய நாணயம் ஒரு ரூபாய் மதிப்பிற்கு நம்முடைய நாணயம் நான்கு ரூபாய் 50 பைசா. அப்படி ஒரு கணக்கை நாம் போடுகின்றபோது, ஏறத்தாழ அந்த மாநிலத்தினுடைய சுற்றுலா வருவாய் நான்காயிரம் கோடியே, ஐம்பது இலட்சம் ரூபாய் என்கின்ற அளவிற்கு, ஏறக்குறைய அந்த மாநிலத்தினுடைய பட்ஜெட்டிலே கால் பங்கை சுற்றுலாத் துறை ஈட்டுகிற அளவிற்கு அங்கு



அந்தச் சுற்றுலாத் துறையை மேம்படுத்தியிருக்கிறார்கள். சீன நெடுஞ்சுவர் போன்றவைகளைப் பார்ப்பதற்காக ஆயிரக்கணக்கான வெளிநாட்டுப் பயணிகள் வருகிறார்கள் என்கின்ற காரணத்தினால், அப்படி வருவாயை ஈட்ட முடிகிறது. அதுபோல, நமது மாநிலத்திலும் சுற்றுலாத் துறையை விரிவுபடுத்துவதற்குப் பல்வேறு இடங்களிலே அதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன; வசதிகள் இருக்கின்றன.

இப்போது எங்களது மதுரையைப் பொறுத்தவரையிலேகூட மதுரை வெகுவாக சுற்றுலாப் பயணிகள் எல்லாம் நிறைய வந்து செல்கிற இடம் என்பதால் மதுரையை Temple City என்று சொல்வார்கள். நிறைய ஆலயங்கள் நிறைந்த இடம். அந்த இடத்திற்கு சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வதற்கு இந்த மானியத்திலேகூட நிறைய பணத்தை செலவு செய்திருக்கிறார்கள். மதுரையைப் பொறுத்த அளவிலே திருமலை நாயக்கர் மகாலிலே ஒளிக்காட்சியை சரிசெய்வதற்காக 115 இலட்சம் என்கின்ற அளவிலும், மங்கம்மாள் சத்திரம் போன்ற விடுதிகளைச் சீர் செய்வதிலும் கவனம் செலுத்தியிருக்கிறார்கள். என்றாலும்கூட, மதுரைக்கு மீண்டும் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கு வண்டியூர் கண்மாயை ஆழப்படுத்தி, அதிலே நீரைத் தேக்கி, அங்கு படகு விடுகின்ற ஒரு நிலையை ஏற்படுத்தினால், அது இன்னும் சிறப்பாக இருக்கும் என்பதால் அதற்கான முயற்சியையும் இந்த அரசு எடுக்க வேண்டும். ஆனால் அது ஏனோ காலதாமதமாக இன்னும் செயல்படுத்தப்படாமல் இருக்கிறது.

அதுபோல, மாரியம்மன் தெப்பக்குளம். கடந்த காலங்களிலே எல்லாம் அந்தத் தெப்பப் பகுதியிலே நீர் என்றைக்கும் நிறைந்திருக்கும். அதிலே படகுகள் விடப்பட்டு, பெரும்பாலும் பயணிகள் அந்தப் படகுகள் மூலமாக அந்தத் தெப்பக்குளத்துப் பகுதியைச் சுற்றிப்பார்க்கின்ற அளவிற்கு ஒரு சிறந்த இடமாக அமைந்திருந்தது. ஆனால், இப்போது அந்தக் குளத்திலே நீர் எல்லாம் வற்றி, சமூகவிரோதிகள் அங்கு போய்த் தங்குகின்ற ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. அதை இந்தச் சுற்றுலாத் துறை கவனத்தில் கொண்டு, அந்த மாரியம்மன் தெப்பக் குளத்தை மீண்டும், எந்த நேரத்திலும், வருடம் முழுவதும் தண்ணீர் நிறைந்து இருக்கின்ற ஒரு பகுதியாக அமைத்து—அதற்கு ஏற்கெனவே வைகை ஆற்றிலிருந்துகூட தண்ணீர் எல்லாம் கொண்டு போகின்ற வழிகள் இருக்கின்றன பாதைகள் இருக்கின்றன—சிறந்த சுற்றுலாத் தலமாக அமைத்துத்தர வேண்டும்.

பிற்பகல் 12-30

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் தாடகைநாட்சி அருவி என்று ஒரு அருவி இருக்கின்றது. அதிலே ஏறத்தாழ 10 மாதங்களுக்கு மேலாக தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இப்போதுகூட ஒரு பெரியார் சமத்துவபுரம் அதை ஒட்டி கட்டப்பட்டிருக்கிறது. போன ஆண்டுகூட சிறிது நிதி ஒதுக்கித் தந்தார்கள். அந்த இடம் வனப் பகுதியிலே இருக்கின்ற காரணத்தினால், சுற்றுலாத் துறையின் மூலமாக ஒதுக்கிக் கொடுத்திருக்கின்ற நிதியைக்கூட சரியாகச் செலவு செய்ய முடியவில்லை என்கின்ற நிலை ஏற்பட்டு, இதுவரையிலும் அது செலவு செய்யப்படாத நிலையிலே இருக்கிறது. அதை முழுமையாகச் செலவு செய்வதற்கும், மீண்டும் இந்த ஆண்டுகூட ஒரு தொகையை ஒதுக்கித் தந்து அதைச் சரி செய்வதற்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று நான் சுற்றுலாத் துறையைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, செய்தித் துறை. செய்தித் துறையைப் பற்றி எங்களுடைய கிராமங்களிலே ஒரு பழமொழி சொல்லுவார்கள். யாரோ வேதம் ஓதுவது போல என்று சொல்வதுண்டு. அதை நான் குறிப்பிட விரும்பவில்லை. இப்போதும் சாதியக் கொடுமைகளைப் பற்றி தந்தை பெரியார் போன்றவர்கள், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள், கலைஞர் போன்றவர்கள் எடுத்துச் சொன்னால், அதை மனமுவந்து ஏற்றுக்கொள்வதற்கு மக்கள் தயாராக இருக்கிறார்கள். ஆனால், அதை யார் சொல்வது என்பதுதான் இப்போது இருக்கின்ற ஒரு நிர்பந்தமான நிலை. இப்போது தேவர் மகன், சின்னக் கவுண்டர் போன்ற படங்களை எல்லாம் எடுத்தாலும்கூட, அவர்கள்கூட உள்ளார்ந்த சில கருத்துகளை அதிலே வைத்திருக்கிறார்கள். தேவர் மகன் படத்திலேகூட வன்முறை கூடாது; வன்முறையைத் தவிர்க்க வேண்டும் என்பதுதான் மூலக் கருத்தாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அதை நாங்கள் முழுமையாக ஏற்றுக்கொள்கிறோம். இப்போது அந்த வன்முறையின் மூலமாக, சாதியக் கொடுமைகளாலே எத்தனை பேர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்? நான்கூட கடந்த முறை இங்கு சுட்டிக்காட்டினேன்; கம்யூனிஸ்ட் பேரியக்கத்தில் இப்போது செயலாளராக இருக்கின்ற நல்லக்கண்ணு அவர்களுடைய மாமனார் அண்ணசாமி தேவர், அதுபோல் ஓர் ஆசிரியர் முத்துகிருஷ்ணன், அவர் இந்த சாதியக் கொடுமைகளிலே எதிலேயும் தலையிடாதவர்; ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்தவர் என்பதற்காக கொலை செய்யப்பட்டார். அந்த வன்முறைகளை எல்லாம் செய்தவர்களே, இப்போது சாதியக் கொடுமையைப் பற்றி பேசுகிறார்கள் என்று சொன்னால், அதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அடுத்து, வாரம்



இருமுறை வெளியாகின்ற ஒரு நல்ல பத்திரிகை. அந்தப் பத்திரிகையிலே "எத்தனையோ மனிதர்கள்" என்கின்ற ஒரு கட்டுரையை இப்போது வெளியிட்டிருக்கிறார்கள். இந்த நாடு சுதந்திரம் பெறுவதற்காக, சுதந்திரத்திற்குப் போராடிக் கொண்டிருந்த உச்சகட்டமான சந்தர்ப்பத்திலே இந்திய மக்களுடைய மனதிலே பதிந்த தலைவர்கள் காந்திஜி, நேருஜி மற்றும் நேதாஜி. காந்திஜி, நேருஜி, எல்லாம்கூட அவர்களுடைய பெயரிலே 'ஜி'-யை சேர்த்து இருக்கிறார்கள். ஆனால், 'நேத்தா' என்று சொன்னால், அது தலைவர் என்கிற பொருள்படுகின்ற வார்த்தை. நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் என்பவருக்கு, சுபாஷ்ஜி என்று பெயர் கொடுக்காமல், நேதாஜி என்றே இப்போதும் இந்திய நாட்டு மக்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள். காந்திஜி, நேருஜி இவர்களைக் காட்டிலும் நேதாஜி இந்த நாட்டினுடைய தலைவர் என்று ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று இந்தக் கட்டுரையில் எழுதப்பட்டிருக்கிறது. அந்த நேதாஜி ஒரு நேரத்திலே காங்கிரஸ் தலைவர் பதவிக்கு போட்டியிடுகின்ற நேரத்தில், காந்திஜியே ஒரு வேட்பாளரை நிறுத்துகிறார். அந்த வேட்பாளரை எதிர்த்துப் போட்டியிடுகின்ற நேதாஜிக்கு ஆதரவாக தமிழகத்திலே இருந்தவர்கள் யார் என்று இந்தப் பத்திரிகையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதிலே முன்வரிசையிலே நிற்பவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்; அதேபோல மக்கள் தலைவர் காமராசர்; சீனிவாச சாஸ்திரிகள்...... (குறுக்கீடு) சீனிவாச சாஸ்திரிகள் என்று இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது; சீனிவாச ராவ், இப்படி இவர்கள்தான். ஆக, ஜீவானந்தம் போன்றவர்கள்தான் அன்றைக்கு நேதாஜிக்கு உறுதுணையாக இருந்தார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி இந்திய மக்கள் ஏற்றுக்கொண்ட ஒரு தலைவனான நேதாஜியை தலைவராக ஏற்றுக்கொண்டிருக்கின்ற ஒரு தலைவன்--ஒரு சாதியத் தலைவனால்—தானைத் தலைவன் என்று இப்போது சொல்லிக் கொண்டிருக்கிறவர்களுக்கு நான் சொல்கிறேன்; நேதாஜி இந்த நாட்டின் மாபெரும் தலைவர்; (மணியடிக்கப்பெற்றது) அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கின்ற முத்துராமலிங்கத் தேவர் இந்த நாட்டு மக்களை நேசித்த ஒரு தலைவர்; இந்த நாட்டு மக்களுக்கு சுதந்திரத்திற்காகப் போராடிய தலைவர். அவருக்கு எவ்வளவோ வசதி வாய்ப்புகள் இருந்தும் தனக்கென்று ஒரு மண வாழ்க்கையைக்கூட ஏற்றுக்கொள்ளாமல் வாழ்ந்து மறைந்த ஒரு தியாகத் தலைவர். இப்போது அவருடைய சொத்துகள் ஆயிரக்கணக்கான ஏக்கர் இருக்கின்றன. சென்ற அரசுகூட அவருடைய சொத்துகளைப் பராமரிக்க ஒரு Trust-ஐ நியமித்து, ஓராண்டு காலத்திலே 6 இலட்சம் ரூபாயை வசூலித்திருக்கிறார்கள். இப்போது அவருடைய சொத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறவர்கள், அவருடைய நிலத்தை உழுது கொண்டிருப்பவர்கள் யார் என்று இந்த அரசு கணக்கெடுத்து வெளியிடுமேயானால் ஆயிரக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்கள்

அவருடைய சொத்தை வைத்துக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மை இந்த நாட்டிற்குத் தெரியும்.

*பிற்பகல் 12-35*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**திரு. லா. சந்தானம்:** நீங்கள் பேசுகிறபோது நான் குறுக்கிடவில்லை.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** Point of order.

**திரு. லா. சந்தானம்:** After my speech you can raise the point of order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு உறுப்பினர்களும் என்னைப் பார்த்துப் பேச வேண்டும். திரு. லா. சந்தானம் பேசி முடித்த பிறகு, டாக்டர் கிருஷ்ணசாமி பேசலாம்.

**திரு. லா. சந்தானம்:** துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொன்னவுடன் அப்போது நான் ஏற்றுக்கொண்டேன். அவர் பேசியபோது நான் குறுக்கிடவில்லை. நான் பேசும்போது அவர் குறுக்கிடுவது சரியில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைத்தான் சொல்கிறேன். நீங்கள் பேசி முடித்ததும் அவருக்கு வாய்ப்பு தருகிறேன்.

**திரு. லா. சந்தானம்:** அப்படி ஒரு செயலைச் செய்து, இப்போது தமிழகத்திலே இருக்கின்ற கலைஞர் அரசு நிச்சயமாக பட்டியலெடுத்து வெளியிட வேண்டும். செய்தித் துறையின்கீழ் செய்யப்படுபவனவற்றை நான் பார்க்கிறேன். யார், யாருக்கோ நினைவிடங்கள் எழுப்பப்பட்டு உள்ளன. காமராசரோடு தோளோடு தோள் நின்று, நேதாஜிக்கு அன்றைக்கு சீடராக இருந்த முத்துராமலிங்கத் தேவருக்கு, இன்றைக்கல்ல, பலமுறை திருநகரிலே நினைவிடம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அவர் இராமநாதபுரம் மாவட்டத்திலே பிறந்திருந்தாலும், அவருடைய அரசியல் விளைநிலமாக இருந்த இடம் மதுரை என்கிற காரணத்தாலே, அவர் வாழ்ந்து, மறைந்த திருநகரிலே உள்ள வீட்டினை நினைவுச் சின்னமாக ஆக்க வேண்டுமென்று பலமுறை கோரிக்கை வைத்திருக்கிறோம். ஏனோ, இப்படிப்பட்டவர்கள் வார்த்தைகளையெல்லாம் நம்பி அவையெல்லாம் மறுக்கப்படுகின்றன.



*(மணியடிக்கப்பெற்றது).*

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதே மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுத்தான் நேதாஜி அவர்களுக்கு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் சென்னையிலே சிலை எடுத்து சிறப்பு செய்தார்கள். அதேபோல பசும்பொன்னிலே முத்துராமலிங்கத் தேவருடைய பிறந்த நாள் விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். சென்னையிலே அரசின் சார்பாக அவருடைய திருவுருவச் சிலைக்கு பிறந்த நாளின்போது ஆண்டாண்டுதோறும் மாலை அணிவித்துக் கொண்டிருக்கிறோம். எல்லோருக்கும்தான் செய்து கொண்டிருக்கிறோம். இந்த அரசைப் பொறுத்தமட்டில் யாரையும் வேறு கண்ணோட்டத்தோடு பார்க்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** உண்மை. அதற்காக என்னுடைய வாழ்த்துகளை உரையின் ஆரம்பத்திலேயே மனதார தெரிவிக்க வேண்டும் என்றும், நேதாஜி அவர்களுக்கு சிலை வைத்ததற்குப் பாராட்டு தெரிவிக்க வேண்டும் என்றும் நினைத்திருந்தேன். என்னுடைய கவனம் வேறு விதத்திலே திரும்பிவிட்ட காரணத்தினாலேதான் அதை நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுடைய கவனத்தை அமைச்சர் சரியாகத் திருப்பிவிட்டுவிட்டார். நேரம் ஆகிவிட்டது, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** நேதாஜி சிலையை அமைத்துத் தந்த அரசுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவருடைய சீடராக இருந்த பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கும் நிச்சயமாக, அந்தப் பகுதி மக்களுடைய மனம் குளிர, திருநகரிலே நினைவிடம் நீங்கள் அமைத்துத்தர வேண்டும்.

அடுத்து, கட்டபொம்மன் வரலாறு என்று சொன்னால், வெள்ளையத் தேவன் இல்லாமல் கட்டபொம்மன் வரலாறே கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீண்ட நேரம் நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** வீரபாண்டிய கட்டபொம்மன் வரலாறு என்றால் வெள்ளையத் தேவன் இல்லாத வரலாறே கிடையாது. வீரபாண்டிய கட்டபொம்மன் சினிமாவிலே சிவாஜிகூட அந்த வெள்ளையத்தேவன் குண்டடிப்பட்டு கிடக்கின்ற நிலையைப் பார்த்து நெஞ்சத்தை உருக்குகின்ற அளவிற்குப் பேசுவார். 'மகனே உன்னை இழந்துவிட்டு இந்த நாடு உய்யப் போகிறதா? எதிரிகள் என்னுடைய வலது கரத்தை வெட்டி வீழ்த்தியிருந்தாலும் நான் துயரப்பட மாட்டேனே, துன்பப்பட மாட்டேனே, ஆனால் உன்னை இழந்துவிட்டு எப்படியடா இந்த நாட்டிலே இருக்கப் போகிறேன்' என்று சொல்வார். அப்படிப்பட்ட வெள்ளையத்தேவனுக்கு ஒரு நினைவுக் கிராமம், அவர் இருந்த வட நாட்டுப் பகுதியிலே அமைத்துத்தர வேண்டுமென்றும், அவனுக்கும் நீங்கள் பிறந்த நாள் கொண்டாட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு தங்களுக்கு நன்றி கூறி அமைகின்றேன், நன்றி, வணக்கம்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சந்தானம் அவர்கள் பேசுகின்றபோது அவர் போற்றுகின்ற தலைவருடைய சொத்துகளையெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்கள் அனுபவித்து வருவதாகச் சொன்னார்கள். அவர் போற்றுகின்ற தலைவருக்குச் சொந்தமான அத்தனை ஏக்கர் நிலத்தினை தாழ்த்தப்பட்ட மக்கள் யார் எல்லாம் அனுபவித்து வருகிறார்கள் என்பதை இந்த அரசு ஆராய வேண்டுமென்று சொன்னார்கள். நான் ஒன்று கேட்டுக்கொள்கிறேன். அவருடைய தலைவருக்கும் **

*பிற்பகல் 12-40*

**திரு. லா. சந்தானம்:** அந்தப் பகுதி இராமநாதபுரம் மாவட்டம்...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களுடைய உணர்வுகளையும், அதேபோல நம்முடைய அன்பிற்குரிய Forward Block கட்சியினுடைய தலைவர் திரு. சந்தானம் அவர்களுடைய

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



உணர்வுகளையும் அனைவரும் மதிக்கின்றோம். இருந்தாலும் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சொன்ன அந்த வார்த்தைகளை தயவுசெய்து அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்கப்பட்ட...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அவர் தனிப்பட்ட முறையிலே யாரையும் குறை சொல்லவில்லை. பெருமைப்படுத்திதான் சொன்னார். அவருடைய சொத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இப்போது தினமும் உழுது பயிரிட்டு பலன் அனுபவிக்கிறார்கள் என்றுதான் சொன்னாரே தவிர, குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. **அரசாங்கத்திற்கு இல்லை. எனவே, அவைக் குறிப்பிலிருந்து அதை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சொற்றொடர்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அடுத்து திரு. த. பூவேந்தன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவா அவர்களே...

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். இரண்டு பேரும் மாறி மாறி பட்டிமன்றம் மாதிரி நடத்திக்கொண்டுபோனால் எப்படி? இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்). திரு. த. பூவேந்தன்.

*(டாக்டர் க. கிருஷ்ணசாமி தொடர்ந்து நின்று கொண்டே இருந்தார்.)*

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் விளம்பரத் துறை மற்றும் சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கைகள்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு, இந்த மானியக் கோரிக்கையிலே, செய்தித் துறையை கையிலே வைத்திருக்கிற_ (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பொதுவாக திரைப்படங்களில் இப்போது வந்திருக்கக்கூடிய அநாகரிகப் போக்கைச் சுட்டிக்காட்டியதற்காக...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை ஒரு நிமிஷம் உட்காருங்கள். நீங்கள் சுட்டிக்காட்டினீர்கள். அதற்கு திரு. சந்தானம் அவர்கள் பேசும்போது சரியாகப் பதில் சொன்னார்கள். அதிலேயும் நல்ல கருத்துகளைப் புகுத்தி இறுதியிலே படத்தை முடிக்கிறபோது நல்லக் கருத்துகளைத்தான் சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னார். அதோடு பிரச்சினையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிஷம். நீங்கள் குறிப்பிட்ட அந்தப் படத்தை நானும் பார்த்தேன். ஆரம்பத்திலே கதைப் போக்கு அப்படிப் போனாலும், இறுதியிலே முடிக்கிறபோது "ஏண்டா ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு சாகிறீர்கள், நல்லபடியாக இருங்கள்" என்றுதான் சொல்கிறார்கள், அந்தக் கதையிலே. எனவே, உட்காருங்கள். (குறுக்கீடு)

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பொதுவாக தாழ்த்தப்பட்ட....

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள், யாருக்கும் அனுமதி கிடையாது. திரு. பூவேந்தன் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. த. பூவேந்தன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பூவேந்தனுக்கு Mike கொடுக்கவும். (குறுக்கீடு) திரு. பூவேந்தனுக்கு Mike கொடுக்கவும்.

**திரு. த. பூவேந்தன்:** இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டதைப்போல தொடர்ந்து இந்த நாட்டுக்காக உழைக்கின்ற தலைவர்களைப் போற்றுகின்ற வகையிலே வானுயர் வள்ளுவருக்கும் சரி, மொழிக்காக, இனத்திற்காகப் பாடுபட்ட தலைவர்களைப் போற்றுகின்ற



வகையில், தமிழக அரசு கௌரவிக்கின்ற வகையில் பல்வேறு திட்டங்களை அறிவிக்கின்ற வகையிலே, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே கல்வியானாலும் சரி, ஊரக வளர்ச்சியானாலும் சரி அல்லது வருமுன் காப்போம் திட்டமானாலும் சரி, கால்நடை பாதுகாப்பு திட்டமானாலும் சரி, இந்தத் திட்டங்களைப்போல பல்வேறு திட்டங்களை, தன்னுடைய தியாகங்களை எல்லாம் வெளிப்படுத்துகிற வகையில், செய்தித் துறையை கையிலே வைத்திருக்கிற அமைச்சர் அவர்களுக்கு ஒன்றை வேண்டுகோளாக வைக்கிறேன். மொழிக்காக, இனத்திற்காக பாடுபட்ட நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் கல்லக்குடி போராட்டத்திலிருந்து இன்றுவரை இந்த நாட்டுக்காக உழைத்து செய்த தியாகங்களை இளைய தலைமுறை தெரிந்துகொள்கின்ற வகையில், அதை ஒரு திரைப்படமாகத் தயாரித்து இளைஞர்களுக்கு நாள்தோறும் 1/2 மணி நேரமோ அல்லது 1 மணி நேரமோ திரைப்படம் மூலமாக காட்ட வேண்டுமென்ற கோரிக்கையை வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு சிறந்த பத்திரிகை ஆசிரியராக இருந்த காரணத்தால்தான் செய்தியாளர்களானாலும் சரி, பத்திரிகையாளர்களானாலும் சரி, அவர்களுக்குப் பல்வேறு சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். எந்த ஒரு செய்தியாளரும், எந்த நேரத்திலும் தமிழகத்தினுடைய முதல்வரை சந்திக்கும் அளவிற்கு இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-45

மாண்புமிகு உறுப்பினர் பெரியசாமி அவர்கள், குறிப்பிட்டதைப்போல செய்தியாளர்களுக்கெல்லாம், இலவச Bus Pass வழங்கப்படுவதைப் பொறுத்தவரையில் தமிழக அரசு அனைத்து போக்குவரத்துக் கழகங்களிலும், தனித் தனி Pass வழங்குவது என்பது, நடைமுறைக்கு ஒவ்வாத காரியம். சட்டமன்ற உறுப்பினர்கள் எப்படி எந்தவொரு போக்குவரத்துக் கழகப் பேருந்தாக இருந்தாலும், பயணம் செய்கிறார்களோ, அதுபோல தமிழக முதல்வரிடத்திலே கலந்து, அனைத்து செய்தியாளர்களும், அனைத்து போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலேயும் பயணம் செய்வதற்கு ஏற்ற வகையில் ஒரே Pass வழங்கிட வேண்டும். அதுதான் நடைமுறைக்கு உகந்தது.

சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில், சென்ற ஆட்சிக் காலத்தில் எல்லாம் இல்லாத அளவுக்கு சாதனைகளைப் பெறுகின்ற வகையில்

1999 ஆம் ஆண்டு 218.60 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகின்ற வகையிலேயும், அதைப்போல கூடுதலாக அந்நியச் செலாவணியை ஈட்டுகின்ற வகையிலேயும் செயல்பட்டதால், அந்தத் துறை அமைச்சர் அவர்களையும், அரசையும் பாராட்டுகிறேன். சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில் தமிழகத்தினுடைய முதல்வர் முயற்சியால், சென்னையிலே சுற்றுலாப் பொருட்காட்சி அமைக்கும் பணி சிறந்த முறையிலே நடைபெற்று வருவதை பாராட்டுகிறேன்.

மலைகளின் இராணியாக இருக்கின்ற உதகமண்டலமானாலும் சரி, மலைகளின் இளவரசியாக இருக்கின்ற மேற்குத் தொடர்ச்சி மலை கொடைக்கானல் மலையானாலும் சரி, இப்போது சிறந்த முறையிலே சுற்றுலாத் தலங்களை அமைப்பதற்காக தொன்மை வாய்ந்த 38 நகரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. கொடைக்கானல் அடிவாரத்தில் இருக்கின்ற பழனியும் அதிலே இடம் பெற்றிருக்கிறது. சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில் உதகமண்டலத்திற்கு எப்படி train செல்லுகின்றதோ, அதைப்போல சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்ற வகையில், சுற்றுலாத் துறைக்கு வருவாயை ஈட்டுகின்ற வகையில், கொடைக்கானல் குறிஞ்சி ஆண்டவர் கோவிலில் இருந்து பழனிக்கு train பாதை அமைப்பதற்கு சுற்றுலாத் துறை முயற்சி செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கக் கடமைபபட்டிருக்கிறேன். இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சம்பந்தப்பட்ட வேறு துறைகளை அணுகியாவது train பாதை அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு வாய்ப்பு குறைவாக இருக்குமேயானால் பைக்காராவில் எப்படி இழுவை இரயில் உள்ளதோ, பழனி முருகன் கோவிலில் எப்படி இழுவை இரயில் உள்ளதோ அதுபோல கொடைக்கானலிலிருந்து பழனிக்கு, அந்தப் பாதையிலாவது இழுவை இரயில்பாதை அமைப்பதற்கு ஏற்பாடு செய்து தருவதற்கு, ஆவன செய்து தர வேண்டும்.

இந்த ஆண்டு, சிறந்த முறையிலே இந்தியாவிலே அதிக வருவாய் ஈட்டுகின்ற நகரமாக பழனி நகரம் இருக்கின்ற காரணத்தினால் பழனி நகரத்தை—பழனிக்கு வந்துதான் கொடைக்கானலுக்குச் செல்லுகின்றார்கள், பழனிக்கு வந்துதான் ஊட்டிக்கும் செல்லுகின்றார்கள்—இதுபோன்ற வசதியைப் பெற்றிருக்கின்ற நகரமாக இருக்கின்ற காரணத்தினால்—இந்த ஆண்டு சுற்றுலாத் தலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று அன்போடு வேண்டுகோள் விடுக்கிறேன்.



நமது குறிஞ்சி மலரை நினைவில் வைத்தாவது, கொடைக்கானலுக்கும் பழனிக்கும் நீங்கள் train பாதை அமைத்துத் தரவேண்டுமென்று அன்போடு வேண்டுகோள் விடுத்து, இந்தத் துறையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலா, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் ஆகிய மானியக் கோரிக்கைகளிலே பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி ஒன்றிரண்டு கருத்துகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-50*

சுற்றுலா என்பது ஒரு நாட்டுக்கு மட்டுமல்ல ஒவ்வொரு மனிதனுக்கும் மிகவும் அவசியமான ஒன்றாகும். இதன்மூலம் நாட்டில் வருமானத்தையும், கல்வி வளர்ச்சியையும், பண்பாடு, கலாச்சாரத்தின் பரிமாற்றங்களையும் பெருக்குவதோடு, நமது கலாச்சாரங்கள் பிற நாடுகளுக்கும், பிற மாநிலங்களுக்கும் சென்றடையக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்துவதுதான் இந்தச் சுற்றுலாத் துறை. அந்தவகையில் நமது மாநிலத்திற்கு ஆண்டுதோறும் சுற்றுலா வரக்கூடியவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையிலே சுற்றுலாத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி மட்டும் வருடா வருடம் குறைந்து கொண்டே செல்கிறது. இதன் காரணத்தால், சுற்றுலாத் துறையின்மூலம் விளம்பரம் செய்யக்கூடிய அல்லது தமிழ்நாட்டில் எங்கெங்கு சுற்றுலாத் தலங்கள் இருக்கின்றன என்பதையெல்லாம் பிற மாநிலங்களுக்குத் தெரிவிக்கக்கூடிய வாய்ப்புகள் குறைவதோடு, வருகின்ற சுற்றுலாவாசிகளுக்கு ஏற்படுத்தக்கூடிய வசதிகளும் குறைவாகின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது.

நமது மாநிலத்தில், பல இடங்களில் நாம் சுற்றுலாத் தலங்களைப் பெற்றிருக்கக்கூடிய நிலையில் அதை மேலும் வளப்படுத்துவதற்கும், அயல் நாட்டவர்கள் குறைந்த செலவில் எந்த நாட்டுக்குச் சுற்றுலா செல்லலாம் என்று தேடிக்கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், முறையாக விளம்பரப் படுத்தினால் இன்னும் அதிகமான வெளிநாட்டவர்களை நம் பக்கம் கவரக்கூடிய ஒரு நிலை இருக்கிற காரணத்தால் இந்தச் சுற்றுலாத் துறைக்கு ஒதுக்கக்கூடிய நிதியை மேலும் அதிகரித்து, இரட்டிப்பாக்கினால்

பன்மடங்கு இலாபத்தை நாம் சுற்றுலாத் துறையின் மூலம் பெறமுடியும் என்பதை அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில், மக்கள் இயற்கையாக எங்கெங்கு கூடுகிறார்களோ அங்குதான் வசதிகளைச் செய்ய வேண்டுமேயொழிய, சுற்றுலா என்று இடத்தை நாமாகவே திணிக்கக்கூடாது. அவ்வாறு திணித்தால் முதலீடு செய்கின்ற தொகை நிச்சயமாக நமக்குத் திரும்பக் கிடைக்காமல் போய்விடும். குறிப்பாக செயற்கையாக ஏற்படுத்தக்கூடிய இடங்களுக்கு மக்கள் ஒருதரம் செல்வார்கள், இருதரம் செல்வார்கள், பின்னர் வெறுத்து விடுவார்கள். ஆனால், இயற்கை எழிலைப் பெற்ற, இயற்கையாக அமைந்த சுற்றுலாத் தலங்களுக்குத்தான் மக்கள் தொடர்ந்து செல்லக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது.

சுற்றுலாத் துறையில், திருக்கோயில்கள், தர்காக்கள், பேராலயங்கள் போன்ற இடங்களுக்கு மக்கள் சுற்றுலா என்ற பெயரில், விடுமுறை காலங்களில் பக்தி வழிபாட்டோடு சென்று கொண்டிருக்கிறார்கள். அதுபோன்ற இடங்களில் அடிப்படை வசதிகளை நாம் முன்னேற்பாடாகச் செய்ய வேண்டும். அவ்வாறு நாம் செய்யாத காரணத்தால் அந்தப் பகுதிகளிலே, விழாக் காலங்களிலே பல்வேறு நோய்களுக்கு மக்கள் ஆட்படுகிறார்கள். குறிப்பாக, நாகூர், வேளாங்கன்னி போன்ற பகுதிகளிலே கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தப்படும் என்று *1998-99* ஆம் ஆண்டு Budget-லே அறிவிக்கப்பட்டு, அதற்காக *16* இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்தார்கள். ஆனால், அந்த ஆண்டு பணி தொடங்கப்படவில்லை. அதேபோல், கடந்த ஆண்டும் கொள்கை விளக்கக் குறிப்பில் அந்தக் கழிப்பறைகள் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டு *16* இலட்சம் ரூபாய் ஒதுக்கீடும் செய்யப்பட்டது. ஆனால் கடந்த ஆண்டும் பணிகள் தொடங்கப்படவில்லை. அதுபோல இந்த ஆண்டும் அதே *16* இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது *3* ஆண்டுகளாக தொடர்ந்து சுட்டிக்காட்டப்பட்டு வருகிறது. உண்மையிலேயே, *1998-99* ஆம் ஆண்டு Budget-லே அறிவிக்கப்பட்டபடி, கொள்கை விளக்கக் குறிப்பிலே அறிவிக்கப்பட்டபடி செய்திருந்தால், அந்தக் காலத்திலே இருந்த விலைவாசிக்கு ஏற்ப அதிகமான பயன்பாடுகளைக் கொடுத்திருக்கும். இப்படிக் காலம் தாழ்த்துவதனால், அந்தக் கட்டடத்தின் பரப்பளவு, கட்டுகின்ற ஏரியாவின் பரப்பளவு மிகவும் குறையக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, அதை உடனடியாகச் செய்ய வேண்டும். போதுமான கழிப்பறை வசதிகள் இல்லை. விளக்கு வசதிகள் அந்தப் பகுதியிலே



இல்லை. ஆனால், இலட்சக் கணக்கான மக்கள் அந்தப் பக்கம் குவிந்த வண்ணம் இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், அதிகமான வெளிமாநிலத்தவர்கள், அதிகமான வெளி நாட்டவர்கள் வரக்கூடிய பகுதியாக நாகூர், வேளாங்கன்னி பகுதி இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, சுற்றுலாத் துறை அந்தப் பகுதியை கவனத்தில்கொண்டு போதிய கழிப்பறை வசதிகளை, போதிய விளக்கு வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

அடுத்து, நாகப்பட்டினத்திலே தமிழ்நாடு ஓட்டலைக் கட்டினார்கள். அது மிகவும் ஒதுக்குப் புறமாக இருக்கிறது. தொடர்ந்து அதிலே யாரும் தங்க முடியாமல் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. O.N.G.C., M.R.L. போன்ற நிறுவனங்களிலிருந்து வரக்கூடியவர்கள்கூட அந்தப் பகுதியிலிருந்து திருவாரூருக்குச் சென்று, அங்கே உள்ள தனியார் ஓட்டல்களில் தங்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதுபோன்று நட்டத்தில் இருப்பனவற்றை ஏலத்தில் விட்டு விற்றாவது வேளாங்கன்னி, நாகூர் போன்ற பகுதிகளிலே முதலீடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் நிச்சயமாக அரசுக்கு நல்ல வருவாய் கிடைக்கும். ஏனென்றால், அங்கே எல்லாம், Lodge-ல் இடம் கிடைக்கவில்லை, Lodge-ல் இடம் கிடைக்கவில்லை என்றால் தெரு, திண்ணையை எல்லாம் வாடகைக்கு எடுத்து தங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு எந்த இடத்திலே சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகின்றார்களோ அங்குதான் invest செய்ய வேண்டுமென்பதை கவனத்தில் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாகை கடற்கரை, மிகவும் பிரசித்தி பெற்ற கடற்கரை. அங்கே இலட்சக்கணக்கான மக்கள் கூடுகிறார்கள். அங்குள்ள கடற்கரையிலே அதிகாலையிலே குளித்தால் திருமணம் ஆகாத பெண்களுக்கு திருமணம் ஆகும் என்று ஒரு நம்பிக்கைக்கூட இருந்து கொண்டிருக்கிறது. அது நல்ல நம்பிக்கையா என்பது பற்றி நான் உள்ளே செல்ல விரும்பவில்லை. ஆனால், அங்கே விளக்கு போன்ற பாதுகாப்பு வசதிகள் இல்லாத காரணத்தால், *4, 5* வருடங்களுக்கு முன்பு கற்பழிப்பு மற்றும் கொலை நடந்தது. பிறகு, *10, 15* நாட்கள் கழித்து பிணத்தை தோண்டி எடுத்து விசாரணை நடத்தினார்கள். ஆகவே, இதுகுறித்தும் கவனத்தில் கொள்ள வேண்டும். அந்தக் கடற்கரையில் சமீபத்தில் உள்ளாட்சித் துறையினர் சாலைகள் ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். மேலும், போதிய விளக்கு வசதிகளையும் ஏற்படுத்தித் தரவேண்டும். ஏனென்றால், உள்ளாட்சித் துறையின்மூலம் *5* சோடியம் விளக்குகளைக் கொடுத்திருக்கிறார்கள், அது போதாது. நகராட்சியினால் எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவுதான் செய்ய

முடியும். சுற்றுலாத் துறை அதை ஏற்றுக்கொண்டு, அந்தப் பகுதிக்கு மேலும் விளக்குகளை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

செய்தி-திரைப்படத் தொழிலைப் பொறுத்தவரையில் இந்தத் திரைப்படத் தொழிலில் இப்போது மிகவும் வேகமாக வளர்ந்து கொண்டிருப்பது graphic தொழில்நுட்பமாகும். Graphic தொழில்நுட்பம் சினிமா திரைப்படங்களில் மிகவும் அதிகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் நமது அரசு நடத்தக்கூடிய கல்லூரிகளிலோ அல்லது எம்.ஜி.ஆர். திரைப்பட நகரிலோ Graphic System செய்யக்கூடிய வழிவகைகள், வசதிகள் இல்லை. இதனாலே, நம்மிடம் அந்த நிறுவனங்கள் இருந்தும் நமக்கு வரவேண்டிய வருமானம் வராமல் போய் இருக்கிறது, சில இலட்சம் ரூபாயிலே அந்தக் கருவிகளை அந்த நிறுவனங்களுக்கு வாங்கிக் கொடுத்து, அதை நாம் ஏற்படுத்த முடியும். ஆகவே, இதை அரசு கவனத்திலேகொள்ள வேண்டும்.

*பிற்பகல் 12-55*

செய்தித் துறையைப் பொறுத்த அளவில், நாகூர் இரயில்வே நிலையத்தில் 'மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்த குலாம் காதர் நாவலர் பிறந்த ஊர்' என்று ஒரு பெயர்ப் பலகை இருந்தது. 1976 ஆம் ஆண்டு அடித்த புயலிலே அது சாய்ந்து விழுந்துவிட்டது. அதற்குப் பிறகு யாரும் அதை எடுத்து, தூக்கி நிறுத்தவில்லை. ஆகவே, செய்தி—திரைப்படத் துறையின் மூலமாக, மீண்டும் அந்தப் பகுதியிலே அந்த Board-ஐ வைக்க வேண்டும். மிகவும் குறைவாகத் தான் செலவாகும் அல்லது அனுமதி தந்தால் நாங்களேகூட உபயமாக செய்து கொடுத்துவிடுவோம். ஆகவே, அதுகுறித்தும் ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.

தொடர்ந்து நான் ஒன்றை சொல்லிக்கொண்டே இருக்கிறேன், திரையரங்கிலுள்ள கட்டணத்தை நீங்கள் நிர்ணயிக்காதீர்கள் என்று. அது ஒரு வியாபாரம். ஒரு பொழுதுபோக்கு. அதை அவரவர்கள் Budget-க்குத் தகுந்தமாதிரி அவர்களே நிர்ணயித்துக்கொள்ள வேண்டும். குறைந்த செலவில் எடுத்த படத்திற்கு 10 ரூபாய்க்கு டிக்கெட் விற்கும்போது அதிக் செலவில் படம் எடுத்து, ஹேராம் போன்று நல்ல உலகத் தொழில்நுட்பத்தோடு போட்டி போடக்கூடிய அளவிற்குப் படம் எடுத்தால், அதற்கும் அந்தக் கட்டணத்தைத்தான் நிர்ணயிக்க வேண்டுமென்று சொல்வது தவறான ஒரு விதிமுறை. உணவுப் பொருளிலே, மற்ற எதிலுமே கட்டுப்பாட்டை நம்மால் விதிக்கமுடியவில்லை என்னும்போது, ஏன் இதிலே மட்டும்? இது ஒரு பொழுதுபோக்கு.



இஷ்டப்பட்டால் போகிறார்கள். இல்லாவிட்டால் போகாமல் இருக்கப் போகிறார்கள். இது என்ன கட்டாயமா? மருத்துவத்திலே நாம் கை வைக்க முடியுமா? ஒரு Hospital-லில் Open heart surgery-க்கு 6 இலட்சம் ரூபாய் Charge பண்ணுகிறார்கள். இன்னொரு Hospital-லில் 1½ இலட்சம் ரூபாய் charge பண்ணுகிறார். அதிலேயெல்லாம் கட்டணத்தை நாம் கட்டாயப்படுத்த முடியவில்லை. ஆகவே இது ஒரு பொழுதுபோக்கு, இதிலே போய் அரசு தலையிட்டு, இதற்கு இப்படித்தான் கட்டணம் வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்வதன் மூலம் தொழிலே முடங்கக்கூடிய நிலை இருக்கிறது. உலகத்திலே வேறு எந்த நாட்டிலேயும் இதுபோன்ற நிலைமை இல்லை. சில தியேட்டர்களிலே வசதிகளை அதிகமாகக் கொடுப்பார்கள். அதற்குத் தகுந்த மாதிரி கட்டணங்களை வைத்துக்கொள்ளலாம். ஆகவே, அரசு சில விதிமுறைகளை விட்டுக்கொடுத்துப் போக வேண்டும். அப்பொழுதுதான் இந்த நாட்டினுடைய பொருளாதாரம் வளரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது சக பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவகத் தொழில்நுட்பப் பயிலகம் ஒன்றை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அதை அவசியம் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பத்திரிகையாளர்களுக்கு ஒரு பிரச்சினை வந்திருக்கிறது. அவர்களுக்கு ஒரு Pass கொடுக்கிறார்; போக்குவரத்துக் கழகத்திலிருந்து விடப்படுகின்ற Special bus-ல் அவர்கள் போகக்கூடாது. விழாக் காலங்களில் இருக்கின்ற பேருந்துகளில் பாதியை Special bus-ஆக மாற்றிவிடுகிறார்கள். அதிலே ஏறினால், "இது Special bus, இதிலே ஏறமுடியாது சார்" என்று சொல்கிறார்கள். அம்மாதிரி நிலைமைகளில் Ticket வாங்கிச் சென்று செய்தி சேகரிக்க வேண்டியிருக்கிறது. மேலும், அதே மாவட்டத்திற்குள்தான் இவர்கள் போக வேண்டும். அதே Bus அந்த மாவட்டத்திலிருந்து அடுத்த மாவட்டத்திற்குப் போனால் இவர்கள் போகக்கூடாது என்ற நிலைமையெல்லாம் இருக்கிறது. இதையெல்லாம் கவனத்தில்கொள்ள வேண்டும். ஏனென்றால், செய்தி நம்முடைய நாட்டு மக்களுக்குச் சென்று அடைய வேண்டியது கடமை. அது சுற்றுலாவிற்கும் பயன்படும்; மக்களுடைய அறிவு வளர்ச்சிக்கும் பயன்படும். ஆகவே, அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற அந்த Card-ஐ முறையாகப் பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு பத்திரிகையாளர்களையும் பார்த்தால், 5 Card-கள், 6 Card-கள் வைத்துக்கொள்கிறார்கள். பேருந்திலே போகும்போது,

பணத்தை எண்ணுவதைப்போல, Card-ஐ எண்ணிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நிர்வாகப் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. ஆகவே, ஒரே Card கொடுத்துவிட்டால் பிரச்சினையே இல்லை. ஒவ்வொரு பேருந்துக்கும் ஒரு Card என்று சொல்லி, எழுத்துப்பணி, அவர்களுக்குள்ள கூலி, போக்குவரத்து எல்லாவற்றிற்குமே செலவு அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, அதையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த ஆண்டு, காயிதேமில்லத் அவர்களுக்கு நினைவகம் அமைக்கப்படும் என்று அறிவித்தீர்கள். ஆனால், அதற்கான வேலை இன்னும் தொடங்கப்படவில்லை என்று அறிகின்றேன். அந்தப் பணியை தாமதப்படுத்தாமல், விரைவுப்படுத்தி, இந்த ஆண்டு திறந்து வைக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இறுதியாக, திரு. என்.ஆர். அழகராஜா.

***திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை குறித்து பேசுவதிலே நான் மகிழ்ச்சி அடைகின்றேன். ஏனென்று சொன்னால், சுற்றுலாத் துறை என்பது சிறந்த தொழில் நிறுவனங்களைக்கொண்டு, அதிகமான வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய ஒரு தொழில். அது இந்திய நாட்டிலே இருக்கக்கூடிய சுற்றுலாப் பயணிகளாக இருந்தாலும்சரி அல்லது வெளிநாடுகளிலேயிருந்து இந்திய நாட்டிற்கு வருகை புரிகின்ற சுற்றுலாப் பயணிகளாக இருந்தாலும்சரி, பல்வேறு இடங்களைப் பார்த்து இரசிப்பதோடு, இந்திய நாட்டினுடைய கலாச்சாரம், இந்திய நாட்டினுடைய மொழிகள், இந்திய நாட்டிலே கிடைக்கக்கூடிய பொருள்கள் ஆகியவற்றையெல்லாம் பார்த்து, மகிழ்ந்து அவர்கள் செல்லக்கூடிய ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தால் அவர்கள்மூலம் வரக்கூடிய வெளிநாட்டு முதலீடு ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு பார்த்தால், இது ஒரு சிறந்த தொழில் என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

*பிற்பகல் 1-00*

இந்திய நாட்டினுடைய மொத்த வருமானத்தில் சுற்றுலாப் பயணிகள் மூலமாக வரக்கூடிய வருமானம், தமிழக அரசினுடைய விளக்கக் குறிப்பிலே



குறிப்பிட்டதைப்போல, சுமார் 12,500 கோடி ரூபாய். இது இந்திய நாட்டிற்கு வெளிநாட்டிலேயிருந்து வரக்கூடிய வருமானம் என்று குறிப்பிட்டிருக்கின்றீர்கள். ஆனால், தமிழகத்திலே, சுற்றுலாத் துறையின் மூலமாக, மொத்தமாக வரக்கூடிய வருமானம் 32 கோடி ரூபாய் என்பதுதான் மிகவும் கவலைக்குரியதாக இருக்கிறது. இந்திய நாட்டிற்குக் கிடைக்கக்கூடிய 12,500 கோடி ரூபாயுடன் ஒப்பிடும்போது இந்த 32 கோடி ரூபாய் என்பது மிக மிகக் குறைவு என்பதை இந்தத் துறையின் கவனத்திற்கு நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இது இரண்டரை சதவீதம் என்கிற அளவுக்குதான் வருகிறது. இது ஏன் இவ்வாறு குறைந்து வருகிறது என்று சொன்னால், பல உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போன்று, கடந்த ஆண்டு, நிதிநிலை அறிக்கையிலே, மத்திய அரசு, மாநிலஅரசினுடைய நிதியுதவியோடு, சுற்றுலாத் துறைக்கு செய்த பணிகள், 1,482 கோடி ரூபாய் அளவுக்கு இருந்தது. அதேபோன்று, கடந்த ஆண்டு இந்த அரசு திட்டம் 2-ன் கீழ் செய்து முடித்த பணிகளுக்கான தொகையானது அதிகமாக இருந்தது. ஆனால், இந்த ஆண்டு அதுவும் பாதியாகக் குறைக்கப்பட்டு, மிகவும் குறைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட நான் ஆசைப்படுகிறேன். கடந்த ஆண்டு ரூ.36 இலட்சம்; இந்த ஆண்டு ரூ.30 இலட்சம். ஆகவே, நீங்கள் எடுத்துக்கொண்டிருக்கிற ஆர்வக் குறைவின் காரணமாக இந்தத் துறைக்கு வருமானமும் மிகவும் குறைவாக வருகிறது. ஆகவே, இந்தத் துறையிலே நீங்கள் அதிகமான ஆர்வத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், தமிழகத்திலே மட்டும் இருக்கக்கூடிய மொத்த ஜனத்தொகையில், மூன்றில் ஒரு பங்கினர், கிட்டத்தட்ட 2 கோடி பேர், பல்வேறு இடங்களுக்குச் சென்று பார்த்து, அழகை இரசித்து, தங்களுடைய பொழுதுபோக்குகளுக்காக, சுற்றுலாப் பயணிகளாக வந்து கொண்டிருப்பதாக, உங்களுடைய அரசுக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. 2 கோடி ஜனத்தொகை, சென்று வரக்கூடிய இந்தச் சுற்றுலாத் துறைக்கு, நீங்கள் செலவு செய்வது மிகவும் குறைவு. ஏன் இந்தத் துறைக்கு நீங்கள் தொகையை அதிகப்படுத்தக் கூடாது என்பதை நீங்கள் மீண்டும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டை, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, மிகவும் சிறந்த சிற்பக் கலைகள் நிறைந்த பல்வேறு கோயில்கள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆயிரம் கிலோமீட்டருக்கு மேற்கொண்டு இருக்கக்கூடிய கடற்கரை இருந்து கொண்டிருக்கிறது. இங்கேதான்

கொடைக்கானல், ஊட்டி, ஏற்காடு போன்ற சிறந்த மலைவாச ஸ்தலங்கள் இருக்கின்றன. நம்மால் இன்னும் அபிவிருத்தி செய்யப்படாமல் பல்வேறு மலைப் பிரசேதப் பகுதிகள் தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கின்றன. அதேபோன்று இந்தப் பகுதியை எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால், உலகத்திலேயே சிறந்த நீர்வீழ்ச்சியாக இருக்கக்கூடிய குற்றாலம் போன்ற பகுதிகள், கோவை மாவட்டத்திலே எடுத்துக் கொண்டால், கோவை குற்றாலம் என்று சொல்லக்கூடிய வைதேகி நீர்வீழ்ச்சி போன்ற அருவிகள், தென் தமிழகத்திலே, தேனி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், சுருளி போன்ற அருவிகள், கும்பக்கரை போன்ற அருவிகள் இருக்கின்றன. ஆகவே, பல்வேறு நீர்வீழ்ச்சிகளைக் கொண்டிருக்கக்கூடிய சிறந்த ஸ்தலமாகவும் தமிழகம் இருந்து கொண்டிருக்கிறது.

அதேபோன்று, பல வெளிநாட்டுப் பயணிகளைக் கவரக்கூடிய வன விலங்குகள் சரணாலயமும் தமிழகத்திலே சிறப்பாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இத்தகைய வளங்கள் இருந்தும்கூட, சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய அளவிற்கு தமிழக அரசு இதிலே அதிக கவனம் செலுத்தவில்லை என்பதை நான் மீண்டும் மீண்டும் தெளிவுப்படுத்த ஆசைப்படுகிறேன். இந்தப் பகுதியைப் பொறுத்தவரையில், குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நான் குறிப்பிடுகின்ற ஒருசில ஆலோசனைகளை ஏற்று இந்த அரசு முயன்று சரி செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

சாதாரணமாக, இத்தனை கோடி ஜனத்தொகை சுற்றுலாப் பயணிகளாக சென்றுவரக்கூடிய பல்வேறு ஓட்டல்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் T.T.D.C. மூலமாக நடந்து வருகிற விடுதிகளை நாம் பார்த்தோம் என்றால் மிகவும் மோசமான முறையில் அவை பராமரிக்கக்கூடிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதேபோல, 200 ரூபாய்க்கு அதிகமாக இருக்கக்கூடிய வாடகைக் கட்டணத்தை வைத்திருக்கக்கூடிய. பல்வேறு ஓட்டல்களிலே, 20 சதவிகிதத்திற்கு மேற்கொண்டு வரி செலுத்த வேண்டிய ஒரு தன்மை இருக்கிறது. அந்த வரிகளை ஓரளவு குறைத்தாலாவது, இன்னும் அதிகமாக பல்வேறு மக்கள் விடுதிகளிலே சென்று தங்குவதற்குண்டான வசதி வாய்ப்பு ஏற்படும். ஆகவே, பல்வேறு பொருள்களுக்கு வரிச் சலுகைகளை அளித்த இந்த அரசு, ஓட்டல்களிலும் 200 ரூபாய்க்கு மேற்கொண்டு வாடகைக் கட்டணம் செலுத்தக்கூடிய இடங்களுக்கு 20 சதவிகிதம் வரி என்பதைக் குறைத்து அல்லது 500 ரூபாய் 600 ரூபாய்க்கு மேற்கொண்டு



வாடகை வசூல் செய்கின்ற இடத்திற்கு 20 சதவிகிதம் வரி என்று நீங்கள் அறிவிக்க வேண்டுமாய் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல், 500 ரூபாய்க்கு மேல் உள்ளவர்களுக்குத்தான் இப்போது 20 சதவிகிதம் வரி விதிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என்.ஆர். அழகராஜா:** அப்படி என்றால் ஆயிரம் ரூபாய்க்கு மேல் உள்ள வாடகைக்கு வரி போடுங்கள்; அவ்வளவுதான்.

அடுத்து, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலமாக நடத்தப்படுகின்ற ஓட்டல்கள், பல்வேறு இடங்களிலே அவற்றை சரியாக நடத்த முடியவில்லை என்ற காரணத்தினால், அவற்றை lease-க்கு விட்டிருக்கிறார்கள். அதேபோன்று சுற்றுலாத் துறையின் மூலமாக நடத்தப்படுகின்ற பல்வேறு விடுதிகளையும் சரியாகப் பராமரிக்க முடியாத ஒரு சூழ்நிலை; இலாபகரமாக இருக்க முடியாத ஒரு சூழ்நிலை. கடந்த ஆண்டு உங்களுடைய விளக்கக் குறிப்பிலேகூட, 65 சதவிகிதம்தான் ஓட்டல்கள் நிரப்பப்படுகின்றன் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆகவே, இலாபகரமாக இல்லாத தொழிலை தொடர்ந்து நடத்த எவ்வாறு நீங்கள் ஓட்டல்களை lease-க்கு விடுகிறீர்களோ, அதேபோன்று இலாபகரமாக இயங்காத பல்வேறு இடங்களிலே, அவற்றை lease -க்கு விட்டால் அது சிறப்பாக இருக்கும்; இலாபகரமாக இருக்கும்; பல்வேறு பயணிகளுக்கும் அது பயனுள்ளதாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, தமிழகத்தினுடைய சுற்றுலாத் துறையினுடைய பல்வேறு நிலைகளிலே இருக்கக்கூடிய மக்களுக்கு, (மணியடிக்கப்பெற்றது) குறிப்பாக சுதந்திர போராட்ட வீரர்களுக்கு, முன்னாள் இராணுவ வீரர்களுக்கு 25 சதவிகிதம் மானியமாக வழங்குவது போன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் 50 சதவிகிதமாவது நீங்கள் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-05*

நான் மும்பைக்கு அருகிலே இருக்கக்கூடிய ஓர் இடத்திற்குச் சென்றேன். அங்கேயிருந்து கிட்டத்தட்ட 1½ மணி நேரத்தில் செல்லக்கூடிய ஒரு சிறிய இடம், அங்கே ஒரு சிறிய குன்று இருக்கிறது. அந்தக் குன்றுக்கு ‘மாதேரான்’ என்று பெயர். அந்தக் குன்றுக்குச் செல்கின்றவர்கள் ஒரு

குறிப்பிட்ட இடத்திற்கு மேல் உள்ளே செல்ல முடியாது. வாகனங்கள் போன்றவைகளை வெளியிலேயே நிறுத்தி விட்டு கிட்டத்தட்ட 3 கி.மீ. தூரம் உள்ளே நடந்துதான் செல்ல வேண்டும். அந்தப் பகுதியிலே பார்த்தோம் என்று சொன்னால், மிகவும் அழகான முறையிலே, சிறப்பாக அனைத்து மக்களையும் கவரக்கூடிய வகையிலே அதை அமைத்திருக்கிறார்கள். எந்தப் பகுதிக்கு செல்ல வேண்டுமென்று சொன்னாலும்கூட, அங்கே நடந்துதான் செல்ல முடியும். அல்லது குதிரைகளிலே செல்லலாம். நூற்றுக்கணக்கான ஓட்டல்களை வைத்துக்கொண்டு, ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய அளவிற்கு இருக்கிறது. நம் பகுதிகளை எடுத்துக்கொண்டால் ஏற்காடு, கொல்லிமலை, ஜவ்வாது மலை போன்ற பகுதிகளிலே அதுபோன்று செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்திலே ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே ஒன்றைச் சொல்கிறேன். சுற்றுலாத் துறையிலே இருக்கக்கூடிய அதிகாரிகளோ, அமைச்சர் அவர்களோ நான் குறிப்பிட்டிருக்கும் இடங்களுக்கு நேரில் சென்று அவைகளைப் பார்க்கலாம். பக்கத்திலே இருக்கக்கூடிய கர்நாடக மாநிலத்திலேகூட மிகவும் சிறப்பான முறையிலே...(மணியடிக்கப்பெற்றது) என்ன Sir இப்படிச் செய்கிறீர்கள்? பேச ஆரம்பிப்பதற்கு முன்பாக இப்படி Bell அடித்து கொண்டிருக்கிறீர்களே!

அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய தண்டேலி என்பது ஒரு Tourism இடம். வனத் துறையினர் இதை maintain பண்ணுகிறார்கள். அதேபோன்று தட்சண கன்னடாவிலேகூட குந்தாபூர் என்ற ஒரு கடற்கரை பகுதி. அந்தப் பகுதியிலே அந்த ஊர் மக்களாலேயே நடத்தப்படுகின்ற ஓட்டல் இருக்கிறது. வெளி ஆட்கள் யாரையும் அந்தப் பகுதிக்குள் அனுமதிப்பது கிடையாது. அந்தப் பகுதியிலே, வெளி ஆட்கள் யார் சென்றாலும் சரி, தூய்மையான பகுதியாக அதை அறிவித்து இருப்பதால் Plastic பொருட்களையோ அல்லது மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக அறிவிக்கப்பட்டு இருக்கக்கூடிய பல்வேறு பொருட்களையோ, அந்தப் பகுதிகளிலே உபயோகப்படுத்துவதே கிடையாது. அதேபோன்று, நீங்கள் ஒருசில பகுதிகளை, குறிப்பாக மாமல்லபுரம், குற்றாலம், கொடைக்கானல், ஊட்டி போன்ற இடங்களைத் தேர்வு செய்து, மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினால் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கின்ற பல்வேறு இடங்களைப்போன்று, அங்கேயும் அத்தகைய பொருட்கள் உபயோகப்படுத்தக் கூடாது என்பதை அறிவிக்கலாம்.



அடுத்து, இப்போது சில இடங்களை Temple City என்ற அறிவித்திருக்கிறார்கள். அதுபோல ஒருசில இடங்களை Model City என்று அறிவிக்கிறார்கள். அதேபோல, நீங்களும், சுற்றுலாத் துறைக்கென சட்டதிட்டங்களை ஏற்படுத்தினால் உள்ளாட்சி மன்றங்கள் அவைகளை நிறைவேற்றித்தான் ஆக வேண்டும். அதற்குத் தகுந்த நிதியாதாரங்களை நாங்கள் அளிக்கிறோம் என்று சொல்ல வேண்டும். அப்படி நீங்கள் அறிவித்து, அந்தப் பகுதிகளிலே வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளை மேற்கொண்டு கவரக்கூடிய அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், எங்கள் மதுரை மாவட்டத்தைப் பொறுத்தஅளவில், முன்பு கொடைக்கானல், பழனி, மதுரை போன்ற சுற்றுலாத் தலங்கள் இருந்தன. தேனி மாவட்டம் தனியாகப் பிரிந்ததற்குப் பின்னால், அந்த மாவட்டத்திலே சுற்றுலாத் தலமாக எந்தப் பகுதியும் இல்லை. ஆகவே, அந்த மாவட்டத்திலே, மிகவும் அழகாக நீர்வீழ்ச்சிகள் இருக்கக்கூடிய கும்பக்கரை, சுருளி போன்ற தலங்களை நீங்கள் அழகுபடுத்தலாம். பக்கத்திலே போடிமெட்டிலே இருக்கக்கூடிய இடம் அல்லது Highways இடம் போன்ற இடங்களிலும், தனியார் நிலங்கள் போன்ற ஒருசில இடங்களையும் தேர்ந்தெடுத்து அந்தப் பகுதிகளையும் நீங்கள் சுற்றுலாத் தலங்களாக அறிவிக்கலாம் என்பதை நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நிலக்கோட்டையிலே அணைப்பட்டி என்ற ஒரு சிறிய மிகவும் அருமையான ஸ்தலம் இருக்கிறது. அங்கே ஆஞ்சனேயர் கோயில்கூட மிகவும் பிரசித்தி பெற்றதாக இருக்கிறது. அதையும் நீங்கள் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

குறிப்பாக சோழவந்தான் பகுதியிலே பொங்கல் சமயங்களிலே ஜல்லிக்கட்டு நடக்கின்றபோது, பல்வேறு வெளிநாட்டுப் பயணிகளைக் கவரக்கூடிய வகையிலே, வசூல் செய்து, அவர்களுக்கு அங்கே மேடைகளை அமைத்து ஏற்பாடு செய்வதைப்போன்று, மேற்கொண்டு பல இடங்களிலே ஜல்லிக்கட்டு வீரர்கள் சாகசங்கள் செய்கின்ற இடங்களைத் தேர்வு செய்து, அங்கேயும் இதுபோன்ற வெளிநாட்டுப் பயணிகளைக் கவரக்கூடிய அளவிற்கு ஜல்லிக்கட்டு தலங்களை உருவாக்கலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்ரீவில்லிபுத்தூர், திருவாரூர் போன்ற இடங்களிலே தேர்த் திருவிழா என்பது மிகவும் பிரசித்தி பெற்ற ஒரு சிறப்பான நிகழ்ச்சி. அதுபோன்று, தேர்த் திருவிழா மிகவும் சிறப்பாக நடக்கக்கூடிய ஒருசில கோவில்களை தேர்வு செய்து, அந்தத் தேர்த் திருவிழா நடைபெறுகின்றபோது, வெளிநாட்டுப்

பயணிகளையும் வேறு மாநிலங்களிலிருந்து வரக்கூடிய பயணிகளையும் கவரக்கூடிய அளவிற்கு நீங்கள் செய்யலாம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

மதுரையிலே புதுமண்டபம் போன்ற இடங்களிலே ஒளி விளக்குகளுக்கு ஏற்பாடு செய்வதோடு ஒருசில இடங்களிலே, வெளிமாநிலங்களிலே இருந்து, வரக்கூடிய பயணிகள் ஓட்டல்களிலே தங்குவதற்கு அவர்களால் முடியாத பட்சத்தில், ஒருசில நண்பர்கள் வீட்டிலே Paying Guest-ஆக தங்கக்கூடிய ஒரு வாய்ப்பிருக்கிறது. அந்தமாதிரி Paying Guest-ஆக தங்கக்கூடிய list-ஐ நீங்கள் announce செய்ய வேண்டும். இராஜஸ்தான் போன்ற மாநிலங்களிலே அப்படிச் செய்கிறார்கள். எப்படிச் செய்கிறார்கள் என்றால், Paying Guest— ஆக தங்கக்கூடிய வீட்டிலே A.C. செய்யப்பட்டிருக்கிறதா, கழிவறைகள் எப்படி இருக்கிறது என்பதைப் பார்த்து, அதுபோன்ற வசதிகள் இருக்கக்கூடிய ஒரு வீட்டிலே Paying guest-ஆகத் தங்குவதற்கு ஒப்புக்கொண்டார்கள் என்று சொன்னால், வீட்டினுடைய தன்மையைப் பொறுத்து 25 ரூபாயோ 50 ரூபாயோ அல்லது 100 ரூபாயோ என்று நிர்ணயம் செய்து அதுபற்றிய list-ஐ சுற்றுலாப் பயணிகளுக்குத் தருகிறார்கள். அதேமாதிரி நம்முடைய சுற்றுலாப் பயணிகளுக்கு நீங்களும் list ஒன்றை எடுத்து விநியோகம் செய்தால், அதுபோன்ற வீடுகளிலே Paying Guest-ஆகத் தங்குவதற்கு அவர்கள் வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்வார்கள். நம் மாநிலத்திற்கும், மற்ற மாநிலங்களுக்கும் இடையே உறவுகள் மேம்பாடு அடைவதற்கும் ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுற்றுலாத் தலங்களிலே போதுமான கழிப்பறை வசதிகள் இல்லாத நிலைமை இருக்கிறது. உடனடியாக சுற்றுலாத் தலங்களில் கழிப்பறை வசதிக்கு ஏற்பாடு செய்வதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்கிறேன்.

பல Tourist Centre-களுக்குப் போனால், T.T.D.C. ஹோட்டல்களாக இருந்தாலும்சரி, Tourist Office-க்குப் போனாலும்சரி, ஒன்றை வருத்தத்துடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன், தமிழகத்திலே இருக்கக்கூடிய அத்தனை சுற்றுலாத் தலங்களுடைய, Tourist Spot-களினுடைய முழுமையான விவரங்கள் எந்தப் பகுதியிலேயும் கிடைப்பதில்லை. ஏதோ ஒன்றிரண்டு pamphlets வைத்து இருக்கிறார்கள். ஆகவே, முழுமையாக, அத்தனை இடங்களிலேயும் போதுமான அளவிற்கு நீங்கள் supply செய்ய வேண்டும்.



அடுத்து, தமிழகத்திலே Automobile Association என்று ஒன்றை வைத்து இருக்கிறார்கள். அங்கே, ஒரு Sector-ல் இருந்து இன்னொரு Sector-க்கு போக road map போடுகிறார்கள். ஒரு Sector-ல் இருந்து இன்னொரு Sector-க்கு road map போடும்போதே, எத்தனாவது கிலோமீட்டரில் பாலம் இருக்கிறது. எத்தனாவது கிலோமீட்டரிலே Tourism Centre இருக்கிறது, எங்கே ஆறு இருக்கிறது, என்னென்ன Centre-க்கு எப்படி எப்படிப் போகலாம் என்பதைப் பற்றியெல்லாம் detail-ஆக map போட்டு, Automobile Association-லே ஒன்று கொடுக்கிறார்கள். அதேபோல, சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய அளவிற்கு ஒரு சிறிய புத்தகத்தை வெளியிட்டு, சுற்றுலாத் தலங்களை தேர்வு செய்து ஒரு சுற்றுலாத் தலத்திலிருந்து இன்னொரு சுற்றுலாத் தலத்திற்கு எவ்வாறு செல்லலாம், செல்வதற்குண்டான வசதிகள், பேருந்து வசதிகள், இரயில்வே வசதிகள் போன்ற வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு, இந்த அரசு என்ன முயற்சி செய்திருக்கிறது, என்னென்ன வசதிகள் இருக்கிறது என்பதைத் தெளிவாக ஒரு map-ஆக போட்டு ஒரு சிறிய புத்தகம் வெளியிட்டு, எந்தப் பகுதியிலேயும் கிடைக்கக்கூடிய அளவிற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன். பல இடங்களிலே இது போன்று கிடைக்கின்ற வசதிகள் இல்லாத காரணத்தால், பல்வேறு கஷ்டங்கள் ஏற்படுகின்றன.

அடுத்து, சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய பல இடங்களுக்கு, வெளிநாட்டுப் பயணிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், மாமல்லபுரம், மதுரை, கொடைக்கானல் போன்ற இடங்களுக்கு வருகிறார்கள். அங்கே proper-ஆக Tourist Guide-கள் இல்லை. ஹோட்டல் நடத்துவது எப்படி, Management செய்வது எப்படி என்று வருடாவருடம் நீங்கள் ஒரு Training கொடுக்கின்றீர்கள். அதேபோன்று தமிழகத்திலே இருக்கக்கூடிய Tourist Centre-களுக்கெல்லாம், ஒரு Tourist Guide எப்படி விளக்குவது, எந்தெந்த இடங்களை வெளிநாட்டுப் பயணிகளுக்கோ அல்லது உள்நாட்டுப் பயணிகளுக்கோ சென்று காண்பிக்க வேண்டும், அதனுடைய சிறப்புத் தன்மைகள் என்ன, யாரால் கட்டப்பட்டது, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமா அல்லது வேறு சிலபல இடங்கள் என்றோ காட்டி (மணியடிக்கப்பெற்றது) அதற்கு ஒரு மணி நேரத்திற்கு இவ்வளவு என்று ஒரு fees fix பண்ணுங்கள். ஏனென்றால், பல வெளிநாட்டுப் பயணிகளை, ஏதோ Tourist Guide என்று சொல்லிக்கொண்டு கூட்டிக் கொண்டு போகிறார்கள், ஏமாற்றுகிறார்கள், என்னமோ சொல்கிறார்கள், கொண்டுபோய் விடுகிறார்கள். வெளிநாட்டுப் பயணிகளைக் கவரக்கூடிய அளவிற்கு, ஆங்கிலத்திலே மிகவும் சிறந்த முறையில் பேசக்கூடியவர்களை Tourist Guide-ஆக நியமிக்க வேண்டும்.

ஏனென்றால், அவர்களிடம் பேசும்போது, தமிழிலே பேசிக் கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் என்னமோ பேசுகிறார்கள், அவர்கள் என்னவோ சொல்கிறார்கள், என்னவோ அரைகுறையாகப் புரிந்துகொண்டு போகிறார்கள். ஆகவே Tourist Guide-களை நியமிக்கின்றபொழுது, ஒரு மணி நேரத்திற்கு இவ்வளவு என்று Tourism Centre-களிலே நிர்ணயம் செய்து, அவர்கள் அனுமதி வழங்கப்பட்ட Tourist Guide-களாக இருப்பதற்கு நீங்கள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) கடைசியாக, ஒரு நிமிடம்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இன்னும் இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழ் மறையாம், திருக்குறளை இயற்றிய அய்யன் திருவள்ளுவருக்கு குமரிமுனையிலே சிலை எழுப்பியவரும், உலகத் தமிழ் மக்களின் உன்னதத் தலைவரும், தமிழக மக்களின் நலனுக்காக, நமக்கு நாமே திட்டம், வருமுன் காப்போம் திட்டம், சமத்துவபுரம், உழவர் சந்தை போன்ற பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி, மக்கள் இதயத்தில் நீங்காத இடம் பெற்ற தலைவரும், எங்களது குடும்பத் தலைவருமான தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், இனமானப் பேராசிரியர் கல்வி அமைச்சர் அவர்கள் மற்றும் வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் ஆகியோரின் நல்லாசியுடன் இந்த மாமன்றத்தில் ஐந்தாவது முறையாக சுற்றுலாத் துறையின் மானியக் கோரிக்கையை அளித்து விவாதத்திற்கு பதிலளிக்க வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2000-2001 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின் விளக்கக் குறிப்பு ஏற்கெனவே இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதுகுறித்த விவாதத்தில் 9 மாண்புமிகு உறுப்பினர்கள் பங்கேற்று தங்களது அரிய கருத்துகளை வழங்கியிருக்கிறீர்கள். வெட்டுத் தீர்மானங்களைப் பொறுத்தமட்டில் 60 பேர்கள், இந்தத் துறை மேற்கொண்டு என்னென்ன பணிகளை ஆற்ற வேண்டுமென்று எடுத்துக்கூறியும், விளக்கியும் இருக்கிறீர்கள். 9 உறுப்பினர்கள் என்னென்ன பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், பணியாற்றுகின்றபோது, என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன, அவற்றை எப்படி நிவர்த்தி செய்ய வேண்டுமென்றும் தங்களது அரிய



கருத்துகளை எடுத்து வைத்தீர்கள். உங்களுடைய கருத்துகளை நிச்சயமாக இந்தத் துறை கவனத்தில்கொண்டு வருகிற காலகட்டத்தில் இந்தக் குறைகளைப் போக்கக்கூடிய அளவிற்கு நிச்சயமாகப் பணியாற்றும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 1-15*

மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் இங்கே பேசுகின்றபோது சுற்றுலாத் துறையின் சார்பாக குறைந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்று பத்திரிகையில் எழுதியிருந்ததை எடுத்துக்கூறி மேலும் இந்தத் துறைக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்பதைச் சுட்டிக் காண்பித்துப் பேசினார்கள்.

இந்தத் துறைக்கு 4 ஆண்டு காலத்தில் Plan Scheme என்று சொல்லக் கூடிய வகையில் ரூ.14.74 கோடியும, Non-Plan Scheme என்று சொல்லக்கூடிய வகையில் ரூ.10.44 கோடியும், மொத்தம் 25.18 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, குறைந்த நிதி ஒதுக்கீடு இருந்தாலும்கூட, வருகிற காலங்களில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே உங்களுடைய கருத்துகளையும் எடுத்து வைத்து மீண்டும் அதிகமான நிதியை ஒதுக்கக்கூடிய அளவிற்கு இந்தத் துறை பணிகளை மேற்கொள்ளும் என்ற உறுதியை இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல அரிய கருத்துக்ளை பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். சில இடங்களை சுற்றுலாத் தலங்களாக அறிவிக்க வேண்டுமென்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஓர் இடத்தை சுற்றுலாத் தலமாக அறிவிப்பது என்பது சுற்றுலாத் துறையால் கொள்கை அளவில் முடிவு எடுக்கப்படுவதல்ல. ஏன் என்று சொன்னால், அதிகமான பயணிகள் வருகின்றபோது, அவர்களுடைய ஆர்வத்தின் அடிப்படையில் அங்கே வருகின்ற பயணிகளின் அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு சுற்றுலாத் துறை கடந்த 4 ஆண்டுகளாக பணிகளை ஆற்றிக் கொண்டு வந்திருக்கிறது. இருந்தாலும்கூட, நிறைய இடங்களில் பணிகளை ஆற்ற வேண்டும். அந்த அளவிற்குப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

நம்முடைய நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் சுற்றுலாத் துறை பெரும் பங்கு வகிக்கிறது. சுற்றுலாத் துறையைப் பொறுத்தமட்டில் குறைந்த வருவாயில் அதிகமான வேலைவாய்ப்பை அளிக்கக்கூடிய ஒரு துறையாக விளங்கிக்கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், ஜாதி மதத்திற்கு அப்பாற்பட்டு, வேற்றுமையிலும் ஒற்றுமை காணும் நோக்கத்துடன்,

எம்மதமும் சம்மதம் என்ற கொள்கையுடன் சுற்றுலாத் துறை சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது. அதுபோன்று விருந்தோம்பல் பண்பை வளர்த்து, அந்நியச் செலாவணியை அதிக அளவில் ஈட்டி, நேரடி மற்றும் மறைமுகமான வேலைவாய்ப்புகளைப் பெருக்கி, கைவினைப் பொருட்கள் மற்றும் கலைப் பொருட்களின் உற்பத்திக்கு ஊக்கமளித்து, மனித நேயம் ஓங்கவும், தேசிய ஒருமைப்பாடு வலுப்பெறவும் சுற்றுலா இயக்கம் முன்னோடியாக விளங்கி வருகிறது.

ஆண்டுக்காண்டு தமிழகத்திற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போகிறது. அதுபோன்று வெளிநாட்டுப் பயணிகளுடைய எண்ணிக்கையும் அதிகரிக்கக்கூடிய அளவிற்கு சுற்றுலாத் துறை பணிகளை மேற்கொண்டு வருகிறது. சுற்றுலாத் துறையில் தனியார் முதலீட்டை ஊக்குவிக்க வேண்டும் என்ற அடிப்படையில் இதுவரை கடந்த 4 ஆண்டுகளாக, 147.69 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

தனியார் யாராவது விடுதிகளைக் கட்டுவதற்கு முன்வருவதாக இருந்தால், துறையின் சார்பாக 10 சதவிகிதம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. அதேபோன்று, மைய மாநில அரசுகளுடைய நிதி உதவியுடன் 1998-99 ஆம் ஆண்டு 661 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 12 திட்டங்களும், அதுபோன்று, 1999-2000 ஆண்டிலும் 899.38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 26 சுற்றுலாத் திட்டங்களும் முன்னுரிமை செய்யப்பட்டு, திட்டங்கள் செயல்படுத்தப்படவிருக்கின்றன. அதுபோன்று சுற்றுலா வளாகம், சுற்றுலாப் பற்றிய Hand Book தமிழகத்தில் ஒழுங்காகப் பராமரிக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அழகராஜா அவர்கள்கூட குறிப்பிட்டு, அதை ஒழுங்காகப் பராமரிக்க வேண்டுமென்று எடுத்துக் கூறினார்கள். எனவே, வருகின்ற பயணிகள் அத்தனைபேரும் தமிழகத்தினுடைய சுற்றுலா சார்பான செய்திகளைக் கண்டு அறிவதற்காக சுற்றுலா வளாகம் கட்டுவதற்காக கடந்த நிதி ஆண்டில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் 250 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு கலைவாணர் அரங்கத்திற்கு அருகில் கலைஞர் அவர்களாலே அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. வருகிற டிசம்பர் மாதத்திற்குள் பணிகள் முடிவடைந்து நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களின் திருக்கரங்களாலே திறந்து வைக்கப்பட இருக்கிறது.



அடுத்து, நீலகிரி மாவட்டத்திற்கு மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2000-2001-ல் சுமார் 40 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வருகின்ற பயணிகளுக்கு அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

கடந்த 4 ஆண்டுகளில் நீலகிரி மாவட்டத்திற்கு மட்டும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் முபாரக் அவர்களுடைய ஆர்வத்தின் அடிப்படையிலும், அவர்களுடைய வேண்டுகோளையும் ஏற்று 214 இலட்சம் ரூபாய்க்கான பணிகள் நிறைவு அடைந்து மக்கள் பயன் அடையக்கூடிய அளவிற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. வருகிற நிதி ஆண்டிலும் 40 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. கிழக்குக் கடற்கரைச் சாலையைப் பொறுத்தமட்டில், அதற்குக் கிழக்குப் பகுதிகளில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளக் கூடாது என்று மத்திய அரசு தடை விதித்திருக்கிறது. தனியார் முதலீட்டை ஊக்கவிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்தத் தடைகளை நீக்குவதன் மூலமாக 1,000 கோடி ரூபாய்க்கான முதலீடுகளின் மூலமாக சுற்றுலாத் துறை மேலும் வளர்ச்சி அடையக்கூடிய அளவிற்கு ஒரு வாய்ப்பை உருவாக்க வேண்டுமென்று நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களிடத்திலே எடுத்துக்கூறியதன் அடிப்படையில் கலைஞர் அவர்களும் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, அந்த விதிகளைத் தளர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க மத்திய அரசால் சில நிபந்தனைகளுடன் அந்த விதிகள் தளர்த்தப்பட்டு இருக்கின்றன என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த விதிகளைத் தளர்த்துவதன் மூலமாக மகாபலிபுரத்திலிருந்து பாண்டிச்சேரி வரை சுமார் ரூ.1,000 கோடிக்கான தனியார் முதலீட்டை ஊக்குவிக்கக்கூடிய அளவிற்கு பணிகள் வருகின்ற நிதி ஆண்டிலும், வருகின்ற கால கட்டங்களிலும் உருவாகும். எனவே அந்த வகையிலும் என் சார்பாகவும், துறையின் சார்பாகவும் இந்த நேரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-20*

அடுத்து நாட்டிய விழா. தமிழகத்தினுடைய கலை, பண்பாட்டை, கலாச்சாரத்தை தெரிவிக்கக்கூடிய அளவிற்கு தமிழகத்தில் பல இடங்களில் துறையின் சார்பாக நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மகாபலிபுரத்தைப் பொறுத்தமட்டில் வருடத்திற்கு சுமார் 30, 40 நாட்கள் நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்

கொண்டிருக்கின்றன. அதிகமான வெளிநாட்டுப் பயணிகள் பாராட்டக்கூடிய அளவிற்கு நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த புத்தாயிரம் ஆண்டைப் பொறுத்தமட்டில் தமிழகத்தில் மாமல்லபுரம், தஞ்சாவூர், மதுரை, கன்னியாகுமரி ஆகிய சுற்றுலாத் தலங்களில், மைய மாநில அரசுகளின் நிதியுதவியுடன் தமிழகத்தின் கலை, கலாச்சாரப் பண்புகளை விளக்கிடும் வகையில் விழாக்கள் சிறப்பாக நடைபெறத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் ஒருங்கிணைந்த சுற்றுலா வளர்ச்சித் திட்டம் இன்றியமையாதது என்று கருதி, அதற்கு ஒரு பெரும் திட்டத்தை Master Plan என்று சொல்லக்கூடிய அளவிற்கு பெரும் திட்டத்தைத் தீட்டுவதற்கு மாநில அரசு அனுமதி அளித்திருக்கிறது.

அதுபோன்று உலகமெல்லாம் தகவல் தொழில்நுட்பப் புரட்சி ஏற்பட்டுவரும் தருணத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கு, சுற்றுலாத் தகவல் அளிக்கவும், ஓட்டல் அறைகளை முன்கூட்டியே பதிவு செய்யவும், திட்டம் தீட்டுவதற்கு வசதியாக 14 இடங்களில் கணினி வசதி செய்யப்பட்டிருக்கிறது.

அதுபோன்று சுற்றுலாப் பயணிகளுக்கு Web-site வசதி, E-Mail வசதி, இதுபோன்ற பல வசதிகள் சுற்றுலாத் துறையின் சார்பாக செய்யப்பட்டதன் மூலமாக கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இருந்து இன்று வரை சுமார் 20,000 பேருக்கு மேல் வெளிநாட்டு, உள்நாட்டுப் பயணிகள் பயனடைந்திருக்கிறார்கள்.

இதுபோன்று மேலும் Network வசதிகளை செய்வதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. இங்கே பேசுகின்ற உறுப்பினர்கள்கூட சுற்றுலாத் துறையின் சார்பாக நடத்தப்படுகின்ற விடுதிகளில் அதிகமான வாடகை வசூலிக்கப்படுகிறது என்ற குறையைக் கூறினார்கள். எனவே குறைந்த வாடகையில் ரூ. 50 அளவிற்கு—Youth Hostel—இளைஞர் விடுதி, தமிழகத்தில் சுற்றுலாத் துறையின் சார்பாக நடத்தப்படுகிறது. அந்த வசதியை ஏழை எளிய மக்களும் பயன்படுத்தக்கூடிய அளவிற்கு நல்லமுறையில் பராமரித்து வருகிறது.

அடுத்து 19 தமிழ்நாடு ஓட்டல்கள் தனி உரிமம் அடிப்படையில் தனியாருக்கு அனுமதி வழங்க முடிவு செய்யப்பட்டு, மண்டபம், கொடைரோடு, திருப்பெரும்புதூர், வைகை அணை ஆகிய இடங்களில் உள்ள ஓட்டல்கள் தனியாரிடம் ஒப்படைக்கப்பட உள்ளன. எஞ்சிய பதினைந்து ஓட்டல்களையும் தனியாருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



சுற்றுலாத் துறையின் சார்பாக தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகம், கோவா, பாண்டிச்சேரி, கேரளா, வட மாநிலங்களான பீகார், உத்திரப்பிரதேசம் மற்றும் மகாராட்டிரம் ஆகிய மாநிலங்களை உள்ளடக்கிய 26 பயணத் திட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவை போக, வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் தேவை, ஆர்வத்தின் அடிப்படையில், வேறு பல திட்டங்களும் சுற்றுலாத் துறையின் மூலமாகத் தீட்டப்பட்டு வந்து கொண்டிருக்கின்றன.

கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் தமிழகத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள பணிகளில் முத்தான சில திட்டங்களை இங்கே தெரிவிப்பது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகள் மேம்படுத்தப்பட்டிருக்கின்றன. பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையில் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகள் மேம்படுத்தப்பட்டிருக்கின்றன. 14 ஆண்டுகளாக நிலுவையில் இருந்த ஒகேனக்கல் சுற்றுலாத் தலத்தில் தொங்கு பாலம் முடிக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. குற்றாலத்தில் படகுக் குழாம் அமைத்தல், சிற்றுண்டி விடுதி கட்டுதல், முக்கொம்பில் சுற்றுலா மையம் ஏற்படுத்தி வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மாமல்லபுரம் சாலைகளில் சோடியம் விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சென்னையிலிருந்து மாமல்லபுரம் வரை வருகின்ற பயணிகளுக்கு எந்தவிதமான இடைஞ்சலும் இன்றி கஷ்டமில்லாமல் ஒழுங்காகச் செல்ல வேண்டுமென்ற அடிப்படையில் வழிகாட்டிப் பலகைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கனவை நனவாக்கும் விதத்திலேயும், கும்பகோணம் மகாமகக் குளத்திலும், செங்கற்பட்டுக்கு அருகிலுள்ள கொளவாய் ஏரியிலும் படகு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சுற்றுலாத் துறையில் கணினி வசதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. திற்பரப்பு, மனோரா, சுருளி அருவி, புளியஞ்சோலை, பாபநாசம், வாணியாறு, திருப்புடைமருதூர் ஆகிய சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

அண்டை மாநிலங்களைச் சார்ந்தவர்களின் வருகைகளை அதிகரிக்கக் கூடிய அளவிற்கு பெங்களூர், திருவனந்தபுரம், ஹைதராபாத் ஆகிய இடங்களில் சுற்றுலாத் தகவல் மையம் தொடங்கப்பட்டிருக்கிறது. இதன்

மூலமாக பக்கத்து மாநிலத்தைச் சார்ந்தவர்களும் அதிகமாக தமிழகத்திற்கு வருகின்ற வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது.

*பிற்பகல் 1-25*

அதுபோன்று மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக கட்டமைப்பு, அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்காக இதுவரை ரூ.214.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதுபோன்ற பல பணிகளை சுற்றுலாத் துறை கடந்த நான்கு ஆண்டுகளாக மேற்கொண்டு வந்துள்ளது. வருகிற நிதி ஆண்டில், 2000-2001 ஆம் ஆண்டிற்கான, நம்முடைய முதல்வர் அவர்களது அரிய ஆலோசனைப்படி பல திட்டங்களை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பூம்புகார் சுற்றுலா வளாகத்தை மேலும் செம்மைப்படுத்துதல், பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் மின் இணைப்புகளை மேம்படுத்துதல், சுற்றுலாத் துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்தல், சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலாத் தகவல் மையங்களை மேம்படுத்துதல், மனோராவில் நிலச் சீரமைப்பு மற்றும் அழகுபடுத்துதல், வண்ணமிகு சுற்றுலா வெளியீடுகள், வரைபடங்கள், பட அஞ்சல் அட்டைகள், சுவரொட்டிகள், தமிழ்நாடு சுற்றுலா பற்றிய விவரங்கள் அடங்கிய மென்தட்டு—CD-ROM—ஆகியன வெளியிடவும், செய்தித்தாளில் வெளியிடவும், அதேபோன்று விழாக்கள், பொருட்காட்சிகள், நடன நிகழ்ச்சிகள் போன்றவற்றை நடத்தவும் சுற்றுலாத் துறை பணிகளை மேற்கொள்ள இருக்கின்றது. அதேபோன்று அதிகமான அளவுக்கு தனியார்களை ஊக்குவிக்கக்கூடிய அளவுக்கு மானியத்திற்காக அதிகமான நிதிகளை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். துறையின் சார்பாக திருச்சிராப்பள்ளி துவாக்குடியில் உணவக தொழில்நுட்பப் பயிலகத்திற்கு 11 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இறுதியாக, 'மதுரை, தஞ்சாவூர், கொடைக்கானல், மாமல்லபுரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களை நட்சத்திரத் தரத்திற்கு மேம்படுத்தி, அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய அளவுக்கு பணிகளை மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தி, இங்கே வெட்டுப் பிரேரணைகளில் கொடுக்கப்பட்டுள்ள கருத்துகள் யாவும் கவனத்தில் கொள்ளப்படும் என்று கூறி, அவற்றை வலியுறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்வதோடு,



சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கை எண் 50-ஐ நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மணி இப்போது 1-26 ஆகிவிட்டது. ஒருவருக்கு அனுமதி கொடுத்தால் எல்லோருக்கும் அனுமதி கொடுக்க வேண்டும். அதனால் மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆடும் குமரியில் அலைகடல் நடுவில் அய்யன் திருவள்ளுவருக்குச் சிலை திறந்து, 2000 ஆண்டு தொடக்கத்தின் முதல்நாளில் உலகத்தில் சாதனை படைத்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கும், நம்முடைய இனமான பேராசிரியப் பெருந்தகை அவர்களுக்கும், வணக்கத்திற்குரிய சென்னை மாநகரத் தந்தை அவர்களுக்கும் முதலில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, இன்றையதினம் நடைபெறுகின்ற செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை மானியத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கின்ற வாய்ப்பை வழங்கியதற்கு மீண்டும் ஒரு முறை நன்றி தெரிவித்து, என்னுடைய கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலில் அச்சுத் துறையைப் பொறுத்தவரையில் விஞ்ஞான உலகத்தின் நுழைவு வாயிலாக இருப்பது அச்சுத் துறைதான். அக்பர் காலத்திலேயே பைபிள் அச்சடிக்கப்பட்டு அக்பரிடத்திலே கொடுத்தபோது அதைப் பெருமையோடு பெற்றார் என்றும், ஆனால் அதற்குப் பிறகு ஆங்கில ஆதிக்கத்தின் காரணமாக நம்முடைய நாட்டில் விஞ்ஞானமயமான எல்லா முன்னேற்றங்களையும், எதிர்த்தவர்கள் அச்சுத் துறையையும் எதிர்த்த காரணத்தால் அன்றையதினம் அச்சுக் கலை நம்முடைய மாநிலத்தில் வளராமலேயே போயிற்று. அதற்குப் பின்னால் தேசிய இயக்கமும், திராவிட இயக்கமும் அச்சுக் கலையைத் தன்னுடைய கையிலே ஏந்திய காரணத்தால் அது வளர்கிற வாய்ப்பைப் பெற்றது. சீர்திருத்தச் செம்மலாக இருந்த இராஜாராம் மோகன்ராய் அவர்கள் அச்சுக் கலையைப் பயன்படுத்தி மூட நம்பிக்கையை ஒழிக்கின்ற நிலைக்குத் தன்னை ஆளாக்கிக்கொண்டார்கள். அவரைத் தொடர்ந்து நம்முடைய தந்தை பெரியார் அவர்களும், பெரியாரைத் தொடர்ந்து பேரறிஞர் அண்ணா அவர்களும், அவரைத் தொடர்ந்து நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களும் அச்சுக் கலையைத் தங்களுக்கு உரியதாக்கிக்கொண்டு

பகுத்தறிவுக் கருத்துகளையும், சுயமரியாதை உணர்வுகளையும், நாட்டுப் பற்றையும், மொழிப் பற்றையும், இனப் பற்றையும் ஊட்டுகின்ற அளவுக்கு புத்தகங்களை உருவாக்கி அச்சுத் துறையின் மூலம் ஒரு கலையை வளர்த்து, அச்சுக் கலையால் உருவாக்கப்பட்ட எழுத்துகளின் மூலம் நாட்டில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தை உருவாக்கினார்கள். அப்படிப்பட்ட அச்சுத் துறை அரசினுடைய இன்றியமையாத பணிகளை மாத்திரம் நிறைவேற்றுவதற்காக சென்னையில் ஒரு மைய அச்சகத்தையும், அதேபோல உயர்நீதிமன்றத்தில் ஒரு கிளை அச்சகத்தையும், 5 மாவட்டங்களில் 5 அச்சகங்களையும் உள்ளடக்கியதாக இப்போது செயலாற்றிக்கொண்டு இருக்கிறது. இந்தத் துறைமீது மாண்புமிகு உறுப்பினர் 16 அல்லது 17 பேர்கள் பல்வேறு தீர்மானங்களைத் தந்திருக்கிறார்கள்.

ஒட்டுமொத்தமாக அவர்கள் கேட்டிருப்பதெல்லாம் நவீனமயமாக்கப்பட வேண்டும் என்பதுதான். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய கிளை அச்சகம் நவீனமயமாக்கப்பட்டு Web offset இயந்திரங்கள் வாங்கப்பட்டு, கணினிமயமாக்கப்பட்டு சிறந்த முறையில் குறிப்பிட்ட கால எல்லைக்குள் அச்சிட்டு வழங்கிக்கொண்டிருக்கிறோம். அதேபோல சேலமாக இருந்தாலும், மதுரையாக இருந்தாலும் அவை இப்பொழுது நவீனமயமாக்கப்பட்டிருக்கின்றன. மற்ற அச்சகங்களைப் படிப்படியாக நவீனமயமாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். அதுபோல பொருட்களை வாங்குவதைப் பொறுத்தவரையில், ஒப்பந்த அடிப்படையிலே பெற்று அவற்றைத் தரம் நிர்ணயம் செய்துதான் வாங்குகிறோம். அதேபோல I.S.I. முத்திரையுடன் கூடிய படிப்பெருக்கித் தாள்கள், மை குழல்கள், கார்பன் தாள்கள் போன்றவற்றையும் முறையாக, விதிமுறைக்குட்பட்டு வாங்கிக்கொண்டு இருக்கிறோம். பழைய பொருட்களைக் கழித்து விற்கிறபோது ஏல முறையில் விற்கப்படுகிறது. இங்கே பணியாளர்கள் நிரந்தரமானவர்கள் இருக்கிறார்களே தவிர நிரந்தரம் அற்றவர்கள் அல்லது தினக்கூலி அடிப்படையில் யாரும் நியமிக்கப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் கடந்த ஆண்டு கண் பார்வையற்றோருக்கு வேலை வழங்க வேண்டுமென்று அறிவித்ததன் அடிப்படையில் இந்தத் துறையின் மூலமாக 14 பேருக்கு சென்னை அச்சகத்திலே வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.



பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** துணைத் தலைவர் அவர்களே, கலைஞர் அரசைப் பொறுத்தவரையில் அச்சுத் துறையில் ஏற்பட்டுவரும் நவீன தொழில் நுட்ப வளர்ச்சியினை இத்துறை கூர்மையாகக் கவனித்து புதிய தொழில் நுட்பத்தோடுகூடிய இயந்திரங்களை அரசு அச்சகங்களில் அமைத்து அதனால் அச்சின் தரம் மற்றும் திறனையும் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டு, அதற்கேற்ற வகையில் செயலாற்றிக்கொண்டு வருகிறது என்பதை அச்சுத் துறையைப் பொறுத்தவரையில் என்னுடைய மேலான கருத்தாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

செய்தித் துறையைப் பொறுத்தவரையில், பத்திரிகைகளுடைய நிலை பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் மிகுந்த மன வேதனையோடு தங்களுடைய கருத்துகளை வெளிப்படுத்தினார்கள். 1780 ஆம் ஆண்டு இந்தியாவில் பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கியதாக வரலாறுகள் கூறுகின்றன. பக்கிங்ஹாம் என்பவர்தான் பத்திரிகைச் சுதந்திரத்திற்காக அந்தக் காலகட்டத்தில் போராடியிருக்கிறார். ஆனால், ஆங்கிலேயர் காலத்தில் இருந்து, கடந்த ஜெயலலிதா ஆட்சிக் காலம் வரையில் பத்திரிகையாளர்கள் பட்ட பாடு, இந்த நாடு அறிந்த ஒன்றுதான். ஆட்டோக்கள் அனுப்பப்பட்டதும், அவர்கள் படுகொலை செய்யப்பட்டதும், மாடியிலேயிருந்து தள்ளி எமலோகத்திற்கு அனுப்பப்பட்டதும், இதே மாமன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் அண்ணன் செல்வம் போன்றவர்கள் நிறுத்தப்பட்டதும் கடந்த கால வரலாறுகள். ஆனால், தலைவர் கலைஞர் அவர்களைப் பொறுத்தவரையில், இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு, அவரும் ஒரு பத்திரிகையாளர் என்ற காரணத்தினால் பத்திரிகையாளர்கள் பெருமதிப்போடு, நன்மதிப்போடு நடத்தப்படுவதை நீங்களெல்லாம் மிக நன்றாக அறிவீர்கள்.

தலைவர் கலைஞர் அவர்களைப் பொறுத்தவரையில் பத்திரிகையாளர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது, "அரசு நடத்துவதில் பத்திரிகையாளர்களுக்கும் பெரும் பங்கு உண்டு. இன்னும் சொல்லப் போனால் அரசின் ஒரு அங்கமாகவே அவர்களைக் கருதுகிறேன். அவர்கள் நல்லதை எழுதினாலும், இல்லாததை எழுதினாலும் அரசின் அங்கமாகத்தான் கருதுகிறேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே,

அவர்களுடைய இந்தப் பொன்மொழி வரிகளைப் பத்திரிகையாளர்கள் நினைவிலே கொள்வார்களேயானால், அரசின் அங்கம் என்று உங்களையும் கருதுகிறபோது எப்படி எழுதவேண்டுமென்ற உணர்வோடு வருங்காலத்திலாவது விருப்பு வெறுப்பு இல்லாமல், உள்ளபடி உள்ள செய்திகளை எழுதிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

உத்தமர் காந்தியடிகள் சொல்கிறபோது, பத்திரிகைத் துறையின் முக்கிய குறிக்கோள் சேவையாக இருக்க வேண்டும். அது ஒரு மகத்தான சக்தி. ஆனால், கட்டுப்படாத காட்டாற்று வெள்ளம் பூமியையும், பயிர்களையும் எப்படிப் பெருமளவுக்கு சேதப்படுத்தி, அழித்து விடுமோ, அதுபோல கட்டுப்பாடற்ற பத்திரிகைகளின் அழிவு சக்தியும் மிகப் பெரிய தீங்கை விளைவித்துவிடும் என்று அறிவித்திருக்கிறார்கள். சஞ்சீவ ரெட்டி அவர்கள் குறிப்பிடுகிறபோது, பத்திரிகையின் சுதந்திரம் என்பது பத்திரிகைகளின் நன்மைக்காக மட்டும் அல்ல நாட்டின் நன்மைக்காகவும் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த உணர்வுகளைப் பத்திரிகையாளர்களான நண்பர்கள் புரிந்துகொண்டு எழுதுவார்களேயானால், மாண்புமிகு உறுப்பினர்கள் மனம் புண்படுவதற்கான வாய்ப்பு இருக்காது என்பதை நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால், இந்த அரசைப் பொறுத்தவரையில், அரசைக் குற்றம் சாட்டி எழுதினாலும், இல்லாதவைகளை இட்டுக்கட்டி எழுதினாலும், பூனையைப் புலியாக்கி எழுதினாலும் அவைகளைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல், திறந்த மனதோடு பணியாற்றிக் கொண்டிருக்கிற ஒரு அரசு என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதேநேரத்தில் ஆட்சியில் இருப்பவர்கள் விளம்பரம் தருகிறபோது, கடந்த காலகட்டங்களில் வேண்டிய பத்திரிகை, வேண்டாத பத்திரிகை என்று வேறுபடுத்தி வழங்கியிருக்கிறார்கள். ஆனால், கலைஞர் அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையில், எல்லாப் பத்திரிகையாளர்களையும் ஒரே சம நிலையில் கருதித்தான் விளம்பரங்களை வழங்கிக்கொண்டு வந்திருக்கிறோம். அரசின் மீது நல்ல எண்ணத்தோடு எழுதினாலும் அல்லது அரசைத் தேவையற்ற முறையில் விமர்சித்தாலும் இருசாராரையும் சமமாகக் கொண்டுதான் விளம்பரங்களை வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

அடுத்து, பத்திரிகையாளர்களுடைய நலனைப் பொறுத்தவரையில், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள், Bus pass கொடுக்கப்படுகிறபோது 3, 4 வண்டிகளுக்குத் தருகிறார்கள்; ஒரே Bus Pass ஆக வழங்கப்பட



வேண்டுமென்ற வேண்டுகோளைச் சொல்லியிருக்கிறார்கள். சென்னை மாநகரத்திலே மாத்திரம்தான் 3 அல்லது 4 போக்குவரத்துக் கழகங்களின் மூலம் தனித் தனியாக Bus pass வழங்கப்படுகின்றன. காரணம், இங்கேயிருந்து பல்வேறு மாவட்டங்களுக்கும் வண்டிகள் செல்கிற நிலை இருக்கிறது. ஆனால் மாவட்டங்களைப் பொறுத்தவரையில், அந்தந்த மாவட்டங்களிலே ஓடுகிற போக்குவரத்துக் கழகங்களுக்கு மாத்திரம்தான் Bus pass வழங்கப்படுகிறது. எல்லா Buses க்கும் ஒரே pass-ஐ கொடுத்து பயணம் செய்யவேண்டுமென்ற நிலை ஏற்படுமானால், நிதிப் பற்றாக்குறை ஏற்படும் என்பதையும், அதனால் நிர்வாகச் சிக்கல் ஏற்படும் என்பதையும் நான் அவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பத்திரிகையாளர்களைப் பொறுத்தவரையில், இந்தியாவில் முதன்முதலாக கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலேதான் பத்திரிகையாளர் உயிரிழந்தால், அவர்களுடைய குடும்பத்திற்கு 25,000 ரூபாய் வழங்கப்பட்டது. ஆனால், கலைஞர் அவர்கள் 25,000 ரூபாய் வழங்கி, அவரே தொடர்ந்து அதை 40,000 ரூபாயாக மாற்றி, இந்த ஆண்டு அதை 50,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். இதற்காகப் போராட்டங்களோ, வேண்டுகோள்களோ இன்னும் சொல்லப்போனால் கோரிக்கைகளோகூட யாரும் வைக்கவில்லை. காரணம், கலைஞர் அவர்கள், நாட்டின் முதுகெலும்பாக, ஜனநாயகத்தின் 4 தூண்களில் ஒன்றாக இருக்கிற பத்திரிகைகளில் பணியாற்றும் பத்திரிகையாளர்கள் சிறப்பாகச் செயலாற்ற வேண்டுமென்ற உணர்வோடுதான் இந்தச் சலுகைகளை வழங்கியிருக்கிறார்கள்.

அடுத்து, குடும்ப ஓய்வூதியத்தைப் பொறுத்தவரையில், ஓய்வூதியம் பெறக்கூடியவர் இறந்தால் அவருடைய மனைவிக்கு 500 ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதையும் இந்த அரசுதான் வழங்கியிருக்கிறது. அதிலே மனைவிக்கு 500 ரூபாய் வழங்குகிறோம். ஓய்வூதியம் பெறுகிற கணவர் இறந்தால், மனைவிக்கு 500 ரூபாய், ஆரம்பகாலத்தில் 250 ரூபாயாக இருந்த பத்திரிகையாளர் ஓய்வூதியத்தை 1989 ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் 400 ரூபாயாக மாற்றினார்கள்.

1992 ஆம் ஆண்டு ரூ. 400-ஐ 500 ரூபாயாக ஆக்கினார்கள். 1996-ல் பொறுப்பேற்றதற்குப் பிறகு ரூ. 500-ஐ ஆயிரமாக்கி, ஆயிரத்தை 1500 ரூபாயாக மாற்றி, ரூ.1500-ஐயும் இந்த ஆண்டு 2000 ரூபாயாக உயர்த்தி அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, பத்திரிகையாளர்களுடைய நலன் நாடுகின்ற அரசாக கலைஞருடைய அரசு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

பிற்பகல் 1-35

அதேபோல, அங்கீகார அட்டைகளை பத்திரிகையாளர்கள் இப்போது பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதேபோல பருவ இதழ்கள். கடந்த காலங்கள், வாரப் பத்திரிகை என்று சொன்னால் கோட்டைப் பக்கமே வரக்கூடாது என்று விரட்டப்பட்ட காலங்கள். ஆனால், இப்போது வாரப் பத்திரிகைகள் விமர்சனங்களை எவ்வளவுதான் எரிமலை போலக் கக்கினாலும், அவற்றைப்பற்றிக் கவலைப்படாமல் அவர்களுக்கும் அங்கீகார அட்டை இந்த ஆண்டு மாத்திரம், 384 பேருக்கு இந்த அரசின் சார்பாக வழங்கியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி, பல்வேறு நிலைகளில், பத்திரிகையாளர்களுக்காக இந்த அரசு விருப்பு வெறுப்பில்லாமல் செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

அதேபோல, பத்திரிகையாளர்களுக்கு குடியிருப்புகளுக்காக வீட்டு மனைகளை ஒதுக்கியிருக்கிறோம். வீடு கட்டுவதற்கு மானியம் 20 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்லாமல் மதுரையிலும், திருச்சியிலும் குடியிருப்புகளுக்கான ஏற்பாடுகளை கலைஞருடைய ஆட்சியிலே இப்போது சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறோம்.

அரசின் ஏடாக, அரசினுடைய செவியாக இருந்து, அரசினுடைய செய்திகளை நாட்டுக்குச் சொல்கிற தமிழரசு இதழ், 1970 ஆம் ஆண்டு பல்வேறு இதழ்களாக இருந்து நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களால் ஒருமுகப்படுத்தப்பட்டு, 'தமிழரசு' என்ற பெயரால் அந்த இதழ் வெளியிடப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரையில் அந்த இதழ் ஓர் அரசினுடைய எல்லாத் திட்டங்களையும், எல்லாக் கால கட்டங்களிலும், நடக்கின்ற செய்திகளைத் தெரிந்துகொள்கிற ஒரு காலப் பெட்டகமாக, இப்போது அது சிறப்பான முறையில் வெளியாகிக் கொண்டிருக்கிறது. அதுமாத்திரமல்லாமல், அரசு அச்சகத்தில் அரசின் சாதனைகளை, திட்டங்களை, நடவடிக்கைகளை வெளிப்படுத்துவதற்காக சிறப்பு வெளியீடுகளை அவ்வப்போது வெளியிட்டும், துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டும் இந்தப் பணி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கடந்த ஆண்டு அழகான புத்தகத்தை "இலக்கிய மலர்" என்ற பெயரால் பத்து ரூபாய்க்கு—கடையில் 400 ரூபாய் அல்லது 500 ரூபாயில் விற்கக்கூடிய புத்தகத்தை—அச்சிட்டு வழங்கி இருக்கிறோம். இப்போது வள்ளுவர் சிலை திறப்பு விழாவை ஒட்டி, "கோட்டம் முதல் குமரி வரை" என்கிற அழகான ஓர் இலக்கிய மலர் வள்ளுவரைப் பற்றி, அறிஞர் பெருமக்கள் எல்லாம்



எடுத்துச்சொன்ன ஆழமான, கருத்தாழமிக்க கட்டுரைகள் அடங்கிய அந்த மலர் சிறப்பான முறையில் அச்சிடப்பட்டு 100 ரூபாய் விலைக்கு நாடு முழுவதும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, தமிழரசு அச்சகத்தைப் பொறுத்தவரையில், அது நவீனமயமாக்கப்பட வேண்டுமென்பதற்காக பல்வேறு நவீன வசதிகளை உருவாக்கித் தந்திருக்கிறோம்.

அரசுப் பொருட்காட்சிகளைப் பொறுத்தவரையில், கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடனேயே அரசுப் பொருட்காட்சிகளில் அரசாங்கத்தில் இருக்கின்ற அமைச்சர்களுடைய படமோ, ஆரவாரமோ இருக்கக்கூடாது, Cutout கலாச்சாரம் அறவே இருக்கக்கூடாது, விரும்பத்தகாத செயல்பாடுகள் எள்முனை அளவும் தலைகாட்டக்கூடாது, நாட்டு நடப்புக்களை, அரசின் திட்டங்களை, கருத்து விளக்கப் படங்களாக எடுத்துச் சொல்லவும், பொருட்காட்சிகளைப் பார்க்க வருகின்ற மக்கள் உள்ளே நுழைந்து வெளியே செல்கிறபோது அறிவுஜீவிகளாகத் தங்களை மாற்றிக்கொள்ளவும் அல்லது புதிதான செய்திகளைத் தெரிந்துகொள்வதற்கான வாய்ப்புகளை எல்லாம் உருவாக்க வேண்டுமென்று அறிவுறுத்தி அந்த அடிப்படையிலேதான் இப்போது பொருட்காட்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்போது மதுரையிலே 100-வது பொருட்காட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கடந்த காலத்தில் அ.இ.அ.தி.மு.க. ஆண்டபோது, 1991-லிருந்து 1996 வரையில் 29 பொருட்காட்சிகள் நடைபெற்றிருக்கின்றன. அவற்றிலே 9 பொருட்காட்சிகளில் மாத்திரம் 51 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாய் நஷ்டமாகத்தான் கணக்குக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் 1989-91-ல் இரண்டு ஆண்டுகால கழக ஆட்சியில் 9 பொருட்காட்சிகளை நடத்தி, 9-லேயும் 80 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாயை இலாபமாக ஈட்டிக் காட்டியிருக்கிறோம். அதற்குப் பிறகு, 1996-ல் மீண்டும் பொறுப்பேற்றதற்குப்பிறகு 11 பொருட்காட்சிகள் நடத்தி முடிக்கப்பட்டு, 195 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாயை இலாபமாகப் பெற்றுத் தந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) 1978 ஆம் ஆண்டிலிருந்து 2000 மார்ச் வரையில் 100 பொருட்காட்சிகள் நடத்தி முடிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலே இலாபமாக மாத்திரம் 7 கோடியே 53 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாயை இந்தத் துறையின் மூலமாக ஈட்டித் தந்திருக்கிறோம் என்பதை நான் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, பல்துறை பணி விளக்க முகாம் என்கிற பெயரால் ஒவ்வொரு மாவட்டத்திலேயும் 3 நாட்கள் அரசின் எல்லாத் துறைகளையும் ஒருங்கிணைத்து ஒவ்வொரு துறையின் சார்பாக மாநில அளவில் அந்த ஆண்டில் நடைபெறுகிற திட்டங்கள், தொடர்ந்து நலவாழ்வுத் திட்டங்களைப் பெறுவதற்கான வழிமுறைகள், அதுமாத்திரமல்லாமல், அந்த முகாம்கள் நடைபெறுகின்ற காலகட்டங்களில் மாவட்டத்தின் தலைநகரத்தில் நடைபெற்றால் மாவட்டத்தின் எல்லாப் பகுதிகளிலேயும் பல்வேறு துறைகளின் சார்பாக நடமாடும் முகாம்களை நடத்தி, நடமாடும் மண் பரிசோதனை, கால்நடைப் பரிசோதனை, வருமுன் காப்போம் திட்டம் இப்படி பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி, நலத் திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கிறோம். கடந்த ஆண்டு தீண்டாமை ஒழிப்பு, மத நல்லிணக்கச் சமூக ஒற்றுமை ஆண்டாக 1999-2000-ஐ கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான் தீண்டாமை ஒழிப்பு, மத நல்லிணக்கச் சமூக ஒற்றுமையை வலியுறுத்தி ஆண்டு முழுவதும் ஒரு கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்து, அதற்கான பிரச்சாரப் பணிகளில் நாம் ஈடுபட்டோம். ஆங்காங்கே இப்படிப்பட்ட முகாம்கள் நடைபெற்றபோது தீண்டாமை ஒழிப்பு குறித்த நாடகங்களை நடத்தியிருக்கிறோம். அதேபோல, தீண்டாமை ஒழிப்பு குறித்த பிரச்சாரப் படங்களை, செய்தி மலர்களை, வீடியோ மலர்களை எல்லாம் எல்லா கிராமப் பகுதி மக்களும் பார்த்து கண்டு களிக்கக்கூடிய அளவிற்கு அவற்றை எல்லாம் போட்டுக் காட்டியிருக்கிறோம். தீண்டாமை ஒழிப்பு குறித்து அரசின் சார்பாக பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. வானொலியாக இருந்தாலும், தொலைக்காட்சியாக இருந்தாலும், பத்திரிகையாக இருந்தாலும், மாணவர்களாக இருந்தாலும் அவரவர்கள் நிலைக்கேற்ப பங்கு பெறுகிற வகையில் போட்டிகள் நடத்தி அவற்றுக்கான பரிசுகளை, விருதுகளை எல்லாம் வழங்குகிறோம்.

பிற்பகல் 1-40

திரைப்படத் துறையைப் பொறுத்தவரையில், அது வளர்ந்து வர வேண்டும்; அதைக் கைதூக்கி விட வேண்டும் என்பதற்காக கலைஞர் அவர்கள் எப்போது ஆட்சிப் பொறுப்புக்கு வருகிறாரோ அப்பொழுதெல்லாம் திரைப்படத் துறை கைதூக்கி விடப்பட்டிருக்கிறது. ஓர் உயர்ந்த நிலையை உருவாக்கித் தந்தார்கள். காரணம், திரைப்படத் துறை தமிழகத்தைப் பொறுத்தவரையில் பேரறிஞர் அண்ணா, கலைஞர் வருகைக்குப் பின்னால் ஒரு மறுமலர்ச்சியை உருவாக்கியிருக்கிறது. தந்தை பெரியாருடைய எண்ணங்களும், அண்ணாவினுடைய இலட்சிய



உணர்வுகளும் தமிழகத்திலே பரவியிருப்பதற்கு அடிப்படைக் காரணமாக ஒரு காலகட்டத்தில் திரைப்படத் துறை திகழ்ந்திருக்கிறது. புரட்சிகரமான கருத்துகளை, சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை, பகுத்தறிவு எண்ணங்களை எல்லாம் திரைப்படத்தின் மூலம்தான் அன்றையதினம் கலைஞர் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் ஏனைய பெருமக்களும் உருவாக்கி வளர்த்தார்கள். எனவே, அந்தத் துறை முழுமையாகக் கட்டிக்காப்பற்றப்பட வேண்டும் என்பது மாத்திரமல்ல, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் கிருஷ்ணசாமியானாலும், சந்தானமானாலும் அல்லது மற்ற மற்ற உறுப்பினர்கள் எல்லாம் பேசுகிறபோது திரைப்படத் துறையில் ஆபாசம் இருக்கிறது, வன்முறை இருக்கிறது, மூடப் பழக்கவழக்கங்கள் இருக்கின்றன, இவையெல்லாம் அறவே அகற்றப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட உணர்வுகள் எல்லாம் இல்லாமல் படம் எடுக்க வேண்டும்; நல்ல நோக்கத்திற்காக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் கலைஞருடைய அரசாங்கம் பல்வேறு சலுகைகளை வழங்கியிருக்கிறது. கேளிக்கை வரியிலே விதிவிலக்கு வழங்குவதாக இருந்தாலும், மானியம் 3 இலட்சம் ரூபாயிலேயிருந்து 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்குவதாக இருந்தாலும் அல்லது வரியைக் குறைப்பதாக இருந்தாலும் கலைஞர் அரசு முன்னணியில் இருக்கிறது. கலைஞர் அவர்கள்தான், ஒரு காலகட்டத்தில் 52 சதவீதமாக இருந்த கேளிக்கை வரியை 40 சதவீதமாகக் குறைத்தார்கள். அவரேதான் 40-ஐ மீண்டும் 30 ஆக்கினார். அவரேதான் மீண்டும் 30-ஐ 25 ஆக்கினார். அதே நேரத்தில் 10 ஆண்டுகள் கடந்த பழைய படமாக இருந்தால் 40-லேயிருந்து 20 ஆகக் குறைத்தார். ஆக, இவ்வளவு சலுகைகள் அந்தத் திரைப்படத் துறைக்குச் செய்தது மாத்திரமல்ல, அவர்களுக்குப் பல்வேறு விருதுகளையும் வழங்கிப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

இங்கேகூட 'சுதந்திர பாரதி' என்ற படத்திற்கு உதவி வழங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் கேட்டார்கள். 1998 ஆம் ஆண்டு அதற்கு விண்ணப்பம் போட்டபோது, 1995 ஆம் ஆண்டு தணிக்கைச் சான்றிதழ் பெறபபட்டும் அந்தப் படம் வெளியிடப்படவில்லை. எனவே, அந்தப் படம் மானியம் பெறுவதற்கான தகுதி இல்லாத காரணத்தினால்தான் நிராகரிக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோல, தமிழ்நாடு திரையரங்குக் கழகம் 81 நபர்களுக்கு 94 இலட்சத்து 83 ஆயிரம் ரூபாய் கடனாகக் கொடுத்தது. பலர்

கேட்கிறார்கள்; திரைப்படக் கொட்டகை கட்டுவதற்குக் கடன் வேண்டும் என்று. ஆனால், 1980-81-லே 94 இலட்சத்து 83 ஆயிரம் ரூபாய் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கொடுத்த கடனில் 1 கோடியே 34 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் இன்னும் நிலுவையில் இருக்கிறது. ஆகவே, அதைத் திருப்பிக் கட்டாத காரணத்தால் 30 சதவீதம் வட்டியைத் தள்ளுபடி செய்தால் திருப்பிக் கட்டுகிறோம் என்று கடன்தாரர்கள் கேட்டதன்பேரில் அவர்களுக்கும் அந்தச் சலுகையை கலைஞர் ஆட்சியிலே இப்போது வழங்கியிருக்கிறோம்.

திரைப்படப் பிரிவைப் பொறுத்தவரையில், நாட்டு நலத் திட்டங்கள், நாட்டினுடைய வளர்ச்சிப் பணிகள், அரசினுடைய அன்றாட நிகழ்ச்சிகள், வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிகள், இவற்றோடு அரசு போடுகிற நல்ல பல திட்டங்களை எல்லாம் படமாக எடுத்து திரையரங்குகளிலேயும், தொலைக்காட்சியிலேயும் இப்போது வெளியிட்டுக் கொண்டிருக்கிறோம்.

தீண்டாமை ஒழிப்பைப் பொறுத்தவரையில், 'ஒன்றே குலம்', 'ஜாதிகளை நீக்கி சமத்துவம் காண்போம்', 'மனிதநேயமே உலகம்', 'ஜாதிகள் இல்லையடி பாப்பா', 'சமத்துவமே சமுதாயம்' போன்ற படங்களை எல்லாம் எடுத்து இப்போது பல்வேறு நிலைகளில், பல்வேறு கால கட்டங்களில் வெளியிட்டுக் கொண்டிருக்கிறோம். ஆக, இப்படி திரைப்படப் பிரிவின் மூலமாகப் படங்களை எடுத்து வெளியிடுவதோடு பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி 'அண்ணா வாழ்கின்றார்' என்ற பெயரில் ஓர் அழகான கருத்துப் படத்தை திரு. அமிர்தம் அவர்கள் எடுத்தார்கள். 'அண்ணா வாழ்கின்றார்' என்ற அந்தப் படம் 1998 ஆம் ஆண்டின் தேசிய விருதைப் பெற்றது. நம்முடைய ஜனாதிபதி அவர்களின் திருக்கரங்களால் திரு. அமிர்தம் அவர்கள் பரிசு பெற்றுப் பெருமை சேர்த்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) திரைப்பட வரலாற்றிலேயே முதன்முதலாகப் படம் எடுத்து பரிசு பெற்ற முதல் படம் இதுதான் என்பதை நான் இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதுமாத்திரமல்லாமல், அந்தத் திரைப்பட பிரிவில் மாணவர்கள் படிக்கிறார்களே அவர்கள் இப்போது விருது பெறுகிற ஒரு வாய்ப்பைக் கலைஞர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். திரைப்படக் கல்லூரியைப் பொறுத்தவரையில் இன்றைக்குத்தான் அகில இந்திய தொழில்நுட்பக் கழகத்தினுடைய அங்கீகாரமே—அது ஆரம்பித்து 36 ஆண்டுகாலம் ஆகிறது, கலைஞர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்குப் பிறகுதான்—கிடைத்திருக்கிறது. இப்படிப்பட்ட அங்கீகாரம் கிடைத்திருக்கின்ற காரணத்தால், உலக வங்கி,



வெளிநாட்டுக் கடனுதவி பெறுவதற்கான வாய்ப்பு மற்றும் திரைப்படக் கல்லூரி மாணவர்களுக்கு இந்தியா முழுவதும் வேலை பெறுவதற்கான வாய்ப்புகள் கிடைத்திருக்கின்றன. அம்மையார் ஜெயலலிதா ஆட்சியில் இருந்தபோது மாணவர்களுக்கு, அந்தத் திரைப்பட நகரிலே இருந்த விடுதியிலே தங்குவதற்குக் கூட இடமில்லை, உள்ளே யாரும் நுழையக் கூடாது என்று சொன்னார்கள். அதுமாத்திரமல்லாமல், திரைப்படக் கல்லூரியிலே படிக்கின்ற, பயிற்சி பெறுகின்ற மாணவர்கள் அந்தத் திரைப்பட வளாகத்திற்குள்ளே படம் எடுக்கக்கூடாது, வெளியேதான் போய்ப் படம் எடுக்க வேண்டும் என்ற நிலையைக்கூட உருவாக்கியிருந்தார்கள். அப்படிப்பட்ட அவல நிலையையெல்லாம் போக்கி, மாணவர்கள் அங்கேயே படம் எடுக்கலாம்; அங்கேயே தங்கிக்கொள்ளலாம் என்பதுமாத்திரமல்ல, அவர்களுக்குப் பேருந்து வசதியையும் இந்த அரசுதான் செய்து கொடுத்திருக்கிறது. ஓர் ஆண்டிற்கு 15 இலட்சம் ரூபாய்க்கு மாத்திரம்தான் அதற்குத் தேவையான கருவிகளை வாங்குவார்கள். ஆனால், கலைஞர் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு 1 கோடியே 34 இலட்சம் ரூபாய்க்கு, அதனுடைய மேம்பாட்டிற்காக நவீன கருவிகளையெல்லாம் வாங்கித் தந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இவ்வளவையும் செய்திருக்கிற இந்த அரசு, இந்தியாவிற்கே வழிகாட்டுகிற அளவிற்கு இப்போது நினைவிடங்களை அமைத்துக்கொண்டிருக்கிறது. கலைஞர் எப்போதெல்லாம் முதலமைச்சராக இருக்கிறாரோ அப்போது மாத்திரம்தான் தியாகிகள் பாராட்டப்படுகிறார்கள்; நினைவு மண்டபங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன் நினைவு இல்லங்கள் பராமரிக்கப் பட்டிருக்கின்றன என்பது வரலாற்று உண்மை என்பதை எந்த அறிவுஜீவியும் மறந்துவிடமாட்டார்கள்.

பிற்பகல் 1-45

இந்த மாமன்றத்திலே பல்வேறு மாமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் கோரிக்கைகள் வைக்கிறபோது அவற்றையெல்லாம் தலைவர் கலைஞர் அவர்கள் உடனடியாக எங்களிடம் சொல்லி நிறைவேற்றி வைப்பதை நாம் பார்த்திருக்கிறோம். இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பெரியசாமி அவர்கள், கடந்த ஆண்டு ஒரு கோரிக்கையை வைத்தார்கள். கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களுக்கும், உடுமலை நாராயணக் கவி அவர்களுக்கும் மணி மண்டபங்கள் அமைக்க வேண்டுமென்று கேட்டார்கள். கலைஞர் அவர்கள் அப்போதே அறிவித்து, இப்போது கட்டிமுடித்து, ஒன்று திறக்கப்பட்டிருக்கிறது, இன்னொன்று திறப்பதற்குத் தயார் நிலையில்

இருக்கிறது. இன்றைக்குக்கூட சிவா அவர்களுக்கு நினைவு மண்டபம் உருவாக்க வேண்டுமென்று கேட்டுவிட்டு, சர்க்கரை ஆலைக்கு அவர் பெயர் இருக்கிறது, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகச் சாலைக்கு அவர் பெயர் இருக்கிறது என்று அவர்களே சொன்னார்கள். இன்னொன்றையும் சொல்ல மறந்துவிட்டார்கள். உயர்நிலைப் பள்ளியும் **சிவா பெயரில்** இருக்கிறது. இருந்தாலும்கூட சமாதியை மேம்படுத்த 0.34.5 ஹெக்டேர் நிலத்தை இப்போது துறைக்காகக் கையகப்படுத்தியிருக்கிறோம். அதை மேம்படுத்துவதற்காக பொதுப் பணித் துறையிடம் மதிப்பீடு பெற்றிருக்கிறோம். எனவே உங்கள் உணர்வுகளை மதித்து அந்த இடம் உரிய முறையில் பராமரிக்கப்படும் என்பதையும் அவருக்கு நான் இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

வள்ளுவர் பெருந்தகைக்குக் குமரியில் சிலை எடுத்ததையும், அதையொட்டி சென்னையில் வள்ளுவர் கோட்டத்தில் ஓவியக் கண்காட்சி வைத்ததையும் நீங்கள் எல்லாம் மறந்திருக்கமாட்டீர்கள். வள்ளுவர் சிலை திறப்பு விழாவைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் அ.இ.அ.தி.மு.க.வைத் தவிர எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த பெருமக்களும் கலந்துகொண்டு அந்த வள்ளுவருக்குப் பெருமை சேர்த்தார்கள். பெருமை சேர்த்த அந்தப் பெருமக்களுக்கெல்லாம் இந்த நேரத்தில் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலேகூட, மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள், இவ்வளவு சிறப்பான சாதனையைக் கலைஞர் செய்திருக்கிறார் என்பதற்காக, எல்லாத் தலைவர்களும் வாழ்த்தினாலும் கூட, அவர் எல்லாவற்றுக்கும் மாறாக மேடைக்கு முன்னால் நின்று, இவ்வளவு பெரிய அரிய சாதனையைச் செய்திருக்கிற கலைஞரைப் பாராட்ட வேண்டும் என்று சொல்லி, நான் மாத்திரம் ஒலிபெருக்கி முன்னால் பேசிப் பாராட்டினால் போதாது, எல்லோரும் எழுந்து நின்று கைதட்டுங்கள் என்று சொன்னார், அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த சான்றோர் பெருமக்கள் இலட்சக்கணக்கானபேர் கையொலி எழுப்பி மாபெரும் கலைஞருக்கு நன்றி செலுத்தியதற்காக அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மணி மண்டபங்களைப் பொறுத்தவரையில், நினைவிடங்களைப் பொறுத்தவரையில், இந்த அரசு சிறப்பாகச் செயலாற்றிக்கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டில் நம்முடைய அரசு, சுதந்திர நாளை பொன்விழா ஆண்டாகக் கொண்டாடியபோது, தலைவர் கலைஞர் அவர்கள்



தலைமையில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களைக் கொண்ட குழுக்களை அமைத்து விழாவை நடத்தினோம். இந்த ஆண்டு நமது குடியரசுப் பொன்விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்பதற்காக நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் நம்முடைய இனமான பேராசிரியர் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழுவில் செய்தித் துறை அமைச்சர் என்ற முறையில் என்னையும், சட்டமன்றத்திலே கட்சிகளின் தலைவர்களாக இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சோ. பாலகிருஷ்ணன், திரு. ஜி. பழனிசாமி, திரு. பி.ஆர். சுந்தரம், திரு. ம. அப்துல் லத்தீப், திரு. ஐ. கணேசன், திரு. லா. சந்தானம், திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில், திரு. சி. வேலாயுதன், திரு. சி. அன்பரசன், டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் ஆகியோரையும் தலைமைச் செயலாளர், செய்தித் துறைச் செயலாளர், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறைச் செயலாளர், பொதுப் பணித் துறைச் செயலாளர், உயர் கல்வித் துறைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறைச் செயலாளர், சட்டத் துறைச் செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகச் செயலாளர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் உள்ளிட்டவர்களையும் கொண்ட ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். எனவே, இந்தியாவில் மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக் காட்டான வகையில் அந்த விழாவும் சிறப்பாக நடைபெறவிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, பத்திரிகையாளர்கள் ஓய்வூதியம் பெறுவதற்காக விண்ணப்பம் செய்தால், அவர்களுடைய குடும்பத்தின் ஆண்டு வருமானம் 12 ஆயிரம் ரூபாய்க்குள் இருக்கவேண்டுமென்று விதி இருந்தது. அது போதாது என்ற நிலையில், இப்போது 20,000 ரூபாய் என்ற நிலையை, அந்தப் பத்திரிகையாளர் சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று கலைஞர் அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள். மேலும், பணிக்கொடை 25,000 ரூபாய்க்குமேல் பெற்றிருக்கக்கூடாது என்பதை 30,000 ரூபாயாகவும், அதேபோல, பணியில் இருந்தபோது எந்த ஒரு குறிப்பிட்ட ஆண்டிலும் வருமானம் ரூ.40,000-க்கும் மிகைப் படக்கூடாது என்பதை ரூ.50,000 ஆக உயர்த்தியும் நம்முடைய கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதேபோல், இரண்டு மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு 8 இலட்சம் ரூபாயில் இரண்டு Video Projectors இந்த ஆண்டு வாங்கப்படும். 20 மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு 20 Fax கருவிகள் வாங்கப்படும். தமிழரசு அச்சகத்திற்கும், மாநில செய்தி நிலையத்திற்கும்

4.31 இலட்சம் ரூபாயில் கணினி, வண்ணக் கணினி போன்றவை வாங்கப்படும். திரைப்படப் பிரிவு மற்றும் ஆளுநர் மாளிகைக்கு 32 இலட்சம் ரூபாய் செலவில் நவீன Video Cameras வாங்குவதற்கு இந்த ஆண்டு கலைஞர் அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள்.

அதுமாத்திரமல்லாமல், நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளாக கலைஞர் அவர்கள் அறிவித்திருப்பது, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவிப்புக்குட்பட்டு, சென்னை, கிண்டி காந்தி மண்டபம் வளாகத்தில் மொழிப்போர் காவலர்களுக்கு மணிமண்டபம் அமைக்கப்படும். மொழிப்போர் காவலர்களாக விளங்கிய பெருமக்களுக்கெல்லாம் நன்றி செலுத்துகிற வகையில் கலைஞர் அவர்கள் நினைவிடம் அமைக்க ஆணையிட்டு இருக்கிறார்கள். அதுபோல் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததற்கிணங்க மருதுபாண்டியர்கள் நடத்திய சுதந்திரப் போராட்டத்தின் விளைவாக அவர்கள் தூக்கிலிடப்பட்ட 200-வது ஆண்டை நினைவு கூர்ந்திடும் வகையில் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரில் மணி மண்டபம் அமைத்து, 24-10-2001 அன்று புகழாஞ்சலி விழா மிகச் சிறப்பாக நடைபெறும். மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், தும்பைப்பட்டியில் தியாகி கக்கன் வாழ்ந்த இல்லம் அரசின் சார்பில் நினைவில்லமாக மாற்றப்படும்.

வேலூரில் உள்ள அண்ணா கலையரங்கம் ரூ.10 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும். சென்னை வள்ளுவர் கோட்டத்தில் அய்யன் திருவள்ளுவர் பெயரால் ஒரு நூலகம் உருவாக்கப்படும். தந்தை பெரியார் அவர்களுடைய வாழ்க்கை வரலாறு பற்றிய கருத்து விளக்கப் படங்கள் இந்த ஆண்டு எடுக்கப்படும் என்பதை இந்தநேரத்தில் தெரிவித்து, எல்லாவற்றுக்கும் மேலாக இந்த அரசு நினைவு இல்லங்களை மிகச் சிறப்பாகப் பராமரித்து வருகிறது என்பதற்குச் சான்றாக நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 11-9-1998 அன்று மகாகவி பாரதி மணிமண்டபத்தைப் பார்வையிட்டபோது, இங்கே அவர் குறை சொன்னாலும்கூட, கைப்பட எழுதியிருக்கிறார்கள். மகாகவி பாரதி நினைவு மண்டபத்தில் சிறப்பான பல நிகழ்ச்சிகளைப் படமாகத் தொகுத்து, சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டு வருவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன் என்று ஒரு நல்ல சான்றிதழை வழங்கியிருக்கிறார்கள். அவர் சட்டமன்றத்திலே காலத்தின் கோலமாக, காலத்தின் கட்டாயம் காரணமாக,. அந்த இடத்தைச் சரியாக பராமரிக்கவில்லை என்று சொன்னாலும்கூட, போய்ப் பார்த்த நேரத்தில் சிறப்பாக இருக்கிறது என்று



கைப்பட எழுதியிருக்கிறார். அதற்காக அவருக்கு இந்த நேரத்தில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-50

இறுதியாக,

பூனைக்கு எலிகளெல்லாம் விருந்து வைக்கும்
புலியின் முன் மானினங்கள் நடனமாடும்
மீனினங்கள் கொக்கிற்கு மேடை போடும்
வெள்ளாடு சிங்கமுடன் வேதம் ஓதும்
காணாத காட்சியிவை காட்டில் அல்ல
காணுகிறோம் தமிழ்நாட்டில்-உண்மை! உண்மை!
செந்நெருப்பும் மாணிக்க வண்ணம் காட்டும்
மீன் செதிலும் மினு மினுக்கும் வெள்ளிக் காசாய்
வெளுத்த முடி பளபளக்கும் பட்டு நூலாய்
பூனைக்குப்பல் புலிப்பல்லாய் காண்பதுண்டு
பொரிச் சோளம் பூவாகத் தெரிவதுண்டு
தூண்டில் முள் காதணி போல் தோன்றினாலும்
தோற்றத்தால் பொய் மெய்யாய் நிலைத்திடாது—

என்பதை கலைஞர்மீது அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டோருக்குச் சுட்டிக்காட்டி,

செயல்படவிட்டோர்

சிரித்து மகிழ்ந்தாலும்

அந்த சின்னத்தம்பி

முதுகில் குத்தவில்லை

நெஞ்சில்தான் குத்துகிறான்

அதில் நிம்மதி எனக்கு

என்று பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தம்பியாக இருக்கிற எதையும் தாங்கும் இதயம் பெற்ற கலைஞர் அவர்கள், சென்னை அண்ணா சாலையில் இருக்கிற அவருடைய சிலையை, எம்.ஜி.ஆர். மறைவு நாளன்று உடைத்ததை இப்படித்தான் முரசொலியில் எழுதி, தன்னுடைய உள்ளத்தை இந்த நாட்டு மக்களுக்குத் திறந்து காட்டினார்கள். அப்படிப்பட்ட மாபெரும் முதலமைச்சர் அவர்கள், ஐந்தமிழ் அறிஞர் அவர்கள் இன்னும் ஒருமாத காலத்தில் 77-வது பிறந்தநாள் விழாவைக் காண இருக்கிறார்கள். அந்த மாபெரும் தலைவர், ஐந்தமிழ் அறிஞர் 5-வது முறையாக 2001 ஆம் ஆண்டில் தமிழகத்தின் முதலமைச்சராக தொடர்ந்து பொறுப்பேற்று, மீண்டும் இந்த நாட்டை வளமுள்ள நாடாக மாற்றிடுவார். (மேசையைத் தட்டும் ஒலி) மாற்றுவதற்கு நாம் துணை நிற்போம் என்பதை எடுத்துச்சொல்லி, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குமுன் நீங்கள் தந்த வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற்று, மானிய கோரிக்கையில் அரசு கேட்ட தொகையை வழங்குமாறு கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, முடிக்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. (குறுக்கீடு) திரு. ஜே. ஹேமச்சந்திரன், ஏற்கெனவே நேரம் 1-52 ஆகிவிட்டது, உட்காருங்கள்.

## (அ) கோரிக்கை எண் 50-சுற்றுலா

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 50. —சுற்றுலா வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்,

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. ஆர். ஆர். சேகரன், இருக்கையில் இல்லை. திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. ஏ.வி.ஏ. நாசர், இருக்கையில் இல்லை. திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எ. தெய்வநாயகம், இருக்கையில் இல்லை. திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.



திரு. க. மணிவர்மா, இருக்கையில் இல்லை. திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 3,79,80,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 43—எழுதுபொருள்-அச்சுத் துறை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 43—எழுதுபொருள்-அச்சுத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை. திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஏ.வி.ஏ. நாசர், இருக்கையில் இல்லை. திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எ. தெய்வநாயகம், இருக்கையில் இல்லை. திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.



**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"எழுதுபொருள்—அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 62,52,45,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(இ) கோரிக்கை எண் 46—செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல்**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 46-செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை. திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றத்தாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.



**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. ஏ.வி.ஏ. நாசர், இருக்கையில் இல்லை. திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எ. தெய்வநாயகம், இருக்கையில் இல்லை. திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.18,36,05,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (3-5-2000) புதன்கிழமை காலை 9-30 மணிக்குக்கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

169. மானியக் கோரிக்கை எண் 43-எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

170. மானியக் கோரிக்கை எண் 46-செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

171. மானியக் கோரிக்கை எண் 50-சுற்றுலா பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

172. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதிமூன்றாம் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

173. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினான்காம் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)



## இணைப்பு-I

[141 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### கோரிக்கை எண். 43

### எழுதுபொருள் அச்சுத் துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, 1831 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசிதழ்களை அச்சிடுவதற்காக ஆரம்பத்தில் 10 தொழிலாளர்களுடன் உருவாக்கப்பட்டு, கடந்த 169 ஆண்டுகளாக சீரிய முறையில் இயங்கி வருகிறது. இத்துறையின் பொறுப்பில் சென்னை மாநகரத்திலும் பிற மாவட்டங்களிலும் சேர்த்து மொத்தம் 7 அச்சகங்களும், சென்னை மாநகரத்தில் எழுதுபொருள் அலுவலகம் மற்றும் வெளியீடுகள் விற்பனை நிலையமும் செயல்பட்டு வருகின்றன.

### எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககம்

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககம், ஏழு அச்சகப் பிரிவுகள், எழுதுபொருள் அலுவலகம் மற்றும் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் ஆகியவற்றின் பணியை வழிமுறைப்படுத்தும் மாநில தலைமை அமைப்பாகும். தலைமையகம் 212 பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

இவ்வியக்ககத்தில், பணியாளர் நிருவாகம், தொழில் உறவுகள், பொது நிருவாகம், ஒருமுனைப்படுத்தி பொருட்களை வாங்கும் பணிகள், இயந்திரங்கள் வாங்குதல், அச்சுப் பிரிவுகளுக்குத் தேவையான அத்தியாவசியமான பொருட்களைக் கொள்முதல் செய்தல், அரசு வெளியீடுகள் விற்பனை செய்வது உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## எழுதுபொருள் கிடங்கு மற்றும் அலுவலகம்

எழுதுபொருள் பிரிவு, எழுதுபொருட்கள், தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள், கணக்கீட்டுப் பொறிகள் மற்றும் அச்சகப் பொருட்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து மாநிலம் முழுவதும் உள்ள அரசு அலுவலகங்களுக்கு வழங்கும் மைய முகவர் அமைப்பாக இயங்குகிறது. எழுதுபொருட்கள் அனைத்து மாநில அரசு அலுவலகங்களுக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆனால் மத்திய அரசு நிதி உதவி பெற்று அவை தொடர்பான திட்டங்களை அமலாக்கம் செய்யும் நிறுவனங்களுக்கு முன்கூட்டியே உரிய தொகை பெற்று எழுதுபொருட்கள் வழங்கப்படுகின்றன. ஒரு துணை இயக்குநரின் நிருவாகத்தின்கீழ் 202 பணியாளர்களைக்கொண்டு இந்த அலுவலகம் இயங்கி வருகிறது.

காகிதம் மற்றும் அட்டைகள் போன்ற எழுதுபொருட்கள் ஆண்டுதோறும் திறந்த ஒப்பந்தப்புள்ளிகள் மூலமும், தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள், கணக்கீட்டுப் பொறிகள் ஆகியவை தலைமை இயக்குநர் விநியோகம் மற்றும் ஒதுக்கீடு (D.G.S.&D) அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கும் கொள்முதல் செய்யப்படுகின்றன.

1999 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலுக்காகக் கொள்முதல் செய்து விநியோகிக்கப்பட்ட எழுதுபொருட்களின் மதிப்பு ரூ.1.58 கோடி ஆகும். மேலும், ரூ.13.5 கோடிக்கான எழுதுபொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு விநியோகத்திற்காக இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. 2000-2001 ஆம் ஆண்டிற்குத் தேவையான எழுதுபொருட்களின் மதிப்பு ரூ.20 கோடியாக இருக்குமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

பணியாளர்களுக்குத் தேவையான முதல் உதவி வசதிகள் இங்கு செய்யப்பட்டுள்ளன. தேவையான அளவில் மின் விசிறிகளும், மின் குழல் விளக்குகளும் பொருத்தப்பட்டுள்ளன. தொழிலாளர்களுக்குச் சீருடைகள், ரொட்டி மற்றும் தேநீர் படியும் வழங்கப்படுகின்றன. இவர்களுக்கு ஓய்வு அறையும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம்

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககத்தின்கீழ், சென்னை அண்ணா சாலையில் உள்ள அரசு வெளியீடுகள் விற்பனை நிலையமும், சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள கிளை விற்பனை நிலையமும்



சட்டம் மற்றும் விதி நூல்கள், விதிக்கோவைகள், நடைமுறை நூல்கள், அரசிதழ்கள், செய்தி அறிவிப்பு வெளியீடுகள் மற்றும் பணிப் பதிவேடுகள் ஆகியவற்றை விற்பனை செய்து வருகின்றன. மேலும் இந்திய அரசின் வெளியீடுகளை விற்பனை செய்யும் முகவர் அமைப்பாகவும் இது இயங்குகிறது. அரசு வெளியீடுகள், அனுமதி பெற்ற முகவர்கள் மூலமாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

## அச்சுப் பணிகள்

தலைமைச் செயலகம், துறைத் தலைமையகங்கள், தமிழ்நாடு மாநிலக் கணக்காய்வுத் தலைவர் அலுவலகம் மற்றும் அரசுத் துறை நிறுவனங்களுக்கான அச்சுப் பணிகளும், வரவு-செலவுத் திட்ட ஆவணங்கள், தமிழ்நாடு அரசிதழ்கள், சிறப்பு மறைபொருள் அறிக்கைகள், விதிக்கோவைகள், நடைமுறை நூல்கள், தலையாய மறைபொருள் பணிகள், வாக்குச் சீட்டுகள், பரிசுச் சீட்டுகள் மற்றும் நிலைப்படுத்தப்பட்ட, நிலைப்படுத்தப்படாத படிவங்கள் அச்சிடுதல் ஆகிய பணிகளும் எழுதுபொருள் அச்சுத் துறையின்கீழ் இயங்கும் அச்சகங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. 1999-2000 ஆண்டில் அரசு அச்சகங்களில் 49.1 கோடி அழுத்தங்கள் அச்சிடப்பட்டுள்ளன.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககத்தின் நிருவாக அமைப்பு, பணியாளர்கள் விவரம், அச்சு இயந்திரங்கள் மற்றும் புத்தகக் கட்டுமான இயந்திரங்களின் விவரங்கள், 1999-2000 ஆண்டிற்கான அச்சகச் செயலாக்க இலக்குகள், சாதனைகள் ஆகியவை அட்டவணைப்படுத்தப்பட்டு பிற்சேர்க்கைகளில் தரப்பட்டுள்ளன.

## அரசு அச்சகங்கள்

### 1. அரசு மைய அச்சகம், சென்னை-79

அரசு மைய அச்சகம் இரண்டு பணி மேலாளர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ், மும்முறை பணிமாற்று முறையில் மொத்தம் 2143 பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இவ் வச்சகத்தில் நவீன வசதிகளுடன்கூடிய அச்சிடும் இயந்திரங்கள், நிழற்படக் கோப்பு இயந்திரம், பிளாக் தயாரிக்கும் பிரிவு, இரப்பர் முத்திரைப் பிரிவு மற்றும் "டெஸ்க் டாப் பப்ளிஷர்" முதலான அனைத்து இயந்திரங்களும் வசதிகளும் உள்ளன. இவ் வச்சகத்தில், சட்டப் பேரவையின் அவசரப் பணிகள், அதிரகசியப் பணிகள், மாநில வரவு-செலவுத் திட்டப் பணிகள், தமிழ்நாடு

[2000 மே 2

தேர்வாணைய வெளியீடுகள், தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுகள் மற்றும் ஒவ்வொரு புதன்கிழமையும் வெளியிடப்படுகின்ற தமிழ்நாடு அரசிதழ்கள் ஆகியவை சிறப்பான முறையில் அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன. இவை தவிர அரசு நாட்காட்டிகளும், நாட்குறிப்பேடுகளும் இங்கு அச்சிடப்படுகின்றன. கடந்த 1999-2000 ஆண்டில் ஒவ்வொரு மாதமும் இரண்டு கோடி பரிசுச் சீட்டுகள் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன.

**2. அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை-104**

*1923 ஆம் ஆண்டு* தொடங்கப்பட்ட இக் கிளை அச்சகம், தற்போது ரூ. 1 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தில் ஒரு துணைப் பணி மேலாளரின் பொறுப்பில் 244 பணியாளர்களைக் கொண்டு மும்முறைப் பணிமாற்று ஏற்பாட்டில் இயங்கி வருகிறது. இவ் வச்சகம் நவீன ஆப்செட் தொழில் நுட்ப வசதியுடன் செயல்பட்டு வருகிறது. 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் 4 அலகு வெப் ஆப்செட் இயந்திரமும், உபகரணங்களும் நிறுவப்பட்டுள்ளன.

உயர் நீதிமன்றத்திற்குரிய தினசரி வழக்குப் பட்டியல்களை அச்சிடுவது இதன் முக்கியப் பணியாகும். இது, ஒவ்வொரு நாள் மாலையிலும், மறுநாள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ள வழக்குகள், சம்பந்தப்பட்ட நீதிமன்றம், நீதியரசர் குறித்த விவரங்களை தேசிய தகவல் மையம் மூலமாக உயர் நீதிமன்றத்திலிருந்து பெற்று, அச்சிட்டு, மறுநாள் காலையில் குறித்த நேரத்திற்குள் வழங்கப்படவேண்டிய 'காலவரையறை' கொண்ட பணியாகும். வழக்குரைஞர்கள், பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்களுக்குப் பயன்படும் வகையில் அரசு வெளியீடுகள் துணை விற்பனைப் பிரிவு ஒன்றும் இவ் வச்சகத்தில் இயங்கி வருகிறது.

இதுதவிர, கீழ்க்காணும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:-

(அ) மாதத்திற்கு இருமுறை வெளியிடப்படும் இந்திய சட்ட அறிக்கைகள் அச்சிடல்.

(ஆ) அரசுத் தேர்வுத் துறை, மோட்டார் வாகனங்கள், வணிக வரி, நலவாழ்வு மற்றும் நீதித் துறைகள் சம்பந்தப்பட்ட நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் அச்சிடல்.



2000 மே 2]

**3. அரசு கிளை அச்சகம், மதுரை**

*1976 ஆம் ஆண்டு* தொடங்கப்பட்ட இவ் வச்சகம், சொந்தக் கட்டடத்தில் ஒரு துணைப் பணி மேலாளரின் தலைமையின்கீழ் 215 பணியாளர்களைக் கொண்டு இருமுறை பணிமாற்று ஏற்பாட்டுடன் இயங்கி வருகிறது. தொழில் நுட்பப் பிரிவில் ஓர் உதவிப் பணி மேலாளரும், ஓர் உதவிப் பொறியாளரும், நிருவாகப் பிரிவில் ஓர் உதவி இயக்குநரும் துணைப் பணி மேலாளருக்கு உதவியாகச் செயல்பட்டு வருகின்றனர்.

இக் கிளையில் கீழ்க்காணும் துறைகளுக்காக நிலைப்படுத்தப்பட்டப் படிவங்கள், நிலைப்படுத்தப்படாத சிறப்புப் படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிட்டு வழங்கப்படுகின்றன:—

1. வருவாய்த் துறை
2. கருவூலம் மற்றும் கணக்குத் துறை
3. காவல் துறை
4. பதிவுத் துறை
5. மருத்துவத் துறை
6. வணிக வரித் துறை
7. வேளாண்மைத் துறையின் விதைச் சான்று அட்டைகள்
8. சட்டக் கல்லூரி விண்ணப்பங்கள்
9. அரசுத் துறை அட்டவணைகள்
10. பொதுப் பணித் துறை விலைப்பட்டியல்

மதுரையிலுள்ள அரசு கிளை அச்சக இயந்திரங்கள் 50 முறை பணிமாற்று ஆண்டுகள் இயங்கித் திறன் இழந்துவிட்டதால் இப் பழைய இயந்திரங்களை அகற்றிவிட்டு, அச்சுப் பணிகளை நவீனப்படுத்தும் நோக்கத்துடன் 2000-2001 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.45 இலட்சம் செலவில் பின்வரும் நவீன அச்சுப் பொறிகளும் சாதனங்களும் வாங்கப்படவுள்ளன.

**I. ஆயத்த அச்சுப்பொறிகள்** எண்ணிக்கை

1. டிட்டிபி. டெர்மினல்கள் (அச்சுக் கோர்க்கும் இயந்திரம்)
2. லேசர் பிரின்டர்

[2000 மே 2

| | | எண்ணிக்கை |
|---|---|---|
| 3. | டாட்மேட்ரிக்ஸ் பிரின்டர் | - 1 |
| 4. | ரீடச்சிங் மேஜை | - 1 |
| 5. | பிளேட் பிராசசர் | - 1 |
| 6. | ட்வின் எக்ஸ்போசர் | - 1 |
| 7. | இடையறா மின் வழங்கு சாதனம் 2 கே.வி.ஏ | - 1 |
| 8. | ஏ.சி. விண்டோ 2 டி.ஆர். | - 1 |
| 9. | பெடஸ்டல் மின்விசிறி | - 1 |
| 10. | ஒர்க் ஸ்டேஷன் | - 2 |
| 11. | பணியாளர் இருக்கை | - 2 |
| 12. | கூரை மின்விசிறி | - 2 |

**II. அச்சுப் பொறிகள்**

| | | |
|---|---|---|
| 1. | வெப் ஆப்செட் பிரின்டிங் இயந்திரம் | - 1 |
| 2. | ஸ்டெபிலைசர் | - 1 |
| 3. | நீராற்றல் இழுவை இயந்திரம் | - 1 |

தொழிலாளர்கள் நலனுக்காக ஒரு கூட்டுறவு நாணயச் சங்கமும், ஒரு மனமகிழ் மன்றமும் இக்கிளையில் இயங்கி வருகின்றன. தொழிலாளர் நலத் துறையினரால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவும் தொழிலாளர் அனுமதிக்கப்படுகின்றனர்.

**4. அரசு கிளை அச்சகம், சேலம்**

1966 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த அச்சகம், 1986 ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. ஒரு கிளை மேலாளரின் கீழ் 136 பணியாளர்களுடன் இருமுறை பணிமாற்று முறையில் இயங்கி வரும் இவ்வச்சகத்தில் அரசு அலுவலகங்களுக்குத் தேவையான பின்வரும் படிவங்களும், பதிவேடுகளும் அச்சிடப்படுகின்றன:

(1) தமிழ்நாடு கருவூல விதித் தொகுப்புப் படிவங்கள்

(2) மருத்துவத் துறை படிவங்கள்



2000 மே 2]

(3) அரசுத் தேர்வுப் பணிகள்

(4) நிலைப்படுத்தப்படாத 'ஏ' பதிவேடுகள்

(5) சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, நாமக்கல் மாவட்ட அரசிதழ்கள்

இக்கிளை அச்சகத்தில் பணியாளர்களின் நலனுக்காக ஒரு கூட்டுறவு நாணயச் சங்கமும் ஒரு மனமகிழ் மன்றமும் இயங்கி வருகின்றன.

**5. அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி**

இவ்வச்சகம் 1965 ஆம் ஆண்டு அரியமங்கலத்தில் ஒரு வாடகைக் கட்டடத்தில் தொடங்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல் துவாக்குடியில் கட்டப்பட்டுள்ள சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. ஒரு கிளை மேலாளரின்கீழ் 136 பணியாளர்களுடன் இருமுறை பணிமாற்று முறையில் இயங்கிவரும் இவ்வச்சகம், மாநில அரசின் பல்வேறு துறைகளுக்கும் தேவையான பொதுப் படிவங்கள், பதிவேடுகள் மற்றும் நிலைப்படுத்தப்பட்ட படிவங்களை அச்சிட்டு வழங்குகின்றது. மேலும், காவல் துறை, சிறைத் துறை மற்றும் அரசுத் தேர்வுகள் இயக்ககம் ஆகியவற்றிற்கான படிவங்களும் இக்கிளை அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன. இங்கு அச்சிடப்படும் பொதுப் படிவங்களில், தன்பதிவேடுகள், ரொக்கப் பதிவேடுகள் மற்றும் அளவைப் பதிவேடுகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. பல்வேறு வாரியங்கள் மற்றும் கழகங்களுக்குத் தேவையான பொதுப் படிவங்கள் மற்றும் பதிவேடுகளை இவ்வச்சகம் அச்சிட்டு, சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து அதற்கான கட்டணத்தைப் பெற்று வழங்கி வருகிறது. இத்துடன் திருச்சிராப்பள்ளி, மதுரை, திண்டுக்கல், கரூர், பெரம்பலூர் மற்றும் தேனி ஆகிய ஆறு மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் இங்கு அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

இக்கிளை அச்சகத்தில் தொழிலாளர் நலனுக்கென ஒரு கூட்டுறவு நாணயச் சங்கம் இயங்கி வருகிறது.

**6. அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை**

இக்கிளை அச்சகம், 1949 ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடத்தில், இருமுறை பணிமாற்று முறையில் இயங்கி வருகிறது. ஒரு கிளை மேலாளரின்கீழ் 171 பணியாளர்களுடன் இயங்கிவரும் இவ்வச்சகம் கீழ்க்காணும் நிலைப்படுத்தப்பட்ட படிவங்களையும் மற்றும் பதிவேடுகளையும் அச்சிட்டு வழங்குகின்றது:-

[2000 மே 2

(1) ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை

(2) காவல் துறை

(3) மருத்துவத் துறை

(4) ஓய்வூதியம்

(5) வனத் துறை அட்டவணை

(6) விதித் தொகுப்பு மற்றும் நடைமுறை நூல்கள்

இவைதவிர, அச்சகத் தயாரிப்புப் பொருட்களைத் தயாரித்தல், 16 மாவட்டங்களுக்கான அரசிதழ்கள் ஆகியனவும் இவ்வச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

அச்சகத் தொழிலாளர் நலனுக்கென இக்கிளையில் ஒரு கூட்டுறவுச் சங்கமும், மனமகிழ் மன்றமும் இயங்கி வருகின்றன. வருடந்தோறும் நடத்திவரும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெறும் தொழிலாளர்களுக்குத் தொழிலாளர் நலத் துறையிலிருந்து பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**7. அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்**

1966 ஆம் ஆண்டு முதல் இயங்கிவரும் இக்கிளை அச்சகம் 1981 ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடத்தில் ஒரு துணைப் பணி மேலாளரின்கீழ் 124 பணியாளர்களுடன் இருமுறை பணிமாற்று முறையில் இயங்கி வருகிறது. இங்கு பின்வரும் துறைகளுக்கான நிலைப்படுத்தப்பட்ட படிவங்களும், பதிவேடுகளும் அச்சிட்டு வழங்கப்படுகின்றன:—

(1) வேளாண்மைத் துறை

(2) தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

(3) பொதுப் பணித் துறை

(4) கால்நடை பராமரிப்புத் துறை

(5) மருத்துவத் துறை

(6) காவல் துறை

(7) தமிழ்நாடு தியணைப்புத் துறை



2000 மே 2]

(8) தொழில் மற்றும் வணிகத் துறை

(9) தேசிய மாணவர் படை

(10) கூட்டுறவுத் துறை

(11) வனத் துறை

(12) புள்ளியியல் துறை

(13) வேலூர், விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்ட அரசிதழ்கள்

தொழிலாளர்களுக்கான ஓய்வுநேரப் பொழுதுபோக்கிற்காக ஒரு மனமகிழ் மன்றம் இங்கு செயல்பட்டு வருகிறது. இங்குள்ள பணியாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கத்திலிருந்து கடனுதவிகள் வழங்கப்படுகின்றன.

**தொழிலாளர் நலன்**

*1. குடியிருப்புகள்*

சென்னை, தண்டையார்பேட்டையில் அச்சகப் பணியாளர்களுக்காக 300 குடியிருப்புகள் மின்விசிறிகள், தெரு விளக்குகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் போன்ற வசதிகளுடன் உள்ளன. "ஏ", மற்றும் "பி" பிரிவு குடியிருப்புகளைச் சுற்றி மதில் சுவர் எழுப்பப்பட்டுள்ளது.

*2. தொழிலாளர் நலன்*

ஓர் உதவித் தொழிலாளர் நல அலுவலரும், சுகாதார மேற்பார்வையாளரும் குடியிருப்பவர்களின் நலனைக் கண்காணிக்கும் வகையில் குடியிருப்புகளுக்கு அடிக்கடி சென்று பார்வையிடுகின்றனர். சுகாதார மேற்பார்வையாளர் மேற்படி அலகுகளில் உள்ள தங்கும் அறை, உணவறை மற்றும் சைக்கிள் நிறுத்தம் ஆகிய இடங்களின் தூய்மைப் பணிகளைச் செவ்வனே கவனித்து வருகிறார்.

*3. மருத்துவ வசதி*

அரசு மைய அச்சகத்தில் உள்ள மருத்துவ அலுவலர் வாரந்தோறும் சென்னை மாநகரிலுள்ள இயக்ககம் உள்ளிட்ட அனைத்து அலகுகளுக்கும் சென்று மருத்துவப் பரிசோதனை செய்து தேவையான சிகிச்சை அளித்து வருகிறார். மேலும் அரசு மைய அச்சகத்தில் உள்ள மருந்தகத்தில் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது.

[2000 மே 2

*4. இலவச பால், தேநீர் மற்றும் ரொட்டி வழங்கல்*

அரசு மைய அச்சகம் உள்ளிட்ட அனைத்துக் கிளை அச்சகங்களிலும் பணிபுரியும் அச்சுத் தொழிலாளர்களுக்கு இலவச தேநீர் மற்றும் ரொட்டி வழங்குவதற்குப் பதிலாக ஒவ்வொரு தொழிலாளிக்கும் பிரதி மாதம் ரூ.50 ரொக்கப் படியாக வழங்கப்படுகிறது. எழுதுபொருள் கிடங்குப் பணியாளர்களுக்கு 1999 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல், மாதம் ரூ.40 தேநீர் மற்றும் ரொட்டிப் படியாக வழங்கப்படுகிறது. இது தவிர ஈயப்புகை வெளியேறும் பிரிவில் பணிபுரியும் தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் வைட்டமின் சத்துள்ள மாத்திரைகளும் நாளொன்றுக்குப் பால் படியாக ரூ.2-ம் வழங்கப்படுகின்றன.

*5. தொழிலாளர் நலநிதி*

தொழிலாளர்களின் நலப் பணிகளுக்கும், விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கும், சுதந்திர தினம் மற்றும் ஆயுத பூஜை போன்ற விழாக்களை நடத்துவதற்கும் தொழிலாளர் நல நிதியில் இருந்து நிதி ஒதுக்கப்படுகிறது.

*6. நலத் திட்டங்கள்*

மகளிர் நலத் திட்டத்தின்கீழ் அவர்களது வருமானத்தை அதிகரிக்கும் வகையில் சென்னை மாநகரில் உள்ள சென்னைப் பெருநகரக் காவலர் குடும்ப நலக் குழுக்கள், பட்டினப்பாக்கம் மகளிர் மற்றும் உடல் ஊனமுற்றோர் நலக்கூட்டுறவு மையங்கள் ஆகிய சமூக நல அமைப்புகளில் உள்ள பெண் பணியாளர்களுக்கு "பைண்டிங்" மற்றும் "உறைகள் செய்தல்" போன்ற பணிகள் ஒப்படைக்கப்படுகின்றன.

*7. குளிர் குடிநீர் சாதனம்*

புதுக்கோட்டை, மதுரை மற்றும் விருத்தாசலம் ஆகிய இடங்களில் உள்ள கிளை அச்சகங்களிலும் சென்னை நகரில் அமைந்துள்ள இயக்ககம் மற்றும் மைய அச்சகத்திலும் குளிர் குடிநீர் சாதனங்கள் பொருத்தப்பட்டு உள்ளன.

*8. குழந்தைகள் காப்பகம்*

மகளிர் தொழிலாளர்களின் வசதியைக் கருதி, மைய அச்சகத்தில் குழந்தைகள் காப்பகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்கென நியமிக்கப்பட்ட குழந்தைக் காப்பகப் பணியாளர் குழந்தைகளைக் கவனித்து வருகிறார். இக்குழந்தைகளுக்கு அரசின் செலவில் பால், பிஸ்கட் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.



2000 மே 2]

*9. சீருடைகள்*

அச்சகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இரண்டாண்டிற்கு ஒரு முறை, மூன்று ஜோடி பாலியஸ்டர் சீருடைகள் வழங்கப்பட்டு, அதற்காக தையற்கூலி ஆண் தொழிலாளர்களுக்கு ஒரு ஜோடிக்கு ரூ.100 வீதம் ரூ.300-ம் பெண் தொழிலாளர்களுக்கு ரவிக்கை தைப்பதற்கான தையற்கூலியாக ஒரு ரவிக்கைக்கு ரூ.20 வீதம் ரூ.60-ம் வழங்கப்படுகிறது.

*10. சிற்றுண்டிச்சாலை*

சென்னை அரசு மைய அச்சகம், எழுதுபொருள் கிடங்கு மற்றும் மதுரையில் உள்ள அரசுக் கிளை அச்சகத்திலும், தொழிலாளர்களுக்கென சிற்றுண்டிச்சாலைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

*11. நல நிதி*

தொழிலாளர் இறக்கும் சமயங்களில் அவர்களது குடும்பத்திற்கு உடனடி நிவாரணமாக ரூ.100 இந்த நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. இத்துடன் இறந்தவரின் வாரிசுதாரருக்கு தொழிலாளர் நல வாரியத்திலிருந்து ரூ.200-ம் பெற்று அளிக்கப்படுகிறது.

*12. தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை தொழிலாளர் கூட்டுறவு நாணய சங்கம்*

5-5-1923-ல் ஆரம்பிக்கப்பட்ட இக்கூட்டுறவுச் சங்கம் தனது உறுப்பினர்களுக்கு ரூ.75,000 வரையில் கடன் தொகை வழங்குகிறது.

*13. நாட்காட்டி மற்றும் நாட்குறிப்பேடு*


அனைத்துப் பணியாளர்களுக்கும் ஒரு நாட்காட்டி மற்றும் ஒரு நாட்குறிப்பேடு ஜனவரி 2000 முதல் வழங்கப்பட்டு வருகின்றது.

**அச்சக மேம்பாட்டுத் திட்டம்**

அச்சு உலகில் ஏற்பட்டுவரும் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியினை, இத்துறை கூர்மையாகக் கவனித்து வருவதுடன், புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய இயந்திரங்களை அரசு அச்சகங்களில் அமைத்து அதனால் அச்சின் தரம் மற்றும் திறனையும் மேம்படுத்தத் திட்டமிடப்படுகிறது. எதிர்வரும் ஆண்டுகளில் அரசு அச்சகங்களைப் படிப்படியாக நவீனப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அட்டவணை-அ

## நிருவாக அமைப்பு






அட்டவணை-ஆ

## அரசு அச்சகங்களில் நிறுவப்பட்டுள்ள இயந்திரங்களின் விவரம் : அச்சுப் பிரிவு

| வ. எண் | அச்சகத்தின் பெயர் | வெப் ஆப்செட் இயந்திரம் ஐந்து யூனிட் | நான்கு யூனிட் | இரண்டு யூனிட் (ஆர்.ஏ1 அளவில்) | ஷீட்பெட் ஆப்செட் அச்சு இயந்திரம் (ஆர்.ஏ1 அளவில்) | ஷீட்பெட் ஆப்செட் அச்சு இயந்திரம் (ஆர்.ஏ2 அளவில்) | சிறிய ஆப்செட் அச்சு இயந்திரம் | லெட்டர் பிரஸ் அச்சு இயந்திரம் (ஆர்.ஏ1 அளவில்) | லெட்டர் பிரஸ் அச்சு இயந்திரம் (ஆர்.ஏ2 அளவில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | 3(அ) | 3(ஆ) | 3(இ) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1. | அரசு மைய அச்சகம், சென்னை-600 079 | 2 | .. | 2 | 4 | 7 | 1 | 5 | 10 |
| 2. | அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்ற வளாகம், சென்னை-600 104 | - | 1 | - | - | - | 6 | - | - |
| 3. | அரசு கிளை அச்சகம், மதுரை | - | - | - | 5 | - | - | - | 1 |
| 4. | அரசு கிளை அச்சகம், சேலம் | - | - | 1 | - | - | - | - | 7 |
| 5. | அரசு கிளை அச்சகம், திருச்சி | - | - | - | - | - | 1 | - | 4 |
| 6. | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை | - | - | - | - | - | 1 | 1 | 5 |
| 7. | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் | - | - | - | - | - | 1 | - | 5 |

அட்டவணை-இ

## புத்தகக் கட்டுமானப் பிரிவு

| வ. எண் (1) | அச்சகத்தின் பெயர் (2) | வெட்டு இயந்திரம் (3) | புத்தகம் தைக்கும் இயந்திரம் (4) | கம்பி அடிக்கும் இயந்திரம் (5) | கோடிடும் இயந்திரம் (6) | சுழல் எண்ணிடும் இயந்திரம் (7) | தாள் மடிக்கும் இயந்திரம் (8) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | அரசு மைய அச்சகம், சென்னை-600 079 | 21 | 3 | 35 | 4 | 6 | 5 |
| 2. | அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை-600 104 | 1 | - | 1 | - | - | - |
| 3. | அரசு கிளை அச்சகம், மதுரை | 4 | - | 3 | - | 3 | 1 |
| 4. | அரசு கிளை அச்சகம், சேலம் | 3 | - | 2 | 1 | 1 | - |
| 5. | அரசு கிளை அச்சகம், திருச்சி | 3 | - | - | 1 | 1 | - |
| 6. | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை | 3 | - | 2 | 1 | 1 | 1 |
| 7. | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் | 2 | - | 4 | 1 | 1 | - |



அட்டவணை-ஈ

## பணியாளர் விவரம் (29-02-2000-ல் உள்ளபடி)

| வரிசை எண் (1) | அலகு (2) | அலுவலர்கள் (அ) தொகுதி 3(அ) | அலுவலர்கள் (ஆ) தொகுதி 3(ஆ) | அமைச்சுப் பணியாளர்கள் (4) | மேற்பார்வைப் பணியாளர்கள் (5) | தொழில் நுட்பப் பணியாளர்கள் (6) | மொத்தம் (7) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | இயக்ககம், சென்னை-600 002. | 5 | 6 | 148 | 6 | 47 | 212 |
| 2. | அரசு எழுது பொருள் கிடங்கு, சென்னை-1 | 1 | 1 | 59 | .. | 141 | 202 |
| 3. | அரசு மைய அச்சகம், சென்னை-79. | 6 | 20 | 187 | 153 | 1,777 | 2,143 |
| 4. | அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை-600 104. | 1 | 2 | 13 | 10 | 218 | 244 |
| 5. | அரசு கிளை அச்சகம், மதுரை | 1 | .. | 18 | 8 | 188 | 215 |
| 6. | அரசு கிளை அச்சகம், சேலம் | .. | 1 | 14 | 8 | 113 | 136 |
| 7. | அரசு கிளை அச்சகம், திருச்சி | .. | 1 | 11 | 8 | 116 | 136 |
| 8. | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை | .. | 1 | 15 | 10 | 145 | 171 |
| 9. | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் | 1 | .. | 7 | 7 | 109 | 124 |
| | மொத்தம் | 15 | 32 | 472 | 210 | 2,854 | 3,583 |

அட்டவணை-உ

## 1999 ஆம் ஆண்டில் அரசு அச்சகங்களின் செயலாக்க விவரங்கள்

*(ஏப்ரல் 1999 முதல் மார்ச் 2000 வரை)*

| அச்சகத்தின் பெயர் | அச்சு அழுத்தங்கள் ஆர்.ஏ-2 (கோடிக்கணக்கில்) | | |
|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | விழுக்காடு |
| 1. அரசு மைய அச்சகம், சென்னை-79 | 27.5 | 26.8 | 97.0 |
| 2. அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை-104 | 5.4 | 5.5 | 101.2 |
| 3. அரசு கிளை அச்சகம், மதுரை | 4.6 | 4.9 | 103.3 |
| 4. அரசு கிளை அச்சகம், சேலம் | 5.5 | 5.3 | 95.2 |
| 5. அரசு கிளை அச்சகம், திருச்சி | 2.5 | 1.9 | 77.2 |
| 6. அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை. | 2.6 | 2.8 | 107.2 |
| 7. அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் | 2.0 | 1.9 | 91.7 |
| மொத்தம் .. | **50.1** | **49.1** | **97.2** |



## இணைப்பு II

*(141 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**கோரிக்கை எண் 46**

**செய்தி-திரைப்படத் தொழில்நுட்பவியல்**

**கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001**

**முன்னுரை**

*செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்*
*செயற்கரிய செய்கலா தார்.*

*பூத்தது புத்தாயிரம்: புலர்ந்தது புதுயுகம்!*
*பொலிந்ததுவானம் பொன்னொளி பொங்கிற்று!*
*புத்தாண்டு! புதுநூற்றாண்டு! புதிய ஆயிரம் என்ற மூன்று*
*புதுமலர்கள் ஒருசேரப் பூத்ததால் எங்கும் புதுமை!!*
*எதிலும் புதுப்பொலிவு!!*

*இப் புதுப் பொலிவின் சிகரமாக—தகவல் தொடர்பு தொழில்நுட்பம்!!*
*இந்தப் புதுநுட்பத்தோடு சமவேகத்தில், கைகோத்து நடக்க*
*வேண்டியது.*
*செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பன்முகப்*
*பணியாகும்.*

*செய்தி-மக்கள் தொடர்புத் துறை—*
*அரசின் திட்ட செயலாக்கம்—மக்களின் இதயம்*
*இரண்டுக்கும் பாலமாய் இருந்து கொண்டிருக்கும்*
*தகவல் தொழில்நுட்பத் தந்துகிக் குழாய்!*

*மக்களின் உரிமையை மக்களுக்கு உணர்த்தும்*
*அற்புத நாக்கு! ஆட்சியின் செவி, விழி!*

*எக்காலமும் இயங்கிக் கொண்டிருக்கும்*
*ஜனநாயகத்தின் இதயத் துடிப்பு!*

[2000 மே 2

அடித்தள மக்கள், அரசிடம் இருந்து
எவ்வகை உதவிகள் பெறலாம், அவற்றை எப்படிப் பெறலாம்
என்பதை ஒலிக்கும் எழுச்சி முரசம்!

சுருங்கச் சொன்னால்—
செய்தி-மக்கள் தொடர்புத்துறை என்பது
ஆட்சிக்கும் மக்களுக்கும் இணைப்பினை ஏற்படுத்தி,
மக்கள் மனங்களில் விழிப்புணர்வைத் தட்டி எழுப்பும்
மகத்தான பணியினை ஆற்றிவரும் பெருமை கொண்டதாகும்.

இந்த இலக்கினை முன்வைத்து துறை ஆற்றும் பணிகளின்
அணிவகுப்பு இதோ!

பிச்சிப்பூச் சொற்களை அச்சுப் பூவாக்கி
மெச்சத் தகுந்த இலக்கிய ஆரமாய் நாட்டுக்குச் சூட்டும்
'தமிழரசு' ஏடு!

மொழிவழி புகுந்து மொழிவதைக் காட்டிலும்
விழிவழி புகுந்து விளக்குதல் எளிது
என்பதால் செய்தியை ஒளிவழி விளக்கும்
திரைப்படப் பிரிவு
திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம்!

ஆட்சியின் மாட்சிக்குச் சாதனையே நற்சாட்சி! அதைக்
காட்சியால் விளக்கும் அரசுப் பொருட்காட்சி!

கண்ணையும் கருத்தையும் கவரும் விதத்தில்
அனைத்துத் துறைகளின் விளம்பரங்களையும்
உளம் கொளத் தக்க வகையிலே வழங்கும்
விளம்பரப் பிரிவு!

மக்களின் மனங்களிலே மங்காத புகழ் கொண்டு என்றென்றும்
வாழ்ந்து வரும்
மாணிக்க மனிதர்க்குக் காணிக்கையாக
நினைவகம் அமைத்து அதனைப் பேணிவரும்
நினைவகப் பிரிவு!

மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள்
அளிக்கின்ற அறிக்கைகள்—அரசின் அறிவிப்பை



2000 மே 2]

தகவல் தொடர்பு சாதனங்கள் வாயிலாக
தருகின்ற பணியில் அல்லும் பகலும்
எந்நேரமும் இயங்கிக் கொண்டிருக்கும்
செய்தி வெளியீட்டுப் பிரிவு!

ஆய்வாளர்க்கும் மாணவர்க்கும் ஓர்
அறிவு ஆலயமாய்
அரும்பணி ஆற்றும்
மாநிலச் செய்தி நிலையம்!

நாட்டுக்கும் மொழிக்கும் நற்றொண்டு ஆற்றிய
சான்றோரை, இளைய சமுதாயம் அறிந்து பயன்பெறவே
அழகுற எடுக்கும் அரசு விழாக்கள்!

நாளொரு திட்டமாய் மாண்புமிகு முதலமைச்சர் அறிவிக்கும்
திட்டங்களை
பயனாளிகளான மக்களுக்கு எடுத்துச்செல்லும்
பல்துறைப் பணிவிளக்க முகாம்கள்!

தமிழகம் முழுவதும் சமத்துவபுரமாய்
ஆகும் நாள் அன்றோ ஆனந்தத் திருநாள்!
அந்த நாள் மலர—
தீண்டாமை ஒழிப்புக்குத் தீவிர பிரச்சாரம்!
மதநல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமைக்கு
மகத்தான முயற்சிகள்!

மொழிமரபு பேணிவரும் முதலமைச்சர் தேசத்தின் தியாக
வரலாற்றைப் போற்றுவதிலும் முன்நிற்பவர்.

சுதந்திரத் திருநாள் பொன்விழாவினை 1997 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் முதல் 1998 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் முடிய ஓராண்டு காலம் மிகச் சிறப்பாகக் கொண்டாடியது தமிழ்நாடு அரசு! அதற்குக் கருவியாய் விளங்கியது செய்தி-மக்கள் தொடர்புத் துறை!

குடியரசுத் தினப் பொன்விழாவை சிறப்பாகக் கொண்டாட உள்ளது.

இந்தப் பணிகளின் வரிசையில் முத்தாரமாய் அமைந்த பணி, தென்குமரி முனையினிலே அய்யன் திருவள்ளுவர்க்குச் சிலையெடுத்த திருப்பணியே! சமயம் சாராத நூல்களில், உலகிலே அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட ஒரே நூல் திருக்குறள் என்பது தமிழர்க்குத்

தனிப்பெருமை. தமிழ்மறையாம் திருக்குறள் தரணிக்கே பொது மறையாகும். அவ்வுலகப் பொது மறை தந்த திருமகன் அய்யன் திருவள்ளுவர்க்கு, உலகமே போற்றும் வண்ணம் சிலையெடுத்து, விழாக் கண்டு பெருமை பெற்றவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் ஆவார். தலைநகர் சென்னையில் வள்ளுவர் கோட்டம் கண்ட அவரே, குமரிமுனையில் திருவள்ளுவர்க்குச் சிலையெடுத்தார் என்பது வையம் வாழ்த்தும் வரலாற்றுச் சிறப்பாகும். அதோடு, அய்யன் திருவள்ளவர் சிலை திறப்பு விழா நிகழ்ச்சியில், காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த 133 குறளோவியங்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, சென்னை வள்ளுவர் கோட்டத்தில், நிரந்தரமாக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் 30 ஆண்டு கால வரலாற்றில், முதன் முறையாக, பெரிதும் பாராட்டத்தக்க சாதனையாக, திரைப்படப் பிரிவு உருவாக்கிய 'அண்ணா வாழ்கின்றார்' என்ற விளக்கப்படம் 1998 ஆம் ஆண்டின் சிறந்த தொகுப்பு விளக்கப் படததயாரிப்புக்கும், சிறந்த இயக்குநருக்குமான தேசிய விருதை பெற்றுள்ளது. இவ்விருது, 15-2-2000 அன்று, புதுதில்லியில், மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால், தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் இயக்குநர் திரு. பி. அமிர்தம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு திரைப்பட தொலைக்காட்சி தொழில் நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர்கள் தொடர்ந்து இந்திய அளவில் பாராட்டுதலும் பரிசுகளும் பெற்று வருகின்றார்கள். 1999 ஆம் ஆண்டின் சிறந்த குறும் படத்துக்கான தேசிய விருதை, இந்நிறுவனத்தின் மாணவர் பட்டயப் படமான 'மல்லி' என்னும் படம் பெற்றுத் தந்தது.

இவ்வாறு, மரபையும் புதுமையையும் ஒருசேரப் போற்றி, காலத்தின் தேவைக்கேற்ப புதுப்பொலிவு கொண்டு பணியாற்றி வருகிறது செய்தி-மக்கள் தொடர்புத் துறை.

## அத்தியாயம்-1

### அரசு விழாக்கள்

*நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்*
*பண்பு பாராட்டும் உலகு.*

இந்தியத் திருநாட்டின் விடுதலைக்கும் விழிப்புணர்வுக்கும் அருந்தொண்டாற்றிய பெருந்தலைவர்கள் பலராவர். அவர்களில் தமிழ்



மண்ணில் பிறந்த பெருமைக்குரியவர்களைப் போற்றிச் சிறப்பிக்கும் வகையிலும், அவர்களின் நாட்டுப் பற்றையும் சமுதாய உணர்வையும், அருந்தொண்டினையும் நாட்டு மக்கள், குறிப்பாக இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையிலும் அவர்களுடைய பிறந்தநாள் உள்ளிட்ட நிகழ்ச்சிகள், அரசு விழாக்களாக, கொண்டாடப்படுகின்றன.

1999-2000 ஆண்டில் மாவட்டங்களில் அரசு சார்பில் மாநில அளவிலான விழாக்கள் கீழ்க்கண்டவாறு கொண்டாடப்பட்டன:

1. வீரபாண்டிய கட்டபொம்மன் விழா மே மாதம் பாஞ்சாலங்குறிச்சியில் கொண்டாடப்பட்டது.

2. சென்னை கிண்டியில் காந்தி மண்டப வளாகம் தியாகிகள் மணிமண்டப முகப்பில் புதிதாக அமைக்கப்பட்ட மொழிப்போர் தியாகி சங்கரலிங்கனார் மற்றும் சுதந்திரப் போராட்டத் தியாகி ஆர்யா (எ) பாஷ்யம் ஆகியோரது சிலைகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 17-7-1999 அன்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

3. கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்களின் 128-வது பிறந்த நாள் 5-9-1999 அன்று ஒட்டப்பிடாரத்தில் கொண்டாடப்பட்டது.

4. அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாள் விழா 2-10-1999 முதல் 4-10-1999 வரை சென்னை கிண்டி காந்தி மண்டபத்தில் கொண்டாடப்பட்டது.

5. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டு 200-வது ஆண்டினை நினைவுகூரும் வகையில், அஞ்சல் தலை வெளியீடும் புகழாஞ்சலி நிகழ்ச்சியும் 16-10-1999 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறில் உள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் சிலைக்கு அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

6. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்தநாள் விழா 28-10-1999 முதல் 30-10-1999 வரை இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் கிராமத்திலும் 30-10-1999 அன்று மதுரை மாவட்டத்திலும் கொண்டாடப்பட்டது.

[2000 மே 2

7. மறைந்த முன்னாள் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களை நினைவுகூரும் வகையில் தேசிய மறு அர்ப்பணிப்பு நாள் 31-10-1999 அன்று விழுப்புரத்தில் கொண்டாடப்பட்டது.

8. மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா தருமபுரி மாவட்டத்தில் 10-12-1999 அன்று கொண்டாடப்பட்டது.

9. மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் 11-12-1999 அன்று கொண்டாடப்பட்டது.

10. தமிழக அரசின் சார்பில் பெரியார், அம்பேத்கர், திரு.வி.க., பாரதியார் மற்றும் பாவேந்தர் பாரதிதாசன் விருது வழங்கும் விழா 24-12-1999 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் கொண்டாடப்பட்டது.

11. விரிகடல் சூழ் குமரிமுனையில் அலைகடல் நடுவில் அமைக்கப்பட்டிருக்கும் 133 அடி உயர திருவள்ளுவர் சிலை திறப்பு விழா மிகச் சிறந்த முறையில் கன்னியாகுமரியில் 31-12-1999 மற்றும் 1-1-2000 ஆகிய நாட்களில் நடைபெற்றது. திருவள்ளுவர் திருவுருவச் சிலையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1-1-2000 அன்று திறந்து வைத்தார்கள்.

12. தூத்துக்குடி மாவட்டம், கவர்னகிரியில் வீரன் சுந்தரலிங்கம் பிறந்த நாள் விழா 16-4-2000 அன்று அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டது.

மானங்காத்த சீமையின் மருதுபாண்டியர் தூக்கிலிடப்பட்டு 200 ஆண்டுகள் ஆவதை நினைவுகூரும் வகையில் 2001 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் புகழாஞ்சலி நிகழ்ச்சி அரசு சார்பில் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் சிறப்பாக நடத்தப்படவுள்ளது.

தலைவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு அரசு சார்பில் அவர்கள் பிறந்த நாளன்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகின்றது.

## அத்தியாயம்-2

### தமிழரசு அலுவலகம் மற்றும் தமிழரசு அச்சகம்

காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான்! இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணில்



2000 மே 2]

பாய்ந்திடும் எழுச்சி நீதான்!
ஊரினை நாட்டை இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறிவாளர் நெஞ்சில்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே!

என்று பத்திரிகையைப் பாராட்டினார் பாவேந்தர் பாரதிதாசன். அந்த வகையில் அமைந்த கருத்துப் பெட்டகமே தமிழரசு ஏடு.

தமிழரசு இதழ், தமிழ்நாடு அரசின் குரல்! ஆம், தமிழ்நாடும் அரசின் குரல்! அரசுக்கும் மக்களுக்கும் இடையே அமைந்த எழுத்துப் பாலம். இந்தப் பாலத்தின்மீது பயணிக்கும் கருத்துகளோ, உலாவரும் மெல்லிய பூங்காற்று.

நாட்டு மக்கள் நலன் கருதி அரசு தீட்டுகின்ற நலத்திட்ட உதவிகள் குறித்தும், தகுதியானவர்கள் அவற்றைப் பெற்றுப் பயனடைந்திடும் வகையிலும் தமிழகத்தை வளங்கொழிக்கும் மாநிலமாக ஆக்கிட அரசு ஆற்றிவரும் பல்துறைச் செயலாக்கங்களையும் தாங்கி வெளிவரும் விடிவெள்ளியே 'தமிழரசு'. அரசு செய்திகளோடு, மருத்துவம், இலக்கியம், கலை, பண்பாடு மற்றும் பொதுமக்களின் குறை தீர்க்கும் வகையில், 'எங்கள் ஊர்ப் பிரச்சினை' முதலான பகுதிகளையும் உள்ளடக்கி தமிழரசு தமிழ் இதழ், மாதமிருமுறை வெளியிடப்படுகிறது.

1970-ல் மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட இந்த ஏடு, வெள்ளிவிழா கண்டு வெற்றிநடை போட்டு வரும் பெருமைக்குரியது ஆகும். அரசு விழாக்களின் நிகழ்ச்சித் தொகுப்புகளை, நிகழ்ச்சிகளில் ஆற்றப்படும் முதன்மையுரைகளை மற்றும் நிகழ்ச்சித் தொகுப்புகளைத் தாங்கிவருவதுடன், வேளாண்மை, மருத்துவம், தொழில் வளர்ச்சி, கல்வி, சமுதாயம், சமூகநலம், உள்ளாட்சி அமைப்புகள் முதலான பல்வேறு துறைகளின் பணி விளக்கக் கட்டுரைகளோடு அரிய பல கருத்தோவியங்களும், வாழ்வாங்கு வாழ்ந்தோரின் வாழ்க்கை வரலாறுகளும் இதழில் இடம்பெற்று மணம் வீசக் காணலாம்.

தமிழில் திங்கள் இருமுறை இதழாகவும், ஆங்கிலத்தில் மாத இதழாகவும் 'தமிழரசு' வெளிவந்து கொண்டிருக்கிறது. தற்போது தமிழில் 37,000 பிரதிகளும், ஆங்கிலத்தில் 2,000 பிரதிகளும் அச்சிடப்பட்டு மாநிலம் தழுவிய அளவில் விநியோகிக்கப்படுகின்றன.

[2000 மே 2

## 'அரசு செய்தி'

"அரசு செய்தி" என்னும் வண்ணச் சுவரொட்டி இதழ், தமிழக முதல்வர் அவர்களால் 14-4-1997-ல் தொடங்கப்பட்டது. இந்த இதழின் 20,000 பிரதிகள் வாரந்தோறும் "தமிழரசு" அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டு மாநிலம் முழுவதும் விநியோகிக்கப்படுகின்றன.

"அரசு செய்தி" இதழில் அரசின் அறிவிப்புகள், ஆக்கப் பணிகள், புதிய திட்டங்கள், அத்திட்டங்களின் வாயிலாகப் பயன்பெற யாரை அணுகவேண்டும் என்பது குறித்த செய்திகள் மற்றும் அரசுத் திட்டங்கள் குறித்த முக்கிய விவரங்களும் படங்களோடு வெளியிடப்படுகின்றன. வாரந்தோறும் வெளியிடப்படும் இந்த வண்ணச் சுவரொட்டிகள், அரசு அலுவலகங்களிலும், பொதுமக்கள் அதிகமாகக் கூடும் இடங்களிலும், தொலைதூரக் கிராமங்களிலும் சுவர்களில், தட்டிகளில் தனி அறிவிப்புப் பலகைகளில் ஒட்டப்பட்டு வருகின்றன. இதனால் பொதுமக்கள் அரசின் திட்டங்களை உடனுக்குடன் அறிந்துகொள்ள ஏதுவாகிறது.

### சிறப்பு வெளியீடுகள்

அரசின் ஆக்கப் பணிகள், பல்துறைச் சாதனைகள், மாண்புமிகு முதலமைச்சரின் முக்கிய உரைகள் ஆகியவை தொகுக்கப்பட்டு அவ்வப்போது சிறப்பு வெளியீடுகளாக வெளியிடப்படுகின்றன. அதன் அடிப்படையில்

1. கலைஞர் ஆட்சியில் கல்வி மேம்பாடு
2. கலைஞர் ஆட்சியில் ஊரக வளர்ச்சி
3. கலைஞர் ஆட்சியில் தொழில் வளர்ச்சி
4. முதல்வர் கலைஞரின் உழவர் சந்தை
5. கலைஞர் ஆட்சியில் வேளாண் சிறப்பு
6. அரசு நல வாழ்வுத் திட்டம் (வருமுன் காப்போம்)
7. மகளிர் மேம்பாடு
8. தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் சுதந்திரத் திருநாள் உரை
9. காஞ்சிபுரம் மாவட்டம் 'கால்நடை பாதுகாப்புத் திட்டம்'



2000 மே 2]

10. கலைஞர் ஆட்சியில் பசுமைப்புரட்சி நோக்கி பண்ணை மகளிர்
11. தொடரும் பயணம் (முதல்வர் கலைஞர் உரை)
12. நிதிநிலை அறிக்கை: 2000-2001
13. Kalaignar Speaks (ஆங்கிலம்)
14. செய்வதைச் சொல்லுகிறோம்!

### துண்டுப் பிரசுரங்கள்

1. கால்நடை பாதுகாப்புச் சிகிச்சை முகாம்
2. கன்று பராமரிப்பு முறைகள்
3. பசுந்தீவனம் குறித்த துண்டுப் பிரசுரங்கள்
4. கோழிப்பண்ணை பராமரிப்பு
5. ஆடுகள் நீலநாக்கு நோய்

ஆகியவை அழகிய முறையில் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

### கோட்டம் முதல் குமரி வரை

வான்புகழ் அய்யன் வள்ளுவரின் வானுயரத் திருவுருவச் சிலையை குமரியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்த அவ்வரலாற்றுச் சிறப்புமிகு நிகழ்ச்சியில் வெளியிடப்பட்ட "கோட்டம் முதல் குமரி வரை" என்ற சிறப்பு மலரில், முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 36 பக்கங்களில் குறுங்காவியமாய் எழுதப்பட்ட "திருக்குறள் என் சிந்தையை நெய்திருக்கும் செந்நூல்" என்ற அரிய படைப்பும், தலைசிறந்த எழுத்தாளர்கள், கவிஞர்களின் அரிய படைப்புகளும், பத்திரிகைகளாலும், அறிஞர் பெருமக்களாலும் பெரிதும் பாராட்டப்பட்டு வருகின்றன.

### நவீனப்படுத்துதல்

1. தமிழரசு அச்சகத்தில் ரூ. 36,84,702/- செலவில் புதிய பல்வண்ண அச்சு இயந்திரம் வாங்கப்பட்டு தமிழரசு, அரசு செய்தி மற்றும் சிறப்பு வெளியீடுகள் மிகத் துரிதமாக அச்சடிக்கப்படுகின்றன.

[2000 மே 2

2. தமிழரசு அலுவலகம் மற்றும் அச்சகத்திற்கு இரண்டு கணினிகள் ரூ. 3.41 இலட்ச செலவில், வெளியீடு மற்றும் அனுப்புகைப் பணிகளுக்காக வாங்க, 2000-2001 பகுதி-2 திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மேம்பாட்டுப் பணிகள்**

தமிழரசு அச்சக நிர்வாகப் பிரிவிற்காக, 1999-2000 ஆண்டின் பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ. 3 இலட்சம் செலவில், தமிழரசு அலுவலகக் கட்டடத்தில் கூடுதலாக இரண்டாம் தளம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம்-3

### தீண்டாமை ஒழிப்பு, மதநல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமையினை வலியுறுத்த தீவிரப் பிரச்சாரம் மற்றும் விளம்பரம் செய்தல்

*சாதிக் கொடுமைகள் வேண்டாம்—அன்பு*
*தன்னில் செழித்திடும் வையம்*
*ஆதரவுற்றிங்கு வாழ்வோம்—தொழில்*
*ஆயிரம் மாண்புறச் செய்வோம்.*

சாதி வேற்றுமை, சமயப் போராட்டம், சமூகப் பூசல்கள் இவையெல்லாம் தமிழக வளர்ச்சிக்குத் தடைகளாய் இருப்பவை. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கூறுவதைப்போல,

*விவேகம் என்னும் வெள்ளி முளைத்து*
*சாதி-மதப்பித்து என்னும் சனி தொலைந்தால்தான்*
*சமத்துவம் என்னும் ஞாயிறு பிறக்கும்*

எனவே 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு' என்னும் உண்மையை மக்கள் இதயத்தில் பதிக்க தீவிரப் பிரச்சாரம் ஆற்றி வருகிறது செய்தி-மக்கள் தொடர்புத் துறை.

சாதிக்கலவரம் இன்றி, அனைத்துத் தரப்பினரும் ஒற்றுமையோடு நல்லிணக்கத்தோடு வாழ்ந்திட வழிவகை காணும் வகையில், 14-5-1997 மற்றும் 5-6-1997 ஆகிய நாட்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் மற்றும் சமுதாயத் தலைவர்கள் கலந்துகொண்ட கூட்டங்கள் அரசு சார்பில் நடைபெற்றன.



2000 மே 2]

சுதந்திரத் திருநாள் பொன்விழா ஆண்டினையொட்டி, சமூக ஒற்றுமையை வலியுறுத்திடும் வண்ணம், 31-8-1997 அன்று மதுரையில், அரசின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் பங்கேற்ற தீண்டாமை ஒழிப்பு மாநாடு நடத்தப்பட்டது. மதநல்லிணக்கத்தையும், சமூக ஒற்றுமையையும் வலியுறுத்திடும் வகையில் திருப்பரங்குன்றத்திலிருந்து தல்லாகுளம்—மதுரை வரை, சாலையின் இருமருங்கிலும் ஈரடுக்காய், மாணவ மாணவியர், இல்லத்தரசிகள், தொழிலாளர்கள், பெரியோர்கள் மற்றும் அரசியல் கட்சிப் பிரமுகர்கள் அனைவரும் ஆர்வத்துடன் பங்குகொண்ட 'மனிதச் சங்கிலி' நிகழ்ச்சியும், சமபந்தி விருந்துகளும் நடத்தப்பட்டன. மாலையில், மதுரையில் அரசின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தியாகி கக்கன் திருவுருவச் சிலை, அனைத்துக் கட்சித் தலைவர்கள் பங்கேற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மேலும், 15-8-1997 முதல் 31-8-1997 வரை, தீண்டாமையை வலியுறுத்தி தீண்டாமை ஒழிப்பு இருவார நிகழ்ச்சிகளாக, மாநிலம் முழுவதும் 'சமபந்தி விருந்துகள்' நடத்தப்பட்டன.

தமிழ்நாட்டில் தீண்டாமை ஒழிப்பு, மதநல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமைக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 22-10-1998 மற்றும் 26-10-1998 ஆகிய நாட்களில் சென்னையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் தீண்டாமை ஒழிப்பு, மதநல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமையினை வலியுறுத்தி, செய்தி-மக்கள் தொடர்புத்துறை வாயிலாகத் தீவிரப் பிரச்சாரம் மற்றும் விளம்பரப் பணிகள் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. இதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.

இதன் அடிப்படையில், முதற்கட்டமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1999 ஆம் ஆண்டினை, தீண்டாமை ஒழிப்பு-மதநல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமை ஆண்டாக அறிவித்தார்கள்.

சமூக நல்லிணக்கத்துக்கான பிரச்சாரங்கள், விளம்பரங்கள், கலை நிகழ்ச்சிகள் மற்றும் பல்வேறு நடவடிக்கைகள் பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. தமிழ்நாடு திரைப்படப் பிரிவு "மனித நேயமே உலகம்" என்னும் 10 நிமிட திரைப்படம், 'சாதிகள் நீக்கி சமத்துவம் காண்போம்' என்னும் ஒரு நிமிடத் திரைப்படம், 'ஒன்றே குலம்' என்னும் 20 நிமிட வீடியோ

படம், 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்னும் ஒரு நிமிட வீடியோ படம் மற்றும் 'சமத்துவமே சமுதாயம்' என்னும் தலைப்பிலமைந்த 6 நிமிட கருத்துப் பாடலுக்கான காட்சிப் படம் ஆகியவற்றைத் தயாரித்துள்ளது. கருத்துப் பாடலை, கவிஞர் வைரமுத்து எழுத, இசையமைப்பாளர் தேவா இசையில் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் பாடலைப் பாடியுள்ளார். நடிகர் சிவக்குமார் இப்படத்தில் நடித்துள்ளார். இவை, திரையரங்குகள், தொலைக்காட்சிகள், வீடியோ வேன்கள், கேபிள் டி.வி. ஆகியவற்றின் மூலமாகத் தமிழ்நாடெங்கும் திரையிடப்பட்டும், ஒளிபரப்பப்பட்டும் வருகின்றன.

2. தீண்டாமை ஒழிப்பினை வலியுறுத்தி இதுவரை சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் பல்துறை பணி விளக்க முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. முகாம்களில் தீண்டாமை ஒழிப்பு பிரச்சார நாடகங்கள் நடத்தப்பட்டன.

3. மாவட்டங்களில், உள்ளூர்க் கலைஞர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் மூலம் தீண்டாமையை வலியுறுத்தும் பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் விளம்பரப் பணிகள் ரூ. 8.20 இலட்சம் செலவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மூலம் நடத்தப்பட்டன.

4. தீண்டாமை ஒழிப்பு, மதநல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமையினை வலியுறுத்தும் பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி ஆகியவை கல்லூரி மற்றும் பள்ளி மாணவ, மாணவிகளிடையே நடத்தப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் எதிர்காலத் தலைமுறையாகிய மாணவ-மாணவியரிடையே சமூக நல்லிணக்க உணர்வுகளை வளர்த்திடும் வகையில் அனைத்துப் பள்ளிகளிலும், ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் தீண்டாமை எதிர்ப்பு உறுதிமொழி மேற்கொள்ளப்படுகிறது.

5. தீண்டாமை ஒழிப்பு, மதநல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமையினை வலியுறுத்தும் வாசகங்கள், தமிழரசு, அரசு செய்தி, அரசு அழைப்பிதழ்கள் ஆகியவற்றில் அச்சிடப்பட்டு வருகின்றன.

6. திரைப்பட சிலைடுகள், சுவரொட்டிகள் மற்றும் வானொலி விளம்பரங்கள் மூலமாக தீண்டாமை ஒழிப்பு குறித்து பிரச்சாரம் செய்யவும் பால் பைகள், கூட்டுறவு வங்கிக் கணக்குப் புத்தகங்கள், விவசாய இடுபொருட்கள் வாங்கப் பயன்படுத்தப்படும் பைகள், நியாயவிலைக் கடைகளில் விற்கப்படும் பொருட்கள் அடங்கிய பைகள் ஆகியவற்றில் தீண்டாமை ஒழிப்பு மதநல்லிணக்க வாசகங்கள் அச்சிடவும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.



7. தீண்டாமை ஒழிப்பு, மதநல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமையினை வலியுறுத்தும் வகையில் நாடகம், தொலைக்காட்சி மூலம் நாடகப்போட்டி நடத்தப்பட்டுள்ளது. பாடல் போட்டிகள் வானொலி மூலம் நடத்தப்பட்டுள்ளன. இக்கருத்துகளை வலியுறுத்தும் விதமாக நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களில் வெளியிடப்பட்டவற்றுள் தேர்வு செய்யப்பட்டுள்ள சிறந்த சிறுகதை மற்றும் கட்டுரை எழுத்தாளர்களுக்கும், வெளியிட்ட இதழ்களுக்கும் பரிசுகளும் ஊக்கத் தொகைகளும் வழங்கப்படவுள்ளன.

8. தீண்டாமை ஒழிப்பு, மதநல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமையினை வலியுறுத்தி மாநிலம் முழுவதும் இளைஞர்கள் முகாம்கள் நடத்தப்பட்டன. 14-12-1999, 15-12-1999 ஆகிய 2 நாட்களிலும் மாநில அளவிலான இளைஞர் விழா நாகர்கோவிலில் சிறப்புடன் நடத்தப்பட்டது.

9. சுதந்திரத் திருநாள் பொன்விழா நிகழ்ச்சிகள் சிறப்பாக தமிழகத்தில் நடத்துவதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட அனைத்துக் கட்சித் தலைவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட மாநிலக் குழுவின் முடிவின்படி (1997-98) ஓராண்டுக்காலத்திற்கு சீரிய முறையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

தற்பொழுது, குடியரசுப் பொன்விழா நிகழ்ச்சிகளை, 2001 ஜனவரி 26 வரையில் சீரிய முறையில் நடத்திட மாண்புமிகு கல்வி அமைச்சர் தலைமையில், மாநில அளவிலான குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம்-4

### நினைவகங்கள்

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

சரித்திரம் என்பது தனி மனித வரலாறுகளின் கூட்டுத் திரட்சியே எனில், அது மிகையாகாது. 'உலகம் என்பது உயர்ந்தோர்மாட்டே!' என்பதால், வாழுங் காலத்தே வரலாறு படைத்து வாழ்ந்த பெரியோர்தம் நினைவைப் போற்றிவர, நினைவகம் அமைக்கும் பணி இத்துறையின் பொறுப்பாகும்.

[2000 மே 2

துறையினால் பராமரிக்கப்பட்டு வரும் நினைவகங்கள், நினைவிடங்கள், மற்றும் அரங்கங்கள், பின்வருமாறு:—

1. வள்ளுவர் கோட்டம், சென்னை
2. பேரறிஞர் அண்ணா நினைவிடம், பேரறிஞர் அண்ணா அருங்காட்சியகம், சென்னை
3. கலைவாணர் அரங்கம், சென்னை
4. இராஜாஜி மண்டபம், சென்னை
5. காந்தி மண்டபம், கிண்டி-சென்னை
6. இராஜாஜி நினைவாலயம், கிண்டி-சென்னை
7. காமராஜர் நினைவகம், கிண்டி-சென்னை
8. காமராஜர் நினைவு இல்லம், தி.நகர்-சென்னை
9. பெரியவர் எம். பக்தவத்சலம் நினைவிடம், சென்னை
10. தியாகிகள் மணிமண்டபம், கிண்டி-சென்னை
11. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம், சென்னை
12. மகாகவி பாரதியார் நினைவு இல்லம், திருவல்லிக்கேணி-சென்னை
13. பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம், காஞ்சிபுரம்
14. முத்து மண்டபம்-இலங்கையின் கடைசித் தமிழ் மன்னர் விக்ரமசிங்க ராஜா நினைவகம், வேலூர்
15. அண்ணா கலை அரங்கம், வேலூர்
16. இராஜாஜி இல்லம், தொரப்பள்ளி, தருமபுரி மாவட்டம்
17. பெரியார்-அண்ணா நினைவகம், ஈரோடு
18. திருப்பூர் குமரன் நினைவகம், திருப்பூர்
19. வ.வே. சுப்பிரமணியம் நினைவகம், திருச்சி



2000 மே 2]

20. தில்லையாடி வள்ளியம்மை நினைவகம், தில்லையாடி
21. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் நினைவு இல்லம், நாமக்கல்
22. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம், பட்டுக்கோட்டை
23. கவியரசர் கண்ணதாசன் மணிமண்டபம், காரைக்குடி
24. தியாகி விஸ்வநாததாஸ் நினைவு இல்லம், திருமங்கலம், மதுரை மாவட்டம்
25. பூலித்தேவன் நினைவு மாளிகை, நெற்கட்டும்செவல், திருநெல்வேலி மாவட்டம்
26. மருது சகோதரர்கள் நினைவகம், திருப்பத்தூர்
27. காமராஜர் இல்லம், விருதுநகர்
28. பாரதி மணிமண்டபம், எட்டயபுரம்
29. பாரதி இல்லம், எட்டயபுரம்
30. வ.உ.சி. இல்லம், ஒட்டப்பிடாரம்
31. காந்தி நினைவு மண்டபம், கன்னியாகுமரி
32. சதாவதானி செய்குதம்பி பாவலர் நினைவு மண்டபம், நாகர்கோவில்
33. பொதுவுடமை வீரர் ப. ஜீவானந்தம் மணிமண்டபம், நாகர்கோவில்
34. பெரியார் நினைவகம், வைக்கம், கேரள மாநிலம்

சென்னை, கிண்டியில் அமைக்கப்பட்டுள்ள காந்தி மண்டபம், பெருந்தலைவர் காமராஜர் நினைவிடம், மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம் மற்றும் பெரியவர் எம். பக்தவத்சலம் நினைவிடம் ஆகியவற்றில் ரூ. 50.00 இலட்சம் செலவில் முகப்பு வளைவுகள், மின்விளக்குகள், புல்வெளிகள் மற்றும் மலர்த் தோட்டங்கள் புதிதாக அமைக்கப்பட்டு இவை புதுப்பொலிவுடன் காட்சியளிக்கின்றன.

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் நினைவாக ரூ. 20.50 இலட்சம் செலவில் மணிமண்டபம் அமைக்கப்பட்டு 15-12-1999 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

பேரறிஞர் அண்ணா நினைவிட முகப்பில் பேரறிஞர் அண்ணாவின் மார்பளவுச் சிலையும், பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிட முகப்பில் எம்.ஜி.ஆர். மார்பளவுச் சிலையும், காந்தி மண்டப முகப்பில் அண்ணல் காந்தியடிகளின் மார்பளவுச் சிலையும், காமராஜர் நினைவிட முகப்பில் பெருந்தலைவர் காமராஜர் மார்பளவுச் சிலையும் அமைக்கப்பட்டதைப் போன்று தியாகிகளின் மணிமண்டப முகப்பில் தியாகி சங்கரலிங்கனார் மற்றும் விடுதலைப் போராட்ட வீரர் ஆர்யா என்கிற பாஷ்யம் ஆகியோரின் சிலைகள் ரூ.2.20 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தின் முகப்பில் மன்னர் இராஜகோபால தொண்டைமான் திருவுருவச் சிலை ரூ. 4.35 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு, 14-3-2000 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலையில், பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி அவர்களின் நினைவாக ரூ. 20.50 இலட்சம் செலவில் பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டம், குன்றக்குடியில் தமிழ்த்துறவி குன்றக்குடி அடிகளார் தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் அவர்களுக்கு நினைவு மண்டபம் மற்றும் நூலகம் ரூ. 22.00 இலட்சம் செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரில் உள்ள மருதுபாண்டியர் நினைவிடத்தினை புதுப்பிப்பதற்காக நினைவிடத்திற்கு அருகேயுள்ள ஸ்விடிஷ் மருத்துவமனைக்குச் சொந்தமான இடம் ரூ. 7,78,464/-க்கு அரசின் சார்பில் வாங்கப்பட்டு, தற்போது ரூ. 20.50 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கன்னியாகுமரி கடற்கரையில் பெருந்தலைவர் காமராஜர் அஸ்தி வைக்கப்பட்டுள்ள இடத்தில் ரூ. 50.00 இலட்சம் செலவில் பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம் அமைக்கப்படுவதற்கு 27-6-1999 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் முடிவுறும் நிலையிலுள்ளன.





பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் ஆகியவற்றினை தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின்மூலம், 12 பணியாளர்கள் 24 மணிநேரமும் சுழற்சி முறையில் பாதுகாத்துவர ஆண்டொன்றுக்கு ரூ. 5,03,712 ஒதுக்கீட்டில் பாதுகாப்புப் பணிகள் சீரிய முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

16-12-1999 அன்று சென்னை, வள்ளுவர் கோட்டத்தில், நடைபெற்ற விழாவில் கயத்தாறில் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடத்தில் அமைக்கப்பட்டுள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் சிலையை சுற்றியுள்ள 46 சென்ட் பரப்பளவுள்ள தனக்குச் சொந்தமான இடத்தின் பத்திரம் நடிகர் திலகம் திரு. சிவாஜிகணேசன் அவர்களால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அரசிற்கு வழங்கப்பட்ட, வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த இடத்தில், அழகான பூஞ்சோலைகள் அமைக்கப்பட்டு சீரிய முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**வள்ளுவர் கோட்டம்**

*பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்*
*அருமை உடைய செயல்*

உலகம் போற்றும் அந்தத் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவருக்குப் பெருமை சேர்க்கும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் சென்னை மாநகரின் மையப் பகுதியாக விளங்கும் நுங்கம்பாக்கத்தில் ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் வள்ளுவர் கோட்டம் அமைக்கப்பட்டது. 1996 ஆம் ஆண்டு மே திங்களுக்குப் பிறகு வள்ளுவர் கோட்டத்தில் ரூ. 92.81 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு புதுப்பொலிவுடன் அமைக்கப்பட்டுள்ளன.

வள்ளுவர் கோட்டத்தினை மேலும் அழகூட்டும் வகையில், கன்னியாகுமரியில் நடைபெற்ற அய்யன் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா நிகழ்ச்சியில் அமைக்கப்பட்டிருந்த குறளோவியக் கண்காட்சியில் வைக்கப்பட்ட 133 அதிகாரங்களை விளக்கும் 133 திருக்குறள் ஓவியங்கள் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த அறிவிப்பிற்கேற்ப ரூ. 12.90 இலட்சம் செலவில் வள்ளுவர் கோட்டம் குறள் மணிமாடத்தில் நிரந்தரமாக திருக்குறள் ஓவியக் கண்காட்சி அமைக்கப்பட்டு, தமிழக முதலமைச்சர் அவர்களால் 16-1-2000 அன்று பார்வையிடப்பட்டு பொதுமக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. தற்போது

சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் ஓவியங்களைப் பார்த்து மகிழ்ந்து பாராட்டி வருகின்றனர்.

**திருக்குறள் இசை வகுப்பு மற்றும் விளக்க வகுப்பு**

வள்ளுவர் கோட்டத்தில் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்கட்கு தினந்தோறும் காலையும் மாலையும் தமிழ் இசைக் கல்லூரி முன்னாள் முதல்வர் திருப்பாம்புரம் திரு. சண்முகசுந்தரம் அவர்களால் திருக்குறள் இசை வகுப்பு சிறப்புற நடைபெற்று வருகின்றது. வாரந்தோறும் வெள்ளியன்று மாலையில் சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் முனைவர் திரு. மோகனராசு அவர்களால் திருக்குறள் விளக்க வகுப்பு நடைபெற்று வருகின்றது.

**மகாகவி பாரதியார் நினைவில்லம், சென்னை**

மகாகவி பாரதியார் நினைவில்லம் மேம்பாட்டுப் பணிகளுக்காக 1996 ஆம் ஆண்டு மே திங்களுக்குப் பிறகு ரூ. 10.20 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதில் ரூ. 5.20 இலட்சம் செலவில் ஒரு கூட்ட அரங்கம் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இவ்வரங்கில், இலக்கியக் கூட்டங்கள், நூல் வெளியீடுகள் போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. நாள்தோறும் பாரதியார் பற்றிய பாடல்கள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

**பாரதியார் இல்லம்-பாரதி மணிமண்டபம்-எட்டயபுரம்**

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் உள்ள பாரதியார் இல்லம், பாரதியார் மணிமண்டபம் ஆகியவற்றில் 1997 ஆம் ஆண்டில் ரூ. 4.15 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, புதுப்பொலிவுடன் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் ரூ. 97,500/- செலவில் மகாகவி பாரதியார் வரலாற்றினை விளக்கும் புகைப்படங்களும் பாரதியார் பற்றிய நூல்கள், பாரதியார் எழுதிய நூல்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளும், இவ்விரு நினைவகங்களிலும் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

**தியாகிகள் மணிமண்டபம்**

கண்ணீரால் அல்ல செந்நீரால் சுதந்திரப் பயிர் வளர்த்த செம்மல்கள், தியாகிகள்! அவர்கள் அன்று சிந்திய இரத்தமே இன்று நாம் அனுபவிக்கும் உரிமைகளாகப் பரிணமித்திருக்கின்றன. அந்தத் தியாகத் திருவிளக்குகளுக்காக எழுப்பப்பட்ட நினைவு மண்டபமே தியாகிகள் மணிமண்டபம்.



சென்னை, காந்தி மண்டப வளாகத்தில் தமிழக விடுதலைப் போராட்ட தியாகிகளின் நினைவாக 'தியாகிகள் மணிமண்டபம்' ரூ. 30 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு, 2-10-1998 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட தியாகிகளின் நினைவாக மறைந்த தியாகிகளின் திருவுருவப் படங்கள் லேமினேட் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் மாவட்டவாரியாக விடுதலைப் போராட்ட தியாகிகளின் வாழ்க்கைக் குறிப்பு 20 வரிகளில் குறிப்பெடுக்கப்பட்டு புத்தக வடிவில் உருவாக்கப்பட்டு, பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

**குமரிமுனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை**

திருக்குறள், மனிதகுலம் என்றென்றும் ஒழுகத்தக்க வாழ்க்கை நெறிகளை உணர்த்திடும் ஓர் உலகப் பொதுமறை எனும் சிறப்பைப் பெற்றதும், உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப் பெற்றதுமான ஒப்புயர்வற்ற நீதி இலக்கியமாகும். அத்தகைய நெறிகளை அறம், பொருள், இன்பம் எனும் மூன்று பிரிவுகளின்கீழ் 1330 குறட்பாக்களில், 133 அதிகாரங்களில் இவ்வையகத்துக்கு அருளிய திருவள்ளுவரை காலந்தோறும் மக்கள் நினைவுகூர்ந்து போற்றும் வகையில், கன்னியாகுமரி கடல் வெளியில் அமைந்துள்ள பாறை ஒன்று தாங்கி மகிழ, திருவள்ளுவரது முழு உருவக் கற்சிலை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் பெருமுயற்சியால் அமைக்கப்பட்டுள்ளது.

**திருவள்ளுவர் சிலையின் அளவுகள்**

சிலையைத் தாங்கும் பீடம் 38 அடி உயரக் கட்டுமானம், பீடத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ள சிலையின் உயரமோ 95 அடி பிரம்மாண்டம்! மொத்தத்தில் 133 அடி உயரச் சிலை வடிவம் கண்கவர் வண்ணம்!!

பீடத்தைச் சுற்றிலும் சுற்றுச்சுவர் பொலிவுடன் அமைகிறது. இவ்வாறு சுற்றுச்சுவர் கொண்ட பீடமும் சிலையும் அணிமணி மண்டபமாய் அமைந்தெழுந்து, ஆழிசூழ தென்முனையில் அழகார்ந்த ஓவியமாய் மிளிர்கிறது.

**சிலையின் அளவு காட்டும் தத்துவ விளக்கம்**

பீடத்தின் 38 அடி உயரமானது அறத்துப்பாலின் 38 அதிகாரங்களைக் குறிப்பதாகவும், பீடத்தில் மேல் எழுந்து நிற்கும் 95 அடி உயர வள்ளுவர்

[2000 மே 2

சிலையானது பொருள் மற்றும் இன்பத்துப் பாலின் 95 அதிகாரங்களைக் குறிப்பதாகவும் அமைந்து திகழ்கிறது. ஆம், அறத்தை அடித்தளமாகக் கொண்டே பொருளும், இன்பமும் அமைந்திடல் வேண்டும் எனும் வாழ்க்கை நெறியை உணர்த்தும் 'வள்ளுவமாகவே' சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது.

### சிலைக்கான கற்களை ஈந்த மலைகள்

சிறுதாமூர், பட்டுமலைக்குப்பம் மலைகள், அம்பாசமுத்திரம் மலைகள்.

சிலை பற்றிய முக்கிய விவரங்கள்

* சிலையின் உயரம் .. 95 அடி
* பீடத்தின் உயரம் .. 38 அடி
* சிலையும் பீடமும் சேர்ந்து .. 133 அடி
* முகத்தின் உயரம் .. 10 அடி
* உடல் பகுதியின் உயரம் .. 30 அடி
* தொடைப் பகுதியின் உயரம் .. 30 அடி
* கால் பகுதியின் உயரம் .. 20 அடி
* உச்சந்தலை, கழுத்து, முட்டி மற்றும் பாதமும் சேர்ந்து .. 10 அடி
* கைத்தலம் .. 10 அடி
* சுவடியின் நீளம் .. 10 அடி
* தோள்பட்டையின் அகலம் .. 30 அடி
* சிகைப் பகுதி .. 5 அடி
* ஆதாரபீடம் உள்ளிட்ட சுற்றுச்சுவர் .. 60 அடி x 50 அடி
* ஒவ்வொன்றும், ஐந்து அடி ஆறு அங்குலம் உயரம் கொண்ட 10 யானைகள்.
* ஆதார பீடம், சிலை மற்றும் சுற்றுச்சுவர் ஆகியவற்றின் மொத்த எடை .. 7000 டன்
* செலவினம் .. ரூ.9.65 கோடி



2000 மே 2]

திரு. வை. கணபதி ஸ்தபதி அவர்கள் தலைமையில் சிலையமைப்புப் பணிகளில் பங்கேற்ற சிற்பியர் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை-500.

அய்யன் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா நடைபெற்ற 31-12-1999 மற்றும் 1-1-2000 ஆகிய 2 நாட்களிலும் குறளோவியக் கண்காட்சி, முற்றோதல், 16 கவன நிகழ்ச்சி, குறள் ஆய்வரங்கம், குறள் கருத்தரங்கம், நூல் வெளியீடு, கவியரங்கம் ஆகியவை சிறப்புற நடத்தப்பட்டன. 1-1-2000 மாலையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் பங்கேற்ற நிகழ்ச்சியில், அய்யன் திருவள்ளுவர் சிலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. முற்றோதல் நிகழ்ச்சியில் பங்குகொண்ட 23 சிறார்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்படுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மகிழ்வுடன் அறிவித்தார்கள். இதனைத் தொடர்ந்து திருக்குறளை முற்றோதல் செய்பவர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் அவர்களது வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது.

### தியாகிகள் தினம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் ஜூலைத் திங்கள் 17 ஆம் நாளை தியாகிகள் தினமாகக் கடைபிடிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

## அத்தியாயம் - 5

### தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்

இன்று உலகையே தன்வயப்படுத்திவரும் ஆற்றல்மிகு சாதனம் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி என்பதில் இருவேறு கருத்துகள் இல்லை. கண்ணுக்கும் கருத்திற்கும் விருந்தளித்து, அனைவரையும் ஈர்க்கவல்ல இக்கலைப் பிரிவு, தமிழகத்தில் உன்னத நிலைபெற்று வளர்ந்திருக்கிறது.

இந்தியாவிலேயே திரைப்படம் தயாரிக்கத் தேவைப்படும் பல்வேறு தொழில்நுட்பங்களையும், தொலைக்காட்சி நுட்பங்களையும் கற்றுத் தருவதற்கென்றே ஒரு மாநில அரசு நடத்தும் பயிற்சி நிறுவனம் தமிழ்நாடு

திரைப்படம் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் ஒன்றே ஆகும். மைய அரசு பூனா மற்றும் கல்கத்தாவில் இத்தகைய இரண்டு பயிற்சி நிறுவனங்களை நடத்தி வருகிறது.

சென்னை தரமணியில் இயங்கிவரும் இந்நிறுவனத்தில், திரைப்பட இயக்கம் மற்றும் திரைக்கதை வசனம் எழுதுதல், ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு, படத்தொகுப்பு மற்றும் படச்சுருள் பதனிடுதல் ஆகிய மூன்றாண்டு பட்டயப் படிப்புகளும், திரைப்பட நடிப்பில் ஓராண்டுச் சான்றிதழ் பயிற்சியும் அளிக்கப்படுகின்றது.

பட்டயப் படிப்பு ஒவ்வொன்றிலும் ஆண்டுதோறும் 12 மாணவர்களும், நடிப்புப் பயிற்சியில் 22 மாணவர்களும் அனுமதிக்கப்படுகின்றனர். 1999-2000 கல்வியாண்டில் மொத்தம் 179 மாணவ/மாணவிகள் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

திரைப்படச் சுருள் பதனிடுதல் குறித்த தொழில்நுட்பங்கள் மற்றும் நடிப்புப் பயிற்சி - இப்பிரிவுகளில் நாடு தழுவிய அளவில் பயிற்சி வசதி கொண்டது இந்நிறுவனம் ஒன்றே என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிறுவனத்தில் பயின்று பட்டயம் பெற்ற மாணவர்கள் நாட்டின் பல்வேறு நிறுவனங்களிலும், தொலைக்காட்சிகளிலும் தொழில்நுட்ப வல்லுநர்களாகப் புகழுடன் திகழ்கின்றார்கள். தென்னிந்தியத் திரைப்பட உலகில் நடிகர்களாகவும், தொழில் நுட்பக் கலைஞர்களாகவும் புகழ்பெற்று வருகின்றார்கள்.

பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக இந்நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்படும் அனைத்து பட்டயப் படிப்புகளுக்கும் அகில இந்திய தொழிநுட்பக் கல்விக் குழுவின் (All India Council for Technical Education, New Delhi) அங்கீகாரம் 1998-99 ஆம் கல்வியாண்டில் கிடைக்கப்பெற்றது. அந்த அங்கீகாரம் 2001-2002 ஆம் கல்வியாண்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதால் இந்நிறுவனத்தின் மேம்பாட்டிற்கு உலக வங்கி மற்றும் வெளிநாட்டு நிதியுதவி கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிறுவன மாணவர்கள் மத்திய அரசுத் துறைகளிலும் வேலைவாய்ப்பு பெறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மாணவர்களின் பட்டயப் படங்கள் தயாரிப்புச் செலவுக்காக 1996-97 ஆம் ஆண்டு வரை ரூ.10.00 இலட்சம் அளிக்கப்பட்டு வந்தது. கச்சா பிலிம் விலை உயர்வின் காரணமாக, 1997-98-ல் ரூ.15.00 இலட்சமாக





உயர்த்தப்பட்டு பிறகு 1998-99 கல்வி ஆண்டிலிருந்து ரூ.17.00 இலட்சமாக உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது.

இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட பிறகு நவீன கருவிகள் வாங்குவதற்காக அதிகபட்சமாக ரூ.15.00 இலட்சம் மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் 1998-99 ஆம் ஆண்டில் ரூ.95.00 இலட்சம் இந்நிறுவனத்திற்கு நவீன கருவிகள் வாங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து 1999-2000 நிதியாண்டில் ஒலிப்பதிவுக் கருவி வாங்க ரூ.4.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனால் ஒரு திரைப்படத்தை முழுமையாக உருவாக்கக்கூடிய அளவுக்கு நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் இந்நிறுவனம் இயங்கி வருகிறது.

இந்நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளின் மாணவர்கள் 12 தனித்தனி குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிலும் அனைத்துப் பிரிவு மாணவர்களும் பங்குபெற வகை செய்யப்பட்டு ஒரு சிறுகதை மற்றும் கருத்து விளக்கப் படம் முழுமையாகத் தயார் செய்வதற்கான வகையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இறுதி ஆண்டு மாணவர்கள் தனியே ஒரு சிறிய படம் தயாரிக்க வேண்டும் எனவும் பயிற்சி முறைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசு, மாணவர்களின் செயல்முறைப் பயிற்சி மற்றும் பட்டயப் படிப்புக்கான படத் தயாரிப்புகளுக்காக ஒரு குழுவிற்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 2.00 இலட்சம் ரூபாய் வரை செலவு செய்கிறது. இவர்களது பட்டயப் படங்கள் மற்றும் செயல்முறைப் பயிற்சிகள் தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி இயக்குநகரத்தால் தேர்வு செய்யப்பட்ட வல்லுநர்களைக்கொண்டு பார்வையிடப்பட்டு மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன.

மாணவர்களின் இறுதியாண்டு பட்டயத் தேர்வுகள் 1996 ஆம் ஆண்டு வரை ஆகஸ்ட் அல்லது செப்டம்பரில் தான் நடத்தப்பட்டு வந்தன. 1997-98 ஆம் கல்வி ஆண்டு முதல் மற்ற தொழில்நுட்ப நிறுவனங்களில் நடத்தப்படுவதுபோல் ஏப்ரல் மாதத்திலேயே அனைத்துத் தேர்வுகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழக அரசு, வர்த்தகரீதியான முழுநீளச் சிறந்த தமிழ்த் திரைப்படங்களுக்கு மட்டுமே திரைப்பட விருதுகளை வழங்கி வந்தது. 1998-99 ஆம் கல்வி ஆண்டு முதல், இந்நிறுவனத்தின் மாணவர்களால் தயாரிக்கப்படும் சிறந்த குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த

[2000 மே 2

ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர், சிறந்த [illegible]டுபவர் மற்றும் சிறந்த நடிகர் ஆகியோருக்கு தமிழ்நாடு அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள் என்ற பெயரில் தலா ஒரு பவுன் தங்கப் பதக்கமும் மற்றும் ரூ.5,000 ரொக்கமும் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

1977 ஆம் ஆண்டிற்கான சிறந்த குறும்படங்களுக்கு வழங்கப்படும் தேசிய விருதினை இந்நிறுவன மாணவர் திரு. பி. வெங்கடேஷ் இயக்கிய 'விடியலை நோக்கி' என்ற குறும்படம் பெற்றது. 1998 ஆம் ஆண்டு புதுதில்லியில் நடைபெற்ற உலகத் திரைப்பட விழாவிலும் இந்திய திரைப்பட வரிசையில் திரையிடுவதற்காக, இந்நிறுவன மாணவர் திரு. இராம்குமார் இயக்கிய குறும்படமான 'வானவில்' தேர்வு பெற்றது. அதுமட்டுமின்றி அமெரிக்காவில் நடைபெற்ற உலக வீடியோ பட விழாவிலும் இந்நிறுவன மாணவர்கள் தயாரித்த ஆறு செய்தி விளக்கப் படங்களுக்கு விருதுகள் கிடைக்கப்பெற்றன. 1999 ஆம் ஆண்டிற்கான சிறந்த குறும்படத்திற்கான தேசிய விருதை மாணவர் பட்டயப் படமான 'மல்லி' எனும் குறும்படம் பெற்றுத் தந்தது. இப்படத்தின் தயாரிப்பாளருக்கான விருதினை இந்நிறுவனத்தின் இயக்குநர் திரு. பி. அமிர்தம் அவர்களும், இயக்குநருக்கான விருதினை திரு. மாதவகிருஷ்ணன் என்ற மாணவரும் 15-2-2000 அன்று புதுதில்லியில் நடைபெற்ற 46-வது தேசிய திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் மேதகு குடியரசுத் தலைவரிடம் இருந்து பெற்று நிறுவனத்திற்குப் பெருமை சேர்த்தனர்.

## அத்தியாயம்-6

### தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, தமிழகம் முழுவதிலும் நடைபெறும் அரசின் பல்வேறு நிகழ்ச்சிகள், மக்கள் நலத் திட்டங்கள், செயல்பாடுகள் இடம்பெறும் செய்திப்படங்கள் தயாரித்து வெளியிடும் சீரிய பணியில் ஈடுபட்டு வருகிறது.

1968 ஆம் ஆண்டு முதல் திரையரங்குகளில் திரையிடுவதற்கான கருப்பு-வெள்ளையில் செய்தி மலரை 35 மி.மீட்டரில் தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டது. 1986 ஆம் ஆண்டு முதல், செய்தி மலர்கள் வண்ணத்தில் தயாரிக்கப்பட்டு வந்தன. அரசு நிகழ்ச்சிகள் மற்றும் அரசு விழாக்கள் பற்றி எடுக்கப்பட்ட படத்தினைத் தொகுத்து 10 நிமிடம் அளவில் ஓடக்கூடிய செய்தி மலராகத் தயார் செய்து வெளியிடப்பட்டு வந்தன.



2000 மே 2]

இதுவரை 415 செய்தி மலர்களை இப்பிரிவு தயாரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு மாதமும் ஒரு செய்தி மலர் படச்சுருள் தயார் செய்யப்பட்டு 147 பிரதிகள் எடுத்து தமிழ்நாட்டிலுள்ள திரையரங்குகளில், திரையிடப்பட்டு வந்தது. இவ்வகையில் அனைத்துத் திரையரங்குகளிலும் திரையிடச் செய்ய, சுமார் 6 மாத காலம் ஆகியது. இதனால் உடனடிப் பயன் கிடைக்கப்பெறாதது மட்டுமல்லாமல் அதிகச் செலவு ஆனது. கால தாமதமாக செய்தி மக்களிடையே சென்று அடைகிறது என்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின்படி, செய்தி மலர்கள், நலத்திட்டங்கள் அடங்கிய வீடியோ விளக்கப் படமாக படமாக்கப்பட்டு சென்னைத் தொலைக்காட்சியிலும் பிற தனியார் தொலைக்காட்சிகள் மூலமும் ஒளிபரப்பப்படுகிறது. இச்செய்தி விளக்கப் படங்களுக்கு பொது மக்களிடையே நல்ல வரவேற்பு காணப்படுகிறது.

இவ்வகையில், 1999-2000 ஆண்டில் 8 வீடியோ செய்தி விளக்கப் படங்கள் தயார் செய்து ஒளிபரப்பப்பட்டன. மேலும் 35 மி.மீ. படச்சுருளில் கீழ்க்காணும் மூன்று விளக்கப் படங்களும் தயாரிக்கப்பட்டு திரையரங்குகளில் திரையிடப்பட்டன.

1. கலைஞரின் மூன்றாண்டு முத்தான சாதனைகள்
2. கலைஞரின் ஆட்சியில் வளமான தமிழகம்
3. சமத்துவமே சமுதாயம் மற்றும் கோட்டம் முதல் குமரி வரை

மக்கள் பயனடையக்கூடிய வகையில் குடும்பநலம், சமூகக் காடுகள், வேளாண்மை, மக்கள் நல்வாழ்வு, வனப் பாதுகாப்பு, கூட்டுறவு மற்றும் பல்வேறு துறைகள் அளிக்கும் நிதிக்கு ஏற்றாற்போல் 35 மி.மீட்டரில் விளக்கப் படங்களை தமிழ்நாடு திரைப்படப் பிரிவு தயாரித்துத் தருகிறது. இத்திரைப் படங்களை, தமிழ்நாடு திரைப்படப் பிரிவு தயாரிப்பதுடன், அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் படத் தயாரிப்பாளர்களையும் இதில் ஈடுபடுத்துகிறது.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவில் வீடியோ பிரிவு 1988 ஆம் ஆண்டு முதல் செயல்பட ஆரம்பித்தது. வீடியோ செய்தி மலர்கள் 1989 ஆம் ஆண்டு முதல் தயாரிக்கப்பட்டன. ஆரம்பத்தில் வீடியோ செய்தி மலர்கள் 60 முதல் 90 நிமிடங்கள் ஓடக்கூடியதாகத் தயாரிக்கப்பட்டன. இந்த மலர்கள் அரசின் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை அனைத்துத்

[2000 மே 2

தரப்பினரும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் சிறு கதைகள், வில்லுப்பாட்டு, நகைச்சுவைக் காட்சிகள் கொண்டவையாகத் தயாரித்து வழங்கப்பட்டன. தற்போது வீடியோ செய்தி மலர்கள் 30 நிமிடம் மட்டும் ஓடக்கூடிய அளவில் தயாரிக்கப்படுகின்றன. இந்த வீடியோ செய்தி மலர்கள் சென்னைத் தொலைக்காட்சி மற்றும் தனியார் தொலைக்காட்சிகளிலும், மாவட்டங்களில் கள விளம்பரப் பணிக்காக உள்ள வீடியோ ஊர்திகள் மூலமாகவும் திரையிடப்படுகின்றன. தமிழ்நாடு திரைப்படப் பிரிவு இதுவரை 21 வீடியோ செய்தி மலர்களைத் தயாரித்துள்ளது.

தமிழ்நாடு திரைப்படப்பிரிவு, குடும்ப நலம், காடு வளர்ப்பு, சிறுசேமிப்பு, நுகர்வோர் பாதுகாப்பு, சாலை விபத்து போன்ற பொருட்களிலும் வீடியோ விளக்கப் படங்களைத் தயாரித்துள்ளது. இதுவரை தமிழ்நாடு திரைப்படப்பிரிவு 170 வீடியோ விளக்கப் படங்களையும் 163 வீடியோ விளம்பரப் படங்களையும் தயாரித்துள்ளது.

அரசின் சில துறைகளின் தேவைக்கேற்ப அவற்றின் நிதி ஒதுக்கீட்டில் 30 நிமிடம் வரை ஓடக்கூடிய வீடியோ படங்களையும் தயாரித்து வழங்கி வருகிறது.

இப்படங்களை அந்தத் துறைகளே ஒளிபரப்புவதோடு வீடியோ பிரதிகள் எடுத்து மாவட்டங்களிலுள்ள வீடியோ ஊர்திகள் மூலமாகத் தமிழகம் முழுவதும் திரையிட்டு வருகின்றன.

தீண்டாமை ஒழிப்பு குறித்து 1999-2000 ஆண்டில் கீழ்க்கண்ட படங்களும் தயாரித்து வெளியிடப்பட்டன:

| | | |
|---|---|---|
| ஒன்றே குலம் | - | 20 நிமிடம் ஓடக்கூடிய வீடியோ விளக்கப் படம். |
| சாதிகளை நீக்கி சமத்துவம் காண்போம் | - | ஒரு நிமிட வீடியோ விளம்பரப் படம். |
| மனித நேயமே உலகம் | - | 10 நிமிடம் ஓடக்கூடிய 35 மி.மீ. விளக்கப் படம். |
| சாதிகள் இல்லையடி பாப்பா | - | ஒரு நிமிடம் ஓடக்கூடிய 35 மி.மீ. விளக்கப் படம். |



2000 மே 2]

நடிகர் சிவக்குமார் நடிப்பில், கவிஞர் வைரமுத்து வரிகளுக்கு இசையமைப்பாளர் தேவா இசையமைத்து, பின்னணிப் பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் பாடிய பாடல் காட்சி கொண்ட

| | | |
|---|---|---|
| 'சமத்துவமே சமுதாயம்' என்னும் படம் | - | 6 நிமிடம் ஓடக்கூடிய வீடியோ பாடல் படம். |

மேலும் கள்ளச்சாராயம் ஒழிப்பு குறித்து 35 மி.மீட்டரில் 5 நிமிடம் ஓடக்கூடிய ஒரு விளக்கப் படம் தயார் செய்து திரையரங்குகளில் திரையிடப்பட்டு வருகிறது. மேலும் கள்ளச்சாராய தீமை குறித்து 30 வினாடிகள் ஓடக்கூடிய இரண்டு வீடியோ விளம்பரப் படங்களும் தயாரிக்கப்பட்டு தொலைக்காட்சிகள் மூலம் ஒளிபரப்பப்பட்டு வருகின்றன

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரைகள் தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் மூலம் ஒலிநாடாக்களில் பிரதிகள் எடுக்கப்பட்டு அவை பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில் விற்பனை செய்யப்படுகின்றன.

1999-2000 ஆண்டில் வீடியோ தயாரிப்பு மேம்பாட்டிற்காக 3டி. அனிமேஷன், கேரக்டர் ஜீ ஜெனரேட்டர், கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் என்னும் கருவி ரூ.7.40 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு தயாரித்த 'அண்ணா வாழ்கின்றார்' என்ற விளக்கப் படம், 1998 ஆம் ஆண்டின் சிறந்த தொகுப்பு விளக்கப் படத் தயாரிப்புக்கும் மற்றும் சிறந்த இயக்குநருக்கான தேசிய விருதையும் பெற்றுள்ளது. திரைப்படப் பிரிவின் 30 ஆண்டுகால வரலாற்றில் முதன் முறையாகப் பெற்றுள்ள இவ்விருது பாராட்டத்தக்க சாதனையாகத் திகழ்கிறது. மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் இயக்குநர் திரு. பி.அமிர்தம் அவர்களுக்கு இவ்விருதினை புதுதில்லியில் 15-2-2000 அன்று வழங்கினார்.

## அரசின் திட்டங்கள் குறித்த ஒலி நாடாக்கள்

உழவர் சந்தை, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே போன்ற வழிகாட்டும் திட்டங்கள் குறித்து ஏழு பாடல்களைக் கொண்ட ஒலி நாடா (10000 படிகள்) தயாரிக்கப்பட்டு தமிழகம் முழுவதும் குறிப்பாகக் கிராமப்புறங்களில் ஒலிபரப்பு செய்வதற்காக மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

[2000 மே 2

## அத்தியாயம் - 7

### சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், கலைஞர்கள், தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் வழங்கும் திட்டம்

திரைப்படத் துறையை ஊக்குவிக்கும் பொருட்டு, 1968 ஆம் ஆண்டு முதல் சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், கலைஞர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்குத் தமிழ்நாடு அரசால் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறந்த திரைப்படங்கள், திரைக்கலைஞர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோரைத் தேர்வு செய்வதற்கென ஆண்டுதோறும் ஒரு தேர்வுக் குழு அரசால் அமைக்கப்படுகிறது.

தேர்வு பெற்ற திரைப்படங்களுக்குப் பின்வரும் விருதுகள் வழங்கப்படுகின்றன:

1. முதல் பரிசு - ரூ. 1,25,000 மற்றும் நினைவுப் பரிசு
2. இரண்டாம் பரிசு - ரூ. 75,000 மற்றும் நினைவுப் பரிசு
3. மூன்றாம் பரிசு - ரூ. 50,000 மற்றும் நினைவுப் பரிசு
4. சிறப்புப் பரிசு - ரூ 50,000 மற்றும் நினைவுப் பரிசு

திரைப்படங்களில் பெண்களை இழிவுபடுத்துவதைத் தவிர்க்கவும், பெண்கள் நிலையை உயர்த்திக் காட்டவும் தயாரிக்கப்படும் திரைப்படங்களுக்கு ரூ.1.25 இலட்சம் ரொக்கப் பரிசு மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. தேர்வு செய்யப்பட்ட சிறந்த நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் 5 பவுன் தங்கப்பதக்கமும் மற்றும் நினைவுப் பரிசும் வழங்கப்படுகிறது. 1998 ஆம் ஆண்டிற்குறிய விருதுகளுக்கு விண்ணப்பித்துள்ள திரைப்படங்கள் தேர்வுக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

### கலைவித்தகர் விருதுகள்

திரையுலக வரலாற்றில் புகழிடம் பெற்ற அறிஞர் அண்ணா, கலைவாணர், ராஜா சாண்டோ, எம்.ஜி.ஆர். மற்றும் கவிஞர் கண்ணதாசன் ஆகியோர் பெயரில் கலைத் துறை வித்தகர்களுக்கான விருதுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வித்தகர் விருதுகளுக்கான தக்கவர்களை அரசு தேர்ந்தெடுக்கிறது. தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு தலா 5 பவுன் தங்கப்பதக்கம் மற்றும் நினைவுப் பரிசு வழங்கி அரசு அவர்களை சிறப்பித்து



2000 மே 2]

வருகிறது. மேற்கண்ட ஐந்து விருதுகளுடன் 'நடிகர் திலகம் சிவாஜி' அவர்கள் பெயரிலும் 1999 ஆம் ஆண்டு முதல் கலைவித்தகர் விருது வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

### திரைப்படங்களுக்கு மானியம் வழங்கும் திட்டம்

சமுதாய நோக்குடன்கூடிய தரமான தமிழ்த் திரைப்படங்கள் குறைந்த செலவில் தயாரிக்கப்படுவதை ஊக்குவிக்கும் நல்ல நோக்குடன், அவ்வாறு தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு மானியம் வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. தரமான தமிழ்த் திரைப்படங்களைத் தேர்ந்தெடுத்துத் தருவதற்காக அரசினால் ஆண்டுதோறும் ஒரு தேர்வுக் குழு அமைக்கப்படுகிறது. 8 பிரதிகளுக்குக் குறையாமலும், 25 பிரதிகளுக்கு மிகாமலும் எடுக்கப்படும் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படத்திற்கு 17-7-1996 முதல் மானியத் தொகையை ரூ. 3 இலட்சத்திலிருந்து ரூ. 5 இலட்சமாக அரசு உயர்த்தியுள்ளது. 1998 ஆம் ஆண்டிற்கான மானியம் கோரி விண்ணப்பித்துள்ள திரைப்படங்கள் தற்போது தேர்வுக் குழுவின் பரிசீலனையில் உள்ளன.

அண்ணல் அம்பேத்கர் வாழ்க்கை வரலாற்றை தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம் ஆங்கில மொழியில் திரைப்படமாக எடுத்துள்ளது. அந்தப் படம் தமிழாக்கம் செய்து வெளியிடப்படுமேயானால், தமிழ்நாடு அரசின் உதவித் தொகையாக ரூ.10 இலட்சம் வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்துள்ளார்கள். அண்ணல் அம்பேத்கர் திரைப்படத்தை தற்போது தமிழாக்கம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

### திரைப்படத் துறையினருக்கு அரசின் சலுகைகள்

இவ்வரசு திரைப்படத் துறையினருக்கு கீழ்க்கண்ட சலுகைகளை அளித்து வருகிறது:

1. குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படத்திற்கு ரூ. 5 இலட்சம் மானியம் வழங்குகிறது.

2. குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு முதல் நான்கு வாரங்களுக்கு கேளிக்கை வரி விலக்கு அளித்து வருகிறது.

[2000 மே 2

3. சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், கலைஞர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு தங்கப்பதக்கங்கள் மற்றும் ரொக்கப் பரிசுகளையும் வழங்கி வருகிறது.

4. திரைப்படத் துறையின் வித்தகர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

5. குறைந்த கட்டண விகிதங்களில் சென்னையில் எம்.ஜி.ஆர். திரைப்பட நகரில் படப்பிடிப்பு மற்றும் ஸ்டுடியோ வசதிகளை அளித்து வருகிறது.

6. ஒற்றைச் சாளர முறையில் (Single Window System) படப்பிடிப்பு நடத்த அனுமதி வழங்கி வருகிறது.

7. புதிய திரைப்படங்களின் கேளிககை வரி 30 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

8. திரையரங்குதாரர்கள், விருப்பப்படின் இணக்க வரி செலுத்த வகை செய்யப்பட்டுள்ளது. [மாநகராட்சிப் பகுதி திரையரங்குதாரர்கள் மொத்த இருக்கைகளின் மீதான மொத்த வசூல் தொகையில் (Gross Collection Capacity) 22 விழுக்காடு 25 காட்சிகளுக்கெனவும், சிறப்புத் தகுதி நகராட்சிப் பகுதி திரையரங்குதாரர்கள் 21 விழுக்காடு 25 காட்சிகளுக்கெனவும் கணக்கிட்டு இணக்க வரி வாரந்தோறும் செலுத்தலாம்.]

9. வெளியிடப்பட்டு, 10 ஆண்டுகள் முடிந்த பழைய திரைப் படங்களுக்கான கேளிக்கை வரி 40 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

10. மொழிமாற்றுப் படங்களுக்கும் மற்ற தமிழத் திரைப்படங்களுக்கு இணையாக கேளிக்கை வரி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

11. அதற்கேற்ப, கூட்டு வரியின் விகிதங்களும் குறைக்கப்பட்டுள்ளன.

12. திரைப்படங்கள் குத்தகை மீதான விற்பனை வரி அறவே நீக்கப்பட்டுள்ளது.

13. திரைப்படத் துறையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.



2000 மே 2]

## விபத்துக் காப்புறுதித் திட்டம்

திரைப்படத் தொழிலாளர்களுக்கு உதவிடும் வகையில் விபத்துக் காப்புறுதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு தொழிலாளரும் ரூ.50,000-க்கு காப்புறுதி செய்யப்படுவர். யாரேனும் விபத்தில் இறந்துபட நேரிட்டால், இந்தத் தொகை அவரது வாரிசுகளுக்கு வழங்கப்படுகிறது. விபத்தில் உடல் ஊனமுற்றால் அதற்குத் தகுந்தாற்போல் தொகை வழங்கப்ப்படுகிறது.

திரைப்படத் தொழிலாளர்கள் விபத்துக் காப்புறுதித் திட்டம் மற்றும் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு திரைப்படத் தொழிலாளரும் மாதம் ரூ.25 அல்லது ஆண்டிற்கு ரூ.300 சந்தாவாகச் செலுத்த வேண்டும். நிலுவை இல்லாமல் சந்தா செலுத்தும் திரைப்படத் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டத்திலும், விபத்துக் காப்புறுதித் திட்டத்திலும் சேர்க்கப்படுவர்.

சண்டைக் காட்சிகளில் நடிக்கும்பொழுது ஸ்டண்ட் நடிகர்கள் உயிரிழக்க நேரிட்டால் ரூ. 1 இலட்சமும், செயல்பட முடியாத அளவுக்கு ஊனமுற்றால் ரூ. 50 ஆயிரமும் உதவித் தொகையாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

வீடியோ மற்றும திரைப்படங்களை திருட்டுத்தனமாகக் கேபிள் டி.வி.க்களில் ஒளிபரப்பு செய்நல் போன்றவற்றால ஏற்படும் பாதிப்புகள் குறித்து திரைப்படத் துறையினர் முறையிட்டபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேபிள் டி.வி. மூலமாக திருட்டுத்தனமாகத் திரைப்படங்களை வீடியோக்களில் வெளியிடும் கேபிள் டி.வி. உரிமையாளர்கள்மீது, அவர்களது கேபிள் தொலைக்காட்சி சாதனங்களைப் பறிமுதல் செய்வதோடு, கிரிமினல் வழக்கு தொடர்வது உள்ளிட்ட கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திருட்டுத்தனமாகக் கேபிள் டி.வி. மூலமாக ஒளிபரப்பப்படும் திரைப்படங்களைப் பார்ப்பவர்கள் மற்றும் தெரிந்தே அத்தகைய வி.சி.டி.களை வாங்குபவர்கள்மீது சட்டப்பூர்வமாக நடவடிக்கை எடுப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்கள்.

## அத்தியாயம்—8

### எம்.ஜி.ஆர். திரைப்பட நகர்

எம்.ஜி.ஆர். திரைப்பட நகர், சென்னை, தரமணியில் சுமார் 76 ஏக்கர் நிலத்தில் ரூ.23.82 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டு தமிழ்நாடு

[2000 மே 2

திரைப்பட வளர்ச்சிக் கழகத்தினரால் நடத்தப்பட்டு வருகிறது. இத்திரைப்பட நகரில் 'ஒரே குடையின்கீழ்' எனும் முறையில் வெளிப்புற, உட்புற படப்பிடிப்பு வசதிகள் மற்றும் திரைப்படம் தயாரிப்பதற்கான நவீன தொழில்நுட்ப வசதிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

சிறந்த ஒலிப்பதிவுத் திரையரங்கம், வீடியோ படப்பிடிப்பு நிலையம், அனைத்துத் தொழில்நுட்பக் கருவிகளோடு, கூடுதல் வசதிகளுடன் உருவாக்கப்பட்டிருக்கின்றன. திரைப்படம் மற்றும் வீடியோ தயாரிப்பாளர்கள் திரைப்பட நகரில் உள்ள வசதி வாய்ப்புகளை, பிற திரைப்பட தயாரிப்பு மையங்களில் இருப்பதைவிட குறைந்த அளவு கட்டணத்திலேயே பயன்படுத்திக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

திரைப்பட நகரில், குளிர்வசதி செய்யப்பட்டு ஆசியாவிலேயே மிகப் பெரிய படப்பிடிப்பு நிலையம், ஒப்பனைக்கான அறைகள், மாதிரி கிராமம், நகர்ப்புற அமைப்பு, திருக்கோயில், சர்ச், மசூதி, அஞ்சல் நிலையம், அறுவை சிகிச்சைக் கூடம், காவல் நிலையம், சிறைச்சாலை, நீதிமன்றம், வசதி படைத்தோர் இல்லம், நிர்வாக அலுவலகம், தங்குமிடம் ஆகிய மாதிரி வசதிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

செயற்கை நீர்வீழ்ச்சியுடன் அமைந்த அழகிய நிலப்பரப்பு, மூங்கில் பாலத்துடன் அமைந்த தீவு, படகுக்குழாம் அமைந்த ஏரி ஆகியனவும் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

அத்துடன், மொகலாயர் தோட்டம், இத்தாலியர் தோட்டம், ஜப்பானியர் தோட்டம் ஆகிய வனப்புமிகு தோட்டங்களும் படப்பிடிப்பு வசதிக்கென உருவாக்கப்பட்டுள்ளன. முழு குளிர் வசதி செய்யப்பட்ட நடன அரங்கம், மின்னும் வண்ண விளக்குகள் மற்றும் ஒப்பனை அறையுடன் அமைக்கப்பட்டுத் திகழ்கிறது. நான்கு நட்சத்திர உணவக விடுதி மற்றும் தங்குமிடம், நீருக்கடியில் புகைப்படம் எடுக்கின்ற வசதிகளுடன் கூடிய நீச்சல்குளம், பில்லியர்ட்ஸ், டென்னிஸ், டேபிள் டென்னிஸ் மற்றும் இறகுப்பந்து விளையாடுவதற்கான வசதிகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

திரைப்படத் தொடர்புடைய கலைஞர்களுக்கு தங்குமிடங்கள், அனைத்து வசதிகளுடன் உருவாக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்தக் குடில்கள் திரைப்படம் மற்றும் வீடியோ தொழிலில் ஈடுபட்டுள்ள கலைஞர்களுக்கு குறைந்த கட்டணத்தில் அவர்களது பணிக்காக வழங்கப்பட்டு வருகின்றன.



2000 மே 2]

திரைப்பட நகரில் இடம்பெற்றுள்ள வண்ணமிகு தோட்டங்கள், குளிர்வசதியுள்ள படப்பிடிப்பு நிலையங்கள் ஆகியவை, வரவேற்பு, பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், கருத்தரங்கு மற்றும் கூட்டங்களுக்கும் கட்டண அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறுவர், சிறுமிகளின் பொழுதுபோக்கிற்காக, சிறுவர் பூங்காவில், மோதும் கார்கள், நீர்வீழ்ச்சி, தண்ணீர் மெத்தை, நாணயத்தால் இயங்கும் விளையாட்டுக் கருவிகள், சிறிய புகை வண்டி, ரோலர் கோஸ்டர் மற்றும் குழந்தைகள் சறுக்கி விளையாடும் சாதனங்கள் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

இத்திரைப்பட நகரைக் கண்டு களிக்க வருவோரில் பெரியவர்களுக்கு ரூ.15/-ம், சிறியவர்களுக்கு ரூ. 8/-ம் நுழைவுக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. ஒட்டுமொத்தமாக வருகின்ற பள்ளி, கல்லூரி, மாணவ, மாணவிகளுக்கு கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது. மாதந்தோறும் சராசரியாக ரூ.20 இலட்சம் அளவிற்கு எம்.ஜி.ஆர். திரைப்பட நகர் வருவாய் ஈட்டி வருகிறது.

## அத்தியாயம் - 9

### சினிமாக்கள் வீடியோ மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு

திரைப்படங்கள் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சிறந்த பொழுதுபோக்கு சாதனமாக விளங்குவதுடன் உள்ளாட்சி அமைப்புகளுக்கும், அரசுக்கும் வருவாய் ஈட்டித் தருவதாகவும் உள்ளன.

திரைப்படத் தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு அரசு நிறைய சலுகைகளை திரைப்படத் துறைக்கு அளித்து வருகிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் 2,422 திரையரங்குகள் இயங்கி வருகின்றன. அவை பின்வரும் ஐந்து பிரிவுகளில் இடம் பெறுகின்றன:

| | சாதாரணம் | குளிர்சாதன வசதி |
|---|---|---|
| 1. நிரந்தர திரையரங்குகள் | 1397 | 156 |
| 2. பகுதி நிரந்தர திரையரங்குகள் | 198 | - |
| 3. நடமாடும் திரையரங்குகள் | 656 | - |
| 4. திறந்தவெளி திரையரங்குகள் | 13 | - |
| 5. வீடியோ திரையரங்குகள் | 2 | - |
| மொத்தம் | 2266 | 156 |

திரையரங்குகளுக்குச் செல்கின்ற பொதுமக்களுக்குக் கிடைக்கவேண்டிய அடிப்படை வசதிகள், கட்டட உறுதி நிலைத்தன்மை, முறையான பராமரிப்பு இவை அமையும் வகையில், 1955 ஆம் ஆண்டைய தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம் மற்றும் 1957ஆம் ஆண்டைய தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகளில் நெறிமுறைகள் வகுக்கப்பட்டு உள்ளன.

அரசு 1994 ஆம் ஆண்டில் திரையரங்குகளின் நிர்வாகிகள், கடைசி வகுப்பினைத் தவிர இதர வகுப்புகளுக்கான நுழைவுக் கட்டணங்களை உரிமம் வழங்கும் அதிகாரிக்கும், வணிகவரித் துறை அதிகாரிக்கும் உரிய முன்னறிவிப்பு கொடுத்து அதன்பின்னர் அதிகரித்துக்கொள்ளவோ அல்லது குறைத்துக்கொள்ளவோ அனுமதி வழங்கியது. அவ்வாறு கட்டணங்களை மாற்றியமைத்துக்கொள்ளும்பொழுது அரசு அனுமதியளித்த நாளில், அதாவது 28-10-1994-ல் ஏற்கெனவே நடைமுறையில் இருந்த கட்டண விகிதங்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்தது.

பின்னர், பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட புகார்களின் அடிப்படையில் திரையரங்குகளில் கடைசி வகுப்பைத் தவிர ஏனைய வகுப்புகளுக்கான நுழைவுக் கட்டணத்தைத் திரையரங்கு நிர்வாகிகளே நிர்ணயம் செய்துகொள்வதற்கு ஓர் உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று அரசு கருதியது. அதன்படி, திரையரங்கு நிர்வாகிகள் நுழைவுக் கட்டண விகிதங்களை உயர்த்தும்போது 28-10-1994-க்கு முன்பு இருந்த நுழைவுக் கட்டண விகிதங்களைவிட 75 விழுக்காட்டிற்குமேல் இல்லாமல் நிர்ணயித்துக்கொள்ளலாம் என்று அரசு ஆணை பிறப்பித்தது. அரசின் இவ் வாணையினை எதிர்த்துத் திரையரங்கு உரிமையாளர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்தனர். அவ்வழக்குகள் அனைத்தும் 14-10-1997 அன்று நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு அரசின் ஆணை உறுதி செய்யப்பட்டது.

நிர்ணயிக்கப்பட்ட நுழைவுக் கட்டணங்களுக்குக் கூடுதலாக கள்ளச்சந்தையில் நுழைவுச் சீட்டுகளை விற்பது, நிர்ணயம் செய்யப்பட்ட இருக்கைகளின் எண்ணிக்கைகளுக்கு அதிகமாக அனுமதிப்பது போன்ற விதிமீறல்கள் குறித்து அரசுக்குப் புகார்கள் அவ்வப்பொழுது வந்தவண்ணம் உள்ளன. இதுபோன்ற புகார் மனுக்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவும், திடீர் சோதனை மேற்கொண்டு விதிகளுக்குப் புறம்பாகச் செயல்படும் திரையரங்கு உரிமையாளர்கள்மீது கடுமையாக நடவடிக்கை





மேற்கொள்ளுமாறும் அனைத்து உரிமம் வழங்கும் அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறுகளைக் கருத்தில்கொண்டு விதிமீறல்களின் தன்மைக்கேற்ப தண்டனைகள் வழங்குவதற்கு வழிசெய்ய 1955 ஆம் ஆண்டைய தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டத்திற்கு உரிய திருத்தங்கள் தமிழ்நாடு சட்டம் எண் 0/97-ல் இயற்றப்பட்டு 1-7-1997 முதல் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தச் சட்டத்தில் புதிய பிரிவு ஒன்று சேர்க்கப்பட்டு விதிமீறல்களை ஒப்புக்கொள்ளும் திரையரங்கு உரிமையாளர்களிடமிருந்து இணக்கத் தொகை வசூலிக்கப்பட பின்வருமாறு வழிவகை செய்யப்பட்டது:—

1. நிரந்தர திரையரங்குகளைப் பொறுத்தவரையில் ஆயிரம் ரூபாய்களுக்கு மேற்படாத தொகையினையும்;

2. தற்காலிக திரையரங்குகளைப் பொறுத்தவரையில் அறுநூறு ரூபாய்களுக்கு மேற்படாத தொகையினையும் இணக்கத் தொகையாக வசூலிக்கலாம்.

திரையரங்க உரிமையாளர்கள் செய்யும் விதிமீறல்களுக்காக அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும்பொழுது திரையரங்கு உரிமையாளர்களுக்கு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டத்தின்படி உரிமம் வழங்கும் அலுவலர்/மேல்முறையீட்டு அதிகாரி ஆகியோரால் தகுந்த வாய்ப்புகள் அளிக்கப்படுவதுடன் விதிகளில் குறிப்பிட்டுள்ளபடி அவர்களது விளக்கங்களை அரசு நேரடி விசாரணை மூலம் கேட்டறிந்து அதன்பின்னரே இறுதி முடிவெடுக்கப்படுகிறது.

## வீடியோ திருட்டு

வீடியோ திருட்டைக் கட்டுப்படுத்துவதற்காக மாநில காவல் துறை இயக்குநர் (குற்றப்பிரிவு) கட்டுப்பாட்டின்கீழ் காவல் துறை கண்காணிப்பாளர் தலைமையில் அரசு தனிப்பிரிவு ஒன்றினை 1995 ஆம் ஆண்டு ஏற்படுத்தியது. இப் பிரிவின் வாயிலாக, வீடியோ கேசட்டுகள் மூலமாகத் திரைப்படப் பதிவு உரிமைகள் மீறுதல், ஏனைய பதிப்பு உரிமை மீறுதல்கள் தொடர்பான புகார்கள் புலனாய்வு செய்யப்படும். பதிப்புரிமைச் சட்ட மீறல்களைத் தடுப்பதற்கு திடீர் சோதனையிடவும், பத்திரிகைகளில் இதற்காக உரிய விளம்பரங்கள் செய்யவும் சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகளுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

[2000 மே 2

கேபிள் டி.வி. மூலமாக திருட்டுத் தனமாக திரைப்படங்களை வீடியோக்களில் வெளியிடும் கேபிள் டி.வி. உரிமையாளர்களின் கேபிள் தொலைக்காட்சி சாதனங்கள் பறிமுதல் செய்யப்படுவதுடன், அவர்கள்மீது வழக்கும் தொடர்வது உள்ளிட்ட கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு எச்சரித்துள்ளது. திருட்டு வீடியோ தொடர்பான புகார்கள் குறித்து உள்ளூர்க் காவல் துறையினராலும் நடவடிக்கை எடுக்கப்படும். 1-1-1999 முதல் 31-12-1999 வரை வீடியோ திருட்டு தனிப்பிரிவு மற்றும் உள்ளூர் தகவல் துறையினர் 270 வழக்குகளைப் பதிவு செய்துள்ளனர். 1-1-1999 முதல் 31-12-1999 வரை வீடியோ திருட்டு தனிப்பிரிவினால் வீடியோ திருட்டு குற்றத்திற்காக பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ரூ.6,57,340 ஆகும். 1995 முதல் 2000 வரை (29-2-2000 வரை) இப் பிரிவினால் மேற்படி குற்றத்திற்காக பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ரூ. 2,33,48,900. 1-1-1999 முதல் 31-12-1999 வரை உள்ளூர் காவல் துறையினர் மேற்படி குற்றத்திற்காக பறிமுதல் செய்த சொத்துக்களின் மதிப்பு ரூ.25,40,540 ஆகும்.

வீடியோ திருட்டைத் தடுப்பதற்காக பதிப்புரிமைச் சட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் அரசின் உயர்மட்டத்தில் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

**கேபிள் தொலைக்காட்சி இணைப்பு முறை**

தமிழ்நாடு அரசு 1984 ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்கள் ஒளிபரப்பப்படுவதை முறைப்படுத்துவதற்காக வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்கள் ஒளிப்பரப்புதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தை இயற்றியுள்ளது. இச்சட்டம் 14-1-1984 முதல் அமலுக்கு வந்தது. இதனைத் தொடர்ந்து 1991 ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெகார்டர்கள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தை மாநில அரசு இயற்றியுள்ளது. இச்சட்டத்தில் கேபிள் டி.வி. அமைப்பை முறைப்படுத்துவதற்கான வழிவகைகள் சேர்க்கப்பட்டுள்ளன. மேற்படி சட்டத்திருத்தத்தின்கீழ் வெளியிடப்பட்ட விதிகளின்படி, கேபிள் டி.வி. இயக்குபவர்கள் ஒவ்வொருவருக்கும் முதலில் 100 இணைப்புகளும் பின்னர் 500 இணைப்புகளும் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாநிலச் சட்டத்தின்கீழ் சென்னையைப் பொறுத்தவரை காவல் துறை ஆணையரும், பிற மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர்களும் உரிமம் வழங்கும் அலுவலர்கள் ஆவர்.



2000 மே 2]

1995 ஆம் ஆண்டு கேபிள் டி.வி. அமைப்பு முறையை ஒழுங்குபடுத்த மத்திய அரசு கேபிள் டி.வி. அமைப்பு ஒழுங்குபடுத்துதல் சட்டத்தை இயற்றியுள்ளது. இச்சட்டத்தின்படி தலைமை அஞ்சல் அதிகாரி பதிவு செய்யும் அலுவலர் ஆவர். இச் சட்டத்தில் மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னையைப் பொறுத்தவரை காவல் துறை ஆணையரும் 11 மற்றும் 19 பிரிவுகளின்கீழ் அங்கீகாரம் பெற்ற அலுவலர்களாகவும் 18 ஆம் பிரிவின்கீழ் குறிப்பிடப்பட்ட அலுவலர்களாகவும் மாநில அரசு நியமித்துள்ளது.

## அத்தியாயம் - 10

### பொருட்காட்சி

சுவரில் தொங்கும் சித்திரம் ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமமானது என்பது முதுமொழி.

அரசின் கொள்கைகளையும், நலத்திட்டங்களையும், சாதனைகளையும் விளக்கும்வண்ணம் செய்தி மக்கள் தொடர்புத் துறையால் பொருட்காட்சிகள் மாநிலத்தின் பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில் நடத்தப்படுகின்றன. அரசுத் துறைகளும், அரசுச் சார்பு நிறுவனங்களும் பங்கேற்கும் இந்தப் பொருட்காட்சிகள் மக்களுக்கு மகிழ்வூட்ட மட்டுமல்லாமல் அரசுத் திட்டங்களையும் ஆக்கப் பணிகளையும் மக்கள் தெரிந்து பயன்பெறவும் வகை செய்கின்றன.

1978 ஆம் ஆண்டு முதல் 1999 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய இதுவரை 100 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

மதுரை, சேலம், கோயம்புத்தூர் ஆகிய பெருநகரங்களில் ஒவ்வோர் ஆண்டும் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. வேலூர், திருநெல்வேலி ஆகிய நகரங்களில் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகின்றன. இந்த ஆண்டு மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தத் திட்டமிடப்பட்டு மதுரையில் 14-4-2000 அன்று பொருட்காட்சி தொடங்கப்பட்டுவிட்டது.

வெறும் பொழுதுபோக்கிற்காக மட்டுமின்றி பொருட்காட்சிகள் தகவல் களஞ்சியமாகத் திகழ வேண்டும் என்னும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுரையின்படி அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. துறைகளின் சாதனைகள் இந்தப் பொருட்காட்சிகளின் வாயிலாக மக்களைச் சென்று அடைகின்றன.

[2000 மே 2

சென்னையில் ஒவ்வோர் ஆண்டும் நடைபெறும் அகில இந்திய சுற்றுலாப் பொருட்காட்சியில் இத்துறை பங்கேற்கிறது. ஆண்டுதோறும் புதுடில்லியில் நடைபெறும் இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியிலும் தமிழ்நாடு அரசின் சார்பில் இத்துறை பங்கேற்கின்றது. தமிழ்நாடு அரங்கில் பல்வேறு அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் பங்கேற்கின்றன.

தேசிய ஒருமைப்பாடு, மதநல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் புதுதில்லியில் நடைபெறும் மலர்ப் பேரணி விழாவிலும் இத்துறை பங்கேற்கிறது. மதநல்லிணக்கத்தையும், தேசிய ஒருமைப்பாட்டையும் வலியுறுத்தும் இந்த மலர்ப் பேரணியில் கடந்த நான்கு ஆண்டுகளாகத் தொடர்ந்து முதற் பரிசினை நமது தமிழ்நாடு அரசு பெற்று வருவது பெருமைக்குரியதாகும்.

ஒவ்வோர் ஆண்டும் சென்னையில் நடைபெறும் குடியரசு நாள் விழாவில் அலங்கார ஊர்திகள், கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு தொடர்பான முக்கியப் பணிகளுடன் ஒருங்கிணைப்புப் பணிகளையும் பொருட்காட்சிப் பிரிவு செவ்வனே செய்து வருகிறது. இந்த ஆண்டு புதுதில்லியில் மைய அரசு நடத்திய குடியரசு நாள் விழா அலங்கார ஊர்தி அணிவகுப்பில், தமிழ்நாட்டின் சுடுமண் சிற்பக் கலை மற்றும் சுடுமண் சிற்பங்களின் சிறப்புக்களை விளக்கும் அலங்கார ஊர்தி ஒன்று தமிழ்நாடு அரசின் சார்பில் பங்குபெற்றது.

**பல்துறைப் பணிவிளக்க முகாம்கள்**

தமிழ்நாடு அரசின் சார்பில் அனைத்துத் துறைகளின் வளர்ச்சித் திட்டங்கள், தீண்டாமை ஒழிப்பு, மதநல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமையினை வலியுறுத்தும் நிகழ்ச்சிகள் 28 மாவட்டங்களில் நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சியில் அனைத்துத் துறைகளும் பங்கேற்ற அரசின் வளர்ச்சிப் பணிகள் பற்றி கண்காட்சி நடத்தப்பட்டது. இலவச மருத்துவ முகாம், இலவச கால்நடை மருத்துவ முகாம், விவசாயிகளுக்கு இடுபொருள் வழங்குதல், முகாம் நடைபெற்ற இடத்தில் கோரிக்கை மனுக்கள் பெறுதல், மண் பரிசோதனை ஆகியவை நடத்தப்பட்டன. மேலும், இம்முகாம்களில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

நாள்தோறும் அரசு சாதனைகளை விளக்கும் கலை நிகழ்ச்சிகள், நாடக நிகழ்ச்சிகள் மற்றும் வீடியோக் காட்சிகள் கிராமங்களில் சிறப்புடன் நடத்தப்பட்டன.



2000 மே 2]

## அத்தியாயம்-11

### விளம்பரம்

*நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால்*
*கண்ணல்லது இல்லை பிற.*

தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகள், அரசின் பொறுப்பிலுள்ள பல்வேறு கழகங்கள் மற்றும் அனைத்து வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் விளம்பரங்களை வெளியிடும் மைய நிறுவனமாகச் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயங்கி வருகிறது. விளம்பரத்தின் தன்மையைக் கருத்தில்கொண்டு அவ்விளம்பரம் போய்ச் சேரவேண்டிய பகுதி, மக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பத்திரிகைகளுக்கு விளம்பரம் அளிக்கப்பட்டு வருகிறது. தேவையின் அடிப்படையில் மட்டும் விளம்பரங்கள் வெளியிடப்பட்டு விளம்பரச் செலவில் சிக்கன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் சிறிய மற்றும் நடுத்தரப் பத்திரிகைகளுக்கும், விளம்பரங்கள் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

விளம்பரச் செலவினத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் வகையிலும், அதேசமயம் அரசின் செயல்பாடுகள் அனைத்தும் மக்கள் அறிந்து கொள்ளும் வகையிலும் வெளிப்படையாக இருத்தல் வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையிலும் ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்களை வெளியிடுவதில் அனைத்துத் துறைகளும் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் அவ்வப்பொழுது ஆய்வு செய்யப்பட்டு ஆணைகள் வெளியிடப்படுகின்றன. சமீபத்தில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளை வெளியிடும் நாளிதழ்களின் எண்ணிக்கைகள் முறைப்படுத்தப்பட்டு அரசு ஆணை (நிலை) எண் 108, செய்தி மற்றும் சுற்றுலாத் (விளம்பரம்) துறை, நாள்: 28-5-1999-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதன்மூலம் விளம்பரச் செலவினம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி, கூடுதலாக செலவு ஏதுமின்றி அனைத்து அரசு விளம்பரங்களும் மக்களை எளிதில் சென்றடையும் வகையில் ஒப்பந்தப்புள்ளி மற்றும் வரைகலை விளம்பரங்கள் (ஆங்கிலம் மற்றும் தமிழ்) கணினி இணையத்தில் வெளியிட அரசு ஆணை (நிலை) எண் 262, செய்தி மற்றும் சுற்றுலாத் (விளம்பரம்) துறை, நாள்: 15-12-1999-ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 1-1-2000 முதல் அரசு விளம்பரங்கள் பத்திரிகைகளில் வெளியாவதுடன் கணினி இணையத்திலும் வெளியிடப்படுகின்றன.

[2000 மே 2

இதன்மூலம் அரசின் வெளிப்படையான நிர்வாகம் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதோடு, உலகத்தின் எந்த மூலையில் உள்ள தகுதியான எவரும் தமிழக அரசின் ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## அத்தியாயம் -12

### செய்தி வெளியீட்டுப் பிரிவு

*விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது*
*சொல்லுதல் வல்லார்ப் பெறின்.*

செய்தி வெளியீட்டுப் பிரிவு விடுமுறை நாட்கள் உட்பட அனைத்து நாட்களிலும் செயல்பட்டு வரும் பிரிவாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகத்திலிருந்து பெறப்படும் செய்தி வெளியீடுகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் அலுவலகத்திலிருந்து பெறப்படும் செய்தி வெளியீடுகள் மற்றும் அரசின் நலத்திட்டங்கள், அரசின் சாதனைகள், ஆக்கப்பணிகள் குறித்த செய்திகள் அனைத்தும், நாளிதழ்கள், தொலைக்காட்சி மற்றும் தனியார் தொலைக்காட்சிகள் என 80-க்கும் மேற்பட்ட தகவல் தொடர்பு நிறுவனங்களைச் சார்ந்த செய்தியாளர்களுக்கு நேரிலும் பேக்ஸ் மூலமும் உடனுக்குடன் வழங்கப்படுகின்றன.

கடந்த ஆண்டு, அரசின் பல்வேறு துறைகளிலிருந்து பெறப்பட்ட 1011 செய்தி வெளியீடுகள் அனைத்து பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி மற்றும் தனியார் தொலைக்காட்சிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. 480 அரசு விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கு வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி, புகைப்படம், தனியார் தொலைக்காட்சியினர் சென்றுவந்து நிகழ்ச்சிகளை வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுதவிர மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தியாளர் கூட்டம், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் நடத்தப்பெறும் செய்தியாளர் கூட்டம் ஆகியவற்றிற்கு உரிய ஏற்பாடுகளையும் இப்பிரிவே செய்து வருகிறது. மேலும் மாவட்டங்களில் உள்ள செய்தியாளர்களுக்கு அரசின் முக்கிய அறிவிப்புகளையும் செய்தி வெளியீடுகளையும் தெரிவிக்கும் வகையில், மாவட்டங்களில் உள்ள மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு முக்கிய செய்திகள் அனுப்பி வைக்கப்படுகின்றன.



2000 மே 2]

அனைத்து அமைச்சர் பெருமக்கள், துறைச் செயலாளர்கள் கலந்துகொள்ளும் விழாக்கள், முக்கியப் பிரமுகர்களின் வருகை ஆகியவற்றிற்கு பத்திரிகையாளர்கள், தொலைக் காட்சியினர் செய்தி சேகரிக்க அனைத்து ஏற்பாடுகளையும் இப்பிரிவு செய்து வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 23-12-1999 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அறிவித்ததற்கிணங்க, மாவட்டங்களில் நடைபெறும் வளர்ச்சிப் பணிகளையும், நல்வாழ்வுத் திட்டங்களையும் மக்களுக்கு எடுத்தியம்பும் வகையில் மாதந்தோறும் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் செய்தியாளர்கள் கூட்டங்கள் மற்றும் செய்தியாளர் பயணங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு பத்திரிகைகளில் செய்தி வெளியிடப்படுகின்றது.

### நாளிதழ்களின் செய்தியாளர்களுக்கு அரசு அங்கீகாரம்

சென்னையிலிருந்து வெளிவரும் நாளிதழ்கள் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து வெளியாகும் நாளிதழ்களின் சென்னைச் செய்தியாளர்கள், அரசுத் துறையைச் சார்ந்த வானொலி, தொலைக்காட்சி, திரைப்படப் பிரிவு, புகைப்படப் பிரிவு ஆகியவற்றில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்கள் ஆகியோருக்கு அரசால் அமைக்கப்பட்ட செய்தியாளர் அங்கீகாரக் குழுவின் பரிந்துரையின்படி ஆண்டுதோறும் செய்தியாளர் அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு 464 பேர்களுக்கு இதுவரை அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசு அங்கீகார அட்டைகள் பெற்ற செய்தியாளர்களுக்கு அரசு போக்குவரத்துக் கழகங்களில் இலவசமாகப் பயணம் செய்ய இலவசப் பேருந்து அட்டை, இரயில் பயணத்தில் 50 சதவிகித கட்டணச் சலுகை மற்றும் அடையாள அட்டைகளின் அடிப்படையில் அவர்கள் வீட்டிற்கு தொலைபேசி இணைப்பு பெறுவதில் முன்னுரிமை போன்ற சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

### பருவ இதழ்கள் மற்றும் தனியார் தொலைக்காட்சியினருக்கு செய்தியாளர் அட்டை

அரசு விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்குச் சென்று செய்திகள் சேகரிப்பதற்கெனப் பருவ இதழ்கள் மற்றும் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களைச் சேர்ந்த செய்தியாளர்களுக்கும் 1997 ஆம் ஆண்டு முதல்

செய்தியாளர் அட்டை வழங்கப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டு இதுவரை 151 பேருக்கு செய்தியாளர் அட்டை வழங்கப்பட்டுள்ளது.

**பத்திரிகையாளர் ஓய்வூதியம்**

பத்திரிகைத் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்று நலிந்த நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கும் திட்டம் 1986 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு, இத்திட்டத்தின்கீழ் மாதம் ரூ. 500 ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வந்தது. 1996 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்தொகையை ரூ. 500-லிருந்து ரூ. 1,000 ஆக உயர்த்தினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டில் இத்தொகையை ரூ. 1000-லிருந்து ரூ. 1,500 ஆக உயர்த்தியும் ஆணை பிறப்பித்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2000-2001 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் பத்திரிகையாளர் ஓய்வூதியத்தை ரூ.1,500-லிருந்து ரூ. 2,000 ஆக உயர்த்தி அறிவித்தார்கள். அந்த அறிவிப்பிற்கேற்ப பத்திரிகையாளர் ஓய்வூதியத்தை ரூ. 1,500-லிருந்து ரூ.2,000 ஆக உயர்த்தி 11-4-2000 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. [அரசாணை நிலை எண் 79, செய்தி, சுற்றுலா (செ.வெ.)-த் துறை, நாள் 11-4-2000.]

இத்திட்டத்தின்கீழ், ஓய்வுபெற்ற வறுமை நிலையில் உள்ள 70 பத்திரிகையாளர்கள் மாதந்தோறும் ரூ.2000 ஓய்வூதியமாகப் பெறுவார்கள்.

**பத்திரிகையாளர்கள் குடும்ப ஓய்வூதியம்**

பத்திரிகையாளர் ஓய்வூதியம் பெறும் பத்திரிகையாளர் இயற்கை எய்திவிட்டால், அவரது துணைவியாருக்கு ரூ.500 மாதந்தோறும் குடும்ப ஓய்வூதியமாக அவரது வாழ்நாள் முழுவதும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் பெற்று மறைந்த பத்திரிகையாளர்களின் துணைவியார்கள் 5 பேர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக ரூ.500 வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**பத்திரிகையாளர் குடும்ப உதவிநிதித் திட்டம்**

பத்திரிகைத் துறையில் தொடர்ந்து 20 ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள் பணியிலிருக்கும்போது இயற்கை எய்தினால் அவர்களது குடும்பத்திற்கு, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.25,000 நிதியுதவி வழங்கும் பத்திரிகையாளர்



குடும்ப உதவிநிதித் திட்டம் 1997 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு (1999-2000) நிதிநிலை அறிக்கையில் இத்தொகையினை ரூ. 25,000-லிருந்து ரூ. 40,000 ஆக உயர்த்தி அறிவித்தார்கள். இத்திட்டத்தின்கீழ் இதுவரை 9 பத்திரிகையாளர் குடும்பங்களுக்கு தலா ரூ. 25,000-மும், 3 பத்திரிகையாளர் குடும்பங்களுக்கு தலா ரூ.40,000-மும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

தற்போதைய (2000-2001 ஆம் ஆண்டுக்கான) நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பத்திரிகையாளர் குடும்ப உதவிநிதியை ரூ.40,000-லிருந்து ரூ.50,000 ஆக உயர்த்தி அறிவித்தார்கள். அதற்கேற்ப பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதியை ரூ.40,000-லிருந்து ரூ.50,000 ஆக உயர்த்தி 11-4-2000 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. [அரசாணை நிலை எண் 78, செய்தி, சுற்றுலா (செ.வெ.)த் துறை, நாள் 11-4-2000.]

**புகைப்படப் பிரிவு**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்துகொள்ளும் விழாக்கள், கூட்டங்கள் மற்றும் அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள், வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றைப் புகைப்படமெடுத்து உடனுக்குடன் அனைத்து நாளிதழ்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டில் 1442 புகைப்படங்கள் தலைமையிடத்தில் உள்ள புகைப்படப் பிரிவினால் வெளியிடப்பட்டன. தலைமையகம் மற்றும் மாவட்டங்களில் உள்ள புகைப்படக்காரர்களுக்கென 1998-99 பகுதி-2 திட்டத்தின்கீழ் 10 புதிய கேமராக்கள் வாங்கி வழங்கப்பட்டன. 1999-2000 ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் 7 புதிய கேமராக்கள் வாங்கப்பட்டு 7 மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

1998-99 ஆம் ஆண்டு முதற்கட்டமாக தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, விழுப்புரம், தருமபுரி ஆகிய 5 மாவட்டங்களில் புகைப்பட இருட்டறை வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. மேலும் 1999-2000 ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ், கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், திண்டுக்கல் மற்றும் நாகர்கோவில் ஆகிய 5 மாவட்டங்களில் புகைப்பட இருட்டறை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

[2000 மே 2

## அத்தியாயம்-13

### மாநிலச் செய்தி நிலையம்

*மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாஉள முன்நிற் பவை.*

மாநிலச் செய்தி நிலைய அலுவலகம் மற்றும் நூலகம், சென்னை திருவல்லிக்கேணியிலுள்ள மகாகவி பாரதியார் நினைவில்லத்தில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

மாநிலச் செய்தி நிலையம், அரசின் திட்டங்கள், செயல்பாடுகள் குறித்த தகவல்களை தலைநகர மக்களுக்கு மட்டுமல்லாது, பல தரப்பட்ட பிரிவினருக்கும் செய்திகள் கூறும் ஒரு முக்கிய தகவல் மையமாகச் செயல்பட்டு வருகிறது. பத்திரிகையாளர்கள், கல்வியாளர்கள், மாணவ, மாணவியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் போன்றோர்க்கும் உரிய விவரத்தைத் தந்து உதவுகிறது.

செய்தி நிலையத்தில் உள்ள நூலகத்தில் 13,000-க்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. அதில் தலைவர்களின் வாழ்க்கை வரலாறு, கலை, அறிவியல் மற்றும் இலக்கியம் தொடர்பான நூல்களும் அடங்கும். பொதுமக்கள் அன்றாடம் படித்துப் பயன்பெறும் வகையில், பல்வேறு பருவ இதழ்களும், நாளிதழ்களும் வாங்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இம்மாநிலச் செய்தி நிலையத்தில், படச்சுருள் நூலகமும் உள்ளது. இங்கு கல்வி மற்றும் தகவல் தொடர்பான 300-க்கும் மேற்பட்ட 16 மி.மீ. படச்சுருள்கள் உள்ளன. கல்வி நிறுவனங்கள் மற்றும் சமூக நிறுவனங்கள் கோரும்போது, செய்தி நிலையத்தின் மூலம் படக்காட்சி நடத்தப்படுகிறது.

## அத்தியாயம்-14

### பகுதி-2 திட்டத்தின்கீழ் 1999-2000 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் விவரம்

1. தமிழரசு பத்திரிகை அலுவலகத்தில் கூடுதல் தளம் ஒன்று ரூ. 3 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

2. தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்திற்கு கையடக்க "டாட்" பதிவுக் கருவி ரூ. 5 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளது.



2000 மே 2]

3. ஏழு மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு, ஏழு புகைப்படக் கருவிகள் ரூ.2.10 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளது.

4. மூன்று மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு மூன்று ஒளிநாடா பதிவுச் சாதனத்துடன் வீடியோ படம் காட்டும் சாதனம் (Video Projector) மூன்று ரூ.12 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளது.

5. ஐந்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு நிழற்பட இருட்டறை வசதி (Dark Room) ரூ.5 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

6. எட்டு மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு ஒளிநாடாப் பதிவுச் சாதனங்கள் ரூ.1 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளது.

7. மக்கள் தொடர்புப் பிரிவில் பயனற்றதென கழிக்கப்பட்ட ஆட்டோ ரிக்ஷாவுக்குப் பதிலாக புதிய ஆட்டோ ரிக்ஷா ஒன்று ரூ.0.75 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளது.

8. பத்திரிகை செய்தி வெளியீடு, விளம்பரப் பிரிவு மற்றும் தமிழரசு அலுவலகத்திற்கு 3 நிகரிகள் (Fax Machines) ரூ.1 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன.

9. பத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு நகலாக்க இயந்திரங்கள் (Xerox Machine) ரூ. 10 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன.

### பகுதி-2 திட்டத்தின்கீழ் 2000-2001 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்களின் விவரம்

1. தமிழரசு சந்தாதாரர்களின் முகவரிகளைத் தொகுத்தளித்து நினைவில் வைக்கும் அதிகத் திறன்கொண்ட மற்றும் விரைவு அச்சடிப்புத் திறன்கொண்ட கணினித் தொகுதி ஒன்றை தமிழரசு அலுவலகத்துக்கு ரூ.1.41 இலட்சம் செலவில் வாங்குதல்.

2. வண்ண கணினி, தமிழ் மென்பொருள், வண்ண அச்சிடும் இயந்திரம், தடையில்லாத மின்னிணைப்பு மற்றும் அறைகலன்கள் ரூ.2.00 இலட்சம் செலவில் தமிழரசு அச்சகத்துக்கு வாங்குதல்.

3. மாநிலச் செய்தி நிலையத்திற்கு கணினி மற்றும் இணையம் வசதி ரூ.0.90 இலட்சம் செலவில் அமைத்தல்.

## இணைப்பு-III

[*141*–ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

**கோரிக்கை எண் 50 — சுற்றுலா**

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001

*"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்*
*நல்விருந்து வானத் தவர்க்கு"*

என்ற அய்யன் திருவள்ளுவரின் குறள்நெறிக்கேற்ப, விருந்தோம்பல் பண்பினை வளர்க்கிறது சுற்றுலா. நாட்டு மக்களிடையே நல்லுறவு மலர்வதற்கு வழிவகுத்து சீரான சமூகப் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்கு வகிப்பதுடன், அந்நியச் செலாவணியை அதிகளவில் ஈட்டித்தருவதற்கும் சுற்றுலா இயக்கம் துணை நிற்கின்றது. அத்துடன் நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளைப் பெருக்கிக் கைவினைப்பொருட்கள் மற்றும் கலைப்பொருட்களின் உற்பத்திக்கும் ஊக்கம் அளிக்கிறது. அனைத்திற்கும் மேலாக, நாட்டின் இயற்கை எழிலையும், பண்பாட்டுச் சிறப்புகளையும், பாதுகாத்து மனித நேயம் ஓங்கிடவும் தேசிய ஒருமைப்பாடு வலுப்பெறவும் வழிகாட்டும் சுற்றுலா இயக்கம், ஆல்போல் தழைத்து புத்தாயிரம் ஆண்டில் புதுப்பொலிவு கொண்டு பெருமை சேர்க்க வருகிறது.

இத்தகு முக்கியத்துவம் வாய்ந்த இயக்கம், வருகின்ற ஆண்டுகளில் மென்மேலும் பெருகி வளர்வதற்குத் தேவையான கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும். மாநில அரசு, சுற்றுலாத் திட்டங்களை முன்னுரிமைப்படுத்தியும், அத்திட்டங்களுக்கு மைய அரசின் ஒப்புதலுடன் நிதி உதவி பெறுவதுடன் அத்தகைய முன்னுரிமைப்படுத்தப்பட்ட திட்டங்களுக்கு மாநில அரசு அளிக்க வேண்டிய நிதிப் பங்கினை அளித்தும், மாநிலம் தழுவிய அளவில் சுற்றுலாத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அத்துடன் தனியார் முதலீட்டில் திட்டங்கள் அமைக்கப்படுவதற்கும் துறையளவில் ஊக்கமளிக்கப்பட்டு, சுற்றுலா வசதிகள் பரவலாக்கப்படுவதற்கும் திட்டமிடப்பட்டு வருகிறது.



புகழ்பெற்ற சுற்றுலாத் தலங்களாக விளங்கி வரும் நகரங்கள் மற்றும் பகுதிகளில் போதிய அடிப்படை வசதிகளை சம்பந்தப்பட்ட துறைகளின் வாயிலாக அமைப்பதற்கும், அவ்வசதிகள் நன்முறையில் பராமரிக்கப்படுவதற்கும் சுற்றுலாத் துறை தொடர்ந்து இத்தகைய பணிகளை ஒருங்கிணைத்து வருகிறது. இதனால் சுற்றுலாப் பயணிகளும், அப்பகுதி மக்களும் பயன்பெற வழி ஏற்படுகின்றது. மேலும், நமது கலைச் செல்வங்களின் தொன்மை மற்றும் சிறப்புகளைப் பிற நாட்டாரும் தெரிந்து கொள்ளும் வகையில் வெளிநாட்டில் விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதன் அவசியம் கருதி, உலக சுற்றுலாச் சந்தைகளில் மைய அரசுடன் இணைந்து பங்குகொண்டு சுற்றுலாப் பயணிகளை நமது மாநிலத்திற்கு அதிக அளவில் ஈர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

*"நீலத் திரைக்கட லோரத்திலே-நின்று*

*நித்தந் தவஞ்செய் குமரியெல்லை-வட*

*மாலவன் குன்றம் இவற்றிடை யேபுகழ்*

*மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு"*

—என்ற பாரதியாரின் கூற்றுப்படி

எண்ணற்ற சுற்றுலாத் தலங்களின் புகழ்தாங்கி நிலவி வரும் தமிழ் நாட்டில் கோடையில் இளைப்பாறக் குளிர் வாசஸ்தலங்கள், மனதிற்கு மகிழ்ச்சியூட்டும் மத்தள அருவிகள், நீர்த்தேக்கங்கள், விரிந்து பரந்த வெண் மணற்பரப்பு கொண்ட நீண்ட கடற்கரைகள், வன விலங்குச் சரணாலயங்கள், பறவைகள் சரணாலயங்கள், தொன்மைச் சிறப்புகள் கொண்ட திராவிடக் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கிவரும் வானுயர்ந்த கோபுரங்கள், சிற்பிகளின் கைவண்ணத்தில் வடிக்கப்பட்ட சிற்பங்கள், குகைக்கோயில்கள் அவற்றில் வரையப்பட்டுள்ள ஓவியங்கள் மற்றும் தமிழகத்தின் பண்பாட்டு நலம் காட்டும் இயல், இசை, நாடகப் படைப்புகள் இவை யாவும் சுற்றுலாப் பயணிகளின் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக அமைகின்றன. இவ்வகையான புகழ்மிகு சுற்றுலாச் சிறப்புகளை நாட்டளவிலும் உலகளவிலும் பரப்புவதற்கு தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### இந்தியச் சுற்றுலா

இந்தியாவிற்கு 1998 ஆம் ஆண்டில் வருகை தந்த வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை 23,58,629 ஆகும். 1999 ஆம் ஆண்டில் அவ்வெண்ணிக்கை 24,81,928 ஆக உயர்ந்தது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 5.2 விழுக்காடு உயர்வாகும். நாட்டளவில், அந்நியச் செலாவணி ஈட்டும் தொழில்களில், மொத்த வருவாய் ஈட்டுவதில் மூன்றாவது இடத்தில் சுற்றுலாத் தொழில் உள்ளது. எடுத்துக்காட்டாக 1998 ஆம் ஆண்டில் ரூ. 11,537 கோடி அளவில் இருந்த அந்நியச் செலவாணி ஆக்கம், 1999 ஆம் ஆண்டில் ரூ. 12,495 கோடியாக உயர்ந்துள்ளது. இவ்வுயர்வு 8.3 விழுக்காடு ஆகும்.

**தமிழ்நாட்டிற்குச் சுற்றுலாப் பயணிகளின் வருகை**

| பயணிகளின் விவரம் | ஆண்டு 1995 | 1996 | 1997 | 1998 | 1999 |
|---|---|---|---|---|---|
| உள்நாட்டினர் | 1,72,14,973 | 1,82,07,666 | 1,89,28,100 | 2,04,13,193 | 2,11,36,941 |
| வெளிநாட்டினர் | 5,86,751 | 6,13,982 | 6,36,642 | 6,36,400 | 7,22,442 |
| மொத்தம் | **1,78,00,724** | **1,88,21,648** | **1,95,64,742** | **2,10,49,593** | **2,18,59,383** |

தமிழ்நாட்டிற்கு 1998 ஆம் ஆண்டில் வருகை புரிந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 210.50 இலட்சம் என்றிருந்த நிலையிலிருந்து, 1999 ஆம் ஆண்டில் அவ்வெண்ணிக்கை 218.60 இலட்சமாக உயர்ந்துள்ளது. இது முந்தைய ஆண்டைக்காட்டிலும் 3.8 விழுக்காடு உயர்வாகும்.

### தமிழ்நாட்டுச் சுற்றுலாக் கொள்கை

1. நமது நாகரிகம் மற்றும் பண்பாடு குன்றாத வகையிலும், சுற்றுச்சூழல் பாதிக்காத வகையிலும் சுற்றுலா வளர்ச்சியை உருவாக்குதல்.
2. சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல்.
3. வெளிமாநிலம் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாச் சந்தைகளில் தமிழ்நாட்டின் சுற்றுலாச் சிறப்புகளை விளக்கும் வகையில் பங்கேற்று விளம்பரம் செய்தல், மேலும் வெளிநாட்டு விளம்பரங்களில் மத்திய



அரசுடனும், பிற மாநிலங்கள் மற்றும் தனியார் அமைப்புகளுடனும் இணைந்து கூட்டு முயற்சியில் பங்கேற்றல்.

4. சுற்றுலாப் பயணிகளுக்குச் சுற்றுலா இடங்களைப் பற்றிய தகவல்களை தெரிவித்தல்.
5. மாநிலத்தில் உள்ள இதுவரையில் பிரபலமடையாத சுற்றுலாத் தலங்களுக்கு போதிய விளம்பரம் கொடுத்தல்.
6. இளைஞர்கள் மத்தியில் பல்வகைச் சுற்றுலா வாய்ப்புகள் மற்றும் சுற்றுலாத் தலங்களைப் பாதுகாத்துப் போற்றி வருவது குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.
7. சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
8. சுற்றுலாப் பயணிகளிடையே மாநிலத்தில் உற்பத்தியாகும் கைவினைப் பொருட்களை அறிமுகப்படுத்தி அவற்றின் விற்பனையளவு உயர வழிவகை செய்தல்.
9. கலைவிழாக்கள் நடத்துவதன் வாயிலாக பண்பாட்டுச் சுற்றுலாவை வளரச்செய்தல்.
10. நீர்விளையாட்டுகள், மலையேறுதல் முதலான விளையாட்டுகளை ஊக்குவித்தல்.
11. சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்கு, உரிய ஏற்பாடுகள் செய்தல்.
12. சுற்றுலா வளர்ச்சிக்கு தனியார் முதலீட்டை ஊக்குவித்தல்.
13. பொதுமக்களிடம் சுற்றுலாவின் முக்கியத்துவம் குறித்தும், சுற்றுலாத் தலங்களைத் தூய்மையாகப் பராமரிப்பது குறித்தும் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.
14. மாநில மற்றும் மாவட்ட அளவில் சுற்றுலா ஆலோசனைக் குழுக்களை அமைத்து சுற்றுலா தலங்கள் நன்முறையில் பராமரிக்க ஏற்பாடுகள் செய்தல்.

### சுற்றுலா அலுவலகங்கள்

மாநில அளவில் சுற்றுலாத் திட்டங்களை உருவாக்கி வளர்ச்சிப் பணிகள் அனைத்தையும் ஒருமுனைப்படுத்தி செயலாக்கத்தைக்

கண்காணித்து வருவது, சென்னையில் இயங்கி வரும் சுற்றுலா ஆணையகத்தின் பொறுப்பாகும். மாவட்ட அளவில் 14 இடங்களிலும், பிற மாநிலங்களில் 4 இடங்களிலும் சுற்றுலா அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

அவை பின்வருமாறு:—

1. சுற்றுலா அலுவலகம், கன்னியாகுமரி.
2. சுற்றுலா அலுவலகம், திருநெல்வேலி.
3. சுற்றுலா அலுவலகம், இராமேசுவரம்.
4. சுற்றுலா அலுவலகம், கொடைக்கானல்.
5. சுற்றுலா அலுவலகம், மதுரை.
6. சுற்றுலா அலுவலகம், உதகமண்டலம்.
7. சுற்றுலா அலுவலகம், சேலம்.
8. சுற்றுலா அலுவலகம், தருமபுரி.
9. சுற்றுலா அலுவலகம், திருச்சிராப்பள்ளி.
10. சுற்றுலா அலுவலகம், தஞ்சாவூர்.
11. சுற்றுலா அலுவலகம், பூம்புகார்.
12. சுற்றுலா அலுவலகம், சிதம்பரம்.
13. சுற்றுலா அலுவலகம், மாமல்லபுரம்.
14. சுற்றுலா அலுவலகம், சென்னை.
15. சுற்றுலா அலுவலகம், மும்பை.
16. சுற்றுலா அலுவலகம், கல்கத்தா.
17. சுற்றுலா அலுவலகம், பனாஜி, கோவா.
18. சுற்றுலா அலுவலகம், புது தில்லி.

**சுற்றுலாத் தகவல் மையங்கள்**

தமிழ்நாடு சுற்றுலா குறித்த தகவல்களைச் சுற்றுலாப் பயணிகளுக்கு அளித்திட மாநிலத்தின் பல்வேறு இரயில் நிலையங்கள் மற்றும் விமான நிலையங்களில் 14 சுற்றுலாத் தகவல் மையங்களும், பிறமாநிலங்களில்





மூன்று தகவல் மையங்களும் மொத்தம் 17 மையங்கள் இயங்கி வருகின்றன. அவை பின்வருமாறு:—

1. சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், திருநெல்வேலி.
2. சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், இராமேசுவரம்.
3. சுற்றுலாத் தகவல் மையம், பேருந்து நிலையம், இராமேசுவரம்.
4. சுற்றுலாத் தகவல் மையம், விமான நிலையம், மதுரை.
5. சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், மதுரை.
6. சுற்றுலாத் தகவல் மையம், கூடலூர் (நீலகிரி மாவட்டம்).
7. சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், கோயம்புத்தூர்.
8. சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், திருச்சிராப்பள்ளி.
9. சுற்றுலாத் தகவல் மையம், விமான நிலையம், திருச்சிராப்பள்ளி.
10. சுற்றுலாத் தகவல் மையம், ஓட்டல் தமிழ்நாடு வளாகம், தஞ்சாவூர்.
11. சுற்றுலாத் தகவல் மையம், காமராசர் விமான நிலையம், சென்னை.
12. சுற்றுலாத் தகவல் மையம், அண்ணா பன்னாட்டு விமான நிலையம், சென்னை.
13. சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், சென்னை (சென்ட்ரல்).
14. சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், எழும்பூர், சென்னை.
15. சுற்றுலாத் தகவல் மையம், பெங்களூர்.
16. சுற்றுலாத் தகவல் மையம், ஐதராபாத்.
17. சுற்றுலாத் தகவல் மையம், திருவனந்தபுரம்.

**சுற்றுலாத் தொழில்**

சுற்றுலா ஒரு தொழிலாக அறிவிக்கப்பட்டுள்ளதால், அரசு எடுத்து வரும் முயற்சிகளுடன் சுற்றுலாத் தொழிலில் தனியார் முதலீட்டையும் ஊக்குவிப்பதன் அவசியம் கருதி கீழ்க்கண்ட தொழில்களுக்குத் தமிழ்நாடு அரசு மூலதன உதவித் தொகை மற்றும் மின்னாக்கி (Generator) வாங்குவதற்கான உதவித் தொகை அளிக்கிறது.

1. சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சிப் பகுதிகள் நீங்கலாக ஏனைய பகுதிகளில், நிலமதிப்பு நீங்கலாக ரூபாய் ஒரு கோடிக்கு

[2000 மே 2

மிகாத முதலீட்டில் கட்டி முடிக்கப்பட்ட ஒன்று முதல் மூன்று நட்சத்திரத் தரம்வாய்ந்த ஓட்டல்களுக்கு உதவித்தொகை வழங்குதல்

2. பொழுது போக்குப் பூங்காக்கள்

3. "கோல்ப்" விளையாட்டு மைதானம்

4. அரசு ஒப்புதல் அளித்த சிற்றுண்டிச் சாலைகள்

5. அங்கீகாரம் பெற்ற சுற்றுலா நடத்துவோர் இயக்கும் சிர்வளி பேருந்துகள்

**மூலதன உதவித் தொகை**

நில மதிப்பு நீங்கலாக, மொத்த முதலீட்டில் 10 விழுக்காடு அளவிற்கு புதிய சுற்றுலாத் திட்டங்களுக்கு மூலதன உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தகுதி பெறும் ஒவ்வொரு சுற்றுலா அலகிற்கும் (unit) அதிகபட்சமாக ரூ. 10.00 இலட்சம் உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது.

இதுவரையில் 43 திட்டங்களுக்கு ரூ.141.00 இலட்சம் உதவித் தொகை அளிக்கப்பட்டுள்ளது.

**மின்னாக்கி வாங்க உதவித் தொகை**

தகுதி பெறும் புதிய சுற்றுலாத் திட்டத்திற்கு மின்னாக்கி (Generator) வாங்க 15 விழுக்காடு உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இச்சலுகையின்கீழ் வழங்கப்படும் அதிகபட்ச உதவித் தொகை ரூ. 5.00 இலட்சம் ஆகும்.

இதுவரையில் 21 திட்டங்களுக்கு ரூ.6,68,865.00 உதவித் தொகை அளிக்கப்பட்டுள்ளது.

**மைய அரசு நிதியுதவி**

மாநில அரசு பரிந்துரைக்கும் சுற்றுலாத் திட்டங்களில் மைய அரசின் சுற்றுலாத் துறை வகுத்துள்ள நிதியுதவிக்கான வழிமுறைகளின் அடிப்படையில் தகுதி வாய்ந்த வளர்ச்சித் திட்டங்கள் ஒவ்வோர் ஆண்டும் முன்னுரிமைப்படுத்தப்பட்டு இத்திட்டங்களுக்கு மைய அரசு நிதியுதவி அளிக்கிறது. இவ்வாறு முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்களின் தேவையைப் பொறுத்து மாநில அரசு தமது பங்குத் தொகையை



2000 மே 2]

அளிக்கிறது. இவ்வழிமுறைகளைப் பின்பற்றி மைய மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

**1999-2000 ஆண்டில் மைய மற்றும் மாநில அரசு நிதி உதவியுடன் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்**

| வ.எண் | திட்டத்தின் பெயர் | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சுற்றுலா விடுதி, நாமக்கல் | 29.25 |
| 2. | "யாத்ரி நிவாஸ்", இராமேசுவரம் | 53.36 |
| 3. | சுற்றுலாக் குடில்கள், கொடைக்கானல் | 35.40 |
| 4. | சுற்றுலாக் குடில்கள், ஏற்காடு | 33.03 |
| 5. | கணினி மூலம் சுற்றுலாத் தகவல் வசதி | 20.00 |
| 6. | கடற்கரைக் குடில்கள், திருச்செந்தூர் | 26.28 |
| 7. | சுற்றுலா வளாகம், ஓசூர் | 35.48 |
| 8. | பொதுக் கழிப்பிட வசதி, மேல்மருவத்தூர் | 12.75 |
| 9. | சுற்றுலா விடுதி, மேல்மருவத்தூர் | 22.50 |
| | மொத்தம் | **268.05** |

**மைய மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் பணி முன்னேற்றத்தில் உள்ள திட்டங்கள்**

| வ.எண் | திட்டத்தின் பெயர் | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சுற்றுலா வரவேற்பு மையம், தஞ்சாவூர் | 31.30 |
| 2. | வேலூர் கோட்டையில் ஒருங்கிணைந்த சுற்றுலா வசதிகள் | 26.60 |
| 3. | சுற்றுலா வரவேற்பு மையம், தரங்கம்பாடி | 34.49 |
| 4. | பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் சுற்றுலா வசதிகள், பேருந்து நிலையம், சிலம்பு வடிவ புதிய கூடம் மற்றும் உணவகம் கட்டுதல் | 35.00 |

| வ.எண் | திட்டத்தின் பெயர் | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 5. | புராதனக் கட்டடங்களில் சீரமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கானத் திட்டங்கள், மதுரை | |
| | அ. இராணி மங்கம்மாள் சத்திரம் | 15.00 |
| | ஆ. அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயில் | 22.50 |
| | மொத்தம் | 164.89 |

## 2000-2001 ஆம் ஆண்டில் மைய மற்றும் மாநில அரசின் நிதியுதவியுடன் தொடங்கப்படவுள்ள திட்டங்கள்

| வ.எண் | திட்டத்தின் பெயர் | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சென்னையில் தமிழ்நாடு சுற்றுலா வளாகம் கட்டுதல் | 250.00 |
| 2. | "யாத்ரி நிவாஸ்", திருவரங்கம் | 45.92 |
| 3. | சாலையோர விடுதி, வட்டக்கோட்டை, கன்னியாகுமரி | 25.00 |
| 4. | சாலையோர விடுதியில் கூடுதல் அறைகள் கட்டுதல், திருத்தணி | 20.00 |
| 5. | காட்சிக் கோபுரம், கன்னியாகுமரி | 35.00 |
| 6. | புனித ஜார்ஜ் கோட்டையில் புதிதாக ஒளி வெள்ள விளக்குகள் அமைத்தல் | 5.74 |
| 7. | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தங்கும் விடுதிகளை மேம்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்துதல் | |
| | அ. உதகமண்டலம் | 40.00 |
| | ஆ. கன்னியாகுமரி | 40.00 |
| | இ. மதுரை-1 | 40.00 |
| 8. | செங்கல்பட்டு கொளவாய் ஏரியில் சாகசப் புனல் விளையாட்டு மையத்திற்குக் கருவிகள் வாங்குதல் | 20.40 |





| வ.எண் | திட்டத்தின் பெயர் | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 9. | முக்கியச் சுற்றுலா மையங்களில் பொதுக் கழிப்பிடங்கள் அமைத்தல் | |
| | அ. கன்னியாகுமரி | 16.35 |
| | ஆ. ஒகேனக்கல் | 16.35 |
| | இ. நாகூர் | 16.00 |
| | ஈ. வேளாங்கன்னி | 16.35 |
| 10. | காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் கோயில் சுற்றுப்புற மேம்பாட்டிற்கான திட்டப்பணிகள் | 22.50 |
| 11. | திருச்சிராப்பள்ளி புராதனக் கோயில்களின் சுற்றுப்புற மேம்பாட்டிற்கான பணிகள் (திருவரங்கம் மற்றும் திருவானைக்காவல்) | 21.65 |
| 12. | கலாச்சாரச் சுற்றுலா - தமிழகத்தில் முக்கியச் சுற்றுலா மையங்களில் பொருட்காட்சி மற்றும் விழாக்கள் நடத்துதல் | 15.00 |
| 13. | மண்டபத்திற்கு அருகிலுள்ள குருசடைத் தீவில் சுற்றுச் சூழல் சுற்றுலா மேம்பாடு, அடிப்படை வசதிகள் உருவாக்குதல் | 27.00 |
| 14. | சிறப்புத் திட்டங்கள் | |
| | அ. இராமேசுவரம் | 57.00 |
| | ஆ. கன்னியாகுமரி | 50.00 |
| | மொத்தம் | 780.26 |

## 1999-2000 ஆண்டில் மைய அரசு நிதி உதவி பெற முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள்

மாநிலத்தில் நாற்பத்தொன்று சுற்றுலாத் திட்டங்களை ரூ.1,482.04 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த மைய அரசு 1999-2000 ஆண்டில் முன்னுரிமைப்படுத்தியுள்ளது.

| வ.எண் | திட்டத்தின் பெயர் | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மதுரை திருமலை மன்னர் அரண்மனையில் நடைபெறும் ஒலி-ஒளிக் காட்சியைப் புதுப்பித்தல் | 115.00 |
| 2. | கொடைக்கானலில் உயர் கம்ப மின் விளக்குகள் அமைத்தல் | 14.00 |
| 3. | சென்னையில் சுற்றுலா வளாகம் கட்டக் கூடுதல் நிதி | 50.00 |
| 4. | திருச்சியில் உயர் கம்ப மின் விளக்குகள் அமைத்தல் | 14.00 |
| 5. | தஞ்சாவூரில் உயர் கம்ப மின் விளக்குகள் அமைத்தல் | 21.50 |
| 6. | மதுரையில் யாத்ரி நிவாஸ் (பயணிகள் தங்குமிடம்) கட்டுதல் | 52.10 |
| 7. | ஏலகிரியில் யாத்ரி நிவாஸ் (பயணிகள் தங்குமிடம்) கட்டுதல் | 40.00 |
| 8. | கோடியக்கரையில் வன விடுதி கட்டுதல் | 34.45 |
| 9. | வேலூர் கோட்டையைப் புனரமைத்தல் | 22.53 |
| 10. | மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் கோயில் சுற்றுச் சூழலை மேம்படுத்துதல் | 12.00 |
| 11. | தஞ்சாவூர் பெரிய கோயிலைச் சுற்றியுள்ள பகுதியில் சுற்றுச் சூழலை மேம்படுத்துதல் | 22.50 |
| 12. | மாமல்லபுரம் ஐந்து ரதங்கள் மற்றும் கடற்கரைக் கோயில் சுற்றுச் சூழலை மேம்படுத்துதல் | 27.83 |
| 13. | ஒகேனக்கல் சுற்றுச்சூழலை மேம்படுத்துதல் | 20.00 |
| 14. | தஞ்சாவூர் அரண்மனையைப் புனரமைத்தல் | 22.50 |
| 15. | சென்னை எலியட்ஸ் கடற்கரையில் நிலச்சீரமைப்பு, நடைபாதை மற்றும் மின் வசதிகள் செய்தல் | 38.43 |
| 16. | நாகப்பட்டினம் கடற்கரையில் நிலச்சீரமைப்பு, நடைபாதை மின் வசதிகள் செய்தல் | 18.00 |
| 17. | திருத்தணியில் வாகனங்கள் நிறுத்துமிடம் மேம்பாடு | 25.00 |
| 18. | கொடைக்கானலில் வாகனங்கள் நிறுத்துமிடம் அமைத்தல் | 30.00 |
| 19. | மதுரை திருமலை மன்னர் அரண்மனை முன்பு வாகனம் நிறுத்துமிடம் அமைத்தல் | 20.00 |



| வ.எண் | திட்டத்தின் பெயர் | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 20. | திருச்சிராப்பள்ளி சமயபுரத்தில் நவீன கழிப்பிடம் கட்டுதல் | 16.00 |
| 21. | சென்னை கிண்டி தேசியப் பூங்காவில் நவீன கழிப்பிடம் கட்டுதல் | 12.00 |
| 22. | காஞ்சிபுரம் அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயிலுக்கருகில் நவீன கழிப்பிடம் கட்டுதல் | 16.00 |
| 23. | கன்னியாகுமரியில் ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகள் | |
| | அ. வாகனங்கள் நிறுத்துமிடம் அமைத்தல் | 100.00 |
| | ஆ. மின் கம்பிகளை ஒருங்கிணைந்த பாதுகாப்பான முறையில் அமைத்தல் | 30.00 |
| | இ. குடிநீர் விநியோகம் மேம்பாடு | 30.00 |
| 24. | திருநெல்வேலி மாவட்டம் முண்டந்துறையில் (மேற்குத் தொடர்ச்சி மலை) மலை வழி நடைபாதையை மேம்படுத்துதல் | 20.00 |
| 25. | உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி மற்றும் உலக்கை அருவி (கன்னியாகுமரி மாவட்டம்) ஆகிய இடங்களில் மலை வழி நடைபாதையை மேம்படுத்துதல் | 10.00 |
| 26. | மாமல்லபுரம், கொடைக்கானல் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு விடுதிகளை மேம்படுத்துதல் | 100.00 |
| 27. | இராமேசுவரத்தில் கட்டமைப்பு, அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் | 100.00 |
| 28. | பிச்சாவரத்தில் சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாடு | 60.00 |
| 29. | மாமல்லபுரத்தில் நாட்டிய விழா, சிதம்பரத்தில் நாட்டியாஞ்சலி விழா, தஞ்சாவூரில் இசை விழா, மதுரையில் கிராமியக் கலை விழா, உதகமண்டலத்தில் கோடை விழா மற்றும் தேயிலைச் சுற்றுலா விழா நடத்துதல் | 24.00 |
| 30. | கன்னியாகுமரி விவேகானந்தர் நினைவுப் பாறையில் அலங்கார மின் விளக்குகள் அமைத்தல் | 20.00 |

[2000 மே 2

| வ.எண் | திட்டத்தின் பெயர் | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 31. | கொடைக்கானலில் யாத்ரி நிவாஸ் (பயணிகள் தங்குமிடம்) கட்டுதல் | 40.00 |
| 32. | மதுரை ராணி மங்கம்மாள் சத்திரத்தைப் புனரமைத்தல் | 19.00 |
| 33. | சிதம்பரம் நடராசர் திருக்கோயிலைச் சுற்றியுள்ள வீதியில் சுற்றுச்சூழலை மேம்படுத்துதல் | 22.50 |
| 34. | பூம்புகார் சுற்றுச்சூழலை மேம்படுத்துதல் | 16.00 |
| 35. | கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவை மேம்படுத்துதல் | 20.00 |
| 36. | மதுரை, கொடைக்கானல், உதகமண்டலம், தஞ்சாவூர் மற்றும் இராமேசுவரம் ஆகிய இடங்களில் வழிகாட்டிப் பலகைகள் அமைத்தல் | 25.00 |
| 37. | மாமல்லபுரத்தில் வாகனங்கள் நிறுத்துமிடம் அமைத்தல் | 25.00 |
| 38. | சென்னை மெரினா மற்றும் எலியட்ஸ் கடற்கரையில் நவீன கழிப்பிடம் மற்றும் நடமாடும் கழிப்பிடங்கள் அமைத்தல் | 84.00 |
| 39. | ஏற்காட்டில் ஏரி மேம்பாடு | 15.00 |
| 40. | கொடைக்கானல் ஏரி சுற்றுச்சூழல் மேம்பாடு | 52.70 |
| 41. | கொடைக்கானலில் சுற்றுலா வரவேற்பு மையம் கட்டுதல் | 25.00 |
| | மொத்தம் | **1,482.04** |

## தமிழ்நாடு சுற்றுலா வளாகம்

தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள், ஒரே வளாகத்தில் அனைத்துச் சுற்றுலாத் தகவல்களையும் பெறுவதற்கு வழிவகை செய்யச் 'சுற்றுலா வளாகம்' ரூ. 250.00 இலட்சம் மதிப்பீட்டில் சென்னையில் அமைக்கப்பட்டு வருகிறது. மாநில அளவில் சுற்றுலாப் பயணிகள் அனைத்தையும் ஒருங்கிணைக்கவும், பிற மாநில அமைப்புகளுடன் இணைந்து சுற்றுலா வளர்ச்சிக்கு மேலும் பொலிவூட்டவும் இவ்வளாகம் பயன்படும்.

இவ்வளாகத்தில் தமிழ்நாடு அரசு சுற்றுலா இயக்குநர் அலுவலகம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைமை அலுவலகம், மைய அரசின் தென்மண்டலச் சுற்றுலா அலுவலகம் மற்றும் பிற மாநில சுற்றுலா அலுவலகங்களும் இயங்கும்.



2000 மே 2]

இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டில (ரூ.250.00 இலட்சம்) மாநில அரசின் பங்கு ரூ.30.00 இலட்சம், மைய அரசின் நிதியுதவி ரூ.70.00 இலட்சம், நிதி நிறுவனத்திடமிருந்து பெறப்படவிருக்கும் கடன் ரூ. 120.00 இலட்சம், எஞ்சிய ரூ.30.00 இலட்சம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பொறுப்பாகும்.

சென்னையில் இச்சுற்றுலா வளாகம் கட்டுவதற்காக 20,162 சதுர அடி நிலம் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் கலைவாணர் அரங்கினையொட்டி மாநில அரசினால் வழங்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 30-12-1998 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, தற்போது வளாகக் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாநிலத்தின் இந்நீண்டநாள் தேவை நிறைவேறி வருவதால், புத்தாயிரத்தின் முதலாண்டில் சுற்றுலா வளர்ச்சியில் அடுத்ததொரு "மைல் கல்" ஆக இப்புது வளாகம் அமையும் என்பது எண்ணி மகிழத்தக்கது.

## மாநில அரசுத் திட்டங்கள்

### 1999-2000 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் பணி நடைபெற்றுவரும் திட்டங்கள்

| வ.எண் | திட்டத்தின் பெயர் | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பூம்புகார் சுற்றுலா வளாகச் சுற்றுச்சுவர் கட்டுமானப் பணியை தொடர்ந்து நிறைவேற்றுதல் | 5.00 |
| 2. | திருவான்மியூருக்கும் மாமல்லபுரத்திற்கும் இடையிலான கிழக்குக் கடற்கரைச்சாலையில் மாமல்லபுரத்தில் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல் (பணி முடிக்கப்பட்டது) | 10.00 |
| 3. | மாமல்லபுரம் சுற்றுலா மையத்தில் பிச்சைக்காரர்கள் தொல்லையை நீக்குதல் | 1.00 |
| 4. | கொடைக்கானலில் தூய்மைப் பகுதி பற்றி விழிப்புணர்வு முகாம் நடத்துதல் (பணி முடிக்கப்பட்டது) | 1.00 |

[2000 மே 2

| வ.எண் | திட்டத்தின் பெயர் | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 5. | அதிகமாகப் பிரபலமடையாத சுற்றுலாத் தலங்களில் (புளியஞ்சோலை, பாபநாசம், திருப்புடைமருதூர், வாணியாறு) கழிப்பறைகள், விளக்குகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல் (பணி முடியும் தருவாயில் உள்ளது) | 15.00 |
| 6. | மாமல்லபுரம் சிற்பக் கலையை விளக்கும் ஒலிநாடா தயாரித்தல் (பணி முடிக்கப்பட்டது) | 1.00 |
| 7. | சுற்றுலாத் துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்தல் (பயிற்சி அளிக்கப்பட்டது) | 3.00 |
| | மொத்தம் | 36.00 |

**2000-2001 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள திட்டங்கள்**

| வ.எண் | திட்டத்தின் பெயர் | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பூம்புகார் சுற்றுலா வளாகச் சுற்றுச்சுவர் கட்டுதல் | 5.00 |
| 2. | பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் மின்னமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல் | 5.00 |
| 3. | சுற்றுலாத் துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்தல் | 3.00 |
| 4. | சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலாத் தகவல் மையங்கள் மேம்படுத்துதல் | 12.00 |
| 5. | மனோராவில் நிலச் சீரமைப்பு மற்றும் அழகுபடுத்துதல், குழந்தைகள் விளையாட்டுப் பூங்கா அமைத்தல் | 5.00 |
| | மொத்தம் | 30.00 |

**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.



2000 மே 2]

சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை, கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக 2000-2001 ஆம் ஆண்டிற்கு ரூ.40.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. சுற்றுலா தொடர்பான திட்டங்கள் மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்தாலோசித்து மேற்கொள்ளப்படுகிறது.

**சுற்றுச் சூழல் போற்றும் சுற்றுலா**

காண்பதற்கினிய, சுற்றுச்சூழல் குன்றாத இயற்கை எழில் கொஞ்சும் இடங்களைக் கண்டு களித்திடச் சுற்றுலா பயணிகள் பெரிதும் விரும்புகின்றனர். மலை வளம் கண்டு மனம் மகிழ விரும்பும் சுற்றுலாப் பயணிகள் தமிழகத்திற்கு வருகை தரும்போது, இத்தகைய வனப்புமிகு இடங்களைக் கண்டு களிக்கத் தவறுவதில்லை. தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் ஏறத்தாழ 25 விழுக்காடு பயணிகள், இவ்வகை இடங்களைக் காண ஒவ்வோர் ஆண்டிலும் வருகை தருகின்றனர். நாட்டிலுள்ள ஒன்பது பாதுகாக்கப்பட்ட "இயற்கைச் சூழல்" மிகு பகுதிகளில் (Biosphere Reserves) நமது மாநிலத்திலுள்ள இரண்டு பகுதிகள் - நீலகிரியும் மன்னார் வளைகுடாப் பகுதியும் - இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

இராமேசுவரத்திற்கருகிலுள்ள குருசடைத் தீவுப் பகுதியின் அருகிலுள்ள இயற்கை வளத்தையும், கடல்வாழ் உயிரினங்களையும் கண்டு களிப்பதுடன், அப்பகுதியின் சுற்றுச் சூழலைப் பாதுகாத்திடப் போதிய கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. செங்கல்பட்டு நகருக்கு அருகேயுள்ள கொளவாய் ஏரி, சிதம்பரத்திற்கு அருகிலுள்ள பிச்சாவரம் பகுதிகளில் புனல் விளையாட்டுடன் கூடிய "சுற்றுச் சூழல் சுற்றுலா" மேம்பாடு அடைய நடவடிக்கைகள் தொடங்கப்படவுள்ளன.

**கடற்கரை வரன்முறைக்கு உட்பட்ட பகுதி**

நாட்டிலுள்ள கடற்கரைப் பகுதியின் நில உபயோகத் திட்டம் மற்றும் மேலாண்மை, கடற்கரை வரன்முறைக்குட்பட்ட பகுதி அறிவிக்கை (Notification) 1991-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வறிவிக்கை உயர் அலைமட்ட (High Tide Line) அளவிலிருந்து 500 மீட்டர் வரையிலான கடற்கரைப் பகுதியில் மேற்கொள்ளப்படும் திட்டங்களை நெறிமுறைப்படுத்துகிறது. கடற்கரைப் பகுதிகள், பின்வருமாறு, நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன:—

[2000 மே 2

*தூய்மையான இயற்கைச் சூழல் (Ecologically fragile) நிறைந்த பகுதி, மண்டலம்-1 ஆகும்.

*அறிவிக்கை வருவதற்கு முன்பு கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்ட பகுதி, மண்டலம்-2 ஆகும்.

*சுற்றுலா சார்ந்த திட்டங்கள் அமைப்பதற்கு ஏதுவான பகுதி, மண்டலம்-3 ஆகும்.

*மேலே கூறப்பட்ட மண்டலங்களில் இடம் பெறாத பகுதிகளும், அந்தமான் & நிகோபார், இலட்சத்தீவு கடற்கரைப் பகுதிகளும், மண்டலம்-4 ஆகும்.

தமிழ்நாட்டிலுள்ள கடற்கரைப் பகுதி, முதல் மூன்று மண்டலங்களிலும் அமைந்துள்ளது. சுமார் 1000 கி.மீ. நீளத்திற்குக் கடற்கரையைக் கொண்ட நமது மாநிலத்தில், கடற்கரை சார்ந்த பல்வகைச் சுற்றுலாத் திட்டங்கள் அமைவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

சிறப்புச் சுற்றுலா பகுதியான முட்டுக்காட்டிற்கும் பாண்டிச்சேரிக்கும் இடையே உள்ள கடற்கரைப் பகுதியில், மைய, மாநில அரசு சுற்றுலா நிறுவனங்களின் தங்குமிட வசதிகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன. தனியார் சிலரும் இப்பகுதியில் சுற்றுலாத் திட்டங்களை நடத்தி வருகின்றனர். கிழக்குக் கடற்கரைச் சாலையின் கிழக்குப் பகுதியில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கு மைய அரசின் சில கட்டுப்பாடு தடையாக இருந்து வந்ததால், அதிக எண்ணிக்கையில் தனியார் அமைப்புகள் சுற்றுலாத் திட்டங்களில் பங்குபெறுவதில் போதிய ஆர்வம் காட்டாமல் இருந்தன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மைய அரசுக்கு எடுத்துரைத்து இத்தடைகளை நீக்குமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க, சுற்றுலா சார்ந்த கட்டுமானப் பணிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகளை, மைய அரசு, சில நிபந்தனைகளுக்குட்பட்டு தற்போது தளர்த்தியுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியினால் முட்டுக்காடு-மாமல்லபுரம்-கடலூர் வரையில் அமைந்துள்ள கடற்கரைப் பகுதிகளில் பெரிய அளவிலான சுற்றுலாத் திட்டங்கள் அமைக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. தொய்வுற்ற நிலையிலிருந்த தமிழக சுற்றுலாத் திட்டங்கள், குறிப்பாக கடற்கரைப்



2000 மே 2]

பகுதிகளில் அமையும் திட்டங்கள், புது மலர்ச்சியுற வழிவகை அமைத்திட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இத்துறையின் சார்பாக நன்றியை உரித்தாக்குவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

தனியார் முதலீட்டில் கடற்கரைப் பகுதிகளில் பெரிய அளவிலான பல சுற்றுலாத் திட்டங்கள் ஏற்கெனவே உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படவுள்ள நிலையில், அவை விரைவில் உருவாக்கம் பெறத் தேவையான பிற துறைகளின் ஒப்புதல்கள் மற்றும் இசைவுகளை தொழில் முனைவோர் விரைவாகப் பெற்றிட, இத்துறையின் சார்பில் பணிகள் ஒருங்கிணைக்கப்பட உள்ளன. ஏறத்தாழ ரூ.1000 கோடி மதிப்பீட்டில் பல சுற்றுலாத் திட்டங்கள் தனியார் முதலீட்டில் உருவாகவிருப்பதால், மிக விரைவில் மாநில சுற்றுலா வளர்ச்சி புதுப்பொலிவு பெற்று, பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டுப் பயணிகளின் வருகையும் இதனால் அதிகரிக்கும் என்பதால், வரும் ஆண்டுகளில் தமிழகம் சுற்றுலா வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**சுற்றுலா விளம்பரம்**

சென்ற நிதியாண்டில் (1999-2000) சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் செய்து முடிக்கப்பட்ட மற்றும் நடைமுறையிலுள்ள சில செயல்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. தமிழ்நாடு சுற்றுலா வரைபடத்தைத் தமிழில் தயாரித்து சுற்றுலாப் பயணிகளுக்குத் திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவின்போது கன்னியாகுமரியில் வழங்கப்பட்டது.

2. முதன்முதலாக ஜெர்மன், பிரெஞ்சு மற்றும் ஜப்பான் ஆகிய மொழிகளில் தமிழகத்தின் சுற்றுலாத் தலங்கள் குறித்த விளக்கக் கையேடுகள் வெளியிடப்பட்டுள்ளன. இவை வெளிநாட்டில் நாம் பங்குபெறும் சுற்றுலாச் சந்தைகள், சம்பந்தப்பட்ட தூதரகங்கள் மற்றும் வெளிநாட்டிலுள்ள இந்திய அரசுச் சுற்றுலா அலுவலகங்கள் வாயிலாக வழங்கப்படும்.

3. தமிழ்நாட்டின் உணவு வகைகள் பற்றிய கையேடு வெளியிடப்பட்டுள்ளது.

4 வட மாநிலங்களிலுள்ள சுற்றுலாப் பயணிகளை ஈர்த்திடச் சுற்றுலா விளம்பர முகாம்கள் அகமதாபாத், மும்பை, கல்கத்தா ஆகிய இடங்களில் நடத்தப்பட்டன. மேலும் சுற்றுலாப் பயணிகளிடம் நேரடியாகத் தொடர்புள்ள பயண முகவர்கள் (Travel Agents), பயண ஏற்பாட்டாளர்கள் (Tour Operators) மற்றும் சுற்றுலா வழிகாட்டிகளுக்கும் (Guides) சுற்றுலாத் தலங்கள் குறித்த புத்தகங்கள், குறிப்பேடுகள், வண்ணச் சுவரொட்டிகள், அஞ்சல் அட்டைகள் ஆகியவை வழங்கப்பட்டன.

5 புதிய விளம்பரப் பலகைகள் நாகர்கோவில், திருநெல்வேலி, சென்னை ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

6 கொடைக்கானலில் தூய்மைப் பகுதி விளக்க முகாம் (Awareness on Litter Free Zone) ஏற்பாடு செய்யப்பட்டுத் தூய்மையின்மையால் ஏற்படும் தீமைகள் குறித்துப் பொதுமக்களுக்கு விளக்கப்பட்டது.

7 சுற்றுலாப் பயணிகள், வழிகாட்டிகளின் துணை இன்றியே மாமல்லபுரத்திலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க சிற்பங்களின் சிறப்பினை அறிந்து கொள்ள வகைசெய்யுமுகத்தான் ஒலி நாடாக்கள் (Audio Cassettes) தயாரிக்கப்பட்டுள்ளன.

8 புதியதாக இந்த ஆண்டில் பொங்கல் சுற்றுலா விழா சிறுவாணி அணை (கோயம்புத்தூர்), பழனி, பூண்டி (திருவள்ளூர் மாவட்டம்) ஆகிய தலங்களில் கொண்டாடப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தில் திருவேங்கடத்தில் சுற்றுலாக் கலைவிழா நடத்தப்பட்டது.

9 சுற்றுலா சார்ந்த தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் புத்தாயிரத்தின் முதலாண்டிற்கான சுவர் நாட்காட்டிகள், மேசை நாட்காட்டிகள் வெளியிடப்பட்டன.

10 செய்தித்தாள்கள், வார இதழ்களில் சுற்றுலா விளம்பரம் செய்யப்பட்டது.

11 ஏற்காடு, ஏலகிரி, பிச்சாவரம், ஒகேனக்கல் ஆகிய சுற்றுலாத் தலங்களுக்குச் செய்தியாளர்களை நேரில் அழைத்துச் சென்று அச்சுற்றுலாத் தலங்களின் சிறப்பு குறித்து இதழ்களில் எழுதுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

12 1999 ஆம் ஆண்டு பன்னாட்டினர் பெருமளவில் பங்கேற்கும் பெர்லின், சிங்கப்பூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற உலகச் சுற்றுலாச்



சந்தைகளில், இந்திய சுற்றுலா அரங்கில், தமிழ்நாடு சுற்றுலாத் துறை பங்கேற்று தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்கள் குறித்து விளம்பரம் செய்யப்பட்டது.

13 சிங்கப்பூர், மலேசியா, அரேபியா மற்றும் மொரீசியஸ் ஆகிய வெளிநாடுகளில் தமிழகச் சுற்றுலா குறித்த விளம்பரங்கள் செய்தித் தாள்களில் வெளியிடப்பட்டன.

***2000-2001 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ள விளம்பரப் பணிகள்:***

தமிழகத்தின் சுற்றுலா விளம்பரப் பணிகள் காலத்திற்கேற்ற வகையில் நவீன உத்திகளைக் கையாண்டு செயல்படுத்தப்பட உள்ளன. உள்நாட்டு வெளியீடுகளிலும், வெளிநாட்டு இதழ்களிலும் விளம்பரங்கள் வெளியிடப்படுவதுடன், அரசு மற்றும் தனியார் தொலைக்காட்சிகளில் விளம்பரங்கள் வெளியிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நெடுஞ்சாலைகளில் விளம்பரப் பலகைகள் அமைக்கப்படவுள்ளன. வெளி மாநிலங்களில் விளம்பர முகாம்களிலும், கருத்தரங்குகளிலும், கூட்டங்களிலும் பங்கேற்று விளம்பரப் பணிகள் செயலாக்கப்படும். வெளிநாட்டுச் சுற்றுலாச் சந்தைகளில் பங்கேற்று, உலகச் சுற்றுலா வரைபடத்தில், தமிழ்நாட்டிற்கெனச் சிறந்ததொரு இடத்தை ஏற்படுத்தத் தகுந்த விளம்பர உத்திகள் மேற்கொள்ளப்படும்.

வண்ணமிகு சுற்றுலா வெளியீடுகள், வரைபடங்கள், பட அஞ்சலட்டைகள், சுவரொட்டிகள் போன்றவை ரூ.15.00 இலட்சம் செலவில் வெளியிடப்படவுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா குறித்த விபரங்கள் அடங்கிய மென் தட்டு (CD ROM) தயாரித்து வெளியிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழகச் சுற்றுலாத் தலங்களின் சிறப்பம்சங்கள் மற்றும் பயணிகளுக்கு வேண்டிய தகவல்கள் அடங்கிய ஒளி நாடாக்கள் (Video Cassettes) தயாரிக்கப்பட்டு, அவை விளம்பரத்திற்குப் பெரிதும் உபயோகப்படுத்தப்படுகின்றன. தமிழக சுற்றுலாத் தொழிலில் தனியார் முதலீட்டை ஈர்க்கும் வாய்ப்பினைப் பற்றி மென் தட்டு (CD ROM) தயாரிக்கப்பட்டுள்ளது.

[2000 மே 2

## விழாக்களும் பொருட்காட்சிகளும்

### விழாக்கள்

விழாக்கள், நம் பண்பாட்டின் பிரதிபலிப்பு. வெளிநாட்டுச் சுற்றுலா முகவர்கள், திட்டமிட்ட தொகுப்புச் சுற்றுலாப் பயணிகளுக்குச் சிறந்த முறையில் முன்னதாகவே ஏற்பாடு செய்யும் வகையில் தமிழ்நாட்டில் பண்பாட்டுச் சுற்றுலாவை மேம்படுத்த, கீழ்க்காணும் விழாக்கள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன. இதற்காக ரூ.30.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1. பொங்கல் சுற்றுலா விழா எல்லா முக்கியச் சுற்றுலா மையங்களிலும்
2. உதகமண்டலத்தில் தேயிலைச் சுற்றுலா விழா
3. சிதம்பரத்தில் நாட்டியாஞ்சலி விழா
4. மதுரையில் சித்திரைத் திருவிழாவின்போது கலைவிழா
5. குற்றாலத்தில் சாரல் திருவிழா
6. கிருட்டிணகிரியில் மாங்கனி விழா
7. பூம்புகாரில் இந்திர விழா
8. உலகச் சுற்றுலா நாள் விழா
9. பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் விழா
10. கன்னியாகுமரியில் குமரிமுனை விழா
11. மாமல்லபுரத்தில் நாட்டிய விழா

### மாமல்லபுரம் நாட்டிய விழா

நமது பாரம்பரியக் கலை, பண்பாட்டினை (Traditional Art and Culture) வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளிடையே வணிகச் சின்னமாக (Brand Name) உருவாக்க வேண்டியது அவசியமாகிறது. இக்குறிக்கோளுடன் தமிழ்நாட்டின் சுற்றுலாச் சிறப்புமிக்க இடங்களில் விழாக்கள் நடத்தப்படுகின்றன. இவ்விழாக்களில் மிகவும் முக்கியமானது மாமல்லபுரம் நாட்டிய விழாவாகும். ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர்-சனவரியில் இவ்விழா சிறப்பாக நடத்தப்படுகிறது. தமிழ்நாட்டிற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள், இந்நாட்டிய விழாவினை அவர்களது பயணத் திட்டத்தில் (Itinerary) சேர்க்கத் தவறுவதில்லை. உலக அளவிலுள்ள சுற்றுலாத் தகவல் கையேடுகளிலும் மாமல்லபுரம் நாட்டிய விழா இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.



2000 மே 2]

### பொருட்காட்சிகள்

தமிழகத்தில் சுற்றுலா மற்றும் தொழில் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, ஆண்டுதோறும் சென்னையில் இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியினை நடத்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு அரசு அனுமதி வழங்குகிறது. பிற மாநிலங்களும், மைய அரசுத் துறைகளும் நிறுவனங்களும் இப்பொருட்காட்சியில் பங்கேற்கின்றன. மாவட்டங்களில் செய்தித் துறை நடத்தும் பொருட்காட்சியிலும் சுற்றுலாத் துறை பங்கேற்கிறது.

புது தில்லி, கல்கத்தா, பனாஜி, மும்பை, பெங்களூர், ஜெய்ப்பூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற சுற்றுலாப் பொருட்காட்சிகளில் அரங்கம் அமைத்துத் தமிழகத்தைப் பற்றிய தகவல்கள் அளிக்கப்பட்டன. மாநிலத்தின் பல இடங்களில் நடைபெற்ற பல்துறை பணி விளக்கக் கண்காட்சியில் இத்துறை பங்கேற்றது. திருவாரூர், திருவையாறு, நாகூர், வேளாங்கன்னி, திருவில்லிப்புத்தூர், ஏர்வாடி, திருநெல்வேலி, மனோரா ஆகிய இடங்களில் நடைபெற்ற விழா நாட்களில் சுற்றுலாத் தகவல் அரங்கங்கள் அமைக்கப்பட்டன.

இவ்வாண்டு குமரிமுனையில் நடைபெற்ற திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவின்போது சுற்றுலாக் கண்காட்சி நடத்தப்பட்டது.

### புத்தாயிரத்தில் இந்தியச் சுற்றுலா

புத்தாயிரத்தில் இந்தியச் சுற்றுலாத் தலங்களைக் காணச் சிறப்பு அழைப்பு விடுத்து (Explore India in the Millennium Year) வரும் சனவரி முதல் நாள் 2001 வரை சிறப்புச் சுற்றுலாக் காலமாக நிர்ணயித்து மைய அரசு அறிவித்துள்ளது.

இப்புத்தாயிரத்தின் தொடக்க ஆண்டில், தமிழகத்திற்கு அதிக எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் மாமல்லபுரம், தஞ்சாவூர், மதுரை, கன்னியாகுமரி ஆகிய சுற்றுலாத் தலங்களில் மைய, மாநில அரசுகளின் நிதி உதவியுடன் தமிழகத்தின் கலை, கலாச்சாரப் பண்புகளை வெளிப்படுத்துமுகத்தான், கலை விழாக்களைச் சிறப்பாக நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### பெருந்திட்டம் (Master Plan) தயாரித்தல்

தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலாச் சிறப்பியல்புகளைச் சுற்றுலாப் பயணிகள் போற்றிடும் வகையில் ஒருங்கிணைந்த சுற்றுலா வளர்ச்சித் திட்டம்

[2000 மே 2

அமைக்கப்படுவது மிகவும் இன்றியமையாததாகும். சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தப் பெருந்திட்டம் (Master Plan) ஒன்று மைய, மாநில அரசுகளின் சம அளவிலான நிதியுதவியில் ரூ.14.40 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

**கணினி**

உலகெங்கிலும் தகவல் தொழில் நுட்பப் புரட்சி ஏற்பட்டு வரும் தருணத்தில் சுற்றுலாப் பயணிகளுக்குப் போதிய தகவல் அளிக்கவும், ஓட்டல் அறைகள் மற்றும் பயணத் திட்டத்திற்கு முன்பதிவு செய்வதற்கு வசதியாகவும் கீழ்க்கண்ட இடங்களில் கணினி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது:—

1. சுற்றுலா இயக்ககம், சென்னை
2. சுற்றுலாத் தகவல் மையம், சென்னை விமான நிலையம்
3. சுற்றுலா அலுவலகம், மாமல்லபுரம்
4. சுற்றுலா அலுவலகம், சிதம்பரம்
5. சுற்றுலா அலுவலகம், திருச்சிராப்பள்ளி
6. சுற்றுலா அலுவலகம், மதுரை
7. சுற்றுலா அலுவலகம், கொடைக்கானல்
8. சுற்றுலா அலுவலகம், தஞ்சாவூர்
9. சுற்றுலா அலுவலகம், சேலம்
10. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைமை அலுவலகம், சென்னை
11. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விற்பனைப் பிரிவு, சென்னை
12. ஓட்டல் தமிழ்நாடு, இராமேசுவரம்
13. ஓட்டல் தமிழ்நாடு, கன்னியாகுமரி
14. ஓட்டல் தமிழ்நாடு, கோயம்புத்தூர்

**இணையம் (Internet) தகவல் தளம் (Web Site)**

சுற்றுலாத் தகவல்களை தகவல் தளத்தின் (Web Site) மூலமாக அறிந்து கொள்ளவும் (வெப்சைட் முகவரி www.tamilnadutourism.com) வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் கூடுதல் விவரங்கள் பெறவும், முன்பதிவு செய்யவும் மின்னஞ்சல் வசதி (E-mail : ttdc @md3.vsnl.net.in) ஏற்படுத்தப்பட்டுள்ளது.



2000 மே 2]

மேலும் தமிழ்நாட்டிலும் வெளி மாநிலங்களிலுமுள்ள சுற்றுலா அலுவலகங்கள், சுற்றுலாத் தகவல் மையங்கள், ஓட்டல் தமிழ்நாடு ஆகியவற்றிலிருந்து சென்னையிலுள்ள தலைமையகத்தில் தகவல் சேகரிக்கப்பட்டு, அவ்விவரங்களை சுற்றுலா அலகுகள் பகிர்ந்துகொண்டு செயல்பட நெட்வொர்க் (Networking) வசதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**தேசிய சுற்றுலாத் தலம்**

**கன்னியாகுமரி**

கன்னியாகுமரி, நமது நாட்டின் தென்கோடியில் அமைந்துள்ள புகழ்வாய்ந்த சுற்றுலாத் தலமாகும். குமரிக் கடல்வெளியில் தோன்றும் சூரிய உதயத்தினையும், அந்தி வானத்தின் அழகையும் கண்டுகளிக்கச் சுற்றுலாப் பயணிகள் பெரிதும் விரும்பி வருகின்றனர். முக்கடல் சங்கமமே, கண்கொள்ளாக் காட்சியாகும்.

குமரி முனையில் 1970 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட விவேகானந்தர் நினைவு மண்டபத்திற்குச் சென்றுவர சிறு கப்பல் வசதி உள்ளது. ஆண்டு தோறும் உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் கன்னியாகுமரிக்கு அதிக அளவில் வருகை தருகின்றனர்.

சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளை உருவாக்க, மைய, மாநில அரசு நிதியுதவியுடன் பல திட்டங்களை சுற்றுலாத் துறை நிறைவேற்றி வருகிறது. மேலும் பல புதிய திட்டங்களைச் செயற்படுத்தவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரியின் அழகுக்கு அழகு சேர்ப்பதற்கு புத்தாயிரத்தின் முதலாண்டுத் தொடக்கத்தில் (சனவரி 1, 2000) தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கடலும் வானும் சிறந்திடும் வண்ணம் 133 அடி உயர அய்யன் திருவள்ளுவர் சிலையினை அமைத்து திறந்து வைத்தார்கள். சரித்திரத்தில் இடம்பெறத்தக்க நிகழ்வாக அய்யன் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா அமைந்தது.

**தேசிய புனிதத் தலம்**

**இராமேசுவரம்**

இராமேசுவரம், இந்தியத் திருநாட்டிலுள்ள முக்கியமான புனிதத் தலங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்திய அரசும் இத்தலத்தினை புனிதத் தலமாக அறிவித்துள்ளது. இந்தியாவிலேயே மிக அழகானதாகக்

கருதப்படும் இராமேசுவரம் கோயிலின் 690 அடி நீளபிரகாரம் (Corridor) உலகப்புகழ் பெற்றது. இத்திருத்தலத்திற்கு ஆண்டுதோறும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிக எண்ணிக்கையில் வருகிறார்கள்.

இங்கே சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்ய மத்திய, மாநில அரசு நிதி உதவியுடன் சுற்றுலாத் துறை பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. மேலும் பல திட்டங்களைச் செயற்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தொன்மைச் சிறப்பு வாய்ந்த நகரங்கள்**

தமிழ்நாட்டிலுள்ள கீழ்க்கண்ட 38 நகரங்களைத் தொன்மைச் சிறப்பு வாய்ந்த நகரங்களாக மாநில அரசு அறிவித்துள்ளது:—

1. காஞ்சிபுரம்
2. சிதம்பரம்
3. இராமேசுவரம்
4. திருவரங்கம்
5. திருவில்லிபுத்தூர்
6. மாமல்லபுரம்
7. தஞ்சாவூர்
8. கும்பகோணம்
9. கங்கைகொண்ட சோழபுரம்
10. பூம்புகார்
11. மதுரை
12. பழனி
13. திருச்செந்தூர்
14. திருத்தணி
15. கன்னியாகுமரி
16. திருவண்ணாமலை
17. செஞ்சி
18. செட்டிநாடு
19. வாலிநோக்கம்
20. தரங்கம்பாடி
21. நாகூர்
22. வேளாங்கன்னி
23. குற்றாலம்
24. திருப்பெரும்புதூர்
25. திருநெல்வேலி
26. திருச்செங்கோடு
27. காரைக்குடி
28. பேரூர்
29. பவானி
30. பிச்சாவரம்
31. மருதூர்
32. குறிஞ்சிப்பாடி
33. திருமயம்
34. சித்தன்னவாசல்
35. ஆவுடையார்கோயில்
36. பத்மநாபபுரம்
37. குளச்சல்
38. மரக்காணம்





மேற்கண்ட நகரங்களில் மைய, மாநில அரசு நிதியுதவியுடன் நகரங்களை அழகுபடுத்துதல், அடிப்படை வசதிகள் செய்தல், வாகனம் நிறுத்துமிடம் ஏற்படுத்துதல், பேருந்து நிலையம் அமைத்தல், தகவல் தொடர்பு வசதிகள் செய்தல், பூங்கா, விளக்குகள், குடிநீர், கழிவுநீர் அகற்றல், அங்காடி போன்ற தேவையான வசதிகள் ஏற்படுத்தவும் சம்பந்தப்பட்ட துறைகளின் வாயிலாகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

*மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பப் பயிலகம், துவாக்குடி, திருச்சிராப்பள்ளி*

தங்குமிடம் மற்றும் உணவு விடுதிகள் சிறந்த வளர்ச்சி பெற்று வருகின்றன. ஒவ்வோர் ஆண்டும் புதிய ஓட்டல்களும், உணவு விடுதிகளும் அமைந்த வண்ணம் உள்ளன. தொழில் வளர்ச்சியும் ஒருங்கிணைந்த சுற்றுலா வளர்ச்சியும் ஓட்டல் தொழிலுக்கு ஊக்கம் அளிப்பதாக உள்ளது. ஓட்டல் தொழிலில் பல்வேறு பிரிவுகளிலும் பயிற்சி பெற்ற பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். வரவேற்பு, உணவு ஆக்கல், பரிமாறல், அறைகளை அழகு படுத்துதல் மற்றும் பேக்கரி போன்ற பிரிவுகள் அனைத்தையும் கொண்டதாக ஓட்டல் செயல்படுவதால், ஓட்டல் மற்றும் உணவுக் கலைத் துறையில் உரிய பயிற்சி அளிக்க இவ்வுணவுக் கலைப் பயிற்சி நிறுவனம் 1981 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இந்நிறுவனம் ஆளுகைக் குழுவின்கீழ் (Governing Committee) செயல்பட்டு வருகிறது.

முதல் ஐந்தாண்டுகளுக்கு மைய அரசு இந்நிறுவனத்திற்கு நிதியுதவி அளித்தது. ஆனால் 1-10-1986 முதல் முற்றிலும் தமிழக அரசு அளித்து வரும் நிதி உதவியைப் பெற்று, இந்நிறுவனம், தமிழ்நாடு அரசின் சுற்றுலாத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது.

மூன்றாண்டுப் பட்டயப் படிப்புகளும் (Diploma Course) சான்றிதழ்ப் பயிற்சி வகுப்புகளும் இந்நிறுவனத்தில் நடத்தப்படுகின்றன.

1. ஓட்டல் வரவேற்பு மற்றும் கணக்குப் பிரிவு
2. உணவு ஆக்கல்
3. ரொட்டி மற்றும் கேக் தயாரித்தல்
4. உணவு பரிமாறுதல்
5. மனைக் காப்பு

மாநில அரசு ஆண்டுதோறும் இந்நிறுவனத்திற்கு ரூ.11.00 இலட்சம் மானியமாக வழங்கி வருகிறது.

ஒவ்வோர் ஆண்டும் எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் முறைகளில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சேர்க்கப்படுகின்றனர். தற்போது மொத்தம் 384 மாணவர்கள் பயின்று வருகின்றனர். பயிற்சி நிறைவுற்று வெற்றிபெற்ற மாணவர்களுக்கு "வளாக நேர்காணல்" வாயிலாக வேலைவாய்ப்பு கிடைத்து வருகிறது. கடந்த ஆண்டு பயின்ற மாணவர்களில் 90 விழுக்காடு மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### இல்லத்தரசிகளுக்குப் பகுதி நேரப் பயிற்சி

மாணவர்களுக்கான பயிற்சிகளைத் தவிர, பெண்கள் தமது ஓய்வு நேரத்தை நன்முறையில் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் அவர்களுக்கு பேக்கரி, உணவு ஆக்கல் மற்றும் மனைக் காப்புப் பிரிவுகளில் பகுதி நேர வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 1971 ஆம் ஆண்டு 5 தங்கும் விடுதிகள் மற்றும் 2 சொகுசுப் பேருந்துகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது மாநிலம் முழுவதும் 49 தங்கும் விடுதிகளைக் கொண்டுள்ளது. தொடக்கத்தில் 253 படுக்கை வசதிகள் மட்டுமே இருந்தன; தற்போது 2514 படுக்கை வசதிகள் உள்ளன. அதேபோல சொகுசுப் பேருந்துகள் தற்போது 26 உள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கீழ்க்கண்ட வசதிகளைப் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கி வருகிறது:

| | | | |
|---|---|---|---|
| 1. | ஓட்டல்கள் | - | 33 |
| 2. | இளைஞர் விடுதிகள் | - | 10 |
| 3. | படகுக் குழாம் | - | 10 |
| 4. | உணவு விடுதிகள் | - | 3 |
| 5. | சிற்றுண்டி விடுதிகள் | - | 4 |
| 6. | தொலைநோக்கு கோபுரங்கள் | - | 4 |
| 7. | பூங்காக்கள் | - | 3 |
| 8. | சுற்றுலாச் சேவை மையம் (பெட்ரோல் பங்க்) மாமல்லபுரம் | .. | 1 |



குறைந்த வருவாயுடைய சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக இளைஞர் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் பலர் தங்குவதற்கு வசதிகள் கொண்ட பெரிய அறைகளும் உள்ளன.

தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய ஊர்களில் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெறப்பட்ட இரண்டு ஓட்டல்களும் 1994-95 ஆம் ஆண்டில் நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் தனியாருக்கு விடப்பட்டுள்ளன.

பத்தொன்பது ஓட்டல்களைத் தனி உரிமை (Franchise) அடிப்படையில் நடத்த தனியாருக்கு அனுமதி வழங்க முடிவு செய்யப்பட்டது. இதன்படி மண்டபம், கொடை ரோடு, திருப்பெரும்புதூர் மற்றும் வைகை அணை ஆகிய இடங்களில் உள்ள ஓட்டல்கள் இதுவரை தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

எஞ்சிய 15 ஓட்டல்களையும் தனி உரிமை (Franchise) அடிப்படையில் தனியார் பொறுப்பில் வைத்து ஓட்டல் நடத்தத் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 1999-2000 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட புதிய வசதிகள்:

1. செங்கல்பட்டிலுள்ள கொளவாய் ஏரியில் சாகசப் புனல் விளையாட்டு மையம் அமைக்கப்பட்டு 18-5-1999 முதல் இயங்கி வருகிறது.

2. ரூ.10.00 இலட்சம் செலவில் பொழுதுபோக்குச் சாதனங்கள் கன்னியாகுமரியில் நிறுவப்பட்டுள்ளன.

3. ஏற்காட்டில் ரூ.26.28 இலட்சம் செலவில் 16 குடில்கள் கட்டப்பட்டு 1-5-1999 முதல் இயங்கி வருகிறது.

4. இராமேசுவரத்தில் 22 அறைகள் கொண்ட பயணியர் தங்கும் விடுதி ரூ. 53.36 இலட்சம் செலவில் கட்டப்பட்டு, 1-10-1999 முதல் இயங்கி வருகிறது.

5. திருச்செந்தூரில் 15 குடில்கள் ரூ.26.28 இலட்சம் செலவில் கட்டப்பட்டு, 9-11-1999 முதல் இயங்கி வருகிறது.

6. ஓசூரில் ரூ.26.73 இலட்சம் செலவில் 16 குடில்கள் கட்டப்பட்டு, 13-2-2000 முதல் இயங்கி வருகிறது.

7. கோயம்புத்தூர் தமிழ்நாடு ஓட்டலில் உள்ள வரவேற்பு அறை (Front Office) கணினிமயமாக்கப்பட்டுள்ளது.

8. ரூ.15.00 இலட்சம் செலவில் 18 இருக்கைகளைக் கொண்ட குளுமை (A.C.) வசதி கொண்ட சிறிய பேருந்து ஒன்றும், 10 இருக்கைகளுடன் குளுமை வசதியோடு சிறிய பேருந்து ஒன்றும் (Tempo Traveller) ரூ.10.00 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன.

9. உதகமண்டலம் மற்றும் கொடைக்கானல் "படகுக் குழாம்"-களில் பயன்படுத்த ரூ.12.00 இலட்சம் செலவில் 40 படகுகள் வாங்கப்பட்டுள்ளன.

10. மின்னாக்கி (Generator) ரூ.2.00 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு ஏற்காடு ஓட்டலில் நிறுவப்பட்டுள்ளது.

11. மாநில அரசின் நிதியுதவி பெற்று கன்னியாகுமரியில் ரூ. 25.00 இலட்சம் செலவில் குடில்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

12. உதகமண்டலத்தில் "மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்"கீழ் ரூ.10.00 இலட்சம் செலவில் உதகமண்டலம் இளைஞர் விடுதியில் கூடுதல் அறைகள் கட்டப்பட்டுள்ளன.

13. கிருட்டிணகிரி, உளுந்தூர்பேட்டை மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக ஐஸ்கிரீம் பார்லர்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

14. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாக்களில் கலந்து கொள்ளும் முதியோர் (Senior Citizen), முன்னாள் படைவீரர்களின் சந்ததியினர் மற்றும் உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கு அறை வாடகையிலும், பயணக் கட்டணத்திலும் 25 விழுக்காடு சலுகை அளிக்கப்படுகிறது. கடந்த 1999-2000 ஆண்டு முதல் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இச்சலுகையினை வழங்கி வருகின்றது.

15. முதன்முதலாக சென்னைக்கு வெளியே, சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழக மாணவர்களுக்காக குறைந்த கட்டணத்தில் பல்வேறு சுற்றுலாக்கள் 1999-2000 ஆண்டில் நடத்தப்பட்டன.

**2000-2001-ல் மேற்கொள்ளப்பட உள்ள திட்டங்கள்:**

1. மதுரை, இராமேசுவரம், மாமல்லபுரம், உதகமண்டலம், கொடைக்கானல் ஆகிய இடங்களில் உள்ள ஓட்டல்கள் ரூ. 160.00 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.



2. ரூ. 13.00 இலட்சம் செலவில் சென்னையில் உள்ள விற்பனைப் பிரிவை முற்றிலும் கணினிமயமாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

3. ஏழு தமிழ்நாடு ஓட்டல்களில் உள்ள வரவேற்பு மற்றும் கணக்குப் பிரிவுகளை ரூ.20.00 இலட்சம் செலவில் கணினிமயமாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

4. திருச்செந்தூர், கிருட்டிணகிரி, இராமேசுவரம் ஆகிய இடங்களில் உள்ள ஓட்டல்களில் ரூ.15.00 இலட்சம் செலவில் இபிஏபிஎக்ஸ் (Epabx) நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

5. 123 புதிய தொலைக்காட்சிப் பெட்டிகள் தமிழ்நாடு ஓட்டல்களில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

6. மைய அரசின் நிதி உதவியுடன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ரூ. 60.00 இலட்சம் செலவில் பிச்சாவரத்தில் சுற்றுச் சூழல் போற்றும் சுற்றுலா (Eco-Tourism) மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.

7. பகிர்வு பங்குத் திட்டத்தின்கீழ் (Equity Scheme) ரூ. 100.00 இலட்சம் செலவில் கொடைக்கானல், மாமல்லபுரம் ஆகிய இடங்களிலுள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

8. உதகமண்டலம் படகுக் குழாமுக்கு ரூ. 15.00 இலட்சம் செலவில் புதிய படகுகள் வாங்கப்படவுள்ளன.

9. உதகண்டலம் படகுக் குழாமுக்கு ரூ. 8.00 இலட்சம் செலவில் அக்வா பைக்குகள் (Aqua Bikes) வாங்கப்படவுள்ளன.

**போக்குவரத்துப் பிரிவு**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம், கோவா, பாண்டிச்சேரி, கேரளா மற்றும் வட மாநிலங்களான பீகார், உத்திரப்பிரதேசம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களை உள்ளடக்கிய பயணத் திட்டங்களை நடத்தி வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை அறிந்து பல புதிய சுற்றுலாக்களை அறிமுகம் செய்துள்ளது.

குறிப்பாகத் "திருவண்ணாமலை கிரிவலம்" சுற்றுலாப் பயணிகளை ஈர்த்துள்ளது.

கன்னியாகுமரியில் விற்பனை முகவர்கள் வாயிலாக சுற்றுப் பயணங்கள் 15-4-2000 முதல் நடத்தப்படுகின்றன.

கோடைக் காலத்தை முன்னிட்டும், சுற்றுலாப் பயணிகளின் நன்மையைக் கருதியும், கீழ்க்கண்ட சிக்கனப் பயணத் திட்டங்களைத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தொடங்கியுள்ளது:

1. சென்னை-உதகமண்டலம்-குன்னூர்-சென்னை
2. சென்னை-கொடைக்கானல்-சென்னை
3. சென்னை-பெங்களூர்-[illegible]னக்கல்-சென்னை

சென்ற ஆண்டில், [illegible]-2000) சுமார் 600-க்கும் மேற்பட்ட மலேசிய சுற்றுலாப் பயணிகளுக்கு 14 நாள் சிறப்புச் சுற்றுலா நடத்தப்பட்டு ரூ.60.00 இலட்சம் வரையில் வருமானம் ஈட்டப்பட்டது. அதேபோன்று தென்னாப்பிரிக்கச் சுற்றுலாப் பயணிகளுக்கு 14 நாள் சுற்றுப் பயண ஏற்பாடு செய்து, அதன்மூலம் ரூ. 10.00 இலட்சம் அந்நியச் செலாவணியைத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஈட்டியுள்ளது. சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பல்வேறு நிறுவனங்களின் ஊழியர்களுக்காகச் சலுகைக் கட்டணத்தில் சுற்றுலாப் பயணத் திட்டங்கள் நடத்தவும் உரிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

## நிதி நிலை

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1998-99 ஆம் ஆண்டில் ரூ.2765.00 இலட்சம் மொத்த வருமானத்தை ஈட்டியுள்ளது. 1999-2000 ஆண்டின் மொத்த வருவாய் ரூ.3060.00 இலட்சமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நடப்பு 2000-2001 ஆண்டிற்கு ரூ. 3494.00 இலட்சம் குறியீடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

223315

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.